பிரமலை
சீர்திருத்தன்

1928

JL
Y5·92111M2N,N2
N28·1
212724

௨௨

(6)

விரலி சிந்துக்கள்.

இருபடி. 1828

செப்பனிடுபவர் பெயர்
செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நாள்
செப்பனிட்டு முடிந்த நாள்
சரிபார்த்தது
ஆராய்ச்சி உதவியாளர் கையொப்பம்
ப. பதிவு. கையொப்பம்

1220

REG. NO. M. 2146

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 FEB 1928

# The Piramalai Reformer.

## பிரமலை சீர்திருத்தன்.

“ நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்.”

Vol. VII.] ஜனுவரி மீ 1928 [இலக்கம் 9

மதுரை இராமனாதபுரம் ஜில்லா கள்ளர் ஸ்பெஷல் சூப்பிரண்டு மகா-ா-ா-ஸ்ரீ K. P. ஜனார்த்தனராவ் அவர்கள் பிரமலைத் தேவமார்களுக்கு அனுப்பும் புதுவருட செய்தி:—

இந்திரகுலத் தேவமார்களே!

நீங்கள் சென்றவருஷம் பூராகவும் உங்களுக்குக் கவர்ன்மெண்டார் கொடுத்துவந்த பல சாதனங்களைக்கொண்டு இயற்கையிலேயே உங்களுடன் பிறந்த விடாமுயற்சி என்னும் குணம் மென்மேலும் தூண்ட முக்கியமாய் உங்களுக்குக் கொடுத்துவந்த கல்வி, கைத்தொழில், வேளாண்மை என்னும் மூன்றினிலும் ஒருங்கே உயர்வுபெற்றிருப்பதைக்கண்டு சந்தோஷித்த நான் இவ்வருஷமும் உங்களுக்குச் சொல்லும் புதுவருஷ நற்செய்தியாவது:

கடந்த நாலைந்துவருஷங்களினும் இவ்வருஷம் நான் உங்களிடம் புதிதாகக்கண்ட விருத்தி என்னவென்றால் கல்வியின் அபிவிர்த்தியே. கல்வியே மனிதன் உயர்நிலைபெறுவதற்கு முக்கியகாரணம். இதை நன்குணர்ந்த தேவமார்கள் தங்கள் தங்கள் மக்களைப் பள்ளிகளுக்கு அனுப்பி படிப்பில் தேற்சிபெறச்செய்து உலகத்திலுள்ள இதர நாகரீகமடைந்த ஜாதியாளர்களைப்போல இராஜாங்கத்தின் பல இலாகாக்களிலும் தங்களின் இருப்பைப்பெறவேண்டுமென்ற எண்ணத்தைக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் வகுப்பில் இப்பொழுது ஆண், பெண் என்ற இருபிரிவிலும் பல உயர்தரக் கலாசாலைகளில், B.A. முதலிய வகுப்பு வரை வந்திருப்பதே முக்கிய சாக்ஷியமாகும்.

கல்விகற்றபின் அவர்களே தங்களுடையவும் தங்கள் கிராமங்களினுடையவும் சுகாதாரத்தை முதலில் கவனிக்கப்புகுவார்கள். இதனால் ஆண், பெண், சிறியோர், பெரியோர் சிசுக்கள் முதலானவர்கள் என்றும் நித்திய சுகவாசிகளாகவும், திடகாத்தர்களாகவும் மெத்த சந்தோஷமுடையவர்களாகவும் எங்கும் பெருமிதமாகவே ஜனங்கள் திரிவார்கள். அவர்களின் பிழைப்பின் பொருட்டு இப்பொழுது கவர்ன்மெண்டார் பல இடங்களிலும் ஏற்படுத்தியிருக்கும் தொழிற்சாலையில் பயின்றும், இதுவரை பயின்றவர்கள் தாங்களே சுயர்ச்சியாக கவர்ன்மெண்டார் சொற்ப வட்டிக்குக் கொடுத்துதவும் திரவிய சகாயத்தினால் ஓர் தொழிலை கைக்கொண்டும் இன்னுஞ்சிலர் தங்களுக்குண்டான காணிகளைக் கொத்திக்கிளறிக்கொண்டும் பல விதமான சந்தோஷக்கூட்டங்களாகவே இவர்கள் தோன்றுவார்கள். பிறகு இவர்களுக்குக் கடவுள் பக்தியும் அதிகரிக்கலாகும். இவரருளால் வேண்டியளவு மழை பொழியும். பயிர் பச்சைகள் நாடெங்கும் செழிக்க பல ஜனங்களும் மிக்க சந்தோஷசாலிகளாகவே திரிவதைக் காணலாம். இவ்வருஷம் மழை மாரி குறைவில்லாமலிருந்ததாலும் இனி இவர்கள் இன்னும் முன்னேற்றமடைய நன்னெறி காட்டும் கவர்ன்மெண்டார் உதவி செய்வார்கள் என்பதைக்கருதியும் இவர்கள் தங்களுடைய விடாமுயற்சியைக்கொண்டே பூரண சௌகரியங்களைப்பெற்று சுகித்துவாழக் கடவுள் நற்புத்தியைக் கொடுத்துக் காப்பாற்றுவார் என்று நம்புகிறேன்.

---

### சர்க்கார் உதவியும் கள்ளர் சீர்திருத்தமும்.

பூர்வீகத்தில் இப்பிரமலைத் தேவமாருக்குக் குற்றத்தொழில் புரியும் கிரிமினல் ஜாதியாரென்றும் கள்ளரென்றும் திருடரென்றும் பற்பல இழிவான நாமமிடப்பட்டிருந்ததை நமது காருண்ய கவர்ன்மெண்டார் சீர்தூக்க முயன்று ஏராளமான பணங்களைத் தாராளமாய்ச் செலவிட்டு பள்ளிக்கூடங்களையும் தொழிற்சாலைகளையும் ஏற்படுத்தி கல்வியையும் பற்பல தொழில்களையும் வெகு சுலபமாய்க் கற்றுக்கொள்வதோடு சன்மார்க்க விதிகளையும் அனுசரிக்கும்படிசெய்து தற்போது மேற்கண்ட இழிவான பேரை மாற்றி இந்திரகுலத் தேவமாரென்னும் ஓர் அரிய

நாமகரணமிடப்பட்டிருக்கிறது. மேலும் ஊர்தோறும் பஞ்சாயத்தாரரென்று அவ்வகுப்பினரிலேயே நற்குணமுள்ள ஐவரைத் தெரிந்தெடுத்து அவ்வவ்வூர்களில் நடக்கும் குற்றங்களைச் சீர்திருத்தியும் அடங்காக் கயவரைப் பற்றியும் பிள்ளைகளைப் பள்ளிக்கனுப்பாத பெற்றோரைப்பற்றியும் மேலதிகாரிகளுக்கு ரிப்போர்ட்டு செய்யும்படி அன்னவர்களுக்கு ஓர் நல்ல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இம்மட்டோ; இல்லை, இல்லை. தேவமாருக்கென்றே ஸ்பெஷலாக சொற்ப வட்டியைப் பெற்றுக்கொண்டு லோன்பணம் ஏராளமாய் கொடுத்து கஷ்டத்தை நிவர்த்திசெய்துகொண்டுவருகிறார்கள். பின்னும் வறிஞருக்கு துணிமணிகளும் கொடுத்து நமது காருண்ய கவர்ன்மெண்டார் காப்பாற்றி வருகிறார்கள்.

“நல்லாரைக்காண்பதுவும் நன்று—நல
மிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்று
அவரோடிணங்கி இருப்பதுவும் நன்று.”

என்ற முதுமொழிப்படி நன்மையான விஷயத்தைப்பற்றி வீண்மான காரியத்தை விட்டகற்றி நல்லோர் கூட்டத்தையடுத்து புல்லோர் நாட்டத்தை விடுத்து எல்லாம்வல்ல இறைவனைப் போற்றி நீடூழி வாழ என் நண்பர் இந்திரகுல தேவமாரனைவரையும் மிகவும் கேட்டுக்கொள்ளும்

A. விசுவாசம்,
உபாத்தியாயர்,
கருமாத்தூர்.

---

## பெண் கல்வி.

“அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு” என்ற வாக்கியத்தைக் குருட்டுப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டு அநேகர் கல்வியினால் பெண்களுக்கு யாதொரு பயனுமில்லை என்று எண்ணியுள்ளார். இஃதிருக்க, சாதாரணமாக உலகத்தில் எந்தக் காரியத்தை எடுத்தாலும் அதில் நன்மையும் தீமையும் இருப்பது சகஜமே. ஆனதைப்பற்றி நேரிடக்கூடிய சில தீமைகளை உத்தேசித்து மனத்தாழ்ச்சி மேலாகி நாம் செய்ய நினைத்த கருமத்தை விட்டுவிடுதல் நன்றன்று. நெருப்பை, ஒரு பொருளை அழிக்கவும், அதே சமயத்தில் உண்டாக்கவும் உபயோகப்படுத்தலாம். யாதொரு காரியத்திலும் ஜெயமடைவது நம்மைப் பொறுத்ததே.

இது நிற்க, மேற்சொன்ன பெண் கல்வியால் வரும் நன்மைகளில் சிலவற்றை இங்கு எடுத்துக்கூறுவோம்.

1. பிள்ளைக்கடமை:—நாம் அன்றாடத்தில் காணுகிறபடி கல்வியறிவு சிறிதேனும் அடையாத பெண்பிள்ளைகள், தங்களைப்பெற்றோர்கள் எக்காலமும் ஆண்டுவிட்டுக்கொண்டிருந்தாலொழிய, தாங்களாய் யாதொரு காரியத்தைச் செய்வதில் மிக்க குறைவுடையவர்களாயிருக்கிறார்கள். தாங்கள் செய்வது இன்னதென்று அறியாமல் வரக்கூடிய நன்மை தீமைகளை வரையறுக்கக்கூடாதவர்களாய்த் திகைக்கிறார்கள். ஆகையால் நம்பெண்கள் கடவுளால் இலவசமாய்ப்பெற்ற மனோ சக்தியை நல்வழியில் பிரயோகித்து தாங்கள் பெற்றோரிடம் இருக்கும்போது “பெற்றோருக்குப் பிள்ளைகள் செய்யவேண்டிய கடமையை” சரிவரச் செய்வதற்கு மேற்சொன்ன மனோ சக்தியை எல்லா வழிகளிலும் விருத்திசெய்யக்கூடிய கல்வியைக் கொடுப்பது தர்மமன்றோ!

2. மனைவியின் கடமை:—

தெய்வப்புலமை திருவள்ளுவநாயனார்:
“அன்பு மறனுமுடைத்தாயினில் வாழ்க்கை
பண்பும் பயனுமது”
என உரைத்தபடி இல்வாழ்க்கையானது அன்பு, தர்மம் என்ற நற்குணங்களோடு கூடியிருப்பதே ஜெயம். ஆகவே தெய்வத்துக்கும் சாதுக்கள் முதலான பெரியோருக்கும் ஏற்ற இன்பத்தைக் கொடுக்கக்கூடியது சகல நற்குணங்களும் பொருந்திய இல்வாழ்க்கையே. இந்த நோக்கத்தை செவ்வனே கொண்டுசெலுத்துவதற்கு இவ்வாழ்க்கைக்கு விளக்காகிய மனைவியே காரணகர்த்தாவாகிறாள். இதிலிருந்து சாதாரணமாக ஒரு மனைவிக்கு இல்வாழ்க்கையில் எவ்வளவு உத்தரவாதமான வேலை இருக்கிறதென்று “வெள்ளிடை மலைபோல்” தெரிகிறது. ஆதலால் தனது ஜீவிய சிநேகிதியாக தெரிந்தெடுத்த கணவனுடைய நோக்கத்தை திருப்திகரமாய் முடிக்க அவளே ஞானமும் புத்திக்கூர்மையும் வேண்டுமென்பதற்குச் சந்தேகமேயில்லை. இப்பேர்ப்பட்ட ஞானத்தைக் கொடுக்கக்கூடியவள் கல்விக்கரசியே. ஆகையால் பெண்மக்கள் அவளிடம்போய் தங்களுக்கு அவள் வைத்திருக்கிற விலைமதியா ஞானத்தையும் இல்லற வாழ்க்கைக்கு வேண்டிய புத்தியையும் வாங்கவேண்டுவதவசியமே.

3. தாய்க் கடமை:—“தாயைப்போல் பிள்ளை நூலைப்போல் சேலை” என்ற பெரியோர் வாக்கியத்திலிருந்தே இல்லற வாழ்க்கையில் தாயானவள் எவ்வளவு முக்கியமாகக் கருதப்படுகிறாள் என நன்கு புலப்படுகிறது. குடும்பத்தின் பலன்களாகிய பிள்ளைகள் தங்கள் பின் ஜீவியத்தில் ஜெயமுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்றால் அக்குடும்பத்துக்கு தலைவியாகிய தாய் எல்லா விஷயத்திலும் முன்மாதிரியாக இருக்கவேண்டுமல்லவோ. இதுவுமன்றி தன்பிள்ளைகளுக்கு வியாதி ஒன்றும் அணுகாதபடி அவர்களை சுத்தமாய் வைத்து, காலம் தவறாது வேண்டிய சவரட்சனை செய்து வியாதிவரும் பட்சத்தில் கைமருந்தின் மூலமாயும் அல்லது தேர்ந்த வைத்தியர் மூலமாயும் வியாதியை அகற்றுவதிலேயே வேறு தீங்கு சுதந்தேற அறிவு தேவையென்பது தெரிகிறது. இதுவுமன்றி “இளமையிற் கல்” என்றபடி பிள்ளைகளை சரியான பிராயத்தில் பள்ளிக்கு அனுப்பவும் அவர்களை மார்க்கத்தில் நடத்தவும் ஞானவெளிச்சம் படவேண்டுமன்றோ!

ஆகையால் மேற்சொன்ன காரணங்கள் மட்டுமல்ல நமக்கு நாளடைவில் தெரியவரும் மற்றும் பிரயோசனங்களையும் நிறுத்துப்பார்த்து கல்வியெனும் இந்த ஆஸ்தியை கடவுள் சிருஷ்டித்த சகல பெண்மணிகளுக்கும் கொடுத்து அதனால் அவர்கள் அடையும் பலாபலன்களை நமது கண்களால் பார்த்து ஆனந்திக்கச் செய்வோமாக.

“கல்விக் களஞ்சியத்தைக் கண்ணுறீர்
பெண்மணிகாள்!
கண்டடைக்காலமிது கண்ணே நீதா—
மென்மேலும்
ஓங்கி வளரும் ஒப்பாச் சாதியீர்
ஒளிபெற்று வாழ்க மேல் வாழி”

G. G. Rajiah,
Training School, Pasumalai.

---

## இந்திரகுல வாலிப ஐக்ய சங்கம் விக்கிரமங்கலம்.

1927ஆம் வருஷம் நவம்பர்மீ 4வ விக்கிரமங்கலம் போர்டு பாடசாலையில் கடவுள் வாழ்த்துடனே இக்கூட்டம் ஆரம்பித்தது. அக்கூட்டத்திற்கு கனம் பூஜித சடையத்தேவரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். 1926ஆம் நவம்பர் முதல் 1927ஆம் நவம்பர் 1வ முதற்கொண்டு மீட்டிங் அறிக்கைகளையும் வரவு செலவு கணக்கையும் முடித்துக்கொண்டு இச்சங்கம் தொடங்க 50 மெம்பர்களும் சேர்மன் காரியதரிசி பொக்கிஷதாரர் தேர்ந்தெடுத்து சங்கம் சரிவர நடந்தேற வேண்டுமென்று அன்று எலெக்ஷன் செய்யப்பட்டன.

அவ்வெலெக்ஷனில் ஆடிட்டர் எ. யம். சடையத்தேவர் சேர்மன் யம். எ. தாமஸ் ஹெட்மாஸ்டரும் காரியதரிசி (1) யம். கிறிஸ்தியான் வேதமணி உபாத்தியாயரையும் (2) காரியதரிசி பஞ்சாயத்து மூக்கன் ஒண்ணுத்தேவரையும் (3) காரியதரிசி ஆ. சிற்றம்பலம் செட்டியார் என்றும் (4) காரியதரிசி பெரியசாமி ஆசாரி என்றும் (5) காரியதரிசி கலுவத்தேவரையும் (1) பொக்கிஷதார் சின்னத்தேவரும் (2) பொக்கிஷதார் கே. பாண்டிய தேவரும் (3) பொக்கிஷதார் குப்புச்சாமி ஆசாரி என்றும் பாங்கசீசர் பெ. வீரணத்தேவர் என்றும் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொருவர்கள் செய்யப்படவேண்டிய அலுவல்களை வகிக்கப்பட்டன.



ஆடிட்டர் 10 உத்தியோகஸ்தர்களை சரிவர வேலைசெய்து வருகிறார்களென்றும் சங்கத்தை சரிவர நடத்த தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டியது.

சேர்மன் 5 காரியதரிசிகள் தங்கள் வேலைகளை சரிவர வேலைசெய்யச் சொல்வதுடன் நடத்தையைக் கவனித்து கையொப்பமிட்டு ரிகார்டு சமயக்கம்.

(1) ஹெட்காரியதரிசி மீட்டிங்கில் பேசப்படும் சமாசாரங்களை பேப்பருக்கு அனுப்புவதும் தபால் முதலிய விஷயங்களையும் மற்ற இதர வேலைகளையும் பார்த்துவரவேண்டியது.

(2) காரியதரிசி சங்கத்திற்கு ஏற்படும் வரவுசெலவு கணக்கை தயாராக வைத்துக்கொள்வதுடன் எச்செலவும் அவர் மூலமாகவே செய்யப்படவேண்டுமென்றும்.

(3) காரியதரிசி மீட்டிங்குக்கு வராத மெம்பர்களை சந்தித்து புத்திமதி சொல்லி கூட்டிவரவும் அப்படி வராதவர்களை மேலாவுக்கு தெரியப்படுத்தவும்.

(4) காரியதரிசி இராப்பள்ளிக்கூடத்திற்கு வராதவர்களை சந்தித்து அவர்களை வரும்படி செய்யவும் வராதவர்களை மேலாவுக்கு தெரியப்படுத்தவும்.

(5) காரியதரிசி வசூல் செய்பவரை சந்தித்து கொடுக்காத மெம்பர்களை மேலாவுக்கு தெரியப்படுத்தவேண்டியது.

மூன்று பொக்கிஷதாரரும் 50 மெம்பர்களை மூன்று சமமாக பிரித்து ஏற்படும் சந்தாவை வசூல் செய்து பாங்கசீசரிடம் ரசீது பெற்றுக்கொள்ளவேண்டியது.

பாங்கசீசர் பொக்கிஷதார்களுக்கு செலுத்தியதற்கு ரசீது கொடுக்கப்படும் எப்போது சங்கம் கேட்கப்படுமோ தயாராக வைத்து அனுமதியில்லாமல் செலவு செய்யக்கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது.

இச்சங்கம் எல்லாவித நன்மையும் பெருகவும் இதன் மூலமாய் தேசத்திற்கும் நம்முடைய குலத்தை சீர்திருத்தவும் தகுந்த ஏற்பாடு செய்யும்படி சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டு ராஜவாழ்த்துடனே கூட்டம் முடிவுபெற்றது.

ஹெட் காரியதரிசி,
M. கிறிஸ்தியான் வேதமணி,
உபாத்தியாயர்.

---

## பொது வர்த்தமானம்.

### பாதிரி தற்கொலை.

சம்பளக்குறைவு காரணம்.

இரோக்க கோவில் மியாஸிங்கத்தை ஒழுங்கு படுத்தும்படி பலஸ்தீன சர்க்கார் மூன்று வருடங்களுக்கு முன்னே ஒரு கமிஷன் ஏற்படுத்தியிருந்தனர். கோவில் நிலங்களில் பலவற்றை விற்பதும் மற்றச் செலவுகளை குறைப்பதும் இதுவரை இந்த கமிஷனின் வேலையாயிருந்தது.

சென்ற வாரம் முதல் உத்தியோகஸ்தர் சம்பளங்களை குறைக்க ஆரம்பித்ததில் மாதம் ஒரு பவுன் வீதம் சம்பளம் பெற்று வந்த மேற்குறித்த பாதிரியாரின் சம்பளத்தை ஐந்து ஷில்லிங் குறைத்திருப்பதாயும் இனிமேல் அவருக்கு 15 ஷில்லிங் தான் கிடைக்குமென்றும் விளம்பரம் அனுப்பியிருந்தனர்.

இந்த கோவில் பாதிரிகளுக்கு வசிக்க ஒரு சிறு அறையும் சாப்பாட்டிற்கு வெறும் ரொட்டியும் தண்ணீரும் மாத்திரம் கொடுக்கப்படுகிறது.

மேற்சொன்ன பாதிரிக்கு பதினைந்து அல்லது 20 பவுன் கடன் இருந்ததாகவும் இப்படிச் சம்பளம் ஒரு பவுனிலிருந்து முக்கால் ஆக்கப்பட்டதால் இவ்வளவு கஷ்டத்தில் ஜீவிப்பதால் பயன் ஒன்றுமில்லையென்று நினைத்து அவர் தூக்குப்போட்டுக்கொண்டு இறந்துபோனதாகவும் தெரிகிறது.

---

## கல்கத்தா தீவிபத்து.

பயங்கரக் காட்சி.

மரத்தினால் கட்டப்பட்டிருந்த ஓர் வீட்டின் அடிப்பாகத்தில் பிடித்த தீயானது மெத்தைக்குப்போகும் மரப்படியில் பிடித்து 18 பேரின் உயிரைக்கொள்ளைகொண்டது. 10 மனிதர்கள் 3 ஸ்திரீகள் 5 குழந்தைகள் அக்கினியில் அகப்பட்டு மாண்டனர். நடுநிசியில் தீப்பிடித்ததினாலும் வீட்டிலுள்ளவர்களெல்லாம் அயர்ந்து நித்திரைசெய்துகொண்டிருந்ததினாலும் அதிகமானபேர் மாண்டுபோனார்கள். அந்த வீட்டின் அடியில் கோணிமூட்டைகள் அடுக்கப்பட்டிருந்ததால் அங்கு முதலில் தீப்பிடித்து விரைவில் மற்ற பாகங்களுக்கும் பரவிற்று. சிறிய தீவிபத்தில் 18 பேர் மாண்டது கல்கத்தாவின் சரித்திரத்திலேயே இது தான் முதலாவதாகும். அந்த வீட்டில் இருபத்தெட்டுப் பேர் இருந்தார்கள். நோசாபாரன் போலீஸாரும் நெருப்பணைக்கும் படையை சேர்ந்தவர்களும் மெத்தையின் நிலைமை எப்படியிருக்கிறதென்று அறிய மெத்தைக்குச் சென்றனர். அங்கு 6 பிரேதங்கள் அகப்பட்டன. அவர்கள் இன்னும் உள்ளே நுழைந்து பார்க்கும் பொழுது மற்றோர் பக்கத்தில் 12 பேர் மாண்டுகிடந்தனர். அந்தப் பிரேதங்களையெல்லாம் தெருவிற்கு அப்புறப்படுத்தினார்கள். சில பிரேதங்கள் எரிந்து சாம்பலாகவும் சில அடையாளம் தெரியாமல் நெருப்பால் பொசுக்கப்பட்டும் கிடந்தன. அந்த விபத்திலிருந்தும் காப்பாற்றிக்கொண்டு வெளியே குதித்த மூன்றுபேர்களும் பலத்த காயமடைந்தபடியால் உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். மற்றும் இருவர் மெத்தைப்படியில் தீப்பிடித்துக்கொண்டதால் மேலிருந்து கீழே குதித்து உயிர்தப்பினார்கள். ஒரு சிறிய பையன் தன் வயது சென்ற தாயாரைத் தூக்கிக்கொண்டு கீழே பாய்ந்து இருவரும் உயிர் தப்பியது எல்லோராலும் பாராட்டப்பட்டது. அந்த வீட்டின் அடியிலுள்ள அறையில் அடைபட்டிருந்த ஒரு மோட்டார் வண்டியிலும் தீப்பிடிக்கவே அம்மோட்டாருக்கு மிகுந்த சேதம் ஏற்பட்டது. அந்த வீட்டின் மேற்கூரையின் ஒரு பாகம் நெருப்பினால் இடிந்து விழுந்துவிட்டது. 7 மாதக் குழந்தை ஒன்றும் ரங்கூனுக்குப்போக தயாராகயிருந்த ஒரு நேபாள தேசத்தாரும் அவரது குடும்பத்தினரும் உட்பட 18 பேர் தீவிபத்தினால் மாண்டுபோயினர்.

---

## இந்தியாவும், நூல் இறக்குமதியும்.

பிரிட்டிஷ் நூல் குறைவு.

இந்தியரால் எவ்வளவு நூல் அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறதென்றும் கணக்கெடுத்தபோது ஜப்பான் நூல்கள் வருஷத்துக்கு வருஷம் அதிகமாக இறக்குமதிசெய்யப்படுகிறது என்றும் அதனால் பிரிட்டிஷ் கைத்தொழிலுக்கு நஷ்டமேற்பட்டிருக்கிறதென்றும் பிரிட்டிஷ் பத்திரிகைகள் கூறுகின்றன. விளக்கிக் கூறுகையில் 1913-ம் வருஷம் கிரேட் பிரிட்டனிலிருந்து 100-க்கு 80 வீதமும் ஜப்பானிலிருந்து 100-க்கு 2 வீதமும் நூல் கயிறு இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. 1913-24-ல் கிரேட் பிரிட்டன் 100-க்கு 49 வீதமும் ஜப்பான் 46 வீதமும் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. 1925-26 கிரேட் பிரிட்டனில் குறைவாகவும் ஜப்பான் அதிகமாகவும் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. அதாவது கிரேட் பிரிட்டன் 100-க்கு 32-ம் ஜப்பான் 100-க்கு 57 மாகும். 1926-27-ல் கிரேட் பிரிட்டன் இறக்குமதி சாக்கு கொஞ்சம் அதிகரித்திருக்கிறது. அதாவது கிரேட் பிரிட்டன் 41-ம் ஜப்பான் 53-ம். இன்னொரு கவனிக்கத்தக்க முக்கிய விஷயமென்னவென்றால் 1925-26 வரை வருஷம் ஒன்றுக்கு சராசரி 684 லட்சம் ராத்தலாக உற்பத்தி செய்யப்பட்டது. இப்போது சராசரி 3,070 லட்சம் ராத்தலாக குறைந்துவிட்டது.

---

## ஒரு டாக்டர்மீது வழக்கு.

காதுநோய்க்கு-சரியில்லாத திராவகம்.

காது செவிடாயது.

அடிஷனல் ஜில்லா ஜட்ஜி: சிவில் சர்ஜன் டாக்டர் சையாம பிஹாரிலால் மீது சப் ஜட்ஜ் திருபாகார் சிதாஸ்கன் ரூ. 15,000-க்கு நஷ்ட ஈடு வழக்குத் தொடுத்துள்ளதோர் விசித்திரமான வழக்கிற்கு சாட்சிகளை விசாரித்து வருகின்றார். அவ்வழக்கின் சாராம்சமாவது: சப் ஜட்ஜ் தாம் பிராதியிடம் மருந்து எழுதிக்கொடுத்ததை

யால்தான் அவ்விதம் நேர்ந்ததென்று கூறுகின்றார்.

பிரதிவாதி தாம் சரியாகவே மருந்து எழுதிக்கொடுத்துள்ளதாய் கூறுகின்றார்.

வெட்டினென்ட் கர்னல் ஹாப்பர் தாம் வாதியை பரிசோதித்ததாகவும் அவர் காது கரியபலவாயுவினால் கெட்டுபோயிருப்பதாகவும் தாம் காதுக்கு அப்பராணை எழுதிக்கொடுக்கமாட்டாரென்றும் கூறினார்.

---

தேனீக்கள்:— ஆண் தேனீக்கு 13,800 கண்களும், வேலைசெய்யும் தேனீக்கு 6400 கண்களும், ராணி தேனீக்கு 4900 கண்களுமுண்டென்று தேனீக்களைப்பற்றிய சாஸ்திர நிபுணர் சொல்லுகிறார்.

---

யூதர்கள்:—பிரித்தானியாவில் 3 லட்சம் யூதர்களும் நியூயார்க்கில 12 லட்சம யூதர்களுமுண்டாம.

---

வரி செலுத்தும் அமெரிக்கர்:— அமெரிக்காவில் 207 பேர் 30 லட்சம் ரூபாய் வரி செலுத்துகிறவர்களுண்டாம். 3 பெண்களுக்கு தனியே ஒரு கோடி ரூபாய் வருமானமுள்ளவர்களுமுண்டாம்.

---

கார்க்கு மரங்கள்:—அல்ஜீரியா மாகாணத்தில் 25 லட்சம ஏக்கர் விஸ்தீரணமான கார்க்கு மரவனம் உண்டாம்.

---

சன்னியாசி மடங்கள்:—நார்வே சுவேதன் தேசங்களில் சன்னியாசி, கன்னியாஸ்திரீ மடங்களில்லையாம். அப்படியிருப்பது தேச சட்டத்திற்கு விரோதமாம்.

---

உருக்குக்கம்பிகள்:—மெல்லிய உருக்குக் கம்பிகளைக்கொண்டு பட்டைப்போல அதிக மிருதுவான துணிகள் நெய்துவருகிறார்களாம்.

---

வாலில்லா குரங்குகள்:—வாலில்லா குரங்குகளுக்கும் மனிதனைப்போலவே 32 பற்களுண்டாம்.

---

நூதன தபாற்பெட்டி:—லீப்சிக் பட்டணத்தில் ஒரு நூதன தபாற்பெட்டி உண்டாக்கப்பட்டிருக்கிறதாம். பெட்டியில் போடவேண்டிய கடிதத்தை ஒரு துவாரத்தில் வைத்து அதைகள் ஒட்டவேண்டிய ஸ்டாம்புக்குரிய பணத்தை அதற்கென்று ஏற்படுத்தப்பட்ட சிறு குழியில வைத்தால் உடனே அந்தக்கடிதத்தில் ஸடாம்புகள் தானாகவே ஒட்டப்பட்டு தபாற்பெட்டிக்குள் விழுகின்றனவாம்.

---

மின்சார விளக்குகள்:—அதிகச் சிறிய மின்சார விளக்குகள், தற்கால ரணவைத்திய கத்திகளில் அமைக்கப்பட்டிருக்கின்றனவாம். ரணவைத்தியர் ரண சிகிச்சைக் செய்கையில் கத்திகளிலுள்ள சிறு மின்சார விளக்குகள் காயத்திற்கு போதுமான வெளிச்சம் தருகின்றனவாம்.

---

உலகத்தில் சிறிய கம்பளம்:—உலகத்திலேயே மிகவும் சிறிய இந்திய கம்பளம் ஒன்று விக்டோரியா அல்பர்ட் காட்சிசாலையில் உண்டாம். அதன் நீளம் 3½ அங்குலம், அகலம் 21 அங்குலம்.

---

ஒரு பிச்சைக்காரன் போட்டிருந்த சட்டைகள்:—கிளாஸ்கோ போலீசார் ஒரு பிச்சைக்காரனை கைது செய்தார்களாம். அவன் 5 பெரிய கம்பளிச்சட்டைகளும், 3 கால்சட்டைகளும் போட்டிருந்தானும். அவனுடைய எல்லாச்சட்டை சேபுகளையும் சோதித்துப்பார்க்க இரண்டு உத்தியோகஸ்தருக்கு இரண்டு மணிநேரம் சென்றதாம்.

---

ஆப்கன் தேசத்து அரசர்:—ஆப்கன் தேசத்து அரசர் கடந்த மாசம் பம்பாய் முதலிய இடங்களைப்பார்வையிட்டு இங்கிலாந்து போயிருக்கிறார். இந்தியாவில் மகமதியராலும் மற்றவர்களாலும் அதிகமாக வரவேற்கப்பட்டார்.

---

இந்திய நேஷனல் காங்கிரஸ்:—மகாநாடு சென்னையில் டிசம்பர் 26-ம் தேதி முதல் கூடினது. பல பெரியோர் வந்து பல தீர்மானங்கள் செய்தனர்.

---

உபவாசம்:—பெல்கேரேட் என்ற இடத்தில் ஒரு உபவாசக்காரியம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதாம். நீர்ப்பதான் உபவாசமாயிருந்தால் எந்த நீண்ட வியாதியும் சுகமாகிவிடும் என்பது இவர்கள் நம்பிக்கையாம்.

---

நிறம் மாறும் செடி:—கியூபா என்ற நாட்டில் ஒரு செடி உண்டாம. பூமியதிர்ச்சி வருகிற சமயம் அந்தச்செடியின் நிறம் மாறுமாம்.

---

உடன்கட்டையேறிய ஸ்திரீ:—பார் நகரத்தில ஒரு மாது உடன்கட்டையேறியதால அவள் சொந்தக்காரர்களுக்குடபட 12 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். நான்கு பேர்கள் நீங்கலாக மற்றப் பேர்களெல்லாம் ஜாமீனில் விடப்பட்டிருக்கின்றனர். சத்தியின் ஸ்ரார்த்த சடங்கு இராஜக்களால நடத்தப்பட்டது.

இரங்கூனில் பூகம்பம்:—இன்று, காலை 2.25 மணிக்கு இங்கு ஓர் பலத்த பூமியதிர்ச்சி உண்டாயிற்று. அதிர்ச்சி கிழக்கிலிருந்து மேலபக்கமாக ஏற்பட்டது. இதுவரையில் பலத்த சேதம் எதுவும் கேரிட்டதாக அறிவிக்கப்படவில்லை.

---

ஓயாமல் ஓடும் யந்திரம்:—ஊாஜூடாரோவிச் என்ற ஒரு யூகஸ்லேவிய முஸ்லீம் ஓயாமல் ஓடிக்கொண்டிருக்கிற ஒரு யந்திரம் செய்திருக்கிறார். அந்த யந்திரத்தில் பல சக்கரங்களும் அவற்றுடன் இணைத்த பளுவுக் குண்டுகளும் உள்ளதாய் இருக்கிறது. அந்த யந்திரத்தை ஆரம்பித்துவிட்டால் பிறகு அதை நிறுத்துவதுதான் கஷ்டமாயிருக்கிறதாம். அதை அவர்பேருக்கு ரிஜிஸ்டர் செய்திருக்கிறது.

---

சென்னையில் மோட்டார்கள்:— நேற்றுடன் 10,000 மோட்டார்கள் சென்னையில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. பழைய எம். சி. சீரியல் நம்பர் நேற்றுடன் முடிவடைந்தது. இன்றுமுதல்கொண்டு போலீஸ் கமிஷனர் புதிய கார்களுக்கு எம். சி. எப். என்ற சீரியல் நம்பர் கொடுப்பார்.

---

புறாக்களை அழிக்க முயற்சி:—லண்டனில் புறாக்கள் அளவுக்கு மிஞ்சி பெருகிவிட்டதால் அவைகளை அழித்துவிடவேண்டுமென்று லார்ட் மேயர் தீர்மானித்துக் கொண்டிருக்கிறார். வயது சென்ற ஸ்திரீகளும் மற்றவர்களுமாக பலர் இதை ஆட்சேபித்து எழுதிய கடிதங்கள் வந்து அவர் வீட்டில் குவிந்துகிடக்கின்றன. ஆனால் 24 பிள்ளைகளுக்குத் தாயான ஒரு ஸ்திரீ மாத்திரம் என்னுடைய பிள்ளைகளுக்கு புறாக்கறி கிடைத்தால் பிரியமாய் சாப்பிடுவார்கள். ஆகையால் மிகுதியான புறாக்களை எல்லாம அடித்து அப்படிப்பட்ட உபயோகத்துக்கு கொடுத்துவிடவேண்டுமென்று பொருள்பட கடிதம் எழுதியிருக்கிறாள். அவளுடைய பிள்ளைகளில 12 பேர் பண்ணிரண்டு வயதுக்குட்பட்டவர்களாம். ஆனால் லார்ட்மேயர் அந்தஸ்திரீயின் யோசனையை ஒப்புக்கொள்ள முடியாதவராயிருக்கிறார்.

---

குடிகாரன் ஜோர்:—இங்கு இருவர் நன்றாய் வெறிக்கக் குடித்துவிட்டு வீடு திரும்புகையில் உற்சாகம பொறுக்கமுடியாமல் தமது கைத் துப்பாக்கியை எடுத்து சுட்டார். அந்தக் குண்டு மரத்திலுள்ள விளக்குகளுக்கெல்லாம் மின்சார சக்தி செலுத்துகிற ஒரு மின்சார கேபிளில்பட்டு அதைத் துண்டித்துவிட்டது அதனால நகரம்முழுவதும் இருள் சூழ்ந்து கிடக்க வேண்டியதாயிற்று.

---

பர்மா கவர்னருக்கு ஆபத்து:—நேற்று பர்மா சட்டசபையை ஒத்திவைப்பதற்காக மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் (ஸ்டேட்கோச்) அரசாங்கவண்டியில போய்க்கொண்டிருக்கையில் வண்டியின்மீது பாறாங் செங்கல் வந்துவிழுந்தது. இந்த சம்பவமானது நேற்றுகாலை 11-மணிக்கு கமிஷனர் ரோட்டில் நடந்தது. விட்டெறியப்பட்ட அக்கல் கவர்னரின் பிரத்தியேகக் காரியதரிசி திருபெண்லேயின் மார்பில் விழுந்தது. அதனால் அவர் காயப்படவில்லை. கல் விட்டெறிந்த மனிதன் உடனே பிடிபட்டான். அவன் பைத்தியம்பிடித்த முகமதியனென்றும் அவன் ரெங்கூன் பைத்தியகார ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்தானென்றும் தெரியவந்தது. திராவிடன்.



குடி—குடி கெடுத்துவிட்டது:—பழைய சரக்குகளை வாங்கின இந்தியர்களில் நால்வர் இறந்தனர் என்றும், மற்றும் நால்வர் மிகவும கவலைக்கிடமான நிலைமையிலிருக்கின்றனர் என்றும் செய்தி கிடைத்திருக்கிறது. சென்ற வெள்ளிக்கிழமை அவர்களில் ஒருவனுக்கு தற்செயலாக கார்க் போடப்பட்ட ஒரு புட்டி கிடைத்தது. அதன்மேல் பிராந்தி என்று தலை ஒட்டப்பட்டிருந்தது. சாராய மோகத்தால் அதைப் பத்து பேர்களும் குடித்துவிட்டனர். குடித்த 24-மணி நேரத்திற்குள் 4-பேர் மாண்டுபோனார்கள். இன்னும் நால்வர் மிகவும் பரிதாபகரமான நிலைமையிலிருக்கின்றனர். அந்த புட்டி சோதனை செய்யப்பட்டது.

---

நகரப் பஞ்சம்:—லண்டன் நகர சங்கத் தலைவரான லார்ட் ஆஸ்க்வித் அந்தச்சங்கக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் சமீபத்தில் மோட்டார் வேலை முதலியவைகளுக்குப் போதிய தகரம் கிடையாமல் கஷ்டமேற்படுமென்பது திண்ணம். ஹென்ரி போர்ட் மோட்டார் தொழிற்சாலையில் மாறுதல்கள் ஏற்பட்டு வேலை தடைபடாமலிருந்தால இந்த வருஷத்திலேயே தகரப்பஞ்சம் நேரிட்டிருக்கக்கூடும். தற்சமயம் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலுமாக மொத்தம் 3005 டன் தகரம்தான கையிருப்பு இருக்கிறது. இதெல்லாம் மோட்டார் தொழில் முதலிய வேலைகளுக்கு இரண்டு வாரத்துக்குக்கூட போதாது. அன்றியும் இனிமேல் அதிகமான தகரம் வேண்டியிருக்குமென்று தோன்றுகிறது. ஆகையால் போதுமான தகரம்வெட்டி எடுக்கவேண்டியது அத்தியாவசியம் என்று கூறினார்.

---

கியூபெக் தீவிபத்து:—இங்குள்ள ஹாப்பிஸ் செயின்ட் சாரலஸ் ஸ்தானத்தில் நெருப்புப் பற்றிக்கொண்டதில் அநேக ஆட்களும் குழந்தைகளும் மரணமடைந்தனர். 17 பிரேதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. 50 பேர் மரணமடைந்திருக்கக் கூடுமென்று தெரிகிறது. 80 பிள்ளைகளைக்காணோம.

---

தலையோடுதலை பொருந்தின இரட்டைக் குழந்தைகள்:—டெர்பி நகரத்தில் ஒரு ஸ்திரீக்கு தலையோடு தலை பொருந்திய இரட்டை குழந்தைகள்பிறந்து தாயும் பிள்ளைகளும அவ்விடத்திய ஆசுபத்திரியில கொண்டுபோய் வைக்கப்பட்டிருக்கின்றனர். வைத்திய நிபுணர்கள் அந்தத் தலைகள் ஒட்டிக்கொண்டிருக்குமிடத்தில் அறுத்து அந்தக் குழந்தைகளைப் பிரித்துவிடலாமென்று கூறுகின்றனர்.

---

## தாய் தந்தையர்களின் கடமையின் சுருக்கம்.

ஒவ்வொரு தாய் தகப்பனுடைய பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கும் போகுங்காலத்தில் அவர்களுடைய படிப்பின்பேரிலும், நடைகொடி பாவனைகளின்பேரிலும் தாய்மார்கள் அதிக கவனம் வைத்தல் அவசியம். ஆகையால் தாயானவள் நல்ல புத்திசாலியாயும் கொஞ்சம் படிப்புள்ளவளாயும் நல்ல குணவதியாயும் இருப்பது நலம். தாயானவள் குடும்பவேலைகள் செய்யுங்காலந்தவிர மற்றக்காலத்தில் வீண் பேச்சுகளாலும் நித்திரையாலும் காலம் கழிக்காமல் அறிவைப் புகட்டும் நூல்களை வாசித்துக்கொண்டும் தையல் முதலிய சிறு கைத்தொழில்களைச் செய்துகொண்டுமிருந்தால், அந்த நற்பழக்கமே தங்கள் பிள்ளைகளுக்குக் குரு உபதேசம்போல நிலைக்கும். தாய்மார்கள் தங்கள் முன்னிலையில் பிள்ளைகள் பொய் பேசினாலும், அற்பமான பொருள்களைப்பிறரிடத்தினின்றும் கவரவேண்டுமென்று நடந்தாலும், அசங்கிதமான வார்த்தைகளைச்சொல்லிக்கொண்டு வந்தாலும், எதாகிலும் சாமான்கள் வாங்குங்காலத்தில் அதற்குரிய விலையன்றி, அநியாய விலைக்குக் கேட்டாலும், அல்லது அளவைக்குறைத்து விற்பவர்களை வஞ்சித்தாலும், அவர்களிடம் பொருள்களை வாங்கிக்கொண்டு அவைகளுக்குப் பணம் கொடுத்துவிட்டதாக ஏமாற்றினாலும், உடனே அவர்களைக்கண்டித்து நற்புத்தி புகட்ட வேண்டும். அவ்வாறிருக்காவிட்டால் இத்தகைய பழக்கங்கள் அச்சிறுவர்களுக்குப் படிந்து, அவர்கள் ஆயுள் உள்ளளவும் அவர்களை விடாமல் பீடிக்கும். இப்பேர்ப்பட்ட பழக்கத்தையுடைய குடும்பமானது பலவித கஷ்டங்களுக்கும் நாசத்திற்கும் உட்பட்டுவிடும்.

வீட்டில் பெரியவர்கள் பேசும்போது அதிக கூச்சலிட்டுப்பேசுவது எப்போதும் கெடுதியாகும். ஒரு சமயத்தில் பெரியோர்கள் வேலைக்காரர்பேரிலாவது அல்லது மற்றவர்கள் பேரிலாவது அவர்கள் செய்த குற்றத்திற்காக கோபத்தினால வரும் கடின வார்த்தைகளை உபயோகிப்பதற்குப்பதிலாக சுருக்கமாய் நயபயத்தால் கண்டிப்பது நலம். துர்ப்பாஷைகளை ஒருபோதும் உபயோகிக்கலாகாது. முதியோர்களே இவ்வித அநுசார வார்த்தைகளை உபயோகிப்பார்களானால், சமீபமாயுள்ள தங்கள் பிள்ளைகளும் பெற்றோர்களையே பின்பற்றுவார்களென்பதில் சந்தேகமில்லை. நாம் மேற்சொன்னதைப்போல பிள்ளைகளை நல்ல பயிற்சிக்குக்கொண்டுவருவது தாயினுடைய கடமையாயிருந்தாலும்; தகப்பனும் அக்கடமைகளை வழுவின்றி நடத்திக்கொண்டுவந்தால் அக்குடும்பத்திலுள்ள சிறுவர்கள் உத்தமர்களாயும், தாய் தந்தையர்களிடத்தில் அவர்கள் காலமுள்ளளவும் விசுவாசத்துடனும் மரியாதையுடனும் நடந்துவருவார்கள்.

தாய்மார்கள் சாவகாசமாய் இருக்கிற காலங்களில் தங்கள் சிறுவர்களுக்கு உலகத்திலிருந்து புகழ்பெற்ற பக்திமான்கள், லோகோபகாரிகள், சுத்தவீரர்கள் இவர்களுடைய சரித்திரங்களை ஒரு சமயத்தில் சுருக்கமாய்ச்சொல்லியும் மற்றோர் சமயத்தில் அவர்களுடைய படங்களைகாட்டியும் உற்சாகப்படுத்திவந்தால், அச்சிறுவர்களின் அறிவு விருத்தியடைந்து விசாலமாகும். சில சிறுவர்கள் நூதனமான வஸ்துக்களைப் பார்த்தபோதும், புதிய இடங்களுக்குச் சென்றபோதும் தங்கள் யுக்தியாக சில கேள்விகளைக் கேட்பதுண்டு. அக்கேள்விகளுக்கு அசட்டைசெய்யாமல் தாய்மார்கள் மறு உத்தரம் கொடுத்தால் நன்மையாகும். அப்படி செய்யாவிட்டால், புத்தி விசாலமாகிற பயிற்சி குறையும். ஆகையால், தாயும் கல்வி அறிவு இருப்பதுடன், புத்தி சாதுர்யமுள்ளவளாயும் இருந்தால் நலம். உலகத்தில் நற்குணத்திலும், வித்தையிலும், செளரியத்திலும் புகழ்பெற்றவர்கள் பெரும்பாலும் தாயினுடைய உதவியினாலேயே விருத்தியடைந்ததாக சரித்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால், பிள்ளைகளைப் பெறுவதினால் தகப்பனைவிட தாய்க்குத்தான் அதிக பாரமான கடமைகள் உண்டு. இதை ஒவ்வொரு குடும்பத்திலுள்ள தாயும் கவனிக்காவிட்டால், அந்தகுடும்பம் சுகப்படாது. ஒரு கட்டடத்துக்கு அஸ்திவாரம் பலமாயிருப்பது எவ்வளவு அவசியமோ, அதுபோல தாயே குழந்தைகளின் கூர்மையான புத்திக்கும் நற்குண நற்பயிற்சிக்கும் மூலகாரணமாயிருக்கிறார்கள். மனுதர்ம சாஸ்திரம் ஒரு உத்தம தாயினுடைய நற்போதமானது ஆயிரம் தகப்பனுடைய போதனைக்கு அதிகமானதென்று கூறுகிறது. தாய் தந்தையர்களுடைய முக்கிய கடமைகளாவன:—

1. பிள்ளைகளைச் சிறுவயது முதற்கொண்டு படிப்பிலும் தெய்வபக்தியிலும் பழக்குவது.

2. தேகப்பயிற்சிக்கும் போஷணைக்கும் போதுமான உணவு கொடுப்பதுமன்றி, தேகஆரோக்கியத்தையும், தேக சுத்தத்தையும், உடுப்பு சுத்தத்தையும் கவனிப்பது.

3. பள்ளிக்கூடத்திற்குப் போகும்போது பாடங்களைச் சரியாய் தங்கள் பிள்ளைகள் வாசித்து வருகிறார்களாவென்பதை பிரதிதினம் அரை மணி நேரமாகிலும் கவனித்து அதைத்தங்கள் தினசரியில் குறித்துவருவது.

4. துஷ்டநினைப்பும் சேர்க்கையும் அணுகாதிருக்கும்படி தடுத்துவருவதுடன், நற்குணங்களும் நற்பழக்கங்களும படிவதற்கு ஆண் பிள்ளைகளை தகப்பனிடத்திலும், பெண் பிள்ளைகளைத் தாயினிடத்திலுமிருக்கச்செய்து இனிமையான உபதேசங்களை அப்போதைக்கப்போது செய்து உற்சாகப்படுத்துவது.

5. கண்ணுக்குமுன் வரும் விஷயங்களை சிறுவர்கள் தாமகவே கவனிக்கப் பழக்குவது.

6. தேகம் மெலிந்தும் வளர்ச்சி குறைந்துமிருந்தால் அக்காரணத்தை தாங்களே உணர்ந்து வைத்தியர்களைக் கொண்டு தக்க மருந்தும் சிகிச்சையும் செய்விக்க முயல்வது.

7. தகப்பன் நன்றாய் வாசித்திருக்கும் பட்சத்தில் சிறுவர்களை ஐந்து வயது முதற் கொண்டு தனக்கும் ஓய்வாக இருக்கிற காலங்களில் கதைகளாலும் சிருஷ்டியின் அற்புதங்களைத் தெரிவித்தும் கடவுள் பக்தியை ஊட்டியும் பழக்குவது.

8. இல்லற தமர்த்திற்குரிய நற்குண நற்செய்கைகளை பிள்ளைகள் பெறும்படி செய்வதுமன்றி, மானிடப்பிறவியின் பெருமைகளைத் தெரிவிப்பது.

9. சிறுவர்கள் சோம்பலாயிருந்து வீண் காலம் போக்குவதும் தங்கள் பொருளின் மீது கவனமில்லாதிருப்பதுமாகிய குற்றங்களை விலக்கி அவர்கள் தங்கள் குடும்பத்திற்கு கீர்த்தியுண்டாகும் படியான ஆபரணம் போல் விளங்கச் செய்வது முக்கிய கடமையாகும்.

A. ராஜுப்பிள்ளை,
C. S. M. கள்ளர் ஸ்கூல்,
பஸ்காரம்பட்டி.

### பஞ்சாங்கம்.
### 1928-௵ ஜனவரி௴

● அமாவாசை ○ பௌர்ணமி *கிருத்திகை

| வாரம் | தேதி | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | 1 | 8 | 15 | ●22 | 29 | ... |
| திங்கள் | 2 | 9 | 16 | 23 | 30 | ... |
| செவ் | 3 | 10 | 17 | 24 | *31 | ... |
| புதன் | 4 | 11 | 18 | 25 | ... | ... |
| வியா | ○5 | 12 | 19 | 26 | ... | ... |
| வெள | 6 | 13 | 20 | 27 | ... | ... |
| சனி | 7 | 14 | 21 | 28 | ... | ... |

| வாரம் | பிரபவ-௵ மார்கழி 17உ — தை 18உ | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | 17 | 24 | 2 | ●9 | 16 | ... |
| திங்கள் | 18 | 25 | 3 | 10 | 17 | ... |
| செவ் | 19 | 26 | 4 | 11 | *18 | ... |
| புதன் | 20 | 27 | 5 | 12 | ... | ... |
| வியா | ○21 | 28 | 6 | 13 | ... | ... |
| வெள்ளி | 22 | 29 | 7 | 14 | ... | ... |
| சனி | 23 | 1 | 8 | 15 | ... | ... |

*Patron.* - M.R.Ry. Rao Babadur,
A. J. Vethanayaga Thevar Avl.,
Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam,
Usilampatti.

*Manager.*—Rev. B. S. Stoffer,
Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-ள-ள-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் பி. எஸ். ஸ்டோபர் துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

அமெரிக்கன் மிஷன் "லினக்ஸ்" பிரஸ், பசுமலை—1928

1221

CX

REG. NO. M. 2146

OFFICE OF ... 21 FEB 1928

# The Piramalai Reformer.

## பிரமலை சீர்திருத்தன்.

"ஆலோசனையில்லாத இடத்தில் ஜனங்கள் விழுந்துபோவார்கள்; அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும்."

Vol. VII.] பெப்ருவரி௴ 1928 [இலக்கம் 10

உசிலம்பட்டியில் கனம்பொருந்திய மதராஸ் லேபர் கமிஷனர் எஸ். எச். சிலேட்டர் ஸி. எம். ஜி. ஸி. ஐ. இ., ஐ. ஸி. எஸ். துரை அவர்களுக்கு—பிரமலைத்தேவர்கள் வாசித்தளித்த,

### வரவேற்புப் பத்திரம்.

ஐயா!

மதுரை, இராமநாதபுரம் ஜில்லா பிரமலைத்தேவமார்களாகிய எங்களின் இடையில் முதன்முதலாக எழுந்தருளிய தங்களது வரவு நல்வரவாகுக.

இவ்வரவு எங்களுக்குச் சொந்தமான நிலத்தில் நிகழ்ந்ததைக்குறித்து மிகவும் சந்தோஷிக்கிறோம். நாம் கூடி இருக்கும் 11 ஏக்கர் விஸ்தீரணமுள்ள இத்தோட்டம் கள்ளர் சந்தாவின் பெருக்கினால் ஏற்பட்ட பொதுநிதியினின்றே சேகரிக்கப்பட்டது. ஐயா! தாங்கள் அன்புகூர்ந்து பொதுநிதிக் கமிட்டியார் கூட்டத்தில் அன்று தினம் விஜயம் செய்ததாகக் கேள்விப்படுகிறோம். அப்பொழுதே இப்பொதுநிதியின் காரணத்தையும் காரியத்தையும் அறிந்திருப்பீர்களென்று நம்புகிறோம்.

இப்பொழுது தாங்கள் முன்தோன்றும் விவசாயப்பயிற்சித் தோட்டமும் பின் பக்கத்தில் அமைந்துள்ள வியக்கத்தக்க கிணறும் ஏறக்குறைய பனிரண்டாயிர ரூபாய் பெறுமான இவைகள் இப்பொதுநிதியிலிருந்து பெற்ற சிறந்த நன்மைகளேயாகும். இவை தவிர இப்பொதுநிதிக்கு ரொக்க ஆஸ்தியாக 40 ஆயிரம் ரூபாயும் உளது. அத்திரவியத்தைக்கொண்டு மூன்று இடங்களில் கள்ளர் அடகு பாங்குகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

கள்ளர்கள் கூலிவேலைசெய்து ஜீவனஞ்செய்யும் பொருட்டுத்தகுதியுள்ள தேவமார்கள் ரோட் கண்டிராக்ட் எடுக்கவோ, ரெயில்வே கண்டிராக்ட் எடுக்கவோ இன்னும் கட்டிடம், கிணறு, கண்மாய் முதலிய வேலை கண்டிராக்ட் எடுக்கவோ, அவர்களுக்குக் கடன் கொடுக்க இத்தனம் உதவுகின்றது. இப்படி கண்டிராக்ட் கொடுத்து உதவும், நெடுநாளாக மதுரை ஜில்லா போர்டு பிரஸிடெண்டு ஆஸ்தானத்தை வகித்த கனம் பொருந்திய போக்ஸ் துரை அவர்களுக்கு அவரது அளவில்லா, காருண்ய குணத்திற்காக எங்களது பணிவான வந்தனத்தை அளிக்கத்தருணம் வாய்த்ததென மிக்கசந்தோஷிக்கின்றோம்.

எங்கள் பூரண அபிமானத்தைப் பெற்றிருக்கும் மகா-ள-ள-ஸ்ரீ கே. பி. ஜனார்த்தன ராவ் அவர்களுக்கு ராவ் பஹதூர் எனும் பட்டத்தைக் கவர்ன்மெண்டார் புது வருஷத்திற்காக அளித்ததைக் குறித்து எங்களுக்குண்டாகிய சந்தோஷத்தைக் கூறவும் வேண்டுமோ!

அவர் தமக்கு முன்னிருந்த மகா-ள-ள-ஸ்ரீ ராவ் பஹதூர் ஏ. கே. இராஜா அய்யர் அவர்களது குணம் முற்றிலும் பொருந்தியும் எங்களது முன்னேற்றத்தையே மாறா நினைவு பூண்டவராகிய எங்கள் அன்பு முழுமையும் கொள்ளைகொண்டார். அவருக்கு மென்மேலும் பட்டப்பெயர் உயரவும் அவர் நீடூழிகாலம் திடகாத்திரராக வாழவும் கடவுளைப்பிரார்த்திக்கின்றனம். தவிர அவருக்கு இந்தக் கவுரவத்தை ஆராய்ந்து அளித்த அதிகாரிகளுக்கு எங்களுடைய நன்றி அறிதலைத் தங்கள் சார்பாகத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

கள்வரென மதிக்கப்பட்டிருப்பினும் எங்களுக்கு ஏற்படுத்திய சீர்திருத்தத்தினால் அடையப்பெற்ற நன்றிகளை எந்நாளும் மறவோம்.

இந்த ஸ்பெஷல் இலாகாவின் ஆதீனத்தின்கீழ் எலிமெண்டரி பள்ளிக்கூடங்கள் என்ன, தர்மசாலைகள் என்ன, தொழிற்சாலைகள் என்ன, விவசாய வகையறாக் கடன் உதவி என்ன! இன்னும் அநேக உதவிகளும் நடத்திவரப்பெறுகின்றன.

வளரும் குழந்தை ஆகாரத்திற்கு அழுவதுபோலவும், அழுத பிள்ளை பால் குடிக்கும் என்பது போலவும்,

எங்களுடைய கஷ்ட நிஷ்டூரத்தைக் கேட்டு நிவிர்த்திக்க மன்றாடிக்கேட்டுக்கொள்ளுகின்றோம்.

அவையாவன:—மேற்படிப்புக்குண்டான வகைகள். சில நாளைக்குள் எங்கள் பாலியர்கள் ஹைஸ்கூல் படிப்புகளை முடித்துக் காலேஜ் படிப்புக்கு வரக்கூடும். அவர்களுக்கு மேற்படிப்புக்கும் சாப்பாட்டிற்கும் வேண்டிய பணவுதவி புரியக் கேட்டுக்கொள்கின்றோம்.

எங்களுக்கு விவசாயம் செய்யப்படியான நிலங்களை ஜாரி செய்ய ஸ்பெஷல் டிப்பார்ட்மெண்டார் மிக்க முயற்சி செய்தும் அது எங்களுக்கு கிடைப்பது எவ்வளவு தூரம் கஷ்டமென்பதையும் அதன் உண்மையை அறிந்த உங்களுக்கு எடுத்துரைப்பது அவசியமல்லவென்றும் நம்புகிறோம். ஆதலால், பெரியாற்றுப்பாய்ச்சலுள்ள நிலங்களை ஏலத்தில் எடுக்க உதவிபுரியும்பொருட்டு எங்கள் ஐக்கிய நாணய சங்கங்களினின்றும் நீடித்த காலக் கடன் கொடுத்து எம்மவரைக்காப்பாற்ற அதற்குண்டான வழிகளைத் தேடிவைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

மாட்சிமை தங்கிய சென்னை கவர்னர் துரையவர்கள் இதேயிடத்தில் 1926-ம் வருஷம் ஜூலை மீ விஜயம் செய்தபோது எங்கள் நிலத்தின் நீர்ப்பாய்ச்சலுக்கு வழிதேட மன்றாடிக்கேட்டுக்கொண்டோம். அந்நீர் வளத்திற்காக இப்பொழுது சில உபாயங்கள் தேடியிருப்பதாகக் கேள்விப்பட்டு மனம் பூரிக்கின்றோம். அவை நிறைவேறினால் எங்களது பாக்கியமே பாக்கியம். சர்க்காருக்கும் இஸ்தி அதிகப்படுமென்பது திண்ணம். இவ்விஷயங்களில் கனம் துரையவர்கள் அன்புகூர்ந்து மனமிரங்கி லக்ஷக்கணக்கான எங்களுக்கு நீர்ப்பாய்ச்சலும் கொடுத்து எங்கள் வறுமையை முற்றுமொழித்து அருள்புரிவீர்களென்று பூரண நம்பிக்கை கொண்டிருக்கிறோம்.

நிலவளமில்லாத காரணமே எங்கள் கொடிய செயல்களுக்கு ஆதாரமென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அந்நிலவளத்திற்குக் காரணமாகிய நீர்வள சௌகரியங்கள் ஏற்பட்ட அக்கணமே சீர்திருத்த டிப்பார்ட்மெண்டின் சங்கற்பங்கள் நிறைவேறி ஜயம்பெறுமென்பதற்கு ஐயமில்லை.

இது சம்பந்தமாக நாங்கள் தெரிவித்துக்கொள்ள வேண்டியதாவது: மேலூர் தாலூகாவிலுள்ள ஈசநாட்டுக் கள்ளர்களின் சரித்திரமே. அவர்கள், பெரியாற்று நீர்வளமேற்படுமுன் எங்களைக்காட்டிலும் கொடிய தீச்செயலுடையோராயிருந்தும் இப்போது நன்கு மதிக்கப்படும் குடித்தனத்தாராய் விளங்குவதையே கூறலாயினோம்.

ஐயா! நாங்கள் கடைசியாய்த்தெரியப்படுத்திக்கொள்ளும் வேண்டுகோள் மற்றும் ஒன்று உளது. அதாவது நாங்கள் 'இயற்கைக் கள்ளர்களே தவிரப் பிறவிக் கள்ளர்கள் அல்லர்'. மேலும் தஞ்சாவூர் ஜில்லாவிலிருக்கும் எங்கள் ஜாதியார் சீர்திருத்தத்தை மேற்கொண்டிருக்கும் காருண்ய கவர்ன்மெண்டாருக்கு அவர்களும் நாங்களும் பிள்ளைகள் ஆவோம். அப்படியிருக்க அவர்களை ஸீ. டி. ஆக்ட் நிபந்தனைகளுக்கு உட்படுத்தாமல் கவுரவம் கொடுத்துச் சீர்திருத்தி வருகின்றனர்; எங்கள் குலத்தனரோ சென்ற ஐந்து வருஷங்களாக ஷை ஆக்டின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வேண்டிய அவஸ்தையும்பட்டு முன்னேற்றத்தை அடைந்திருக்கிறோமென்பதை தாங்களே நிதர்சனமாய்க்கண்டு எங்கள் குலத்தினரும் அவ்வித நன்மைக்குப் பாத்திரர்கள் ஆவார்களென்பதைத் தெரிந்திருக்கலாம். இதுபற்றியே இந்த மசோதாவின் நிபந்தனையினின்றும் எங்களை நிவிர்த்தித்துக் கவுரவத்துடன் நாங்கள் உய்யும் வண்ணம் செய்யவேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

எங்களுடைய நன்றி அறிதலைக் காட்டும் பொருட்டுக் கள்ளர்களால் நெசவு செய்த சொற்ப விலையுள்ள இந்த விரிப்பைத் தாங்கள் அன்புகூர்ந்து பெற்றுக்கொள்ளவேண்டிக் கொள்ளுகிறோம்.

இப்படிக்கு,
தங்கள் கீழ்ப்படிதலுள்ள,
பிரமலைத் தேவர்கள்.

(உசிலம்பட்டி)

## ஆரம்பக் கல்வியைப்பற்றி ஸ்டேதாம் துரையவர்களின் அறிக்கை.

ஆரம்பக்கல்வியின் சீர்திருத்தத்தைப்பற்றி, கனம் ஸ்டேதாம் துரையவர்கள் கூறுகிறபடி ஸ்திரமான கல்விபெற்றவர்கள் என்று கருதும்படி பிள்ளைகள் போதுமான வருஷங்கள் ஸ்கூலில் தங்கிப்படிக்கமுடியாமல் வருஷத்திலும் ஏதோ கொஞ்சகாலமட்டுந்தான் படிக்கிறார்கள். இதற்குக் காரணம், பெற்றோரின் வறுமையும், சிறுவர்களாலும் தங்கள் காலட்சேபத்திற்கென்று ஒரு சிறு தொகையேனும் சம்பாதிக்கும்படி பெற்றோர் செய்வதுதான். பிள்ளைகள் ஸ்திரமான கல்வி கற்க வேண்டுமானால் அவர்கள் வருஷமுழுவதும் ஸ்கூலுக்கு ஆஜராகிப் படிக்கவேண்டும். இப்படிச் செய்வதால் மிக்க ஏழையானரின் பிள்ளைகளுக்கு ஒருவேளை ஆகாரத்தோடு உடை, புத்தகம், சிலேட்டு முதலியனவும் அவசியம் வாங்கிக் கொடுத்துக் கட்டாயக்கல்வி முறையை அமுலுக்குக் கொண்டுவரல்வேண்டும்.

ஒன்றிரண்டு வருஷங்களுக்குள்ளேயே பிள்ளைகள் ஸ்கூலை விட்டுவிடுவதற்கு முக்கிய காரணம், அநேகம் ஸ்கூல்களில் ஒரே உபாத்தியாயர் வேலைசெய்வது என்று சொல்லப்பெறுகின்றது. இதுவும், ஒரே உபாத்தியாயர் 5 வகுப்புகளில் 70 பிள்ளைகளுக்கும், 4 வகுப்புகளில் 90 பிள்ளைகளுக்கும், கற்பிக்கப்படுவதென்றும் சொல்லப்பெறுகின்றது. இம்மாதிரி இருப்பது எங்கோ சிற்சில இருக்கலாமே தவிர பெரும்பான்மையான பாடசாலைகளில், அதுவும் சிறிய கிராமாந்தரங்களில் 30–40 பிள்ளைகளுக்குமேல் இருக்கமாட்டார்கள். ஆனால் ஒரு உபாத்தியாயர் பல வகுப்புகளில் பல பிள்ளைகளுக்குச் கற்பிப்பது அசாத்தியம்தான். ஆனால் பிள்ளைகள் மேல்வகுப்பிற்கே மாற்றப்படாமல் அதேவகுப்பில் படிப்பதற்கும், பிள்ளைகள் ஸ்கூலை அடிக்கடி விட்டுவிடுவதற்கும் அதுவே காரணமெனப்படுகிறது. காரணம் அதுவல்ல. மேலே கூறியிருப்பதும், ஏழைகளல்லாத பெற்றோரும் தம் குடும்பவேலைகளுக்குப் பிள்ளைகளைச் சிறுவயதிலே படிக்கவேண்டிய காலத்திலேயே படிப்பைப் பெரிதா



யெண்ணாமல், தங்கள் ஆஸ்திபாஸ்திகளாகிய செல்வத்தையே பெரிதும் மதித்தும், பிறரைக்கொண்டு தம் குடும்பகாரியங்களைப் பார்ப்பதால் அவர்களுக்குக் கொடுக்கநேரும் சிறு தொகையை சிக்கன விஷயமாகக் கொண்டும், தம்பிள்ளைகளை அத்தொழிலில் ஈடுபடுத்துவதுமேயாகும்.

துரையவர்களின் அபிப்பிராயப்படி 4 வகுப்புகளுக்கும் ஒரே உபாத்தியாயர் உள்ள பாடசாலைகளில் கல்வி குறைவாகத்தான் இருக்குமென்று நாம் இயம்பவேண்டியதில்லை. அறிவறிந்த உண்மையாளரெல்லாம் அறிந்ததே. ஆனால், சில பரீட்சாதிகாரிகளும் உணராமல் இல்லை. சிலர் உணருவதில்லையென்றும் உரைக்கலாம். உணராமல் ஒரு பெருங்குறைவாய்— சுமையாய் உபாத்தியாயர்களின்மீது சுமத்திவிடுகின்றனர். இச்சுமை பெருந்தோஷத்திற்கு இடமாகிவிடுகின்றது. தாலூகா போர்டு, முனிசிபாலிட்டி ஆகிய ஸ்தல ஸ்தாபனத்தார்களும் பரீட்சாதிகாரிகளின் அறிக்கையைக்கொண்டு உபாத்தியாயர்களை வெருட்டபயமுறுத்த—கண்டிக்க ஆரம்பிக்கிறார்கள். ஏழை உபாத்தியாயர்கள் இதை அறிந்திருந்தாலும், ஸ்தல ஸ்தாபனத்தாருக்கும் பரீட்சாதிகாரிகட்கும் இதை எடுத்துரைத்தாலும் யாது பயன்? பல மன்னிப்புகளும் கும்பிடுகளும்போட்டு மனச்சாட்சியை விற்கவும்வேண்டித்தான் ஏற்படுகிறது. சில பரீட்சாதிகாரிகள் உணர்ந்தாலும், உணர்ந்ததை உபாத்தியாயர்கள் முன்னிலையில் உரைத்து ஒப்புக்கொண்டாலும், எழுதும் வகையில் தம் மனச்சாட்சியைக் காட்டுவதில்லை. இது இவர்களின் மனப்பான்மையோ, மறதியோ, இறைவனுக்குத்தான் தெரியும்.

ஆரம்பக்கல்வியைப் பலப்படுத்தி உண்மையும் முழு உபயோகமுள்ளவையாயும் வேலைசெய்யும்படி 1920ம் வருடத்திய சட்டப்படி ஜில்லாக் கல்விச் சபைகள் ஏற்பட்டிருப்பினும், இவைகளும் தாலூகாபோர்டுகளும் அவைகளிலுள்ள கிராமாந்தர மெம்பர்கள் கல்வியைப்பற்றி எத்தனை தடவை தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை ஆலோசித்திருப்பார்கள், அறிவித்திருப்பார்கள் என்று பார்ப்போமானால் அது மிகமிக சொற்பமாகவே இருக்கும். கல்வி நிர்வாகக் கமிட்டிகள் ஏற்படுத்தி கல்வியிலாகா அதிகாரிகளுடன் நன்கு கலந்து அவர்களுடைய யோசனைகளின்படி நடத்துவதற்குத் திரவிய உதவிபெற்ற ஸ்கூல்களின் மானேஜர்களிலும் ஆசிரிய மானேஜர்களான மெம்பர்களாய்ச் சேர்க்கப்பட வேண்டியதோடு, கல்வி விருத்தியில் உழைப்பாளிகளாயும் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நடப்பவர்களாயுமுள்ள ஆரம்ப ஆசிரியர்களையும் மெம்பர்களாய்ச் சேர்த்துக்கொள்ளவேண்டுவதும் அவசியத்திலும் அவசியமாகும்.

கனம் துரையவர்களின் ஏற்பாட்டின்படி அனாவசியமான ஸ்கூல்களை மூடுதலுமொன்று என்று தெரிகிறது. அனாவசியமான ஸ்கூலென்பது, சாதாரணமாய்ப் பிள்ளைகள், தாம் வசிக்குமிடத்திலிருந்து பாடசாலையிருக்குமிடத்திற்குப் போகக்கூடிய தூரத்துக்குள் உள்ள ஒன்றுக்கு அதிகப்பட்ட பாடசாலைகள் என்றே தோன்றுகிறது. அப்படியாயின், அவைகளை மூடித் தற்காலம் அநேகமாக நகர்ப்புறங்களில் இருப்பதுபோல் அடிக்கொரு பாடசாலையில்லாமல் அகற்றவேண்டியது அவசியமே. சிற்சில கிராமங்களில் மட்டும், கிராமத்தினர்களுக்குள் ஏற்பட்டுள்ள கட்சி பிரதிகட்சிகளின் காரணமாக ஒன்றுக்கு மேற்பட்டு இரண்டு பாடசாலைகள் இருப்பதும் உண்டுதான். ஒரு சில வறுமையாளரின் வயிற்றுப்பிழைப்பை உத்தேசித்து அவருக்கு ஆதரவு காட்டும் வழியில் அவரை ஓர் உபாத்தியாயராக அமர்த்தித் தம்முடையவும் தமக்கு வேண்டியவர்களுடையவும் பிள்ளைகளை ஒரு இடத்தில் சேர்த்துக்கொடுத்து நடத்தச்செய்யும் சில குடித்தனக்காரர்களும் பாடசாலைகளுங்கூட இல்லாமற்போகவில்லை. இவ்விடங்களில் போர்டு பாடசாலையிருப்பினும் அங்கு அனுப்புவதில்லை. இப்படிப்பட்ட சிலவிடங்களில் சிரத்தையில்லாத தாலூகா போர்டு உபாத்திமார்களும் மிகச் சொற்பமாகவேனும் இருக்கவுங்கூடுந்தான். இவைகளெல்லாங்கூட அகற்றப்படவேண்டியதுதான். தாலூகா போர்டாரும ரிஜிஸ்தரார் ஜெனரலவர்களும் கிராமங்களில் கிராமப் பஞ்சாயத்துகள் ஏற்படுத்த எவ்வளவோ முயற்சிகள் எடுத்துக்கொள்ளுகிறார்கள். ஒவ்வொரு கிராமத்துக்கும் எத்தனையோ தடவை சென்று திரும்பிவருகிறார்கள். ஜனங்களுக்காக உணர்ச்சி ஏற்பட்டுக் காரியங்கள் நடப்பது எனின், அது இக்காலத்தில் பழைய திண்ணைப் பள்ளிக்கூடங்களில் படித்த மௌட்டிகர்களிருக்கும் தற்காலத்தில் இல்லையென்றே சொல்லவேண்டும். இக்காலத்திய பாடசாலைகளில் படிக்கும் தற்கால மாணவர்கள், பிரஜைகளாய் வரும் எதிர்காலத்தில்தான் தன்னுணர்ச்சியுடன் முன்வரக்கூடும். ஆரம்பக்கல்வி விருத்தியும் இப்படித்தான். இவைகளுக்கெல்லாம் கட்டாயக்கல்விமுறை ஏற்பட்டாலன்றி விருத்தியடைந்துவிடுமென்பது சந்தேகந்தான். பாடசாலையில் சேரவேண்டிய பிள்ளைகளைக் கணக்கெடுத்துப் பெற்றோர்களிடம் கலந்து பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பும்படி இப்போது தூண்டப்படாமலுமில்லை. ஆதலால் இதற்குக் கட்டாயக்கல்வி முறைதான் சிலாக்கியமாகும்.

பெற்றோர் சங்கங்கள் ஏற்படுத்தி ஸ்கூலிலுள்ள வகுப்பு முடியப் பிள்ளைகள் படிக்கும்படி ஏற்பாடுசெய்தல் உசிதமென்றாலும், ஏழைப் பெற்றோர்களுக்கும் அவர்களின் பிள்ளைகளுக்கும் பெற்றோர் சங்கமாவது சர்க்காராவது மேலே கூறியவிதம் உதவிசெய்தால்தான் இந்நோக்கம் ஏற்றதாகும்.

இன்னஞ் சிறுபிள்ளைகளை ஸ்கூலிலிருந்து நீக்குவதென்பது 4, 5 வயதுள்ள பிள்ளைகளென்றே தெரிகிறது. இப்போது பெற்றோர்கள் 4, 4½ வயதுள்ள குழந்தைகளையும் இவைகளால் தங்களுக்கேற்படும் தொந்தரவுகளைத் தாங்கமாட்டாமலேயே பெரும்பான்மையும் பாடசாலைகட்கு 4, 4½ வயதுக் குழந்தைகளை 5 வயது என்று சொல்லி இவர்களுடன் 3, 3½ வயதுக் குழந்தைகளையும் உடன்கூட்டி அனுப்பிவிடுகின்றனரெனலாம். கிராமாந்தர ஆசிரியர் என்செய்வர்? ஊராரின்—பெற்றோரின் விருப்பப்படியும் நடந்துகொள்ளத்தான்வேண்டியிருக்கிறது. இல்லையேல், ஊராருக்கு உபாத்தியாயரின் மீது விருப்பம் குன்றுகிறது. தன்மையாயுரைத்தாலும் சிலர்தான் உணரக்கூடும். பெரும்பான்மையர்

உணரக்கூடாதவராயிருப்பர். கண்டிப்பும் கூடாது. இவ்வகையிலும் உபாத்தியாயர் சிறிது பிசகநேர்ந்தாலும், உபாத்தியாயரிடம் விருப்பம் குறைந்து உபாத்தியாயரின் மீது முறைப்பாடுகள் மேலதிகாரிகட்குப் புறப்பட்டுவிடும். அவர்களாவது உபாத்தியாயரின் உண்மையை அறிந்து அதற்கேற்ப நடந்துகொள்ளுவதும் சிறுபான்மையாகத்தானிருக்கும். நீ அங்கிட்டும் நான் இங்கிட்டும், கிழவே தொங்கட்டும் என்ற மாதிரி, ஜனங்களுக்கும் மேலதிகாரிகட்கும் இடையில் இவ்வாசிரியர் எற்றனிதம் நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது. மேல்நாட்டாரும் வடநாட்டாரும் வருவாய் மிகுந்தவர்களாதலின், தங்கள் சின்னஞ்சிறு குழந்தைகளை வைத்துக்கொள்வதற்கென்றே சம்பளங்கொடுத்து ஆயாக்கள்போன்றவர்களை அமர்த்திக்கொள்ளுகின்றனர். இத்தென்னாட்டாரோ வருவாய் குறைந்தவர்களாதலின், அப்படி ஆயாக்கள்போன்ற செவிலித்தாய்களை நியமித்துக்கொள்ளமுடியாததால், 5, 6 வயதுள்ள தங்கள் பிள்ளைகளையே, அதற்குக் குறைந்த வயதுள்ள தங்கள் குழந்தைகளை வைத்துக்கொள்ளச் செய்கிறார்கள். 5, 6 வயது பிள்ளைகளை பள்ளிக்கூடத்தில் சேர்த்துக்கொள்வதுஎன்றிருப்பதால், அவர்களுடன் அவர்களைவிடச் சிறிய குழந்தைகளையும் அனுப்பி விடுகின்றனர். ஆகவே, பிள்ளைகளின் வயதை 6-அல்லது 7-ஆக ஏற்படுத்துதல் நலமாக விருக்குமென எண்ணுகின்றேன்.

பெரும்பான்மையான பாடசாலைகள் உதவி பெறுபவையாகவே யிருப்பதால், பெரும்பான்மையான பயிலாத ஆசிரியர்கள் அப்பாடசாலைகளில்தான் மிகுந்திருப்பார்கள். காரணம் பயின்ற ஆசிரியர்களுக்குத் தகுந்த சம்பளங் கொடுத்து வைத்துக்கொள்ளமுடியாமல், சொற்ப சம்பளங்கொடுத்துப் பயிலாத ஆசிரியர்களை அப்பாடசாலைகளின் மானேஜர்கள் அமர்த்திக்கொளவதேயாகும். இவர்களுக்கும் சர்க்கார் போதிய கிராண்டைக்கொடுத்து உதவ முற்படுவார்களானல் இக்குறைவுகளையும் இவர்கள் செய்ய ஏதுவிராது எனலாம்.

ஒரு ஆசிரியர் ஒரு வகுப்பில் 35 பிள்ளைகளுக்கு மேலும் 2-வகுப்புகளில் 30 பிள்ளைகளுக்கு மேலும், கற்பிக்கக்கூடாதென்றும், 3, 4 வகுப்புகளில் 25க்குமேல் கற்பிக்கக்கூடாதென்றும் இருத்தல் நலமாகும்.

ஒவ்வொரு ஆசிரியருக்கும் குறைந்தது 20 ரூபாயாவது மாதச்சம்பளமாயிருக்கவேண்டுமென்பதற்குப் பதிலாக 25 ரூபாயும் வருஷ உயர்வாக 30 ரூபா வரையிலுமாவது சம்பளம் ஏற்படவேண்டுமென்ற ஏற்பாடாக வேண்டியது அவசியம். இங்கு, தான், தன்மனைவி, இரு சிறுகுழந்தைகள் ஆகிய இவர்களின் சமாட்சணைக் கேனும் போதிய—வேண்டிய வருமானத்தில் தம் புத்தியை இதர வழிகளில் செலுத்தாமலிருக்கச் செய்யவேண்டும் என்பதைக் கவனித்தல் அத்தியாவசியம்.

பயிற்சி பெற்ற உபாத்தியாயர்களையும் பரிசிலனைசெய்து குறைகளை நீக்கிப்பலப்படுத்துதலென்பது பயிற்சி பெற்றவர்களிலும் தொழில் அநுபவத்தில் தகுதியற்றவர்கள் என்பதாவென்றும், தம்முடைய பொதுக்கல்வியில் மிக்க குறைந்த படிப்புள்ளவர்கள் என்பதாவென்றும் புரியவில்லை. இப்படியாயின் இவர்களை நீக்கி விடுவதா அல்லது வரையறுக்கப்பட்ட வயதுடையவர்களை மறுமுறையும் பயிற்சிக்க அனுப்புவதா என்பதும் தோன்றவில்லை.

பயிற்சிபெற்ற உபாத்தியாயர்களை முதல் 2வது வகுப்புகளுக்குக் கற்பிக்கும்படி ஏற்படுத்துதல் என்றால், 3, 4 வகுப்புகளுக்குப் பயிற்சி பெறுத உபாத்தியாயர்களாயினும் பாதகமில்லையென்றே ஏற்படுகிறது. இவ்விதமாயின் இவர்கள் உயர்ந்த பொதுப்படிப்புள்ளவர்களாயிருப்பது அவசியத்திலும் அவசியமாகும்.

வயதுசென்ற பிள்ளைகளுக்குப் பகல் முழுதும் வேலையிருக்குமாதலால் அவர்கட்கு இராப்பாடசாலை அநுகூலமாயிருக்கும். இதுவும் $1\frac{1}{2}$ அல்லது 2 மணி நேரத்திற்குள்ளாகவும் 15 பிள்ளைகளுக்கும் குறையாத எண்ணிக்கையும், தினசரி 10 பிள்ளைகளுக்கு குறையாத ஆஜருள்ளதாயிருத்தலும் தகுதியானதென்பது என்று அநுபவ அபிப்பிராயமாகும் என்று பி. பரிமணப்பல்லவராயர், உபதலைவர், திருச்சி ஜில்லா ஆரம்ப ஆசிரியர் ஆசிரிய மனேஜர் சங்கம், எழுதுகிறார்.

(திராவிடன்.)

## ஜுரமுள்ளவர்களுக்கு ஆகாரம்.

தேகத்தில் "ஜுரம்" உண்டாயிருக்கும்போது ஜீரணக்கருவிகள் ஒழுங்கீனப்பட்டுப்போகிறபடியால் சாதாரணமாய் அவைகள் செய்யவேண்டிய வேலைகளைச் செய்யமுடியாமற்போகிறது. ஆகையால் பலவீனப்பட்டுப்போயிருக்கும்அக்கருவிகளுக்கு அதிக வேலைகொடுக்காத சில ஆகாரங்களை நாம் வியாதியஸ்தனுக்குக் கொடுக்கவேண்டும்.

ஜுரங்கள் பலவழிகளில் நமது தேகத்துக்குள் பிரவேசிக்கும் கண்ணுக்குப்புலப்படாத சிறிய கிருமிகளால் உண்டாகிறதென்பதை மனதில் வைக்க வேண்டும். இந்த கிருமிகளைதேகத்திலிருந்து துலைக்கவியாதியஸ்தன் திராவக பதார்த்தங்களை அதிகமாய்ச் சாப்பிடவேண்டும். இப்படிச்செய்வதால் கிருமிகள் கழுவப்பட்டு வெளியே அடித்துக்கொண்டு வரப்படுகின்றன. எப்படியெனில், நாம் குடிக்கிற அல்லது ஆகாரத்தோடு உட்கொள்ளுகிறஎல்லா திராவகபதார்த்தங்களும் திரும்பவும் வெளியே தள்ளப்படுகின்றன. அப்படி இவைகள் வெளியே வரும்போது தேகத்தின் போஷிப்புக்கும் வளர்ச்சிக்கும் தேவை யில்லாத கழிவு பதார்த்தங்களை வெளியே கொண்டுவந்து விடுகின்றன. சுகமாயிருக்கிற காலங்களைப்பார்க்கிலும் ஜுரகாலங்களில் இந்தகழிவு பதார்த்தங்கள் தேகத்தில் அதிகமாய்ச் சேருகிற படியால், சுகமான காலங்களைவிட ஜுரம் வந்த காலங்களில் அதிகமான திராவகபதார்த்தங்கள் சாப்பிடவேண்டியது அத்தியாவசியம். அநேகமாதங்களாய் ஒருநதியின் அடியில் படிந்திருக்கும் பலவிதமான தூசி, சருகுகள், குப்பைகள் முதலியவற்றை ஒரு பலத்த மழை வெள்ளமானது எப்படிக் கழுவி சுத்தப்படுத்துகிறதோ அப்படியே தாராளமாய் திராவக பதார்த்தங்களை உட்கொள்ளுவதினால் தேகத்திலுள்ள பலவித விஷங்களும் வெளியே அடித்துக்கொண்டு வரப்படுகின்றன.

இவைகளை மனதில் வைத்துக்கொண்டு நமக்கு வியாதிகள் வந்தகாலத்தில் "தண்ணீர்" மிகவும் விசேஷித்த ஒரு மருந்தென்று உணரவேண்டும். மேலும் காப்பித்தண்ணீர், தேத்தண்ணீர், பால், சோடாதண்ணீர், பழரசங்கள் முதலிய திராவகங்களில் மிச்சமானபாகம் தண்ணீராகையால் ஜுரம் வந்தகாலங்களில் தாராளமாய் அந்த பானங்களைக் கொடுக்கலாம். ஜுரத்தினால் தேகம்கொதிப்பெடுத்து எரிச்சலும் தாகமும் உண்டாகிறபோது மேற்சொன்ன பானங்களெல்லாம் தாகத்தை அடக்கி குளிர்ச்சி



யுண்டாக்குவதுமன்றி, அவைகளில் கொஞ்சம் போஷிப்பு சத்தும், உற்சாகமுண்டாக்குங்குணங்களும்கூட அடங்கியிருக்கின்றன.

ஜுரமுள்ளவர்களுக்கு மேற்சொன்னவெறும் பால், காப்பி, தேத்தண்ணீர் முதலியவைகளோடு பின்வரும் ஆகாரங்களையும்கொடுக்கலாம்.

1. கோதுமை ரவைக்கஞ்சி, கேழ்வரகுக்கஞ்சி, அரிசிக்கஞ்சி, வாற்கோதுமை அல்லது பார்லி (Barley) கஞ்சி.
2. முட்டைத் தண்ணீர். Albumen water.
3. பால் தண்ணீர். (வே) Whey.
4. பாலும் முட்டையும்.
5. ஸூப்பு or இறைச்சிரசம்.

வியாதியஸ்தருக்கு நன்றாய் வேகவைத்து பாலும் சர்க்கரையும் கலந்த கோதுமைக்கஞ்சி, கேழ்வரகுக்கஞ்சி அல்லது அரிசிக் கஞ்சிகள் மிகவும் விரும்பப்படத் தக்கதும், பலமுண்டாக்குகிறதுமான ஆகாரங்களாகுகின்றன. காரமான மசாலை வகைகளை ஆகாரத்தோடு சேர்க்கவேகூடாது. வியாதியஸ்தனுக்கு பால் அல்லது சர்க்கரை இஷ்டமில்லையானல் கஞ்சியில் வெறும் உப்புமாத்திரம் சேர்த்துக்கொடுக்கலாம்.

### பார்லிகஞ்சி செய்யும் விதம்:—

பார்லி மாவிலிருந்து பார்லிகஞ்சி செய்யப்படுகிறது. இந்தமாவு தகரடப்பிகளில்போட்டு சென்னப்பட்டணத்திலும், இன்னும் இதர பட்டணங்களிலும், ஊர்களிலும் கடைகளில் விற்கப்படுகிறது. அதிலிருந்து கஞ்சி பின்வருமாறு செய்யப்படுகிறது:—

1 பெரியகரண்டி (Tablespoon) பார்லி மாவு.
2 Do. Do. குளிர்ந்த ஜலம்.
1 ஆழாக்கு கொதிக்கிற ஜலம்.
$\frac{1}{2}$ ஆழாக்கு சூடான பால்.
1 சிட்டிகை அல்லது தேவையான அளவு உப்பு.

பார்லிமாவை குளிர்ந்த ஜலத்தோடு ஒன்றாய்க் குழைத்துக்கொள்ளவும் பிறகு கொதிக்கிற தண்ணீரை அதில் ஊற்றி நன்றாய்க் கலக்கி அடுப்பிலேற்றி தேவையான அளவுக்குத் [illegible]படி 10 அல்லது 20 நிமிஷம் கொதிக்கவைக்கவும். கொதி வரும்போது பாலை அதில் ஊற்றி திரும்பவும் கொதிக்க வைத்து கடைசியாய் உப்பையும் கொஞ்சம் சர்க்கரையும் சேர்த்துக்கொள்ளவும். கஞ்சியில் உருண்டைகள் காணப்பட்டால் சுத்தமான மெல்லியதுணியில் வடிகட்டி எடுத்து விடவும். இப்போது வியாதியஸ்தனுக்குக் கொடுக்க கஞ்சி தயாராயிருக்கிறது.

### முட்டைப்பால் செய்யும் விதம்:—

முதலாவது 1 முட்டையை நன்றாய் அடித்துக்கொள்ளவும். பிறகு வெதுவெதுப்பான 1 ஆழாக்கு பாலை அதில் விட்டு இரண்டையும் அடிக்கவும். இதில் 1 தேயிலைக்கரண்டி சர்க்கரை சேர்த்து விட்டால் இது மிகவும் ருசியுள்ளதும் போஷிப்புக்குரியதுமான ஒரு பானமாகிறது.

### கோழிக்குஞ்சு ரசம் செய்யும் விதம்:

ஒரு கோழிக்குஞ்சை சிறு துண்டுகளாக அறுத்துக்கொண்டு, எலும்புகளை யெல்லாம் நன்றாய் நறுக்கிக்கொள்ளவும். இவையெல்லாம் ஒருசட்டியில்போட்டு இவைகளை மூடும்படியாய்க் குளிர்ந்த ஜலத்தைவிட்டு, கொஞ்சம் உப்பும் மிளகுத்தூளும் போட்டு 5 மணி நேரம் மெதுவாய் அனல்போட்டு வேகவைக்கவும். பிறகு ரசத்தை மாத்திரம் இறக்கிக்கொண்டு, அதில் கொஞ்சம் சோறுபோட்டுக் கொடுக்கவும். வியாதியஸ்தருக்கு ஜீரணசக்தி குறைவாகையால் மாமிசத்தை அவர்களுக்குக் கொடுக்கக்கூடாது. மாமிசத்திலிருந்து இறங்கிய ரசத்தில் மாமிசத்திலுள்ள சகல போஷிப்புக்குரிய சத்துக்களும் இறங்கிவிட்டிருப்பதால், அந்த ரசத்தை மாத்திரம் கொடுத்தால் போதுமானது.

### பால் தண்ணீர் (வே) செய்யும் விதம்.

காய்ச்சாத புதியபால் 2 ஆழாக்கு
2 எலுமிச்சம் பழங்களின் ரசம்
சர்க்கரை தேவையான அளவு.

பாலில் எலுமிச்சம் பழரசத்தை விட்டு, கலக்காமல் அல்லது அசைக்காமல் அடுப்பிலேற்றி காய்ச்சவும். பால் தயிராக மாறியபின் ஒரு சுத்தமான மெல்லிய துணியில் வடிகட்டி இந்த தண்ணீரில் ஒரு பெரிய கரண்டியளவு சர்க்கரை சேர்த்துக்கொள்ளவும். இதைத்தான் (வே Whey) அல்லது பால் தண்ணீர் என்று சொல்வது இது வியாதியஸ்தருக்கு மிகவும் நல்லது.

### முட்டைத்தண்ணீர் Albumen water செய்யும் விதம்.

இரண்டு புதிய முட்டைகளின் வெண்கருவை மாத்திரம் எடுத்துக்கொள்ளவும். இதோடு கொதிக்கவைத்து ஆறின, ஒரு கோப்பைத்தண்ணீர் விட்டு நன்றாய்க்குலுக்கவும். பிறகு ருசிக்காக கொஞ்சம் எலுமிச்சம்பழரசமும், ஒரு அகன்ற வாயுள்ள புட்டியிலாகிலும் பெரிய கோப்பையிலாகிலும் போட்டு சர்க்கரையும் சேர்க்கவும். இது பலவீனமுள்ளவர்களுக்கும் சிறு பிள்ளைகளுக்கும் மிகவும் பிரயோசனமானது.

W. Noordyk.

## இந்தியாவும் கைத்தொழிலும்.

இவ்வாழி சூழ்வையகந்தனில் மானிட ஜென்ம மெடுத்த யாவர்க்கும் கைத்தொழில் மிக இன்றியமையாதது என்பது நம்மவருள் பலருக்கும் தெரிந்தவிஷயமே. ஆராய்ந்து பார்க்கின், மனிதன் கைத்தொழில் செய்ய வேண்டுமென்பதே கடவுளின் கருத்து என்பது கரதலாமலகம்போல் தெரிய வருகிறது. மானிட ஜென்மமாகிய நம்மைப்படைத்த அக்கடவுளே ஆடு, மாடு முதலிய ஜீவ பிராணிகளையும் படைத்தனர் என்பதில் யாதொரு ஐயமில்லை. குளிர் முதலியவைகளினின்றும், இன்னும் தனக்கு நேரிடக்கூடிய தீங்கினின்றும் தன்னைக்காத்துக்கொள்ளும்படி கடவுள் அப்பிராணிகளுக்கு கொம்பு, தோல், உரோமம் முதலியவற்றை ஈந்தனர். ஆனல் நமக்கோ அவையொன்றும் கொடுத்ததில்லை, இவற்றிற்கு பதிலாக 'பகுத்தறிவு' என்னும் ஒரு சிறந்த கருவியைக் கொடுத்தனர். இச்சிறந்த கருவியைக் கொண்டு மனிதன் தனக்கு வேண்டியவைகளை சவதரித்துக்கொள்வான் என்பதே கடவுளின் கருத்து என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரியவருகிறது.

மனிதர் சஞ்சாரம் செய்யக்கூடாததும், பலவிதமான துஷ்டமிருகங்கள் வாசஞ்செய்யக்கூடியதுமான பாலைவனாந்தரங்களும் கைத்தொழிலால் மேன்மையுற்று வசிப்பதற்குரிய இடமாகின்றன. முட்களும் கொடிகளும், செடிகளும் வளர்ந்து விஷஜெந்துக்கள் தங்கித் தரிக்கின்றன இடங்களும் கைத்தொழிலால் பல ரமணியகரமான நந்தவனங்களாகின்றன. அற்பம்! கல்லும் மண்ணுங்கூட கூடகோபுரங்களும் கண்ணைக் கவரத்தக்க மச்சு மாளிகையுமாதல் கைத்தொழிலின் மேன்மையன்றோ! பின்னும் பருத்தி என்னும் செடியிலிருந்து உண்டாகிற பஞ்சு ராஜாக்கள் முதல் ஆசித்து அணிந்து வருகிற ஆடைகளாகின்றன. இன்னும் கேவலம்! ஆட்டுரோமத்திலிருந்து பலவிதமான கம்பளிகளும், அற்பமான பூச்சியிலிருந்து பலவர்ண பட்டுவஸ்திரங்களும் செய்யப்படுகின்றன. இஃதெல்லாம் கைத்தொழிலின் மேன்மையை விரித்துரைக்க இவ்வேடு இடம் போதாதே என்றஞ்சுகிறேன்.

பல்லாண்டுகளுக்கு முன் நம்தாய் இந்தியா இத்தகைய சிறப்பு வாய்ந்த கைத்தொழிலில் அதிக முன்னேற்றமடைந்திருந்தாள் என்பது சரித்திரவாயிலாய் தெரியவருகிறது. ஆனல் வர, வர, நாகரீகமென்பது ஏற, ஏற, கைத்தொழிலானது குறையபட்டு க்ஷீணதிசையடைந்திருக்கிறது என்றவுண்மையை எவரும் மறுக்கார்.

பலவிதமான பட்டாடைகளும் அந்நிய தேசத்து ராஜாக்கள் முதற்கொண்டு ஆசைப்பட்டு அணிந்து தங்களை அலங்கரித்துக்கொண்டதுமான பலவர்ண வஸ்திரங்கள் நெய்த நம்தேசமானது இப்போது அந்நிய நாட்டு அழகான துணி எப்போது வருமென ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருப்பது எவ்வளவோ விசனிக்கத்தக்கது. சிற்பசாஸ்திரம் இன்னும் மற்ற சாஸ்திரம், கைத்தொழில் முதலியவைகளில் தேர்ந்த நிபுணர்கள் வசித்து வந்த நம்நாடானது இப்போது என்ன நிலைமையிலிருக்கிறது! ஆய்ந்து யோசிக்குங்கால் படித்த யாவரும் கைத்தொழிலின் மேன்மையைக் கருதாது அற்ப

மாயெண்ணுவதே, கைத் தொழில் இங்ஙனம் கீழ்நிலையடைந்தமைக்கு காரணமென தெரியவருகிறது.

பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவர்களும் படித்து முன்னேறி பெரியபட்டம் பெற வேண்டுமென்று கருதுகிறார்களேயொழிய, கைத் தொழிலைப் பழக வேண்டுமென்றும், கைத் தொழிலை முன்னுக்கு கொண்டு வரவேண்டுமென்றும் அவர்கள் கனவிலும்கூட கருதுகிறதில்லை. அந்தோ! கைத்தொழில் இன்றி மனுஷன் பிழைப்பதரிது என்பதை முற்றும் மறந்தனர் போலும். பேனாவையும் மையையும் கொண்டு எழுதுவதே பெரிய கௌரவமான வேலையெனக்கருதுகின்றனர்.

இஃதெல்லாம் நன்குணர்ந்த நாம் யாவரும் கைத்தொழிலை அற்பமாயெண்ணாது விருத்திசெய்யப் பிரயாசப்படுவோமானால் நம் தாய் இந்தியா இப்போது இருக்கிற நிலையைப்பார்க்கிலும் பன்மடங்கு முன்னேற்றமடையுமென்பதில் யாதொரு ஐயமில்லை.

டி. ராஜரத்தினம்,
கம்பம்.

---

## A. M. C. C.

### கரிசல்பட்டி கள்ளர் பள்ளிக்கூடத்தின் இரண்டாவது வருஷோற்சவம்.

1927ஆ டிசம்பர்மீ 24உ சனிக்கிழமையன்று காலை 9.30 மணிக்கு அதற்காகத் தயாரிக்கப்பட்டு வெகு அலங்காரத்துடன் ஜோடனை செய்து வைக்கப்பட்டிருந்த பள்ளிக்கூடத்தில் ஆரம்பமானது.

மகா-ள-ள-ஸ்ரீ செக்காணூரணி லோக்கல் கோவாப்பரேடிவ் யூனியன் சூப்பர்வைசர் K. கருப்பையா சேர்வை அவர்கள் அக்கிராசனம் வகிக்க, அதிக சந்தோஷத்துடன் மேற்படி வருஷோற்சவம் ஆரம்பித்தது.

பள்ளிக்கூட மாணாக்கர்கள் தெய்வவணக்கத்தை கிறிஸ்தவர்கள் யோங்கின்படியே பாடினார்கள். காரியதரிசியால் நடந்த முதலாவது வருஷோற்சவக் கொண்டாட்டத்தின் ரிப்போர்ட் அக்கிராசனர் முன் வாசிக்கப்பட்டு கைமொப்பமும் இடப்பட்டது. அதன்பின்பு, மூன்று மாணவர்கள் ஓர் கிறிஸ்தவ இனியபாடல் பாடினார்கள். இதன் பின், "ஏழைமாணாக்கன்" என்ற ஓர் இனிய சிறிய கதையைப் பிள்ளைகள் ஓர் நாடகப் பாவனையாக நடித்துக் காண்பித்தது மிகவும் நன்றாக இருந்தது. அவர்களுடைய அபிநயங்களும், இராகங்களும் கனம் அக்கிராசனாதிபதி அவர்களையும், மற்றும் அங்கு கூடியிருந்த பெரியோர்களெவருடைய மனதையும் களிக்கச் செய்தது. இரண்டுமாணவர்களால் மகா-ள-ள-ஸ்ரீ கனம் கள்ளர் ஸ்பெஷல் சூப்பிரண்டெண்டு துரையவர்கள்பேரில் கண்ணியமும், கருத்தும் தங்கிய ஓர் இனியபாடல் அக்கிராசனர்முன் பாடப்பட்டது.

பின்பு சில பையன்கள் தேகாப்பியாசம் (Drill) அதிக உற்சாகத்துடன் செய்து, முடிவில் பாட்டுடன் கூடிய நடனமும் நடப்பித்து அக்கிராசனாதிபதி அவர்களை சந்தோஷப்படுத்தினார்கள். அதற்குப் பின் மேற்படி பள்ளிக்கூட கனம் V. சாமுவேல் உபாத்தியாயர் அவர்களால் வாய்க்கின்னரம் (mouth organ) வெகு இனிமையாக வாசிக்கப்பட்டது. பின்பு V. ஜோசப் ஆபிரகாம் என்னும், இப்பள்ளிக்கூட பழையமாணாக்கனால் "இந்நேரம் வந்து என்னைச் சுத்தஞ்செய்யும்" என்ற ஓர் கிறிஸ்தவ இனிய பாடல் பாடப்பட்டது.

பின்பு அக்கிராசனாதிபதியவர்கள் எழுந்திருந்து, இவ்வித வருஷோற்சவக் கொண்டாட்டங்கள் கொண்டாடப்பட்டு வருவதின் முக்கியகாரணம், பள்ளிக்கூடப்பிள்ளைகளை அதிக உற்சாகப்படுத்துவதற்கென்றே என்பதாகச் சொல்லிமுடித்து, இவ்வண்ணம் உற்சாகப்படுத்தும்படி அதிகப்பிரயாசம் எடுத்துக்கொண்ட ஷை பள்ளிக்கூட கனம் V. சாமுவேல் உபாத்தியாயர் அவர்களையும் வெகுவாய்ப் புகழ்ந்து; பின்பு அங்குகூடியிருந்த பெரியோர்களுக்கும், பள்ளிக்கூட மாணவர்களுக்கும் புத்திமதியாகச் சிலவார்த்தைகள் பின் வருமாறு பேசினார்:—

"இங்கு கூடியிருக்கும் பெரியோர்களே, நீங்கள் உங்கள் பிள்ளைகளை நாள் தவறாமல் பள்ளிக்கூடத்திற் கனுப்பவேண்டும் கஷ்டத்தோடு கஷ்டமாய் இதையும் மனதில் நினைத்தவர்களாய் தாய், தகப்பன்மார்கள் கட்டாயம் தங்கள் பிள்ளைகளை பள்ளிக்கனுப்பவேண்டும். மகா-ள-ள-ஸ்ரீ கனம் கள்ளர் ஸ்பெஷல் சூப்பிரண்டெண்டு துரையவர்களின் பேருதவியினால் நமக்குள் பஞ்சாயத்தார்கள் ஏற்பட்டிருக்கிறார்கள். பள்ளிக்கூட விஷயங்கள் ஒவ்வொன்றுக்கும் ஷை பஞ்சாயத்தார்களே காரணம். படிப்பின் பலன் பின்காலத்தில்தான் தெரியும். உபாத்தியாயரும், பஞ்சாயத்தார்களும் கூடி பள்ளிச் சிறாகளும், சிறுமிகளும் பள்ளிக்கு வாராததின் பொருட்டு ஏற்படுத்திவரும் அபராதங்கள், தண்டனைகள் இப்போது நமக்குத் தீமைசெய்வதுபோலத் தோன்றும். ஆனால் இவர்களின் பெருமை பின்காலத்தில் தெரியும். எப்படி கசப்பான மருந்தைச் சாப்பிட்டுச் சுகம் பின்பு கிடைக்கிறதோ அப்படியேதான் படிப்பின் பலன் பின்னுக்குத் தான் தெரியும். ஒவ்வொருநாளும் பள்ளிக்கூடவிஷயமாய் பஞ்சாயத்தார்கள் முயற்சி எடுத்து, பெற்றோர்களையும் பிள்ளைகளையும் கண்டித்துவரவேண்டும். பிள்ளைகளே, இன்று நீங்கள் பாடிய பாட்டுகளும், நாடகப் பாவனையாக நடத்திக்காண்பித்த கதையானதும், குற்றங்களை மறுபடியும், மறுபடியும் மன்னித்து நம்மை ஆதரித்துவருகின்ற மகா-ள-ள-ஸ்ரீ கனம் கள்ளர் ஸ்பெஷல் சூப்பிரண்டெண்டு துரையவர்கள் பேரிலும் பாடினபாட்டும், இன்னும் நீங்கள் நடத்திக் காண்பித்த தேகாப்பியாசங்களும், பாட்டுடன் கூடிய நடனமும் மிகவும் நன்றாகவிருந்தது. ஷை தேகாப்பியாசம் செய்வதினால் மூளை அதிகம் விர்த்தியாகும். இங்கு கூடியிருக்கும் பெரியவர்களே, நீங்கள் உங்கள் பள்ளிக்கூடத்தின் கூரையை ஒழுங்குடன் ரிப்பேர் செய்யப்படாமல் இவ்வளவு கேவலமாக வைத்திருக்கிறது விசனிக்கத்தக்கதான ஓர் காரியம். அங்ஙனமிருந்தபோதிலும், படிப்பின் முக்கியத்தை உங்களுக்குக்காண்பிக்கும் பொருட்டும், தாம் எடுத்துக்கொண்ட அரும்பிரயாசம் வீண்போகாமலிருக்கும் பொருட்டும் உங்கள் உபாத்தியாயர் இக்கொண்டாட்டத்தைக் கொண்டாடி முடிவுறச்செய்தார். பெற்றோர்கள் இதையறிந்து பிள்ளைகளை இனிமேலாவது ஒழுங்காய் அனுப்பவேண்டும். எப்படி வாகைக்குளம் கல்வியில் தேர்ச்சியடைந்து வருகிறதோ, அப்படியே உங்களுடைய ஊரும் விருத்தியடைய நீங்கள் முயற்சிக்கவேண்டும். 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்றபடி மகா-ள-ள-ஸ்ரீ கனம் கள்ளர்ஸ்பெஷல் சூப்பிரண்டெண்டு துரையவர்களுடைய அளவற்ற அன்பின் அனுதாப உதவிகிடைத்துவரும் இக்காலங்களில்தானே நாம் படிப்பை விருத்தி செய்துகொள்ளவேண்டும்" என்பதாக நன்குகூறினார்கள். பின்பு வருஷப்பிரகாரம் மேல் வகுப்பிலிருந்து கீழ்வகுப்புவரையிலும் பிள்ளைகளுக்கு இனாமும் அளித்து உட்கார்ந்தார்கள். அதன்பின் மூன்று மாணவர்கள் ஓர் கிறிஸ்தவ இனிய பாடல் பாடினார்கள். பின்பனைவோரும் எழுந்திருந்து ராஜ வாழ்த்துதல் பாடி உட்கார, மறுபடியும அக்கிராசனாதிபதியவர்கள் தாம் கொண்டுவந்திருந்த சென்னை சுக ஆதார சபையாரால், சுக ஆதார விஷயமாய் அச்சிடப்பட்டுள்ள மூன்று சுக ஆதார கோட்டுகளை ஷை பள்ளிக்கூட உபாத்தியாயர் அவர்களிடம் கொடுத்து இதன் உதவியால் அங்கு வந்திருந்தவர்களுக்கு சுக ஆதாரத்தையடுத்த விஷயமாக ஓர் சுருக்கமான உபந்நியாசம் செய்யும்படி கேட்டுக்கொள்ள அவ்வண்ணமே ஷை பள்ளிக்கூட உபாத்தியாயர் அவர்களால் ஜனங்களுக்கு ஓர் சுருக்கமான உபந்நியாசமும் செய்யப்பட்டது. கடைசியாக ஓர் இனிய கிறிஸ்தவ மங்கள கீதம் பாடப்பட்டு கூட்டமும் கலைந்தது.

காரியதரிசி,
கரிசல்பட்டி.

---

## வர்த்தமானம்.

### காசி ஆலயத்தில் தீ.

காசியிலிருக்கும் கீர்த்திபெற்ற அன்னபூர்ணா இந்து ஆலயத்தில் நேற்று நடு இரவில் தீப்பற்றிக்கொண்டது. அதில் ஆலயத்தின் சில பாகங்கள் அழிந்து போய்விட்டன. ஆனால் உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை. தீபற்றிய விதம் இன்னும் தெரியவில்லை.



### அமெரிக்காவில் சுரங்க விபத்து.

#### 100 தொழிலாளர் மாண்டனர்.

வெஸ்ட் பிராங்போர்ட், ஜன. 10. இல்லினாய்ஸிலுள்ள ஒரு சுரங்கத்தில் திடீரென்று வெடி விபத்துண்டானதில் அந்தச் சுரங்கம் ஒரு பாகம் இடிந்து விழுந்து அதற்குள் வேலை செய்துகொண்டிருந்தவர்களில் 100 பேர் வெளிவரமுடியாமல் மாண்டனர். அந்த விபத்தினால் வெளிப்பட்ட விஷவாயு சகிக்க முடியாதிருந்ததினால் அந்தத்தொழிலாளரை தப்புவிக்க முடியவில்லை. தோண்டிப் பார்த்ததில் இதுவரையில் 21 தொழிலாளிகளின் பிணங்கள் அகப்பட்டுள்ளன.

### சாக்கடைக் குழாய்க்குள் குழந்தை.

#### தப்புவிக்கப்பட்ட அதிசயம்

பம்பாய், ஜன 11. அன்று பிறந்த குழந்தை ஒன்று நான்கு மணி நேரத்துக்குப்பின் சாக்கடைக் குழாயிலிருந்து தப்புவிக்கப்பட்டதாக ஒரு அதிசயம் சொல்லப்படுகிறது. அதாவது அக்குழந்தை தவறுதலாக சாக்கடைக் குழாய்க்குள் விழுந்துவிட்டது. அதன் அழுகைக் குரலைக் கேட்டு பலர் திகைத்துக் கூடினின்றார்கள். ஆனால் குழந்தை எந்த விடத்தில் தங்கிக்கிடக்கிறது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. பின்னர் போலீசார் வந்து ஒரு உருளைக்கிழங்கை ஒரு கயிற்றில் கட்டி குழாய்க்குள் செலுத்தி குழந்தை தங்கிக்கிடக்கும் இடத்தைக் கண்டுபிடித்தாராம் அதன் மேல் அந்த விடத்தைத்தோண்டி குழந்தையை அப்புறப்படுத்தினார்கள். குழந்தைசேரில் புரண்டிருந்ததேயொழிய உயிருடனிருந்தது. பின்னர் குழந்தையும் தாயும் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச்செல்லப்பட்டனர். அங்கு அவர்கள் சௌக்கியமாக இருக்கிறார்கள்.

### கலியாண விருந்தில் ஆபத்து

#### 27 பேர் மரணம்.

கொரியாவில் டய்கு என்னுமிடத்தில் நடந்த ஒரு கலியாண விருந்தில் விஷமுள்ள மீனை சாப்பிட்டதனால் 27 பேர் மரணமடைந்தனர். 259 பேர சுகவீனமாயிருக்கின்றனர். அவர்களில் அநேகர் அபாய நிலைமையிலிருக்கின்றனர்.

### நகைக்காக பெண்ணை கிணற்றில் போட்டான்

திருவாரூர் சர்க்கிலிலிருக்கும் குன்னியூர் கிராமத்தில் திரு. கெ. எஸ். சுப்பிரமணிய அய்யர் எம். எல். ஸி. யின் மைத்துனரான திரு சந்தோச அய்யரின் ஒன்பது வயதுள்ள பெண்ணின் மேல் கிடந்த நகைகளை ஒரு வாலிபக் கூலியாளன் அபகரித்துக் கொண்டு அப்பெண்ணை கிணற்றிற்குள் தூக்கிப் போட்டுவிட்டதாய் செய்தி எட்டுகின்றது.

சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று மத்தியானம் 12-30 மணிக்கு ஒரு கூலியாள் திரு. சந்தோச அய்யரின் வீட்டிற்கு சென்று வாழையிலை ஒன்று கேட்டான் என்றும், அப்போது அப்பெண்ணின் பெற்றோர்கள் வீட்டிலில்லை என்றும், அப்பெண் கொல்லையிலிருக்கும் வாழையில் இலை நறுக்கச்சென்றதென்றும், அக்கூலியும் அப்பெண் பின்னாலேயே கொல்லைக்குச்சென்று தான் புதிதாய் வாங்கப்போகும் தோட்டையும் அப்பெண்ணின் காதில்கிடந்த தோட்டையும் ஒன்றாய் வைத்துப் பரிசோதித்துப் பார்ப்பதற்காக அப்பெண்ணின் காதில் கிடந்த தோடுகளை கேட்டானென்றும், அப்பெண் அவைகளை உடனே கழற்றிக் கொடுத்ததென்றும், அப்பால் அவன் அப்பெண்ணைப் பிடித்து அமுக்கி பலவந்தமாய் அதன் மேல்கிடந்த மற்றைய நகைகளை எல்லாம் அபகரித்துக் கொண்டு, அப்பெண்ணை பக்கத்திலிருந்த கிணற்றொன்றில் போட்டுவிட்டு ஓடிவிட்டதாகவும் கூறப்படுகின்றது. அவன் ஒளித்துக் கொண்டிருக்கின்றான். கிணற்றில் போடப்பட்ட அப்பெண் தண்ணீரில் மூழ்கி மேல் வந்ததும் தனது கைகளினால் படிகளை கெட்டியாய் பிடித்துக்கொண்டு, அப்படிகளின் மீதேறி வெளிவந்துவிட்டது. உடனே அக்கம்பக்கத்தார் பெருங் கூச்சலிட்டனர். இச்சம்பவத்தை தாலுக்காராகட்டு தெரிவிக்கப்பட்டது. அவர்கள் புலன் அறிந்துவருகின்றனர்.

### ரெயில் மாற்றம்.

நம்பர், 5. 6, உள்ள திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் வண்டிகள் அடுத்த 1-2-28 முதல் விருதுநகர் புதுலையன் மார்க்கமாக திருவனந்தபுரம் செல்லும் ஆனால் மதுரையினின்று மற்றொரு ரெயில் தொடர் மணியாட்சி மார்க்கமாக செங்கோட்டைக்குச் சென்று, திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸை சந்திக்குமென்று தெரிகிறது.

---

### புதிய ரெயில்கள்.

மதுரை போடி ரெயில்வே லையன் 1928-ம் வருஷம் ஜூன்மாதம் 30தேதியன்று திறக்கப்படுமென்றும், திண்டுக்கல் பழனிரெயில்வே லையன் 3-4-28 தேதியன்று திறக்கப்படுமென்றும், ரெயில்வே நிர்வாகத்திலிருந்து தெரிகிறது.

---

### பஞ்சாங்கம்

### 1928-ஆ பெப்ருவரிமீ

● அமாவாசை ○ பௌர்ணமி *கிருத்திகை

| வாரம் | தேதி | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | ... | ○5 | 12 | 19 | 26 | ... |
| திங்கள் | ... | 6 | 13 | 20 | *27 | ... |
| செவ் | ... | 7 | 14 | ●21 | 28 | ... |
| புதன் | 1 | 8 | 15 | 22 | 29 | ... |
| வியா | 2 | 9 | 16 | 23 | ... | ... |
| வெள | 3 | 10 | 17 | 24 | ... | ... |
| சனி | 4 | 11 | 18 | 25 | ... | ... |

| வாரம் | பிரபவ-ஆ தை 19உ மாசி 17உ | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | ... | ○23 | 30 | 7 | 14 | ... |
| திங்கள் | ... | 24 | 1 | 8 | *15 | ... |
| செவ் | | 25 | 2 | ●9 | 16 | ... |
| புதன் | 19 | 26 | 3 | 10 | 17 | ... |
| வியா | 20 | 27 | 4 | 11 | ... | ... |
| வெள்ளி | 21 | 28 | 5 | 12 | ... | ... |
| சனி | 22 | 29 | 6 | 13 | ... | ... |

*Patron.* M.R.Ry. Rao Bahadur,
A. J. Vethanayaga Thevar Avl.,
Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam,
Usilampatti.

*Manager.*—Rev. B. S. Stoffer,
Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-ள-ள-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் பி. எஸ். ஸ்டோபர் துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

அமெரிக்கன் மிஷன் "விஞக்ஸ்" பிரஸ், பசுமலை—1928

1717



REG. NO. M. 2146

# The Piramalai Reformer

## பிரமலை சீர்திருத்தன்.

"வழக்கிலே நீதிமானைத் தோற்கடிக்கிறதற்கு, முகதாட்சணியம் பண்ணுவது நல்லதல்ல."

17 MAR 1928 MADRAS

Vol. VII.] மார்ச்சு 1928 [இலக்கம் 1]

### சங்கை R. H. எல்லிஸ் I.C.S. கலெக்டர் துரையவர்களுக்கு பயணோபசாரம்.

சில வருஷங்களாக மதுரை ஜில்லாவின் கலெக்டராயிருந்து நமது நாட்டாருக்கு பலவித நன்மைபுரிந்து இப்போது சர்க்கார் வேலையிலிருந்து சொந்தத் தேசம் போய் இளைப்பாறப் போகும் சங்கை எல்லிஸ் துரையவர்களுக்கு பிரமலைத் தேவமாரால் ஒரு பெரிய பயணோபசாரக் கூட்டம் 18—3—28-ல் உசிலம்பட்டியில் நடத்தப்பட்டது. அதின் சம்பந்தமாக பந்தய விளையாட்டுகளும் அதற்கென்று குறிக்கப்பட்ட நிலத்தில் ஆயத்தப்படுத்தப்பட்டிருந்தது. பந்தயசாலை பற்பல தோரணங்களால் ஜோடிக்கப்பட்டிருந்தது. பலவித கூடாரங்களும், கொட்டகைகளும் அவரவருடைய அவசியத்திற்குத் தக்கதாக போடப்பட்டிருந்தது. மதுரை ரிசர்வ போலீஸ் பாண்ட் வாத்தியக்காரர் ஒரு பக்கம் இனிமையாய் வாசிக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். பற்பல பள்ளிக்கூடங்களினின்றும், கிராமங்களினின்றும் மாணவர் வந்து விளையாட்டுகளில் பங்கெடுத்தனர். இவ்வைபவத்திற்கு மதுரை, திருமங்கலம், பெரியகுளம் முதலிய பல இடங்களினின்று பெரிய உத்தியோகஸ்தர்கள் வந்து கொண்டேயிருந்தனர். பந்தய விளையாட்டுகள் விசேஷமாகப் பெரியவர்களுக்கென்று நடத்தப்பட்டது. சிறுவர்களுக்குப்போதுமான பந்தய விளையாட்டு இந்தச் சமயம் கொடுக்கப்படவில்லை. பந்தயம் நடைபெற்றுவரும் சமயத்தில் சங்கை கலெக்டர் துரையவர்கள் வந்திறங்கினர். சிற்றுண்டி அருந்தின பின் இன்னும் சில விளையாட்டுகள் நடந்தன. பின்பு சகலரும் அமர்ந்திருக்க கனம் எல்லிஸ் துரையவர்களுக்கு பயணோபசாரக் கீதங்கள் உசிலம்பட்டி C. S. M. பிள்ளைகளாலும், மதுரை R. C. M பிள்ளைகளாலும், கவண்டன்பட்டி A. M. C. C. பிள்ளைகளாலும் பாடப்பட்டது. பிற்பாடு கலெக்டர் துரையால் பந்தயத்தில் ஜெயித்தவர்களுக்கும், குற்றவாளிகளைப்பிடித்து ஆஜர்படுத்துவதில் உதவிபுரிந்த உத்தியோகஸ்தருக்கும், பஞ்சாயத்தாருக்கும் தனியாட்களுக்கும் விசேஷித்த வெகுமதிகள் அளிக்கப்பட்டது.

கடைசியாக மகா-ள-ள-ஸ்ரீ ராவ்பகதூர் வேதநாயகத் தேவரவர்கள் கள்ளர் நாட்டின் வரலாற்றைக் கூறி பிரிந்து போகும் கலெக்டர் துரையவர்களையும், மகா-ள-ள-ஸ்ரீ ராவ் பகதூர் A. K. ராஜா ஐயரவர்களின் ஊழியத்தையும், மகா-ள-ள-ஸ்ரீ ராவ்பகதூர் K. P. ஜனார்த்தனராவ் ஸ்பெஷல் ஆப்பிரண்டு துரையவர்களின் அரிய ஊழியங்களையும் மெச்சிப்பேசினார். கலெக்டர் துரையவர்கள் மறுமொழியாக எழுந்து தம்மைப்பற்றிச் சொன்ன புகழ்ச்சியான வார்த்தைகளை அதிகமாய்ச் சொல்லிவிட்டார்களென்றும், ஆனால் தான் பிரமலை நாட்டாருக்குத் தன்னால் கூடியதைச் செய்ய முயன்றதையும் கூறினார். தமக்கு ஒரு பெரிய சந்தோஷம் என்னவென்றால், கள்ளர் ஸ்பெஷல் ஆப்பிரண்டு துரை சங்கை ஜனார்த்தனராவ் அவர்களுக்கு மாட்சிமை தங்கிய ஜார்ஜ் சக்ரவர்த்தி அவா வேலையை மதித்து ராவ்பகதூர் பட்டமளித்ததே.

கடைசியாக பிரமலைநாட்டுக்குப் போதனையாக அவர்கள் தங்களுக்குக் கிடைத்த சிலாக்கியங்களை மதித்து நடக்கவும் சீக்கிரம் முன்னேற்றமடையவும் விரும்புவதாகவும், தனக்குச் செய்த பயணோபசாரச் செய்கைகளை தான் சீமைதேசம் போனாலும் மறக்க முடியாதென்றும், உசிலம்பட்டியும், இவ்வளவு பெரிய ஜனக் கூட்டமும், வாணவேடிக்கைகளும் என் மனதை விட்டு சீக்கிரம் மறக்கமுடியாது என்றும் சொல்லி எல்லாருக்கும் வாழ்த்துதல்கூறி உட்கார்ந்தார். வாணவேடிக்கைகள் முடிந்தபின் அழைக்கப்பட்டவர்களுக்கு ஒருவிருந்து தேவமாரின்பேரால் நடத்தப்பட்டது. கடவுள் சங்கை கலெக்டர் துரையவர்களுக்கும் அம்மாள் பிள்ளைகளுக்கும் சுகமான யாத்திரை அருளி நீடூழிகாலம் வாழ கிருபை செய்வாராக.

மார்ச்சு 6உ ஸைமன் சீர்திருத்த கமிஷன் என்னும் இங்கிலாந்து பார்லிமெண்ட் மெம்பர்கள் உசிலம்பட்டி விஜயம் செய்வார்களென்று அறிந்து அவர்களை இங்கு சந்தோஷமாய் வரவேற்கிறோம்.

### விஷயப்புரம்.

**மாட்டு வைத்திய போதினி.**

பசுமலை மாட்டு வைத்தியர் கனம் வேதபோதகம் தாவீது என்பவரால் இயற்றப்பட்டது.

விலை அணா எட்டு.

இது சமுசாரிகளுடைய உபயோகத்திற்காக எழுதப்பட்டது. ஆக்கியோன் மாட்டு வைத்தியர்மட்டுமல்ல. சித்திராசிரியரும் சிற்பவேலையிலும் ரிலீவ்குளோப் செய்வதிலும் 4 மெடல்பெற்றவரும், கல் சிற்பாசாரியும், சுப்பீரியர் பேட்மின்டன் பந்து செய்பவருமானவர்.

இவர் தமது புஸ்தகத்தின் முகவுரையில் எழுதுகிறதாவது:—

"ஆக்கியோன் மாடுகளுக்கு வைத்தியம் செய்ய ஆரம்பித்தது 1898-ம் வருஷம். ஆக்கியோனுடைய தகப்பனார், தமையனார், மாமனார் முதலியவர்கள் தமிழ் வைத்தியம் செய்கிறவர்களாயிருந்தபடியால் கூடியபோதெல்லாம் வியாதியஸ்தரைப் பார்க்கக் கூட்டிப்போய் கைபிடி சாஸ்திரம் சொல்லிக்கொடுத்து மருந்துகள் செய்யும் விதமும் படிப்பித்தார்கள். ஆனால் இங்கிலீஷ் வைத்தியசாலைகளும் இருக்கிறதைப் பார்த்து தமிழ் வைத்தியம் செய்ய மனதைரியமில்லாமலிருக்க பக்கத்து வீட்டில் அருமையான பசு ஒன்றுக்கு நோய் வந்து 3 நாளாக வைத்தியம் செய்ய ஆள் அகப்படாமல் ஷை பசு மரித்துப்போனதைப்பார்த்து இதுதான் நான் படிக்கவேண்டிய வைத்தியம் என்று எண்ணி மதுரை புதுமண்டபத்தில் மாட்டு வைத்திய புஸ்தகம் ஒன்று வாங்கி வாசித்து செய்ய முயற்சித்தவைகள் கடவுள் கிருபையால் கைகூடினது. 1906-ம் வருஷத்தில் ஒரு சிறிய புஸ்தகம் (தெளிவான மாட்டு வைத்தியம்) 15 பக்கத்தில் பதிப்பித்தேன். இப்போது 21 வருஷம் ஆகிறது. கடந்த 21 வருஷ அநுபவத்தை நாட்டுச் சமுசாரிகளுடைய நன்மையைக் கருதி இந்த இரண்டாம் புஸ்தகத்தை பதிப்பித்திருக்கிறேன்.

நம்முடைய நாட்டில் அநேக மாட்டுவைத்திய புஸ்தகங்களுண்டு. ஆனால் மாட்டு வைத்தியம் செய்யவேண்டுமென்று படிக்க, அதே கருத்தாய்ப்படிக்கிறவர்கள் மட்டும் விபரம் அறிந்துகொள்ளமுடியும். ஏனென்றால் நோய்க்கும், நோய்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பேர்களுக்கும் அநேக இடங்களில் சம்பந்தம் கிடையாது. புஸ்தகம் கையிலிருந்தாலும், மாடு கஷ்டப்படும்போது என்னநோய், புஸ்தகத்தில் எங்கேபார்க்கிறது என்பதைப்பற்றி விபரம்கிடையாது. ஆகையால் முதலிலிருந்து கடைசி வரையும் வாசித்தால் எங்கேயாவது ஒருபக்கம்மாட்டுக்குச் செய்கிற குறிப்பைப் பார்க்கலாம். அல்லாமலும் கழிச்சல், வெதுப்பு, அடைப்பு, இப்படிப்பட்ட நோய்கள் எந்தெந்தக் காலத்தில் உண்டாகும் என்பதைப்பற்றிச் சொல்லாமல், ஒரே விதமான குணத்தைக்காட்டிய அநேக நோய்களை புஸ்தகத்தின் பல இடங்களில் சொல்லி வித்தியாசப்படுத்தி அறியக்கூடாத மயக்கத்தைக் கொடுக்கிறது. ஆகையால் ஷை புஸ்தகங்கள், கொஞ்சப் படிப்புள்ள சமுசாரிகளுக்கு அவசரத்திற்கு உதவாத வைத்தியமாகவே காணப்படும். இதை நீக்கும்படி இப்புஸ்தகத்தை சமுசாரிகளுடைய பிரயோஜனத்திற்கென்று எழுதுகிறேன்".

நமது நாட்டுச் சமுசாரிகள் ஒவ்வொருவருடைய வீட்டிலும் இப்புஸ்தகம் இருப்பது அவசியம். எத்தனையோ விலைபெற்ற மாடுகள் வைத்தியம்செய்ய அறியாமையினாலோ, சரியான வைத்தியம் செய்யப்படாமையாலோ சாகின்றது. இப்படிப்பட்ட வைத்திய போதினி மிகுந்த அவசியம். கிராம உபாத்திமார் ஒவ்வொருவரும் இப்புஸ்தகம் வைத்திருப்பார்களானால் தங்களுடைய மற்ற சிறு வைத்தியங்களோடே இந்த வைத்தியமும் அவர்களுடைய செல்வாக்கை அவ்விடத்தில் அதிகரிக்கப்பண்ணும். இப்புஸ்தகத்தை அநேகர் வாங்கி உபயோகிக்கவேண்டுமென்பதே எமதுவிருப்பம். எமக்கு அனுப்பிய புஸ்தகத்திற்காக வந்தனம். புஸ்தகம் கிடைக்கும் இடங்கள்:—

கனம் வேதபோதகம் தாவீது அவர்கள்,
மாட்டு வைத்தியர்,
பசுமலை.

பி. நா. சிதம்பரமுதலியார் பிரதர்ஸ்,
புஸ்தகக்கடை,
புதுமண்டபம், மதுரை.

(பத்திராதிபர்).

### பிள்ளைகளுக்குக் கதை சொல்லுதல்.

மனதத்துவ சாஸ்திரத்தைச்சரிவரக் கற்றுணர்ந்த மகான்கள் மனிதனானவன் தன் இளம்பிராயத்தில் தன்னிஷ்டப்படி ஒரு காரியத்தை செய்யக்கூடிய முயற்சியற்றவனாய் தன்னுடைய மனதை தனக்குமேலானவர்கள் கையில் ஒப்புக்கொடுக்கிறானென்று சொல்லியிருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட மனநிலைமையுடைய சிறுவர்களைக் கைதூக்கி, கல்வி புகட்டிவரும் ஆசிரியர்களாகிய நாம் பிள்ளைகளின் மனதை சரியானபடிவசப்படுத்தக்கூடிய வழிகளைக்கையாட வேண்டுவது அவசியமன்றோ! ஆகையால், அப்படிப்பட்ட சாதனங்களிலொன்றாகிய "கதை சொல்லுதல்" என்பதை சற்று ஆராய்ந்தறிவோம். கதை சொல்லுவதில் நான்கு முக்கியமான காரியங்களைக் கவனிக்கவேண்டும்.

1. கதையென்றாலென்ன?
2. கதையின் பாகங்களெவை?
3. கதையின் ஆயத்தம்.
4. கதை சொல்லுதல்.

**முதலாவது, கதையென்றாலென்ன.**

நடந்ததை ஒரு காரியத்தையாவது அல்லது மனுஷ ஜீவியத்தையும் அன்றாட அநுபோகங்களில் நடந்த ஒரு காரியத்தையும் கேட்கிறவன் மனதை கவரச்செய்யக்கூடிய விதமாய் அநுசரித்து சொல்லுவதே கதை. இவ்விதமாய் மாற்றி, கேட்கிறவர்கள் மனதை அனுசரித்துச்சொல்லுவது, நாம்படிக்கவேண்டிய ஒரு சாஸ்திரமென்பதற்கு யாதொரு ஐயமில்லை. ஒருகதையில் சொல்லப்படுகிறவைகள், அதைக்கேட்கிறவர்கள் அதற்கு முன்பாகப் பாராமலும், கேட்காமலும் இருந்த போதிலும், தங்களுடைய மனசில், சொல்லப்படும்கதையை ஒருமனப்பட்டமாக பாவிக்க உதவுகிற மனோசக்தியை உண்டுபண்ணுவதே கதையின் நோக்கம்.

**இரண்டாவது, கதையின் பாகங்கள்.**

முன்னமே சொன்ன எல்லாக்குணங்களையும் சரிவரக் கொண்டிருக்கும் ஒரு கதை நான்கு பாகங்களை உடைத்தாயிருக்கிறது.

1. முன்னுரை (Introduction)
2. நடந்த காரியங்கள் (The Particulars)
3. (The essence) விசேஷம்.
4. முடிவு (Conclusion)



# 1928-வருஷத்திற்கு கள்ளர் ஸ்கூல்களின் விடுமுறை நாட்களின் ஜாபிதா.

| | | | | தேதி. |
|---|---|---|---|---|
| 1. | வைகுண்ட ஏகாதசி | 1 | நாள் | 3— 1—28 |
| 2. | ஆருட தரிசனம் | 1 | ,, | 6— 1—28 |
| 3. | தை பொங்கல் | 1 | ,, | 13— 1—28 |
| 4. | தை அமாவாசை | 1 | ,, | 22— 1—28 |
| 5. | தெலுங்கு வருஷப் பிறப்பு | 1 | ,, | 22— 3—28 |
| 6. | ஸ்ரீ ராம நவமி | 1 | ,, | 29— 3—28 |
| 7. | பங்குனி உத்திரம் | 1 | ,, | 3— 4—28 |
| 8. | தமிழ் வருஷப் பிறப்பு | 1 | ,, | 13— 4—28 |
| 9. | ஆடி அமாவாசை | 1 | ,, | 17— 7—28 |
| 10. | ஆவணி அவிட்டம் | 2 | ,, | 30,31— 8—28 |
| 11. | ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி | 1 | ,, | 7— 9—28 |
| 12. | விநாயகசதுர்த்தி | 1 | ,, | 17— 9—2[illegible] |
| 13. | சரஸ்வதி பூஜையோடு மத்திய விடுமுறை | 9 | ,, | அக்டோபர் 1. முதல் அக்டோபர் 23 முடிய |
| 14. | தீபாவளி பண்டிகை | 1 | ,, | 12—11—[illegible] |
| 15. | கார்த்திகை தீபம் | 1 | ,, | 26—11—[illegible] |
| 16. | தர்பார் கொண்டாட்டம் | 1 | ,, | 12—12—[illegible] |
| 17. | உள்ளூர் பண்டிகை | 5 | ,, | |
| 18. | சனிக்கிழமைகள் | 52 | ,, | |
| 19. | ஞாயிற்றுக்கிழமைகள் | 55 | ,, | |
| 20. | கிறிஸ்மஸ் புதுவருஷ விடுமுறை | 10 | ,, | 24—12—28 — 2— 1—1929 இரண்டு நாட்களும் உட்பட |

### கவனிக்கவேண்டிய குறிப்புகள்.

பின்வரும் விசேஷ நாட்கள், சனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக்கிழமைகளில் வருகிறபடியால் அவைகள் மேலே குறிக்கப்படவில்லை.

1. தை பொங்கல்.—1 நாள் உத்தரவாகியிருக்கிறது. மற்ற 2 நாட்கள் ஜனுவரி 14, 15, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் வருகிறது.
2. தை அமாவாசை.—ஜனுவரி 22 ஞாயிறு.
3. மகா சிவராத்திரி:—பெப்ருவரி 19 ஞாயிறு.
4. சக்ரவர்த்தியின் பிறந்த தினம்:—ஜூன் 3 ஞாயிறு.
5. மகாலய அமாவாசை:—அக்டோபர் 13 சனி.

(1) உள்ளூர் பண்டிகைகளுக்கு மகா-ா-ா-ஸ்ரீ ஸ்பெஷல் சூப்பிரண்டு துரையவர்களிடம் முன்னமேயே உத்தரவு வாங்கினபின்தான் பள்ளிக்கூடம் மூடவேண்டும். அப்படி வாங்கின உத்தரவை மேற்பார்க்கும் அதிகாரிகள் கேட்கும்போது காண்பிக்கவேண்டும்.

(2) 2 நாட்களுக்கு மேற்பட்டு பள்ளிக்கூடம் மூடப்பட்டதையும் பள்ளிக்கூடம் திறக்கப்பட்டதையும் குறிக்கும் வழக்கமான ரிப்போர்ட்டுகளை மகா-ா-ா-ஸ்ரீ ஸ்பெஷல் சூப்பிரண்டு துரையவர்களுக்கும், சம்பந்தப்பட்ட மேற்பார்க்கும் உத்தியோகஸ்தருக்கும் அனுப்பவேண்டும்.

போலீஸ் ஸ்பெஷல் சூப்பிரண்டு.

### பொது வர்த்தமானம்.

**நெருப்பு—வெடி விபத்து.**
10 பேர் கொலை; 2,00,000 பவுன் சேதம்

நுவா (பிஜி) ஜன. 20. கியுஹெபிரடைஸ் என்னுமிடத்தில் பிரஞ்சுக்காரருக்குச் சொந்தமான ஒரு பண்டகசாலையில் நெருப்பும் வெடிவிபத்தும் ஏற்பட்டு 10 பேர் கொல்லப்பட்டனர். 56 பேர் காயமடைந்தனர். அதனால் 2 லட்சம் பவுன் நஷ்டம் நேரிட்டதாக உத்தேசிக்கப்படுகிறது. மாண்டவர்களில் 6 பேர் பிரஞ்சுக்காரர். 1 பிரிட்டிஷ்காரர். 3 பேர் ஆசியாக்காரர். காயப்பட்டவர்களில் 11 பேர் பிரஞ்சுக்காரர் மற்ற 45 பேரும் சுதேசிகளென்று தெரிகிறது.

**மயானத்தில் களவு.**
திருடன் தற்கொலை.

பெர்லின் ஜன. 14. இங்குள்ள ஒரு மயானத்தைச்சேர்ந்த சிப்பந்தி தகனிக்கப்படுவதற்காக அவர்களிடம் ஒப்படைக்கப்படும் பிணங்களின் உடை முதலியவற்றைத் திருடின குற்றஞ்சாட்டப்பட்டனர். அவர்களில் ஒருவன் தற்கொலைசெய்துகொண்டான். வேறு நால்வர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். இன்னும் பலர் கைதுசெய்யப்படுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

**ராஜ்புடீன் நாடக வழக்கு.**
மாஜி கெய்சர் வெற்றி.

பெர்லின், டிசம்பர் 15௳. ராஜ்புடீன் என்ற நாடகத்திலே ஒருவன் ஜெர்மன் சக்கரவர்த்தி வேஷம்போட்டு நடித்திருப்பதை ஆட்சேபித்து மாஜி கெய்சர் வழக்குத்தொடர்ந்தார். பெர்லின் கோர்ட்டார் உயிரோடிருக்கும் ஒரு ஆளின் சம்மதம் இல்லாமல் அவரைப்போல நாடகத்தில் வேஷம்போடக்கூடாதென்று தீர்ப்புச்செய்திருக்கிறார்கள். நாடக மானேஜர் இந்த தீர்ப்பைப்பற்றி அப்பீல் செய்திருப்பதாய்த் தெரிகிறது.

**மூளை ஆராய்ச்சி.**
சோவியட் ஸ்தாபனம்.

லண்டன், ஜனுவரி 24௳. ருஷியாவில் வைத்திய ஆராய்ச்சி மிகவும் அபிவிருத்தியடைந்துவருகிறது. அறிவாளிகளின் மூளைகளைப் பரிசோதிப்பதற்காக ருஷியா சர்க்கார் இலாக்காவால் ஒரு மூளை பரிசோதனை ஸ்தாபனம் நியமிக்கப்பட்டிருக்கிறது. லெனினின் மூளையைப் பரிசோதித்த ஆசிரியர் வோக்கார்யாக்ட் இதன் தலைவராயிருப்பார். அவர் மூளை பரிசோதனையாக ஒரு அற்புதமான யந்திரம்செய்திருக்கிறார். அது பரிசோதிக்கப்படுகிற மூளையை ஐந்து சமபங்குகளாகப் பிரித்து மெழுகில் அவற்றின் உருவத்தை எடுத்துவிடுகிறது. பிறகு அந்த மூளையை இருபதினாயிரம் அல்லது முப்பதினாயிரம் துண்டுகளாகப் பிரித்து அவை ஒவ்வொன்றையும் பூதக்கண்ணாடியால் ஆராய்ந்து பரிசோதிக்கப்படுமாம்.

## சப்த கருவிகள்.
நியூயார்க்கில் செய்யப்பட்டன.

நியூயார்க், ஜனுவரி 23உ. பிரசங்கம் செய்கிறவர்களின் சத்தத்தை ஒரு மைல் தூரம் கேட்கும்படி செய்யக்கூடிய பெரும் சப்த கருவிகள் செய்திருக்கின்றனர். ஹட்சன் நதியின் மேல்கரையில் பேசினவைகளெல்லாம் இந்தக்கருவியின் மூலம் பரீட்சைசெய்ததில் மிகவும் அகலமான அந்த ஆற்றின் அக்கரையில் தெளிவாய்க் கேட்டது.

## வீதியில் எருதுச்சண்டை.
ஸ்பானிய யுவகன் தீரம்.

மாட்ரிட், ஜனுவரி 23உ. இன்று காலை தெருவிலே ஒரு விநோதமான மாட்டுச் சண்டை நடந்தது. முனிசிபல் கசாய்க்கடைக்கு அனுப்பப்பட்ட எருதுகளில் ஒன்று தப்பி வீதிவழியாக ஓடிற்று. ஜனங்கள் பெரிதும் கலவரப்பட்டு ஓடினார்கள். அப்போது டோரியடர் பார்டினு என்பவன் தான் அணிந்துகொண்டிருந்த சட்டையைக் கழற்றி அதைக் கேடயம்போல கையில் பிடித்துக்கொண்டு அந்த எருதைத் தாக்கித் தனது நண்பனிடமிருந்து ஒரு வாளை வாங்கி அந்த எருதைக் கொன்றுவிட்டான். அதனால் ஜனங்கள் சந்தோஷப்பட்டு அவனை அவ்விருந்த ஹோட்டலுக்குத் தூக்கிச்சென்றனர்.

## பாரசீகத்தில் குளிர் ஆபத்து.
நூற்றுக்கணக்கான ஜனங்கள் மரணம்.

பாரசீக மலைப்பிரதேசத்தில் குளிர் சகிக்க முடியாததாயிருக்கிறது. அராப்டில் பிரதேசத்திலுள்ள ஜனங்கள் குளிர் பொறுக்கமுடியாமல் நூற்றுக்கணக்காய் மடிந்துபோயினர். இறந்தவர்களின் பிரேதம் எங்கும் காணப்படுகின்றன.

## புதிய எண்ணெய் ஊற்றுகள்.
ஆமூர்நதி பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டன.

லண்டன், பெப்ருவரி 6உ. விலாடிவோஸ்டாக்குக்கு 500 மைல் தூரத்தில் ஆமூர் நதிப் பிரதேசத்தில் பெருந் தொகையான எண்ணெய் நிலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆமூர் மாகாணத்தில் கல்வ பெட்ரோலியம் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அஹோன் கடலுக்கருகில் கொக்கன்னுமிடத்தில் லட்சக்கணக்கான டன் இரும்பு இருந்ததாகத் தெரிகிறது.

## பர்மாவில் அடிமைகள்.
400 பேருக்கு விடுதலை.

இரங்கூன், பிப்ரவரி 7உ. பர்மாவில் ஜனுவரி மாதம் பத்திவரையில் 400 அடிமைகள் விடுதலைசெய்யப்பட்டிருக்கின்றனர். நாகாஹில், கிலுல், ஹாத், காங்வேலியிலும் அடிமைகளை விடுதலைசெய்யும் முயற்சி தக்க பலனளித்துவருகின்றது.

## ஓடிப்போன கைதி.
மீண்டும் பிடிபட்டான்.

இரங்கூன், பிப்ரவரி 7உ. 1925-ம் ஆண்டில் மற்றொரு கைதியும் அந்தமான் தீவிலிருந்து தப்பி ஓடிப்போன பேதாங் என்னும் பேர்போன கைதியை ஹாங் தாவாடி ஜில்லா போலீஸார் பிடித்துவிட்டனர். அவனை சிரியாமிலே சென்ற வெள்ளிக்கிழமை நடந்த பக்கோடா உற்சவத்தில் கைது செய்தனர். அவனுடைய கூட்டாளி இன்னும் அகப்படாதிருக்கின்றான்.

## லாகூரில் தீ விபத்து.
பல இலட்சம் ரூபாய் நஷ்டம்.

இன்றிரவு ஒரு பெருந் தீ விபத்து ஏற்பட்டு கே. என் தாவார் கம்பெனி, பலசரக்கு வியாபாரம் கஸ்தூரியா கம்பெனி, ஜவுளி வியாபாரம் செய்யும் இராமகிருஷ்ணு அண்டு சன்ஸ் முதலிய மூன்று கம்பெனி சாமான்களும் எரிந்து சாம்பலாயின. அந்த கடையிலிருந்தவர்களெல்லாம் உயிர் தப்பினார்கள். நெருப்பணைக்கும் இஞ்சின் சுமார் 3 மணி வரையிலும் கஷ்டப்பட்டு நெருப்பை அணைத்தது. இதனால் ஏற்பட்ட நஷ்டம் பல இலட்சமென்று மதிப்பிடப் படுகின்றது. நெருப்பு எவ்விதமாகப் பற்றியதென்று தெரியவில்லை.

## தேகாப்பியாசம் கெடுதியா?
ஒரு டாக்டரின் பரீட்சை.

வெஸ்ட் மின்ஸ்டர் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் அடல்பஸ் ஆபிரகாம் தாம் 27 வருஷமாய் கடின தேகாப்பியாசம் செய்துவந்ததினால் ரத்த நாளங்கள் கெட்டுப் போய் விட்டதாவென்று அறியும்படி தமது புஜத்திலிருந்து ஒரு ரத்த நாளத்தை சத்திரம் செய்தெடுத்து பரீட்சித்ததில் அது எவ்வித கேடுமின்றி இயற்கை நிலையிலிருக்கக் காணப்பட்டது. கடின தேகப்பியாசத்தினால் தேகத்துக்குக் கெடுதி என்று சொல்லுவதற்கு ஆதாரமில்லை என்று இந்தப்பரீட்சையினால் வெளிப்பட்டு விட்டதாக டாக்டர் ஆபிரகாம் கூறுகிறார்.

## குஷ்டத்தை ஒழிக்க மருந்து.
பூர்த்திசெய்யப்பட்டது.

"ஹைட்ரோ கார்ப்பஸ்" என்னும் எண்ணெயால் குஷ்டரோகத்தை நீக்கிவிடலாமென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த சிகிச்சைக்குத் தடையாயிருந்த நிலைமைகளெல்லாம் சரிப்படுத்தப்பட்டு சிகிச்சை பூரணப்படுத்தப்பட்டிருக்கிறது. இது விஷயமாய் சர்க்கார் இலாகாவிலிருந்து சீக்கிரமே ஒரு அறிக்கை வெளியிடப்படுமென்று சன்டே எக்ஸ்பிரஸ் பத்திரிகை கூறுகிறது.

## மனைவி கொலை.
எதிரிக்கு தூக்குத் தண்டனை.

சென்ற 1927ம் வருடம் அக்டோபர் 28ந்தேதியன்று ஜார்ஜ்டவுன் குமாரப்ப முதலித் தெருவில் வசிக்கும் மௌளி ஆச்சாரி என்னும் ருத்ராச்சாரி 19 வயதுள்ள தன் மனைவியின் கழுத்தை அறுத்துக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட, நேற்று மீண்டும் நீதிபதி ரீலிமுன்பாக விசாரணைக்கு வந்தது. நீதிபதி ஜூரிகள் அபிப்பிராயத்தையொட்டி குற்றவாளிக்குத் தூக்குத் தண்டனை விதித்தார். கிரவுன் பிராஸிக்யூடர் திரு. கே. பி. எம். மேனன், பிராஸிக்யூஷன் தரப்பில் கேஸை நடத்தினார். எதிரி தரப்பில் திரு. எடி கொயிலோ தோன்றி வாதித்தார்.

## ஆனா, கொலை வழக்கு.

சென்ற டிசம்பர் 14-ந்தேதி அங்காளம்மன் கோயில் தெருவில் வசிக்கும் மகமது இப்ராஹிம் நான்பவன் இரவில் தூங்கிக்கொண்டிருக்கும் தன் மனைவியை சவரக்கத்தியால் அறுத்துவிட்டதாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கு இன்று செஷன்ஸ் நீதிபதி ரீலி முன்பாக விசாரணைக்கு வந்தது. எதிரி தான் குற்றம் செய்யவில்லை எனக் கூறினான். கிரவுன் பிராஸிக்யூடர் வழக்கு விவரத்தை விளக்கிப் பேசினார். இவ்வழக்கு விசாரணை முடிவதற்குள் கோர்ட்டு பகல் போஜனத்துக்குக் கலைந்தது.

## சோடா புட்டி விபத்து.

கும்பகோணம் பெப். 15, இங்கு ஒரு சோடா பாக்டரியில் ஒரு சோடாபுட்டி வெடித்ததினால் ஒரு தொழிலாளனுக்கு பலத்த காயமேற்பட்டு ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டிருக்கிறான். அவன் நிலைமை அபாயகரமாயிருப்பதாய் தெரிகிறது.

## எண்ணெய்க்கப்பல் விபத்து.
15 பேர் மரணம்.

சத்தி, என்ற அமெரிக்க எண்ணெய்க்கப்பல் ஜப்பானுக்கருகில் கடலில் போய்க்கொண்டிருக்கையில் அதில் வெடி விபத்து ஏற்பட்டு, கப்பல் தலைவனும் பதினொரு கப்பலாட்களும் மாண்டனர். ஒரு ஜப்பானிய மீன்பிடி கப்பல் உதவிக்குச்சென்று வெடித்துப்போன கப்பலிலிருந்து 21 பேரை தப்புவித்து இங்கு கொண்டுவந்திருக்கிறது. அவர்களில் அநேகருக்கு காயம் பட்டிருக்கிறது.

## உலகத்தில் பெரிய கப்பல் சௌதாம்ப்டனில் கரைதட்டி நின்றமை

உலகத்தில் மிகப்பெரிய கப்பலாகிய அறுபதினாயிரம் டன் நிறையுள்ள லெவியத்தான் என்ற கப்பல் நியூயார்க்கிலிருந்து சௌதாம்ப்டனுக்குச் செல்லுகிறபோது சௌதாம்ப்டன் துறைமுக மணலில் கரைதட்டிவிட்டது. 2 மணி நேரத்திற்குப் பின் கடல் ஏற்றத்தினால் அது அந்த இடத்திலிருந்துபுறப்பட்டுப்போக இடமுண்டாயிற்று.



## அவதூறு

பிறரைக் குறித்து பழிப்பினைப் பேசுதல் அத்தனை பாவமல்ல என்பது போல அநேகருக்குச் சாதாரணமாய் இருக்கிறது. உலகம் முழுவதையும் கொடுத்தாலும் ஒரு காசுடைமையைத் திருடவோ, ஒரு பொய்யைச் சொல்லவோ, ஓய்வுநாளில் வேலைகள் செய்யவோ, கோவிலாசரிப்பை உபேட்சிக்கவோ, மனந்துணியாதவர்கள் கூசாமல் அவதூறு பேசுவதில் பழகியிருக்கிறார்கள்.

எடுத்துக்காட்டுவது வகையே அவதூறில் அதிக கடுமையானது. ஒரு வித்வான் சொல்லுகிறபடி "கோள் உண்டாக்குகிறவனுக்கும் அதைக் கொண்டுதிரிந்து கூறுகிற கூட்டப்பேய்களுக்கும் அதிக வித்தியாசமில்லை." பின்புறணிக்காரன் "நான் இல்லாத விஷயத்தைப் பேசுகிறதில்லை, கேள்விப்பட்டதையே சொல்லுகிறேன்" என்பான். ஆனால் அது அபாண்டமல்ல என்று உனக்கு எப்படித் தெரியும்? கண்டனி கேட்கிறவர்களில் எத்தனை பேரோ காரியத்தின் யதார்த்தத்தை விசாரித்தறியாமல் குளறித்துக்கொண்டு திரிகிறார்கள். ஆ! இது பொய்யாயிருந்தாலும் இருக்கும். அப்படியானால் நீயும் பொய்ச்சாட்சியே சொல்லுகிறாய். ஆகையால் ஒரு பிராதை வெளியே சொல்லுமுன் அதன் உண்மையை அறிந்துகொள். கல் விழுந்தால் எடுக்கலாம், சொல் விழுந்தால் எடுக்கப்படாது. நீ ஒருவனுக்குச் சொன்னதை அவன் மற்றவர்களுக்கு அறிவிப்பான். நீ சொன்னது தப்பிதம் என்று பின்னாலே கண்டறிந்தாலும், மற்றவர்கள்மனதிலிருந்து அத்தப்பிதத்தைத் திருத்துவது அசாத்தியமாகும். பிராது வாஸ்தவந்தான் என்றாலும், மறைக்கிறதைவிட வெளிப்படுத்துகிறதினால் அதிக நன்மை வரும் என்று கண்டாலே அதை வெளியிடலாம். ஆதலால் யாதொரு துர் விஷயத்தை வெளியே எடுக்குமுன், இதை நான் அன்பினால் ஏவப்பட்டுப் பேசுகிறேனா? இதினால் நான் மற்றவர்களுடைய நன்மையைக் கருதுகிறேனா? என்று தனக்குள்ளே விசாரிக்க வேண்டும்.

துர் விஷயங்களைப் பிரசித்தம்பண்ணுவது சிலருக்கு இன்பமான பொழுதுபோக்கு. மற்றவர்களுக்குள்ளே அதிசயத்தையும் மனவெழுச்சியையும் உண்டாக்கவேண்டும் என்பது அவர்கள் தாற்பரியம். அதைப் பரம்பவிடாதபடி கேட்கிறவர்களை அவர்கள் விலக்கி, இவ்வாறு தாங்கள் தீமையைத் தங்கிறவர்கள் போலும் மாசிசம் பண்ணுவார்கள். அதை மற்றவர்களுக்குப் புகட்டும் குத்தலக முழுவதும் தங்களுக்கே இருக்கவேண்டும் என்பதல்லவோ அவர்கள் யோசனை. பொறாமையே இந்த துர்வாடிக்கைக்குப் பெரும்பாலும் காரணம். ஐசுவரியவான்கள், ஞானமுள்ளவர்கள், நல்லவர்கள் முதலியோரைக் குறித்து வடுச்சொல் பேசும்போது, அவர்களை நமக்கு மேற்பட்டவர்களல்ல என்று பாவிக்கிறோம். அவதூறினாலே சாமர்த்தியமாய் அவர்களை நம்மோடு சமநிலையில் கொண்டுவருகிறோம். வன்மம், பழிதுணம் என்பவைகளும் அதற்குக் காரணம். இதுவே கோழைத்தனமாய்த் தீமைக்குத் தீமை சரிக்கட்டுதல். பெருமையும் இதற்கு மூலம். பிறத்தியான்பேரில்குற்றஞ்சாட்டும்போதே தற்புகழ்ச்சி இரகசியமாய் உடாடி நிற்கும். குறைகாரன் "நான் எத்தனை உத்தமன்!" என்று தன்னைக் குறித்துச் சொல்லாமல் சொல்லுகிறான். உலகத்திலே ஒரு குறித்த அளவான யோக்கியதை உண்டாயிருக்கிறதாகவும் தாங்கள் எத்தனைபேரை அயோக்கியராகத் தீர்க்கிறார்களோ அத்தனைக்கு, தங்கள் சொந்த யோக்கியம் அதிகப்பட்டு வருகிறதாகவும் சிலர் எண்ணிக்கொள்ளுகிறார்கள்.

புறங்கூறுகிறவன் காண்பிக்கிற கிலேசம் மாயமுள்ளது. அவன் தன் அவதூறுக்கு முகவுரையாக "ஆ! நான் இன்னின் பேரில் இந்தனி காரியங்களைக் கேட்டுத் திகிலடைந்து கலங்குகிறேன். அந்த உண்ணிடத்தில் சொல்லுவதானே எனக்கு பெரிய பீடை!" என்பான். ஆனால் இந்த வேஷத்தின் கீழ் "அயலானுக்கு சந்தோஷப்படுதல்", எதகலையாய் நடந்துவருகிறது! ஒரு பகைஞனோ, பிறர்கண்சத்தில் அதிகப்பட்டவனோ தவறி விழுந்து அவகீர்த்தி அடையும்போது, உள்ளத்திலே நமக்கு எத்தனை சந்தோஷமும் கொண்டாட்டமும் இருக்கிறது! தூஷிக்கப்படுகிறவன் குற்றவாளியானாலும் சரி, குற்றமற்றவனானாலும் சரி, அவனை தூஷிக்கிறவன் மனுஷ அன்பில்லாத மிருகப் பிறவியாகத் தன்னையே குற்றப்படுத்துகிறான் என்பது நிசம்.

ஒரு கல்லவருடைய காது கேட்க யாராவது பழிப்பினை பேசினால் "நீ நியாயாதிபதியின் ஆசனத்தில் வராதே" என்று சொல்லி அதட்டுவார். வேறொருவர் பின் புறணிக்காரனைக்கண்டால், "நீ அவனைப்பற்றிச் சொல்வதை எல்லாம் கேட்பேன், பின்பு அவனிடத்தில்போய் அறிவிப்பேன்" என்பார். பின்னொருவர் "பிரதிவாதி வருமட்டும் விசாரணையை நிறுத்தி, அவன் வாக்குமூலத்தையும் கேட்போம்" என்பாராம். பொல்லாங்கானதைச் சிந்தியாத அன்பு வசைப்பிரிக்கு முற்றிலும் எதிரானது. அது நன்மையையே விரும்பித்தேடி, அதுவகைவாத கண்டால், அதைப் பெரிதாக எண்ணி, மெச்சிக்கொள்ளும். தாயானவள் தன் பிள்ளையின்பேரில் சொல்லப்படும் குறைபாட்டைச் சம்பாமல், புகழ்ச்சிகேதுவானதை எளிதில் விசுவாசிப்பதுபோல், பிறன் பேரிலுள்ள நமது அன்பு அவனைக்குறித்து நன்மையானவைகளை மாத்திரம் கட்புலனாற்றுள்ள நாடுகிற பெருவயிற்றுக் கழுகுகளும், அசங்கிய மலத்தில் மொய்க்கிற அசிங்கியமான ஈக்களும், அவதூறு பேச அல்லது கேட்க ஆசைகொள்ளுகிறவர்களும் சரி. உந்நிவானத்தில் பறந்து சூரிய வெளிச்சத்தில் பாடுகிற வானம்பாடிக்குருவியும், இனிய மதுவாசனை வீசும் புஷ்பங்களில் போய் அடைகிற தேனீக்களும், பொல்லாங்கானதைச் சிந்தியாமல் சத்தியத்தில் சந்தோஷப்படுகிற அன்பின் குணத்தை உடையவர்களும் சரி.

### கோட் சொல்லுகிறவனும் கோட் கேட்கிறவனும்.

திருடனும், திருட்டுச் சொத்தை வாங்குகிறவனும், சமமாகக் குற்றவாளிகளாவது போல, சொல்லுகிறவனும், அத்தனையைக் கேட்கிறவனும் சமமாயெண்ணப்படுகிறார்கள். கதவு திறக்கப்படமாட்டாதென்று அறிந்தால் எவன் தட்டுவான்? வெளியாய்ப்பயப் பண்படுத்தப்பட்ட நிலமல்லாவிட்டால், எந்தக் குடியானவன் தன் விதைகளை விதைப்பான்? அதுபோல, துஷ்டசெவி திறந்திராவிட்டால், துஷ்ட நாவு அமரிக்கையாயிருக்கும். ஆனதால் ஓர் சாஸ்திரி சொன்ன பிரகாரம் கோட் சொல்லுகிறவனும், அதைக் கேட்கிறவனுமாகிய இருவரையும், ஒருவனை நாவைப் பிடித்தும், மற்றவனைச் செவியைப் பிடித்தும் தூக்கிப்போடவேண்டும். இப்படிச் செய்வதால் மற்றவர்களுக்கு மெத்த எச்சரிப்பாயிருக்கும். கோள் சொல்லுவதால் சிநேகிதர்களுக்குள் மனஎரிச்சல் உண்டாகி, பிறகு குடும்பமும், பெரிய சங்கமும் நஷ்டமடைந்து, தேசமும் இராச்சியமும் அழிந்துபோகிறதற்கு ஏதுவாயிருக்கிறது. இதனால் உண்டாகும் தீவினைகள் பார்வைக்கு மறைவாயிருப்பதால், அவைகளைப்பற்றிப் பயமில்லாமற்போகிறது.

## பஞ்சாங்கம்

1928-ஆ மார்ச்சு

● அமாவாசை ○ பௌர்ணமி * கிருத்திகை

| வாரம் | தேதி | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | ... | 4 | 11 | 18 | *25 | ... |
| திங்கள் | ... | 5 | 12 | 19 | 26 | ... |
| செவ் | ... | ○6 | 13 | 20 | 27 | ... |
| புதன் | ... | 7 | 14 | ●21 | 28 | ... |
| வியா | 1 | 8 | 15 | 22 | 29 | ... |
| வெள் | 2 | 9 | 16 | 23 | 30 | ... |
| சனி | 3 | 10 | 17 | 24 | 31 | ... |

| வாரம் | பிரபவ-ஆ மாசி 18உ பங்குனி 18உ | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | ... | 21 | 28 | 5 | *12 | ... |
| திங்கள் | ... | 22 | 29 | 6 | 13 | ... |
| செவ் | ... | ○23 | 30 | 7 | 14 | ... |
| புதன் | | 24 | 1 | ●8 | 15 | ... |
| வியா | 18 | 25 | 2 | 9 | 16 | ... |
| வெள்ளி | 19 | 26 | 3 | 10 | 17 | ... |
| சனி | 20 | 27 | 4 | 11 | 18 | ... |

1. முன்னுரை. ஒரு கதையில் முன்னுரையே முக்கியமானது. இந்த இடத்தில் கதை சொல்லுகிறவன், தான்சொல்ல எத்தனித்திருக்கிறதில் ஆவலை (Interest) உண்டாக்கவேண்டும். முதல் இரண்டு மூன்று வாக்கியங்கள், சொல்லப்போகும் கதையில் வரக்கூடிய ஆட்களையும், அக்கதையானால், எப்பொழுது எங்கே சொல்லப்பட்டதென்பதையும், பின்வரப்போகும் கதை எப்படிப்பட்டதென்றும் தெளிவாய்க்காண்பிக்கவேண்டும். சொற்கள் தெளிவாயும் சுத்தமாயுமிருக்கவேண்டும்.

2. நடந்த காரியங்கள். கதையில் சொல்லப்போகும் காரியங்களெல்லாம் ஒரே விசேஷத்தை நோக்கினதாக இருக்கவேண்டும். இங்கு சொல்லப்படுபவைகள் இயற்கையில் நடக்கக் கூடியவைகளாகவும், அன்றாட ஜீவியத்தில் நாம் அநுபவிக்கிறவைகளாகவும் இருந்தால் கதை மிகவும் கவர்ச்சிக்கப்படுகிறதாயிருக்கும். சில இடங்களில் உபாத்தியாயர் பிள்ளைகளுடைய வயதுக்கு தகுந்தவாறு, கதையில் வரும் ஆட்களையும் சுருக்கமாயும் இலேசாகவும் சொல்லுதல் நன்று. அநாவசியமான காரியங்களையும், சாதாரணமாய் நடக்கக்கூடாதவைகளையும் கதையில் நுழைப்பது தப்பிதம்.

3. விசேஷம்.—இதுவே கதையில் மத்திய கருத்து. இக்கருத்து இல்லாத கதை உயிரற்றதென்றே சொல்லலாம். ஆகையால் மிகக்கவலையோடு இதை ஆயத்தப்படுத்தவேண்டும். முதல் இருபாகங்களாகிய முன்னுரையும் நடந்த காரியங்களும் இக்கருத்தை உத்தேசித்தே இருக்கவேண்டும். கதையைக் கேட்கிற மாணாக்கர்களுக்கு இந்த விசேஷத்தை முதலிலேயே வெளிப்படுத்தாதபடி அவர்களை இக்கருத்துக்குக்கொண்டுவரவேண்டும். இக்கருத்து கேட்கிறவர்களுக்கு ஆச்சரியத்தையும் ஆனந்தத்தையும் கொடுக்கக்கூடியதாயிருந்தால், கதைசொல்லுகிற ஆசிரியன் ஜெயமடைந்தவனென்று சொல்லலாம். இந்த இடத்தில் உபாத்தியாயர் அவசரப்படாமல் மெதுவாய்ப் பிள்ளைகள் மனதைக் கவரத்தக்கதாகச் சொல்லவேண்டும்.

4. முடிவுரை. ஒரு கதையின் முடிவுரை கேட்கிறவர்களின் மனதை ஒரு முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். கதையை முடிவுக்குக் கொண்டுவருவது மாத்திரமல்ல பிள்ளைகளுக்கு சந்தோஷத்தையும் ஆநந்தத்தையும்கொடுக்கவேண்டும் சாதாரணமாக பிள்ளைகள் கதையின் முடிவுக்கு வரவர களைப்படைந்து போகக்கூடியவர்களாதலால், முடிவுரை சுருக்கமாயும், இன்பமாயும் இருக்கவேண்டும். கதை எதற்காகச் சொல்லப்பட்டதென்றும், அதனுடைய சன்மார்க்க போதனை இன்னதென்றும் வெளிப்படுத்தக்கூடாது. இந்நோக்கத்தை கதை தன்னுள்ளே கொண்டுவரவேண்டும். இந்நோக்கம் பிள்ளைகளுக்கு தெரியவில்லை என்று நிச்சயமாய் அறிந்த பட்சத்தில், ஆசிரியன் அதைச்சற்று சொல்லலாம். ஆனால் ஆசிரியன் அதிக யோசனையோடு இந்நோக்கத்தை கதையினுள் நுழைத்து வைப்பதே மிகவும் நன்று. முடிவுரை சொல்லி முடித்தவுடன் கதையை நிறுத்துவது நலம்.

G. G. R.

## கோட்காரனைப்பற்றிய விவரம்.

கோள்காரன் விளம்பரம் பண்ணுகிறதற்காகவேயிருப்பதால், ஒருவனும் அவனிடத்தில் இரகசியத்தைச் சொல்லான். சகலராலும் இவன் பகிரங்க விளம்பரக்காரன் என்று எண்ணப்படுகிறான். கடைக்கணக்குக் கையில் வைத்து வீதியில் திரிவோர்க்கும் இவனுக்கும் இருக்கிற வித்தியாசம் எதிலெனில், அவர்கள் வெளியரங்கமாய்ச் செய்ய இவன் ஓர்வகை நாய்போல இரகசியமாய்ப் பற்களினிடையில் வைத்துத்திரிகிறான். ஒவ்வொரு கூட்டத்திலும் இப்படிப்பட்டவனுண்டு. போர்ச்சேவகரிருக்கிறவிடத்திலிருக்கிற நாயானது கீழே இங்குமங்குமாய்ச் சிந்திக்கிடக்கிறவைகளால் தன் பசியைத்தீர்த்து ஓடுகிறதினாலும் சமக்கிறதினாலும் சேனையிலுள்ள சகலருக்கும் ஊழியஞ்செய்து வருகின்றது. கோட்காரனின் நாக்கு எவ்வளவு கூரானதாயிருக்கிறதென்று கவனியுங்கள். ஆனால் அவன் அந்த நாயைப்போல் குற்றமற்ற குணமுடையவனல்ல. அவ்வேழை நாய் தன் சொந்த வாலை மாத்திரம் ஆட்டுகிறது வழக்கம். இருந்தாலும் கோட்காரனோ மற்றவர்களுடைய காரியத்தைச் சொல்லிக் கேலிபண்ணுகிறவனாயிருக்கிறான். அவன் நோக்கம் வீண். அலப்பிக்கொண்டே திரிகிறான். பொருமையினாலோ பொருமையில்லாமலோ என்னவாயிருந்தாலும் அது குடும்ப சமாதானத்திற்கும் நம்பிக்கைக்கும் பெரிய தடையும் பெருநஷ்டத்திற்கு ஏதுவுமாயிருக்கும். கோளன் நாக்கிலே மூன்றுபட்டயம். அவன் மூன்றுபேரை ஒருமிக்கக் கொல்லுகிறான். அவன் தன்னையும்தான் எவனைக்குறித்துப்பேசுகிறானோ அவனையும் அதைக் கேட்கிறவனையும் கொல்லுகிறான். கோளுங்கொலையும் பிரியாதிருக்கிறது. சவுக்கடியானது தழும்புகளையுண்டாக்கும். பொல்லாத வாயோ எலும்புகளையெல்லாம் நொறுக்கிவிடும், பட்டயத்தால் விழுந்தவர்கள் மெத்தவுண்டு. ஆனால் பொல்லாத வாயினால் விழுந்தவர்கள் அநேகங்கோடி. "கோட்காரனுடைய வார்த்தைகள் விளையாட்டுப்போலிருக்கிறது. ஆனாலும் அவைகள் உள்ளத்திற்குள் தைக்கும்.

### மூன்று காரியங்கள்.

மனிதர் நேசிக்கவேண்டிய 3 காரியங்கள். தைரியம், சாந்தம், அன்பு.

மனிதர் மெச்சவேண்டிய 3 காரியங்கள். புத்தி, மேன்மை, தயவு.

மனிதர் பகைக்கவேண்டிய 3 காரியங்கள். குரூரம், பெருமை, நன்றிகேடு.

மனிதர் உவப்பிக்கவேண்டிய 3 காரியங்கள் அழகு, கபடின்மை, சுயாதீனம்.

மனிதர் விரும்பவேண்டிய 3 காரியங்கள். சௌக்கியம், சிநேகிதர், மனரம்மியம்.

மனிதர் விலக்கவேண்டிய 3 காரியங்கள். சோம்பல், அலப்பு, குறும்பு.

மனிதா விர்த்திசெய்யவேண்டிய 3 காரியங்கள். நல்ல புஸ்தகங்கள், நற்றோழர், நற்குணம்.

மனிதர் போராடவேண்டிய 3 காரியங்கள். கனம், தேசம், சிநேகிதர்.

மனிதர் ஆளவேண்டிய 3 காரியங்கள். குணம், நாவு, நடத்தை.

மனிதர் பரிபாலிக்கவேண்டிய 3 காரியங்கள். அறம், நன்மை, ஞானம்.

மனிதர் நினைவுகூரவேண்டிய 3 காரியங்கள். ஜீவன், மரணம், நித்தியம்.



## சுத்தம்.

சுகம் தருவதெது? சுத்தமல்லவா? "சுத்தம் சுகம்தரும்," என்றபடியேயும், "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்றபடியேயும், நாம் நோயாளி ஆகாமல் சுகமுடையவர்களாக இருக்கவேண்டுமானால் கீழே சொல்லியபடி நடக்கவேண்டும்.

காற்று:—எப்பொழுதும் நாம் நல்ல காற்று அடிக்கும் இடங்களிலேயே இருக்கவேண்டும். குப்பைமேடு, சாக்கடை, முதலிய அசுத்தமான இடங்களில் இருக்கக்கூடாது. அவைகளுக்குச் சமீபமான இடங்களில் விளையாடக்கூடாது. அந்த இடங்களிலுள்ள காற்று அசுத்தமானது. ஆனதால் அது வியாதிகளை உண்டுபண்ணும்.

சாப்பாடு:—பசியுண்டான போதுதான் சாப்பிடவேண்டும். பசியாதபோது தின்பண்டங்களில் ஆசைவைத்து அடிக்கடி சாப்பிடக்கூடாது. நன்றாய் வேகாத ஆகாரத்தையும், சரியாய்ப் பழுக்காத பழங்களையும், அழுகிய பழங்களையும் தின்னலாகாது. இவைகள் சரியாய் ஜீரணம் ஆகாது. வயிற்றுவலி முதலிய அநேக வியாதிகளை உண்டாக்கும்.

வஸ்திரம்:—நாம் கட்டிக்கொள்ளும் வேஷ்டியும், போட்டுக்கொள்ளும் சட்டையும் சுத்தமாயிருக்கவேண்டும். அசுத்தமான தரையில் உட்காரக்கூடாது. அழுக்கு வஸ்திரங்களைக் கட்டலாகாது. அவைகளிலுள்ள அழுக்குகள் தேகத்தில் சேர்ந்து, சிரங்கு முதலிய வியாதிகளை உண்டாக்கும்.

குளித்தல்:—தினந்தோறும் சுத்த ஜலத்தில் குளிக்கவேண்டும். அப்படிச்செய்யாவிட்டால் தேகத்திலுள்ள அழுக்குகள் மயிர்த்துவாரங்களை மூடிக்கொள்ளும் வியர்வை நீர் வெளிவராமல் வியாதியை உண்டுபண்ணும். சனிக்கிழமை, புதன்கிழமை எண்ணெய் நீராடவேண்டும். தலைக்கு எண்ணெய் பூசி, சீப்பால் வாரிக்கொள்ளவேண்டும். இவைகளால் தலையில் பேன் தங்காது. காற்றடித்து அடைந்திருக்கும் தூசி, புழுதி முதலியவைகள் தலையைவிட்டு நீங்கிவிடும். அப்படிச்செய்யாவிடில் தலைமயிரில் சிக்குப்படும், நாற்றம் உண்டாகும், பேன்பிடிக்கும், பொடுகு முதலிய சிரங்குகள் வெடிக்கும்.

ஆதலால், நண்பர்களே, மேலே சொன்ன விதமாக நடந்துவந்தால் நாம் நல்ல சுகம்பெறலாம் தேகபலமும், கல்வியில் தேர்ச்சியும் அடையலாம். அசுத்தமகற்று.

V. சாமுவேல்,
உபாத்தியாயர்,
கரிசல்பட்டி.

## சுகாதாரக் கொண்டாட்டம்.

1928-ஆ பிப்ரவரி 5உ ஞாயிற்றுக்கிழமை மகா-ா-ா-ஸ்ரீ ஹெல்த் ஆபீஸர் உத்தரவின்படி கொத்தப்பட்டி போர்டு பாடசாலையின் முன்பாக சிங்காரக்கொட்டகை ஒன்று அமைத்து அதில் கதிர்நரசிங்கபுரம் 1, ராஜதானி 2, கீரிப்போத்தம்பட்டி 3, மாண்டிபட்டி 4, ஷை கொத்தப்பட்டி 5, இந்த ஐந்து பாடசாலை மாணவர்களால் மகா-ா-ா-ஸ்ரீ ஆண்டிபட்டி போர்டு பாடசாலை உபாத்தியாயர் கருப்பயாதாஸ் அவர்களை காரியதரிசியாக வைத்து சுகாதாரக்கொண்டாட்டம் நடத்தப்பட்டது.

இன்று காலை 9 மணிக்கு ஆரம்பம் செய்யப்பட்டது. ராஜதானிக் கள்ளர்ஸ்கூல் மாணவர்களால் கடவுள் வாழ்த்துப்பாடி சங்கம் துடங்கிற்று மேலே கண்ட ஐந்து ஸ்கூல் மாணவர்களால் ஓட்டம், மந்தி ஓட்டம், கயிறுதாண்டல், கண்கட்டிவிடுதல், சாக்குக்கட்டிவிடுதல், வடம் இழுத்தல் முதலிய விளையாட்டுகள்செய்து விளையாட்டில் தேர்ந்த பிள்ளைகளுக்குவேண்டிய பரிசுகள் அளிக்கப்பட்டது கதிர்நரசிங்கபுரம் கள்ளர் ஸ்கூல் மாணவரால் ஆரோக்கிய தேசமென்னும் சுகாதார நாடகத்தை மேளம் தாளம் ஆர்மோனியத்துடன் வெகு விமரிசையாய் நடத்தினார்கள். மகா-ா-ா-ஸ்ரீ ராஜதானிக் கள்ளர்ஸ்கூல் உபாத்தியாயர் ஸ்ரீ குருசாமிக் கவண்டர் பிளேக் வரும் விதமும் அதைத் தடுக்கும் முறையும் என்பதைபற்றி பிரசங்கம்செய்ய அங்கேயிருந்த ஜனங்களெல்லாம் கரகோஷம்செய்தார்கள். ஹெட்மாஸ்டர் உலகநாதத்தேவர் தொத்துவியாதி என்பதைப்பற்றி பிரசங்கம்செய்தார். பிச்சம்பட்டி கள்ளர் ஸ்கூல் உபாத்தியாயர் மூத்தையா பிள்ளை அவர்கள் பலவியாதிகள் என்பதைப்பற்றி பிரசங்கம்செய்தார். மகா-ா-ா-ஸ்ரீ காரியதரிசியாகிய கருப்பயாதாஸ் அவர்கள் சுகாதாரத்தைப்பற்றி வேண்டிய பிரசங்கம் செய்தார். இதெல்லாம் கேட்ட ஜனங்கள் ஆனந்தத்துடன் எல்லோரும் கரகோஷம் செய்தார்கள். பின்பு கதிர்நரசிங்கபுரம் கள்ளர் ஸ்கூல் மாணவர்களால் ராஜ வாழ்த்துப்பாட்டுப்பாடி, மாணவர்கள் எல்லோர்க்கும் அங்கேயிருந்த பெரிய மனிதர்கள் எல்லோருக்கும் சந்தனம் தாம்பூலம் கொடுத்து ஆனந்திக்கும்படிசெய்து ராஜ வாழ்த்துடன் சங்கம் முடிவுபெற்றது.


*Patron.* M.R.Ry. Rao Babadur,
A. J. Vethanayaga Thevar Avl.,
Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam,
Usilampatti.

*Manager.*—Rev. B. S. Stoffer,
Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager.*

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor.*

சம்ரக்ஷகர்.—மகா-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் பி. எஸ். ஸ்டோபர் துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.


அமெரிக்கன் மிஷன் "லினெக்ஸ்" பிரஸ், பசுமலை.—1928

REG. NO. M. 2146

18 APR 1928 MADRAS

# The Piramalai Reformer.

## பிரமலை சீர்திருத்தன்.

" வழக்குக்கு விலகுவது மனுஷனுக்கு மேன்மை, மூடனானவன் எவனும் அதிலே தலையிட்டுக்கொள்வான்."

Vol. VII.] ஏப்ரல்மீ 1928 [இலக்கம் 12

இந்தியன் ஸ்டாட்யூடரி கமிஷன் சேர்மன் அவர்களுக்கும், ற்ற அங்கத்தினருக்கும், பிரம[illegible] தேவமார் அளிக்கும்

## நல்வரவேற்பு.

ஐயா,

கள்ளர் பொதுநிதியின் சங்கத்தின் அங்கத்தினராகிய நாங்கள் எங்கள் பெருநாட்டும், மதுரை இராமநாதபுரம் ஜில்லா கள்ளர்களின் பொருட்டும், தங்களை எமது நாட்டிற்கு மனப்பூர்வமாய் வரவேற்கின்றோம்.

காருண்ய கவர்ன்மெண்டாரால் ஜனங்களை அரசாளுவதற்கும் அவர்களை முன்னேற்றத்திற்குக் கொண்டு வரவும் எண்ணம் கொண்டு மேற்பூண்டு நடத்திவரும் பரிசோதனையான இக்கொள்கையின் இயல்பு தங்களுக்கு நன்றாய்த் தெரிந்ததே. அக்கொள்கையாவது இரண்டு ஜில்லாவில் பெரும்பான்மை நிறைந்தும் எளனத்தையும் புத்திக்குறைவையும் தவிர வேறொன்றும் இல்லாத எங்கள் குலமுழுவதையும் சீர்திருத்த, மேற்கொண்ட கொள்கையே. குடிகளைக் கண்திறக்கச்செய்து அவர்கள் குறைகளையும், பாத்தியங்களையும் கற்பித்து, இராஜ பக்தியும், தொண்டூழியமும், சட்டத்திற்கிணங்கி நடக்கவும் செய்வதே பெருங்குணமமைந்த கவர்ன்மெண்டாரின் இயல்பாகும். அப்படி நடத்திவரும் இந்த கவர்ன்மெண்டாருக்கு எங்கள் மிகுந்த நன்றி அறிதலை தெரிவித்துக்கொள்கிறோம். தவிர இந்த சீர்திருத்தத்தின் பயன் என்றும் [illegible]பொருட்டு குறைந்தது 25 வருடங்களுக்கு இந்த ஏற்பாடுகள் நடத்திவரப்படுமென்று நம்பிக்கைகொள்கிறோம்.

கள்ளர்களின் தாழ்வு இயற்கையால் உண்டாகிய கொடுமையின் காரணமேதவிர பிறப்பின் குற்றமல்ல. நிலவளம் மிகுந்த இந்நாட்டில் விவசாயம் தவிர வேறொன்றிலும் பயிற்சி அற்ற குடிகளுக்கு விவசாயத்திற்கு சகாயமில்லாத வறண்ட பூமியினால் செழித்த காலத்திலுங்கூட வருஷ முற்றிலும் ஜீவனத்திற்குப் போதுமான பலன் கிடைப்பதே அரிதாயிற்று. உண்மையாய் உழைக்கும் விவசாயிகள்கூட கடனாளிகள் ஆகி சாவுகாரியின் வலையில் சிக்கிக்கொள்கிறார்கள். கவர்ன்மெண்டார் நீர்ப்பாய்ச்சலுக்கு கிணறு வெட்டவும் வறுமை தீரக் கடன் கொடுத்தும் உதவிபுரிந்துவருகிறார்கள். எங்களுக்கு இதுவரையில் செய்துள்ள உதவிக்கு மிக்க நன்றி பாராட்டுகிறோம். ஆயினும் இனிச் செய்யும் பேருதவிக்கு அதை ஒப்பிட இடமில்லை.

சென்னை கவர்ன்மெண்டார் அதிசீக்கிரத்தில் 'கல்லாறு' பாசனத்திற்கு ஏற்பாடு செய்வதுடன் பெரியாற்றின் நீர்வளத்திலும் நாங்கள் பலனடைய உதவிபுரிவார்களென்று பூர்ண [illegible] இருக்கிறோம். மேலூர் தாலுகாவிலுள்ள [illegible]கள் அடைந்துள்ள செழுமையைப்போல மேலே குறித்த ஏற்பாடுகளால் எங்கள் பூமியும் செழிப்புற்று உயர்வடைந்து சீர்திருத்தத்தின் சங்கற்பங்கள் நிறைவேறிவிடும். ஆதலால் இவ்வித ஏற்பாடுகளுக்கு வேண்டிய எல்லா உதவியும்புரிய தங்கள் மனம் இரங்குமென்று நம்புகிறோம்.

உண்மையாய் உழைப்பவர்க்கு தெய்வம் தானே துணைசெய்யும் என்ற நம்பிக்கையைக் கைக்கொண்டே கள்ளர் பொதுநிதியை ஸ்தாபித்து இருக்கிறோம். இந்நிதி 1924-௵ ஏற்பட்டு 1860-௵த்து சொஸைடி ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 21-ன்படி பதிவுசெய்யப்பட்டு இப்பொழுது இந்நிதியின் மூலதனம் சுமார் ரூ. 45,000 மும், கள்ளர்களின் சந்தாவினாலே சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்நிதி சீர்திருத்த இலாகா அதிகாரிகளும், கள்ளர்களினின்றும் நியமிக்கப்பட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுமுள்ள 12 தேவமார்களும் உள்ள சபையாரால் நிர்வஹித்துவரப்படுகின்றது. இதன் மூலதனம் விவசாயிகளுக்கும் கண்டிராக்டர்களுக்கும் அட்[illegible]குகள் ஏற்படுத்தி வைக்கவும், விவசா

யப்பயிற்சித் தோட்டத்தை நடத்திவரவும் இன்னும் இவைபோன்ற தேவமார்களுக்கு பிரயோஜனமான விஷயங்களுக்கும் உபயோகப்பட்டுவருகிறது.

முன்னேற்றமில்லா ஜாதியார் அநேகரில் எங்கள் ஜாதியார் எவ்வளவோ மடங்கு அதிகம். மதுரை ஜில்லா ஜனத்தொகுதியில் பத்தில் ஒரு பங்குக்கு மேலாகவே இருக்கிறார்கள். எங்கள் குறைகளைத் தீர்க்கவும் கஷ்டங்களை நிவர்த்திக்கவும் எங்கள் முன்னேற்றத்திற்கென்றே கள்ளர் ஸ்பெஷல் டிபார்ட்மெண்ட் ஏற்பட்டிருந்தும், எங்கள் நிலைமையை ஒத்த இதர ஜாதியாருக்கு சட்டசபையில் பிரதிநிதி ஏற்பட்டிருக்க எங்களுக்கு என்று ஒரு பிரதிநிதி இல்லாதது எங்கள் துரதிஷ்டமே. அதிசீக்கிரத்தில் எங்களுள் ஒருவருக்கு அந்த ஸ்தானம் கிடைக்குமென்று நம்புகிறோம்.

இனித் தங்கள் அருமையான நேரத்தைக்கவர்ந்து தங்[illegible]த் தாமதித்து காலம்போக்க எ[illegible]நக்கு மனமில்லை. ஆயினும் [illegible] நாட்டில் விஜயம்செய்த இனிய ஞாபகங்களை பிரியா மனத்துடனிருக்க வேண்டிக் கொள்கிறோம்.

முடிவாக எங்களுடைய மனமார்ந்த வரவேற்பை மற்றொருமுறை தந்திடுவதுடன் எல்லாம் வல்ல இறைவன் தங்களுக்கு உன்னதமான ஆசீர்வாதத்தை அளிக்க வேண்டிக் கொள்கிறோம்.

இப்படிக்கு, தங்கள் கீழ்ப்படிதலுள்ள, ஊழியர்கள்.

---

## உசிலம்பட்டியில் ராயல் கமிஷனுக்கு நல்வரவு.

மதுரையிலிருந்து மார்ச் மாதம் 6-ம் தேதி சர் ஜான் சைமன் அவர்களும் அவர்கள் சகாக்களும் மோட்டார் வாகனங்களில் புறப்பட்டு வந்தார்கள். வரும் வழியில் அந்தவர்களுக்கு ஆறு இடங்களில் மாலைகளை சூட்டப்பெற்றது. இந்த ஆறு இடங்களிலும் ரோட்டின்மேல் பந்தல்கள் போட்டு அதில் சைமன் கமிஷனுக்கு நல்வரவு என்று எழுதிய தட்டிகள் கட்டப்பட்டிருந்தன.

உசிலம்பட்டியில் அவர்களின் வரவை எதிர் பார்த்தவண்ணமாகவே கள்ளர் மகாஜனங்களும் மற்றுமுள்ளவர்களும் இருந்தார்கள். கள்ளர் ஸ்கூல்உபாத்திமார்கள் தங்கள் பிள்ளைகளுடனும் தங்கள் பள்ளிக்கூடக் கொடிகளுடனும் வந்திருந்தார்கள். இவர்கள் இவ்விதமாகயிருந்தது கன்றுனது பசுவின் வரவை ஆவலுடன் எதிர் பார்த்திருந்தாற்போலிருந்தது. இவ்விதமாக கள்ளர் நாட்டின் தலை நகராகிய உசிலம்பட்டியில் ஜனங்களெதிர் பார்த்திருக்கும்போது, அந்தவர்களும் தெய்வதூதர்கள் வந்து தோன்றினர் போல் தோன்றினார்கள். இந்தவர்களைக் கண்டவுடன் எதிர் பார்த்திருந்த ஜனங்கள்யாவரும் தங்கள் சந்தோஷத்தை புலவழியிலும்காட்டினார்கள். அதை வர்ணிக்க முடியாது.

ஐந்து லாந்தக்கல் என்ற இடத்தில் முதலில் அவர்களுக்கு மாலைகள் சூட்டப்பெற்ற பிறகு பெருத்த கரகோஷத்துடன் தோட்டத்திற்குப் போனார்கள். அங்கு நல்வரவு என்ற தட்டி ஒன்று கட்டப்பட்டதுடன் அத்தோட்டம் மிகவும் நேர்த்தியாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்கு அவர்களுக்கு பிரமலைத் தேவமார்களால் வரவேற்புப் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பெற்றது. அதில் காருண்ய கவர்மெண்டார் தங்கள் சீர்திருத்தவிஷயமாய் செய்துவரும் அரும் பெரும் ஊழியத்திற்காக தங்கள் நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறதும், இந்த சீர்திருத்தத்தின் பயன் என்றும் நிலைநிற்கும் பொருட்டு குறைந்தது 25 வருடங்களுக்கு இந்த ஏற்பாடுகள் நடத்திவரப்படுமென்று நம்பிக்கை கொள்கிறோம் என்றும், பெரியாற்றின் நீர்வளத்தில் தங்கள் பலனடைய உதவி புரிய வேண்டுமென்று நம்பிக்கையுடனிருக்கிறோம் என்றும், சட்டசபையில் மற்ற ஜாதியாரைப்போல் தங்களுக்கும் பிரதிநிதித்துவம் இல்லாதது தங்கள் துரதிஷ்டமென்றும், அதிசீக்கிரம் தங்களுக்கு ஒரு ஸ்தானம் கிடைக்குமென்று நம்புகிறதாகவும் வாசித்தார்கள். இவ்வரவேற்புப் பத்திரத்திற்குப் பதிலாக அவர்கள் தங்களால் ஆன உதவி புரிவதாகச் சொல்லி நெசவு தொழிற்சாலைக்கு வந்தார்கள். அங்கும் அவர்களை ஆடம்பரத்துடன் வரவேற்று ஜரிகை மாலைகள் சூடினார்கள். கடைசியாக போர்டு ஹைஸ்கூலுக்கு வந்தார்கள். இங்கு அவர்கள் வந்தவுடன் சாரணச் சிறுவர்களால் சில விளையாட்டுகள் விளையாடப் பெற்றது. லுத்தர் மிஷன் கள்ளர் ஸ்கூல் மாணவிகள் கோலாட்டத்துடன் ஒரு பாட்டுப் பாடினார்கள். அதின் பின் கவண்டன்பட்டி அமெரிக்கன் மிஷன் கள்ளர்ஸ்கூல் மாணவர்மாணவிகள், இந்திய நடனத்துடன் மலர் தெளித்து ஒரு பாட்டுப் பாடினார்கள். அதில் ஒருசிறுவன் தன் ராஜவிசுவாசத்தைக்காட்ட, சிவப்பு, வெள்ளை, ஊதா என்ற மூன்று கலரையுடைய சட்டையையும் தன் தலையில் ராஜ கொடியையும் அணிந்து நடனத்துடன் மலர்தெளித்துப் பாடினதைப் பார்க்க ஜனங்கள் நெருங்கி பக்கத்தில் வந்தார்கள். அச்சமயம் அந்தவர்களுடன் வந்திருந்த பெருமாட்டி புகைப் படம் எடுத்தார்கள். பாட்டு முடிந்தவுடன் சர் ஜான் சைமனும் அவரது சகாக்களும் அச்சிறியோனுக்குக் கை கொடுத்தார்கள். அவர் சகாக்களில் ஒருவர் அச்சிறுவனை சில நிமிஷநேரம் தன் தோளில் தூக்கிவைத்து தங்களது சந்தோஷத்தைக்காட்டினர். பிறகு ய[illegible] ராஜவாழ்த்து ஆங்கிலேயத்தில் [illegible]டினபின்பு அவர்கள் மதுரைக்கு சுமார் 12 மணிக்குப் பிரயாணமானார்கள். இவ்விதமாக கள்ளர் மகாஜனங்கள் முன்னேற்றத்திற்காகப் பெரும்பாடுபட்டு உழைக்கும் கனம் கள்ளர் ஸ்பெஷல் ஆபீஸர் [illegible] அவர்களுக்குக் கடவுள் தம் கருணை பொழிவாராக. சர் ஜான் சைமன் அவர்களுக்கும், அந்தவர் சகாக்களுக்கும் பூரண சுகம் ஈந்து, அந்தவர்கள் நமக்கு வேண்டிய உதவிபுரியுமாறு நாம் எல்லாரும் இறைஞ்சுவோமாக.

பார்ல்ராஜ்,
கள்ளர்ஸ்கூல்
உபாத்தியாயர்.

---

## "தந்தை தாய்ப் பேண்."

அமெரிக்க தேசியக் குழப்பம் நடந்த இரண்டு வருஷங்களுக்குப் பின் ஒரு வாலிப ரணவைத்தியர் வாஷிங்டன் மாநகர் அருகாமையிலிருக்கும் ஓர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். ஒரு நாள் காலை அவர் தன் அறையைப் பூட்டிவிட்டு வெளியே போவதற்கு ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கும்போது ஒரு சேவகன் அவருக்கு எதிர்கொண்டுவந்து அவரை நிறுத்தினான்.



"நீர்தான் ஜேஸன் உல்கின்ஸ் என்று எண்ணுகிறேன்"

"ஆம்"

"நான் இன்று உம்மை அரெஸ்ட் செய்து வாஷிங்டன் மாநகருக்குக் கொண்டு போக வேண்டியிருக்கிறது."

ஜேஸன் அந்த சேவகனை உற்று நோக்கி, "நீ என்னை அரெஸ்ட் செய்ய நான் என்ன குற்றம் செய்தேன்? சொல். வேறு யாராயுமிருக்கும், நான் அல்ல" என்று.

சேவகன் தன் சேப்பிலிருந்து ஒரு நீண்ட கவர்கூட்டை எடுத்து ஜேஸனிடம் கொடுத்தான். ஜேஸன் அதைத் திறந்து பார்த்தார் திடுக்கென பின்வாங்கினார். கடிதத்தில் பின்வருமாறு கண்டிருந்தது.

"இதை ......பட்டாளத்திலிருக்கும் டாக்டர் ஜேஸன் உல்கின்ஸுக்குக் காட்டு. அவரை உடனே பிடித்து என்னிடம் கொண்டுவா."

ஜேஸனுடைய முகம் வெளுத்தது, சங்கதி என்ன? "ஆ! லிங்கன்" என்று சேவகனைக் கேட்டார்.

"சங்கதி என்ன என்று நான் பிரசிடெண்டைக் கேட்கவில்லை. போவதற்கு ஆயத்தப்படும். காலதாமதம் வேண்டாம்" என்று சேவகன் சற்று கோபமாய்ச் சொன்னான்.

ஜேஸன் உவாஷிங்டனுக்குப் போனார். தம் ஜீவிய காலத்தில் செய்த சிறு சிறு பிழைகளையெல்லாம் எண்ணிக்கொண்டே போனார்.

வாஷிங்டனிலுள்ள ஒரு பேஜன் சாலையின் ஓர் அறையில் அடைத்து வைக்கப்பட்டு மறுநாள் காலை ஆபிரகாம் லிங்கன் இருந்த வெள்ளை வீட்டிற்கு கொண்டுபோகப்பட்டார். ஒரு மணி நேரம் வெளிஅறையிலே காத்திருந்தார், பின் 'டாக்டர் ஜேஸன் உல்கின்ஸ்' என்று ஒரு சேவகன் அவரை பெயர் சொல்லி அழைத்து வெள்ளை வீட்டின் உள்ளறைக்குள் போகும் வழியை அவருக்குக் காட்டிக்கொடுத்தான்.

ஜேஸன் அப்படியே போனார். உள்ளறையில் யார் இருந்தது என்று எண்ணுகிறீர்கள்? அமெரிக்கா தேசத்துப் பிரசிடெண்டாகிய ஆபிரகாம் லிங்கனே இருந்தார்.

"நீதானா ஜேஸன் உல்கின்ஸ்?" என்று மிஸ்டர் லிங்கன் கேட்டார்.

"ஆம்" என்று டாக்டர் பதிலுரைத்தார்,

"உன் சொந்த ஊர் எது"?

"ஹை ஹில், ஓஹியோ"

"உனக்கு ஏதாவது இனத்தார் இருக்கிறார்களா?"

"என் தாயார் மாத்திரம் இருக்கிறார்கள்"

"ஓ! ஒரு தாய் மாத்திரந்தானா? சரி, உன் தாயார் எப்படி இருக்கிறார்கள்?"

"அது—அது—எனக்குத் தெரியாது"

"என்ன! தெரியாதா?" என்று லிங்கன் கர்ச்சித்தார். "உனக்கு ஏன் தெரியாது? உன் தாயார் உயிரோடிருக்கிறார்களா? அல்லது மரித்துவிட்டார்களா?"

"எனக்குத் தெரியாது, உள்ளதைச் சொல்லப்போனால் நான் என் தாயாருக்கு வெகுகாலமாய் எழுதவில்லை, நான் எங்கேயிருக்கிறேன் என்றுகூட என் தாயாருக்குத் தெரியாது"

மிஸ்டர் லிங்கன் தனக்கு முன்னிருந்த மேசையை உரக்க அடித்தார், அவருடைய முகத்தில் கோபக்குறிகாணப்பட்டது, அவருடைய கண்கள் சிவந்தன. "உன் தாயார் எனக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். நீ மரித்து மண்ணாய்ப் போய்விட்டாயென்று நினைத்து உன் கல்லறைக்குழி எங்கேயிருக்கிறதென்று கேட்டெழுதியிருக்கிறார்கள். காரியம் இப்படியிருக்க நீ ஏன் அவர்களுக்கு எழுதவில்லை? உன் தாயார் இவ்வளவு நல்லவர்களல்லவோ?"

"ஆ! அவர்களை விட நல்ல பெண் உலகத்திலே கிடையாது"

"அப்படியா? அப்படியிருந்துமா நீ அவர்களுக்கு எழுதவில்லை? நீ டாக்டர் வேலைக்கு எப்படிப் படித்தாய்? காசு கொடுத்தது யார்? உன் தகப்பனாரோ?"

ஜேஸனுடைய முகம் சிவந்தது "இல்லை, தகப்பனார் ஒரு ஏழை உபதேசியாயிருந்தார். தாயார்தான் எனக்கு உதவி செய்தார்கள்"

"தாயாருக்கு காசு எங்கேயிருந்து கிடைத்தது?"

"[illegible] சாமான்கள்."

"ஆ! மூடனே! தன் வீட்டு சாமான்களை உனக்காகவா விற்றார்கள்?"

திடீரென மிஸ்டர் லிங்கன் தமது ஆசனத்திலிருந்து எழும்பி தாம் இருந்த மேசையைச் சுட்டிக் காட்டி, "இங்கே வா, இங்கே உட்கார்ந்து உன் தாய்க்கு ஒரு காகிதம் எழுது" என்றார்.

ஜேஸன் அப்படியே எழுந்து அமெரிக்கா தேசத்துப் பிரசிடெண்டுடைய நாற்காலியில் உட்கார்ந்து தன் தாய்க்கு ஒரு காகிதம் எழுதினார்.

"மேல்விலாசம் எழுதி என்னிடம் கொடு, நான் அதை தபால் பெட்டியில் போட்டு விடுவேன்" என்று பிரசிடெண்ட் சொன்னார்.

"ஜேஸன், இனிமுதல் ஜாக்கிரதையாயிரு, நீ பட்டாளத்தில் வேலையாயிருக்கும்வரை உன் தாயாருக்கு வாரத்திற்கொருமுறையாவது கடிதம் எழுது. அப்படி எழுதத் தவறினையோ......"

ஜேஸன் எழுந்து காகிதத்தை மடித்து பிரசிடெண்டிடம் வணக்கத்தோடு கொடுத்தார். அப்பொழுது பிரசிடெண்ட் அவரை நோக்கி; "ஜேஸன், நன்றியறிதலைவிட ஓர் நற்குணம் பூமியில் இல்லை. கேவலம் நாய்க்குங்கூட அக்குணம் உண்டு. இன்றைக்கு ஒரு எலும்பு அதற்குப்போடு; நாளைக்கு அது உன்னைப் பார்த்த மாத்திரத்தில் தன் வாலை ஆட்டும், நீ போகலாம்" என்றார்.

பிரசிடெண்ட் சொன்ன வார்த்தைகளின் உண்மையை அறிந்தவராய் அந்த டாக்டர் அன்று முதல் தன் தாயாருக்கு ஒழுங்காய் கடிதம் எழுதலானார்.

கி. ச.

---

## புத்திக்கூர்மையுள்ள சிறுவர்கள் ஏழையானாலும் அவர்களோடு சேர்வதால் வரும் நன்மை

சிறுவர்களின் கல்வி விருத்தியின் பொருட்டு அவர்கள் பள்ளிக்கூடத்தின் வகுப்பிலுள்ளவர்கள் தங்களைவிட ஏழைகளாயிருந்தாலும், அன்னிய ஜாதி அல்லது அன்னிய மதஸ்தர்களாயிருந்தாலும், அப்படிப்பட்டவர்கள் புத்திக்கூர்மையும் நற்குணமும் விடாமுயற்சியுமுள்ளவர்களாயிருந்தால் அவர்களுடைய ஏழைமைத்தனத்தைப் பாராட்டாமல் அவர்களுடன் கலந்து வாசிக்கும்படிச் செய்யவேண்டும், அவ்விளையாளரோடு பயில்வதின் அரைபால், என்று சொல்லியபடியே ஒரு வகுப்பிலுள்ள சிறுவர்கள் தங்களோடு வாசிக்கிற பிள்ளைகளுடன் சேர்ந்து வாசிப்பதால் அதிக அனுகூலமுண்டு. உயர்ந்த நிலைமையிலுள்ள பிள்ளைகள் பெரும்பாலும் தாய் தந்தையரின் பார்வைக்குறைவினால் தங்கள் வாசிப்பில் போதுமான கவனம் வைக்கிறதில்லை. ஆகையால், இத்தகையப் பாலியர்களைப் பெற்றோர்கள், தாழ்ந்த நிலையிலுள்ள பிள்ளைகள் புத்திக்கூர்மையும், சுறுசுறுப்பும், விடா முயற்சியுமுள்ளவர்களானால், அச்சிறுவர்களுக்குப் பொருளுதவிசெய்து அவர்களுடன் சேர்ந்து வாசிக்கும்படி செய்தால், தங்கள் புத்திரர்களும் நற்பழக்கமுள்ள ஏழைச் சிறுவர்களின் வழியே பழகி, சிறந்த கல்வித்திறத்தை யடைவார்கள். அதனால் தேச விருத்தியாகும்.

இதற்கு திருஷ்டாந்தமாக; ஸர் டி. முத்துசாமி ஐயர் அவர்கள் சிறு வயதில் தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த திருவாலூருக்கடுத்த கிராமத்தில் கணக்குவேலை பார்ப்பவரின் குமாரனாயிருந்தார். அப்பொழுது, நாகபட்டணம் தாசில்தார் பொன்னையா என்பவர் கிராமத்தின் கணக்கை ஜமாபந்தியில் தணிக்கை செய்யும்போது கேட்ட கேள்விகளுக்கு 8 வயதுடைய சிறுவராயிருந்தாலும் ஐயரவாள் தன் தகப்பனை விட அதிக ஞாபகத்தோடு உத்தரம் தந்தார். அதற்கந்த தாசில்தார் சிறுவரின் புத்தி சாமர்த்தியத்தைப் புகழ்ந்து, தகப்பனை நோக்கி, நீ ஏன் உன் குமாரனை ஆங்கிலேய கலாசாலைக்கு அனுப்பக்கூடாது என்று வினவினர். அதற்குத் தகப்பன் தான் மிகவும்ஏழையென்றும் அதற்கு வேண்டிய செலவைத் தன்னால் கொடுக்க இயலாதென்றும் பிரதியுத்தரம் தந்தார். பிறகு, தாசில்தார் தானே அவரைப் படிப்பிக்கிறதாக ஒத்துக்கொண்டு அங்கேயே பள்ளிக்கூட[illegible]

தில் சிலகாலம் படிக்கச் செய்தார். அவரும் அங்குள்ள கலாசாலையின் வாசிப்பை விரைவில் முடித்துவிட்டதனால் தாசில்தார் அவரை சென்னைக்கு அனுப்பினார். ஐயர் இங்கு வந்தும் பிறருடைய ஒத்தாசையைக் கொண்டு சென்னை பிரசிடென்சி காலேஜில் சேர்ந்து மிக ஊக்கத்துடன் படித்துக்கொண்டு வந்தார். அப்பொழுது ஸர் டி. மாதவராவ், ராய்பகதூர் இராகுநாதராவ், ஜமீன்தாராயிருந்த கோடே கஜபதிராவ் இவர்களும், ஏழையாயிருந்த ஸர் டி. முத்துச்சாமி ஐயருடன் சேர்ந்து வாசித்ததனால் ஐயரின் சாதுரியத்தினாலும் சேர்க்கையினாலும், அவர்களும் கல்வியில் மேன்மைஸ்திதிக்கு வந்தார்களென்றும் தெரிய வருகிறது. நம்முடைய நாட்டாரும் இவ்வொழுக்கத்தைக் கையாடுவோமானால் நம்முடைய பிள்ளைகள் படிப்பிலும் நாகரீகத்திலும் உயர்ந்த உத்தியோகத்திலும், பட்டம்பெற்ற நிபுணர்களாவார்கள்.

C. S. M. கள்ளர் ஸ்கூல்
பஸ்காரம்பட்டி
ராஜு பிள்ளை உபாத்தியாயர்.

---

## வைத்திலிங்கபுரம் உபாத்திமைச் சங்கம் 5-வது ஆண்டு நிறைவிழா கொண்டாட்டம் 21—1—28, சனிக்கிழமை.

(1) ௸ யூர் போர்டிங் ஸ்கூலில் 21௳ மாலை 2 மணிக்கு கூட்டம் தொடக்கம். அவ்வமயம் ஸ்ரீவில்லிபுத்தூர் டிஸ்டிரிக்ட் முன்சீபு, மகா-ள-ள-ஸ்ரீ R. ராஜகோபாலய்யர் அவர்கள் B. A. B. L. அக்கிராசனம் வகித்தார்கள். வரிசைக்கிரமமாக நடைபெற்றது.

(2) உபந்நியாசம்.

### தற்கால பிரதமக்கல்வி.

ஸ்ரீவில்லிபுத்தூர் C. M. S. ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் மகா-ள-ள-ஸ்ரீ S. பாக்கிய முதலியார் அவர்கள், B.A. L.T. விளக்கமாக பேசினார்.

### சையின்ஸ் நூதன விஷயங்களைப்பற்றி சில முறைகள்.

௸ யூர் ஹிந்து ஹைஸ்கூல் முதலாவது உதவி ஆசிரியர் பிரம்மஸ்ரீ A. ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்கள் B. A. L. T. தெளிவாக பேசி முடித்தார். பின்புறல் நடக்க வேண்டிய முறையே நடந்தேறியது.

6-மணிக்கு 'டீ' பார்ட்டி நடந்தது.

21—1—28௳ ராத்திரி 7 மணிக்கு மேல், வயித்திலிங்கபுரம் கள்ளர் ஸ்கூலில் பயிலும் கள்ளர் மாணவர்கள் தூவிய ஆனந்தக்காட்சி.

௸ வருஷாந்தரக்கொண்டாட்டத்தின் சார்பாக வயித்திலிங்கபுரம் கள்ளர் ஸ்கூல் கள்ளர் மாணவர்களால், பிரகலாதன் என்ற புண்ணிய சரித்திரத்தை, டிராமா ஆக்டாக நடத்தினார்கள். அக்கிராசனம் ஸ்ரீவில்லிபுத்தூர் மகா-ள-ள-ஸ்ரீ R. ராஜகோபாலய்யர் அவர்கள் B. A. B. L. டிஸ்டிரிக்ட் முன்சீபு, 7 மணிமுதல்.

மகா-ள-ள-ஸ்ரீ அக்கிராசனாதிபதியவர்கள் 7மணி முதல் 7½மணிவரை இருப்பதாக வாக்களித்து நாடகம் தொடங்கிற்று. முதலில் பாலபார்ட் வந்து, விநாயகர் துதி, சரஸ்பதி துதி, தேவாரம், ௸ யார்களே இன்னிசையாக பாடினார்கள். பின் சூஸ்திரதார் வந்து மானிட தேகம் எதனால் எடுத்தது, அதன் கடமையும்—தெளிவாக பேசினான். உதாரணம், முதியோர் நீதி நூல்களினால் எடுத்துரைத்தான். பின், பவல் வேடம் பூண்டு ஒருவன் தோன்றி இனிய பாடல்களும் தகுந்த விஷயங்களும் நடத்துக்கொண்டிருக்கும் பொழுது, அக்கிராசனாதிபதியும் மேலே காட்டிய உபந்நியாசகர் இருவர்களும், ஸ்ரீவில்லிபுத்தூர் ரேஞ் ஸ்கூல் டிப்டி இன்ஸ்பெக்டரவர்களும், ௸ யூர் கள்ளர் ஸ்பெஷல் சப் இன்ஸ்பெக்டர் அவர்களும், சில வக்கீல்களும், டவுன் உபாத்தியாயர்கள் சுமார் 200 பேரும், கிராமமுனிசீபுகளும், மிராசுதார்களும், கிராமவாசிகள் 5000 பேர்களும் தன்னையே மறந்துவிட்டார்கள், [illegible]ளுக்கு புதையல் கிடைத்தாற்போலும் மந்தமாருதம் வீசுகிறதென்றும் ஆனந்தபரவசத்தில் மூழ்கிவிட்டார்கள். மணி 8.

அத்தோடா, ஹிரணியன் தோன்றி அவன் ஆரவாரமும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ற தெலுங்கு பத்யங்களும் இன்னிசையாகிய பாடல்களும், மந்திரியாளிடம் ராஜ்ஜியத்தை ஒப்பித்துவிட்டு தனது தம்பி இரணியாக்ஷனை வதைத்த நாராயணனைக் கொல்ல பிர்மாவிடம் செல்வதும், பிர்மாவிடம் பூலோகத்திலுள்ள எவ்வகை பொருள்களாலும் மடியாமல் இருக்க வரம்பெற்றுக்கொள்ளுகிறதும், களிக்கத்தக்கது. உடனே தேவேந்திரன் தோன்றி ஹிரணியனுக்குப் பிள்ளை பிறந்தால், அவனைப்போல தீயவனாக இருப்பான் என்று அவன் மனைவி கயாதுவை வாளால் வெட்டப்போவதும்,

உடனே நாரதர் தோன்றி சமாதானம் கூறி அனுப்புதலும், நாரதர் வயிற்றிலிருக்கும் குழந்தைக்கு கீதை உபதேசிப்பதும், இடங்களுக்குத்தக்கவாறு, திருப்புகழ் கீர்த்தனங்களும், தெய்வலோகத்தில் பூமாரி பொழிந்தாற்போல் இருந்தது.

அம்மட்டோ, இரணியன் வரம்பெற்று வந்து தனக்குமேல் ஒருவரும் இல்லையென்று எண்ணி, நகர்வாசிகளை அழைப்பித்து தனது நாமத்தைத் துதிக்கும்படி உரைத்தலும், அப்படியே ஒப்புக்கொள்ளுதலும், தக்கவிகடமும் கண்ணியமாக தோன்றியது.

பின் தனது மகன் பிரகலாதனை உபாத்தியாயர் சுக்கிராச்சாரியார் புதல்வரான சண்டமார்க்கனோடு வாசகசாலைக்கு அனுப்புவதும், அங்கு உபாத்தியாயர் அச்சராப்பியாசம், இரணியோ நமோ என்று கற்பிப்பதும், பிரகலாதன், ஹரி ஓம் நமோ நாராயணா, என்ன அய்டா அச்சரம்தான் மேல் என்று, முன்னோர் பாடிய சாஸ்திர விதிதங்களாகிய, பட்டினத்தார் பாடல், தாயுமானவர் பாடல், வேதநாயகம்பிள்ளை பாடல், மற்ற கீர்த்தனைகள் முதலிய வேத ரகசியங்களை எடுத்து உரைப்பதும், உபாத்தியாயர் கோபிப்பதும், பின் சமாதானம் பல கூறியும், கவனியாததினால், உபாத்தியாயரை பழித்து கும்மி அடிப்பதும், ஐரோப்பா யுத்தத்தில் நம் பிரிட்டிஷார் எதிரிகளை சதுர்வித உபாயங்களால் மாய்த்தாற்போல் இருந்தது. அப்பொழுது மோட்டார்களும் வண்டிகளும் பூரணமதி பிரகாசத்தைப்போல் இருந்தன.

பின் பிரகலாதனுக்கு தண்டனைகள் பல, அப்பால் பிரகலாதன் தாயால் அவனுக்கு விஷம் கலந்த அன்னம் கொடுக்கச் செய்தல், ஒன்றுக்கும் அஞ்சாதபாலனை வெட்டச்செல்லுதலும், தூணை உதைத்தலும், பகவான் தோன்றி காட்சி அளிப்பதும், கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்ற வண்ணம் ஹிரணியன் மாண்டதும், பிரகலாதன் பட்டம்கட்டி ஆள்வதோடு சீன் முடிவு பின் மங்களம், இராஜவாழ்த்துடன் இனிதே நிறைவேறியது.

### அக்கிராசனாதிபதியவர்களின் முடிவுரை.

அக்கிராசனாதிபதியவர்களும் மற்றுமுள்ளவர்களும், செவனை குளிகை மாறியது போல், அக்கிராசனர் எழுந்து மதுரை இராமநாதபுரம் ஜில்லாக்களில் வசிக்கும் பிரமலை கள்ளர்களை சீர்தூக்கிப் பார்க்கில் எல்லா வகைகளிலும் தாழ்ந்த நிலைமையுள்ள இவ்வயித்திலிங்கபுரம் கள்ளர் மாணவர்கள், "சேற்றில் செங்கழுநீர் பூத்தாற்போல்" இம்மாணவர்கள் நடத்திய நாடகம் என்மனத்தை கவர்ந்து விட்டது. இது எல்லாம் மகா-ள-ள-ஸ்ரீ கனம் ஐந்தாம் ஜார்ஜ் மகியர் அவர்கள் அனுக்கிரகத்தினால், கள்ளர்கள் முற்றேம் பேலானது என்று கங்கணங்கட்டி உழைக்கும் மகா-ள-ள-ஸ்ரீ கள்ளர்ஸ்பெஷல் குட்ரெண்ட் துரையவர்கள் கைங்கரியமேயாம். அத்தோடு தனக்கெனவாழாப் பிறர்க்குரியாளன் என்ற வண்ணம் இம்மாணவர்களின் ஆசிரியர் முயற்சியும் நாடக இயல்பும் அந்த ஆதி சேஷனாலும் உரைத்தல் கூடாது என்று பேசிமுடித்தார். அந்நாள் [illegible], மங்களம். மணி 1.

எஸ். மாரியப்பபிள்ளை
கள்ளர் ஸ்கூல் மானேஜர்.
படிக்காசுவைத்தான்பட்டி [illegible]

---



### அடிக்கு உதை ஆகாது.

ஒரு நாள் ஓர் இடையன் தன்தொழுவத்திலுள்ள காளைகளையும், பசுக்களையும் மேய்ச்சலுக்கு அவிழ்த்துவிட்டான். அவிழ்த்துவிடவே, அந்த மாடுகளெல்லாம் தண்ணீர் குடிக்கும்படி தொட்டியண்டை போயின. அத்தொட்டியில் ஒரு சொட்டுத்தண்ணீருமில்லை. ஆகையால் தண்ணீர் ஊற்றப்படுமட்டும் அங்கேயே மாடுகள் சுற்றிக் கொண்டிருந்தன. அப்பொழுது ஒரு பசு தற்செயலாய்த் திரும்புகையில் அதின் கொம்பு பக்கத்தில் நின்ற ஒரு காளையின் மேற்பட்டது. உடனே அத்தக்காளை தன் கிட்ட நின்ற மாட்டை முட்டிற்று. சில நிமிஷங்களுக்குள் மந்தையின் மாடுகளெல்லாம் ஒன்றையொன்று சீறி முட்டிச் சண்டையிட்டன.

இந்த மாடுகளுக்குள்ளே சண்டையுண்டானது போலவே, அநேக வீடுகளிற் சண்டைகள் உண்டாகின்றன. ஒரு சிறு பிள்ளை சொன்ன அற்ப வார்த்தையைக்கொண்டு அந்த வீட்டார், பெரியோர், சிறியோர், ஆண், பெண், ஆகிய எல்லாருமே சண்டையிட்டுக்கொண்டு நிற்கிறார்கள். ஆதலால், தம்பி! அடித்ததற்குப் பிரதியாய் அடிக்க ஆசைப்படாதே. உன்னை அடித்தவனை நீ அடியாமலிருந்தால் சண்டைக்காரனென்கிற கெட்ட பெயர் உனக்கும் உண்டாகாது; மற்றவர்களையும் சண்டைக்காரர் ஆக்கமாட்டாய். சண்டை செய்கிறதும், ஒருவரை ஒருவர் பகைக்கிறதும் கடவுளுக்குப் பிரியமாகாத காரியங்களிற் சேர்ந்தவை.

---

# வர்த்தமானம்.

---

### விமானப் போக்குவரவு அபிவிருத்தி. இந்தியாவுக்கு அனுகூலம்.

லண்டன், மார்ச் 11௳

பிரிட்டிஷ் ஆகாய இலாக்கா உபதேசகரான லெப்டினன்ட் கர்னல் ஐ. எ. இ. எட்வர்ட்ஸ் விமானப் போக்குவரவு அபிவிருத்தி இந்தியாவுக்கு எவ்வளவு அவசியமென்பதைப்பற்றி செய்த பிரசங்கத்தின் சாரம் வருமாறு. இந்தியாவின் காலநிலை விமானங்கள் இரவில் பிரயாணம் செய்வதற்கு மிகவும் அனுகூலமானது.

பாரசிக ராஜ்யத்துடன் இது விஷயமாய் சினேக உடன்படிக்கை ஏற்படுமானால் இந்தியாவிற்குப் போகும் விமானங்கள் பாரசிகக்குடா, கராச்சி வழியாகச் செல்லும். இன்னொரு பாதை மாஸ்கோ, டெஹிரான், புஷ்ஷயர் வழியாக இந்தியாவுக்குச் செல்லவேண்டியதாகும்.

இந்தியாவிலிருந்து கீழ்த்திசை நாடுகளுக்குச் செல்லுகிறவழி கல்கத்தா, ரங்கூன், சிங்கப்பூர் வழியாக டச்சு இந்தீசுக்கும் சென்று அங்கிருந்து ஆஸ்டிரேலியாவுக்கு செல்ல வேண்டியதாகும். இன்னொரு பாதை கல்கத்தா, மாண்டலே, ஹனோய், ஹாங்காவ் ஷாங்காய் வழியாக ஜப்பான் செல்லும். அதுவுமன்றி கல்கத்தா, பிரமபுத்திரா மார்க்கமாய் யாங்டிஸி, பீகிங் நகரத்துக்கு இன்னொருபாதை செல்லக்கூடும்.

ஐரோப்பாவுக்கும் கீழ்த்திசை நாடுகளுக்கும் போக்குவரவு செய்கிற விமானங்களில் பெரும்பான்மையானவை கராச்சி வழியாக இந்தியா வந்து சேருமென்று தெரிகிறது. அப்படியானால் கீழ்த்திசை நாடுகளுக்குப்போகிற விமான பாதைக்கு கெவுனிவாசல் என்று பெரும்பேர் அடையும் சிரியாவில்தான் கல்கத்தாவில் கட்டப்படுவதிலும் பெரிய விமான ஜங்ஷன் கட்டப்படும். இந்தியாவிலே கராச்சி, கல்கத்தா, டில்லி, அலகபாத் விமானப்பாதை எகிப்திய விமானப்பாதையுடன் இணைக்கப்படக்கூடும். முதல்முதலாக கல்கத்தா, இரங்கூன் பாதையில் தான் விமானங்கள் விடப்படும். அதுதான் இந்தியாவில் முக்கிய பாதையுமாகும்.

---

### கள்ளத்தனமாய் அபினி வியாபாரம். 3 பேர் கைதியானார்.

கல்கத்தா போலீசார் ஒரு முகம்மதிய வியாபாரியின் வீட்டை சோதனைபோட்டு ஒரு படத்திற்குப் பின்னால் மறைத்துவைக்கப்பட்டிருந்த அபினியையும் கைத்துப்பாக்கிகளையும் கைப்பற்றியதுடன் 3 பேரையும் கைதுசெய்தார்கள். கைது செய்யப்பட்டவர்கள் ஜாமீனில் விடுதலைசெய்யப்பட்டனர். கதர்பூரிலிருந்து மற்றொரு ரிவால்வரும் சில தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டன.

---

### மந்திரிகள் இராஜிநாமா.

திவான்பகதூர் ஆரோக்கியசாமி முதலியார், தி. எ. இரங்கநாத முதலியார் என்ற இருமந்திரிகள் தம் பதவிகளை இராஜிநாமா செய்யும்படி கவர்னரால் வற்புறுத்தப்படவே ராஜிநாமா செய்துவிட்டார்கள்.

### குப்பைவாரிகள் வேலைநிறுத்தம். 10,000 பேர் நின்றுவிட்டனர்.

கல்கத்தா, மார்ச் 4௳

கல்கத்தா கார்ப்பொரேஷனின் 10,000 குப்பை வாருபவர்கள் சம்பளம் போதவில்லையென்று வேலைநிறுத்தம் செய்துவிட்டனர்! சில நாட்களுக்கு முன்பு குப்பை வாருபவர்கள் தங்களுடைய சம்பளத்தை உயர்த்தவேண்டுமென்று கோரி பிரதம நிருவாகஸ்தருக்கு மனு செய்துகொண்டனரென்றும், ஆனால் வேலை நிறுத்தம்செய்யப்போவதைப்பற்றித் தெரிவிக்காமல், இன்று வேலைநிறுத்தம்செய்துவிட்டனர் என்றும் சொல்லப்படுகிறது. வேலைநிறுத்தத்தை முடிவுசெய்ய அதிகாரிகள் முயற்சி எடுத்துவருகின்றனர்.

---

பினாங், சிங்கப்பூர் முதலிய நகரங்களை உள்ளிட்டிருக்கின்ற மலேயத் தீபகற்பத்திலே, சென்ற குடிமதிப்பின்படி 471,666 இந்தியரிருக்கின்றார்கள். இதில் தமிழர் 3,87,597, தெலுங்கர் 39,986, மலையாளிகள் 17,190, மற்றவர்கள் வட இந்தியர்.

---

சென்னைபட்டணத்தில் 800 பேருக்கு ஒரு டாக்டர் இருக்கிறார். ஆனால் லண்டன் பட்டணத்தில் 1,200 பேருக்கு ஒரு டாக்டர் இருக்கிறார். தி. சு.

---

### கமிஷன் பகிஷ்காரம் நியூ ஸ்டேட்ஸ்மன் பத்திரிகையின் கருத்து.

சைமன் கமிஷனை தேசியவாதிகள் எனப்படுவோர் பகிஷ்கரிப்பதைக் குறித்து "நியூ ஸ்டேட்ஸ்மன்" எழுதியிருப்பதில் தேசியவாதிகள் தங்களுக்கில்லாத அதிகாரம் தங்களுக்கு இருப்பது போல நடிக்கிறார்கள். இந்த தேசியவாதிகள் பெரும்பாலோர் உத்தியோக வேட்டைக்காரர்: பிரிட்டிஷ் ராஜ்ய பாதுகாப்பு இல்லாமல் இந்த தேசியவாதிகள் உயிர் வாழ முடியாது. அப்படியிருக்க பிரிட்டிஷ் ராஜ்ய காவலும் இருக்கவேண்டும் அதேசமயத்தில் பிரிட்டிஷ் சிவில் உத்தியோகங்களையெல்லாம் கைப்பற்றிவிட வேண்டும் என்று வீணாசைப் படுகின்றனர்.

இது விஷயமாய் ஒவ்வொரு இந்திய ராஜதந்திரியும் அறிந்துகொள்ளவேண்டிய தென்னவெனில், இந்த கமிஷனுக்குப் பதிலாக வேறு எவ்வித ஏற்பாடும் செய்யப்படமாட்டாது. இந்திய தேசியவாதிகள் என்ன சொன்னாலும் என்ன செய்தாலும் சரிதான். பகிஷ்காரம் ஒழிந்தாலும், அல்லது நடந்தாலும் சரிதான். சைமன் கமிஷன் அறிக்கையே ஆதாரமாகக் கொண்டே பிரிட்டிஷ் சர்க்கார் கான்சர்வேட்டிவ், லிபரல், அல்லது தொழிற்கட்சி சர்க்கார் இந்தியா விஷயமாய் செய்யவேண்டுவனவற்றை செய்வார்கள் என்று கூறுகிறது.

## குஷ்டரோக விலக்கு

### பிரிட்டிஷ் சங்க முயற்சி.

பிரிட்டிஷ் குஷ்டரோக நிவர்த்தி சங்கத்தில் லார்ட் செம்ஸ்போர்டு தலைமை வகித்துப் பேசுகையில் பிரிட்டிஷ் ராஜ்யத்தில் ஐந்துலட்சம் குஷ்டரோகிகள் இருப்பதாகத் தெரிகிறது எனவே இந்த ரோகத்தைப் பற்றிய விவரங்களை சேகரிப்பதற்காக ஓர் ஸ்தாபனம் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்று கூறினார்.

சர் ஸ்டிவர்ட் கெயிட் பேசுகையில் இந்தியாவில் போய் குஷ்டரோக வியாதியைப் பற்றி ஆராய்ச்சி செய்து வரும்படி ஒரு தொகையான டாக்டர்களை அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகக் கூறினார்.

## ஆல்பர்டாவில் புதிய சட்டம்

### மனோ பலவீனர்களைக் குறைக்க முயற்சி

மனோ பலவீனர்கள் கலியாணம் செய்து தங்களைப்போல பலவீனமுள்ள குழந்தைகளைப் பெறுவதை தடுப்பதற்காக ஆல்பர்ட்டா மாகாண சட்ட சபையில் கொண்டுவரப்பட்ட மசோதா, நெடுநேரம் நடந்த உக்கிரமான விவாதத்துக்குப் பிறகு நிறைவேறியது.

## சினிமா மூலம் கல்வி போதனை.

ஜினிவா, மார்ச் 8

சினிமா மூலமாக கல்வி போதிப்பதற்காக ஒரு ஸ்தாபனம் நியமிக்கவேண்டுமென்று இத்தாலி கொண்டுவந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## பசிபிக் கரையோரத்தில் கடும் புயல்.

### ஐந்து ஜப்பான் கப்பல்களுக்கு சேதம்

டோக்கியோ, மார்ச் 2.

பசிபிக் கரையோரத்தில் கடும் புயல் அடித்ததினால் ஐந்து ஜப்பான் கப்பல்கள் சேதமாயின. அவற்றிலிருந்த கப்பலாட்கள் 164 பேரில் பெரும்பாலோர் மாண்டு போனதாகத்தெரிகிறது அந்த வழி வந்த அமெரிக்கன் டாலர் கம்பெனியின் "பிரசிடென்ட் லின்கன்" என்ற கப்பலைப் பற்றி 9-ம் தேதிக்குப்பிறகு தகவலே தெரியவில்லை. அதில் நூறு பிரயாணிகளும் ஏராளமான கப்பலாட்களும் இருந்தனர்.

## மலை தகர்ந்த விபத்து.

### 300 பேர் மடிந்தனர்

ரயோடிஜனெய்ரோ, மார்ச் 11.

சன்டோஸ் பட்டணத்துக்கு சமீபத்திலுள்ள செர்ராட் மலை அப்படியே பூமிக்குள் அமுங்கி விட்டது. அதினால் மண்ணும் கல்லும் வெள்ள பிரவாகம் போல சன்டோஸ் பட்டணத்துக்குள் வந்து விழுந்து அநேக வீடுகளை மூடிவிட்டது. இராத்திரியில் இந்த சம்பவம் நடந்ததினால் ஏராளமான ஜனங்கள் இப்படி மண் மூடிப்போன வீடுகளுக்குள் அகப்பட்டுக் கொண்டனர். முன்னூறு பேர் மடிந்துபோனதாகச் சொல்லப்படுகிறது. 2000 துருப்புகள் அந்த மண்ணை அப்புறப்படுத்துவதில் வேலை செய்கின்றனர். இதுவரையில் 150 பிணங்கள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. சாந்த ரோசா என்ற இடத்திலுள்ள ஆஸ்பத்திரி பெரிதும் சேதமடைந்ததாகத் தெரிகிறது.

## ஜெருசலேமில் மதுவிலக்கு

### புதிய சர்க்கார் உத்தரவு

ஜெருசலேம், மார்ச் 10.

கிறிஸ்தவர்களின் பரிசுத்த நகரமாகிய ஜெருசலேமில் சாராயக் கடைகள் வைக்கக்கூடாதென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மதுவிலக்கை ஆதரியாதவர்கள் சாப்பிடும் ஹோட்டல்களில் சாராயம் விற்பதை இந்த உத்தரவு பாதிக்காது.

## புதிய அட்வகேட் ஜெனரல்.

மார்ச்சு மாதம் சென்னையில் திரு. டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரிக்குப் பதிலாக திரு. சி. வி. அனந்த கிருஷ்ண ஐயர் அட்வகேட் ஜெனரலாக நியமிக்கப்பட்டிருப்பதாய்த் தெரிகிறது.

## குழந்தைச்சண்டை கொலையில் முடிந்தது.

மார்ச்சுமீ திருவல்லிக்கேணி மூகம்மது அப்துல்லா சாகிப் தெருவிலுள்ள ஒரு வீட்டில் குடித்தனமிருக்கும் முகம்மது காசிம் என்பவன் அதே வீட்டில் குடியிருக்கும் மற்றொருவரைக் கத்தியால் குத்திக் கொன்றுவிட்டான். குத்துண்டவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றதும் மாண்டுபோனார். வீட்டிலிருந்த குழந்தைகளுக்குள் சண்டை நடந்ததாகவும், குத்துண்டவர் அதில் தலையிட்டதாகவும் அப்போது எதிரி ஓடிவந்து கத்தியால் குத்தியதாகவும் சொல்லப்படுகின்றது. முகம்மது காசிம் கைதுசெய்யப்பட்டு பாதுகாவலில் வைக்கப்பட்டிருக்கின்றான்.

## பெல்ஜிய உளவு வழக்கு.

### எதிரிக்கு ஜீவகாலபரியந்தம் காவல்.

பாரிஸில் சென்ற யுத்தத்தில் ஜெர்மனியருக்கு உளவுபார்த்தான் என்னதாகக் குற்றம் சாட்டப்பட்ட லெப்பியர் என்ற பெல்ஜியனை அவன் ஜீவியகாலபரியந்தம் ஒரு கோட்டையில் அடைத்துவைக்கவேண்டுமென்று தண்டனை விதிக்கப்பட்டது.

## சீனாவில் பயங்கர கொலைகள்.

### 300 புத்தமதக் குருக்கள் எரிக்கப்பட்டனர்

கலகக்கப்பட்ட சீனப் பட்டாளங்களிலுள்ள சிப்பாய்கள் தென் ஹூனான் மாகாணத்திலுள்ள லெயாங் நகரத்திலுள்ள விவசாயிகள், பொதுவுடைமைக்கட்சியார் கட்சியில்சேர்ந்துகொண்டதாகவும், ஐந்துலட்சம் ஜனங்களுக்குள்ள அந்த பட்டணத்திலே பயங்கர கொலைகளும் கொள்ளைகளும் நடந்துவருவதாகவும் ஹாங்கோவிலிருந்து வந்த ஒரு செய்தி கூறுகிறது. 300 புத்தமதக் குருக்களை அங்குள்ள ஒரு கோவிலில் அடைத்து அதில் நெருப்பு வைத்து சாம்பலாக்கி விட்டார்கள். ஏறக்குறைய அந்தப் பட்டணமுழுவதும் அக்கினிக் கிரையாக்கப்பட்டது. ஏராளமான ஜனங்கள் சித்திரவதை செய்து கொல்லப்பட்டனர்.



## பிரபல சேட் மறைந்த மாயம்.

### சிந்து மகாணத்தில் ஆச்சரியசம்பவம்.

ஹைதராபாத், மார்ச் 12.

ரோகிர் நகரத்திலுள்ள பிரபல சேட் ஆகிய தாமோமாஸ் என்றவர் திடீரென்று காணாமற் போய்விட்டதைப்பற்றி அந்த நகரவாசிகள் மிகவும் திகிலடைந்திருக்கின்றனர். யாராவது கொலை செய்திருப்பார்களோவென்று சந்தேகப்படுகின்றது. அவர் காணாமற்போய் இன்றுடன் 17 நாள் ஆகிறது. போலீசார் இன்னும் அவரைக் கண்டுபிடிக்கவில்லை. நேற்று ரோகிரி நகரவாசிகள் ஹார்த்தால் நடத்தியதுடன் மாலையில் ஒரு பொதுக் கூட்டம் போட்டு போலீசார் உடனே காணாமற்போனவரைக்கண்டுபிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டதுடன் உத்தியோகஸ்தர்களைக் கண்டு பேச ஒரு தூதுக் கூட்டமும் நியமிக்கப்பட்டது.

## இரங்கூனில் தீவிபத்து.

### மில்கள் எரிந்து சாம்பலாயின.

இரங்கூன் கீழ்பாகமாகிய போட்டாக் பகுதியில் தீவிபத்து வே. 2 மரம் அறுக்கும் மில்களும், ஒரு இஞ்சினீரிங் ஒர்க்ஷாப்பும் வீடுகளும் எரிந்து சாம்பலாயின. மரத்தூள் குவிந்துகிடந்த ஒரு மில்லின் பின்புறத்தில் தீ தோன்றிய தென்றும், ஆனால் அங்கு தீ பிடித்ததற்கு காரணம் இன்னதென்று தெரியவில்லை. இதனால் ஏற்பட்ட நஷ்டம் இவ்வளவென்று தெரியவில்லை, ஆனால் ஒன்றரை லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்குமென்று மதிப்பிடப்படுகின்றது.

## விமானச் சேதம்

### இரண்டு பிரிட்டிஷ் விமானிகள் மரணம்.

லண்டன், மார்ச் 11.

எக்டலி என்னுமிடத்துக்கருகில் ஒரு பிரிட்டிஷ் விமானம் பறந்து கொண்டிருக்கையில் இன்னொரு விமானத்துடன் மோதி அதின் சிறகு முறிந்து போனதால் கீழே வீழ்ந்து விட்டது. அதிலிருந்த விமானிகள் இருவர் "பாரச்சூட்" குடை மூலியமாய் 250 அடி உயரத்திலிருந்து கீழே இறங்க முயன்றதில் கொல்லப்பட்டனர்.

## திரு. துரைராஜாவுக்கு வாழ்த்து.

தஞ்சாவூரில் மார்ச்சுமீ 4௳ கள்ளர் தூதுக்கூட்டத்தினர் திரு. எஸ். என். துரைராஜாவைப் பேட்டி கண்டு தங்கள் சார்பாக அவர்கள் செய்யும் வேலையைப் பாராட்டுவதாகக் கூறினார்கள். கள்ளர் சீர்திருத்தம் செய்யும் வேலையை போலீஸ் இலாகாவிலிருந்து பொதுஜன நிருவாகத்திற்கு மாற்றவேண்டுமென்று திரு. துரைராஜா கொண்டுவந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்காக அவருக்கு நன்றிசெலுத்துவதாக அந்தத் தூதுக்கூட்டத்தினர் தெரிவித்துக்கொண்டனர்.

தனது அகராதியிலுள்ள எல்லா வார்த்தையையும் வாசிக்க வேண்டுமானால் ஒரு ஜப்பானியச் சிறுவன் கொஞ்சங்குறைய 2,50,000 எழுத்துக்களைப் படிக்கவேண்டியிருக்கிறது.

ஆல்ப்றாஸ் என்ற பட்சியினம் 2 மாதம் ஓயாமல் ஓரிடத்திலும் இறங்காமல் பறக்கக் கூடிய வலுவுள்ளதாம்

1914-ம் வருஷத்திய ஐரோப்பிய யுத்தத்தில் மரித்தவர்களைவிட, அவ்வருஷத்திலிருந்து இந்நாள் வரைக்கும் "ஓட்டுவாரொட்டி" வியாதிகளில் மரித்தவர்களே அநேகம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. கடந்த யுத்தத்தில் 90,00,000 பேர் மாத்திரம் மரித்திருக்க, ஒட்டு வியாதிகளால் 4,00,00,000 பேரும் பஞ்சத்தால் 50,00,000 பேரும், தேசீகக் குழப்பங்களால் 60,00,000 பேரும் பூகம்பங்களால் 20,00,000 பேரும் மரித்திருர்களாம்.

இந்தியாவிலே 73,00,000, பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள்.

ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், ஜப்பானிலும் நாட்டுப்புறங்களில் 10,000 பேருக்கு 6 டாக்டர்களும், பட்டணக்கரைகளில் 10,000 பேருக்கு 12 டாக்டர்களுமாயிருக்கிறார்கள். நமது ராஜதானியில் கிராமாந்திரங்களிலே 10,000 பேருக்கு 5 டாக்டர்களும், பட்டணங்களிலே 10,000 பேருக்கு 10 டாக்டர்களுமாகயிருப்பார்களானால் நமது ராஜதானியில் தற்போது 24,00? டாக்டர்கள் இருக்கவேண்டும் ஆனால் இப்போது 2,500 டாக்டர்கள் மாத்திரம் இருக்கிறார்கள்.

(திராவிடன்).

## பஞ்சாங்கம்

### 1928-ஹு எப்பிரல்மீ

● அமாவாசை ○ பௌர்ணமி *கிருத்திகை

| வாரம் | தேதி | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | 1 | 8 | 15 | *22 | 29 | ... |
| திங்கள் | 2 | 9 | 16 | 23 | 30 | ... |
| செவ் | 3 | 10 | 17 | 24 | ... | ... |
| புதன் | 4 | 11 | 18 | 25 | ... | ... |
| வியா | ○5 | 12 | 19 | 26 | ... | ... |
| வெள் | 6 | 13 | ●20 | 27 | ... | ... |
| சனி | 7 | 14 | 21 | 28 | ... | ... |

| வாரம் | பிரபவ-ஹு பங்குனீ 19௳ விபவ-ஹு சித்திரைீ 1[illegible] | | |
|---|---|---|---|
| ஞாயிறு | 19 | 26 | 3 |
| திங்கள் | 20 | 27 | |
| செவ் | 21 | 28 | |
| புதன் | 22 | | |
| வியா | ○[illegible] | | |
| வெள்ளி | | | |
| சனி | | | |

*Patron.* M.R.Ry. Rao Bahadur,
A. J. Vethanayaga Thevar Avl.,
Usilampatti.
*Editor.*—Rev. George J. Athishtam,
Usilampatti.
*Manager.*—Rev. B. S. Stoffer,
Tirumangalam.
Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.
All orders to be sent to the *Manager.*
Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor.*

சம்ரக்ஷகர்.—மகா

பத்திராதிபர்.—கனம

மானேஜர்.—கனம் பி

வருஷ சந்தா
யொப்பம் முன்னத
பத்திரிகை சே
துக்கொள்ளவும்
சமாச்சாரங்
மாதம் 15-ம் தேதிக்கு
படவேண்டும்.

734

734

REG. NO. M 2146.

# THE Piramalai Reformer

# பிரமலை சீர்திருத்தன்

...தை வி...ரோதங்களை எழுப்பும்; அன்போ சகல பாவங்களையும் மூடும்.

OFFICE OF ... 11 MAY 1928 ... MADRAS ... BOOKS

Vol. VIII. ] மேமீ 1928 [ இலக்கம் ]

## பஞ்சாங்கம்.

1928 | விபவவருஷ சித்திரைமீ | மேமீ | விபவவருஷ வைகாசிமீ | 1928

| Sunday. ஞாயிறு | Monday. திங்கள் | Tuesday. செவ்வாய | Wednes- புதன் | Thursday வியாழன் | Friday. வெள்ளி | Saturday. சனி |
|---|---|---|---|---|---|---|
| | | 1 சித்திரை 19 | 2 20 | 3 21 | 4 | 23 |
| 6 24 | 7 25 | 8 26 | 9 27 | 10 28 | 11 29 | 12 30 |
| 13 31 | 14 வைகாசி 1 | 15 2 | 16 ஏகாதசி 3 | 17 4 | 18 5 | 19 ●அ. ❊கா. 6 |
| 20 7 | 21 8 | 22 9 | 23 10 | 24 11 | 25 12 | 26 13 |
| 27 14 | 28 15 | 29 ஏகாதசி 16 | 30 17 | 31 18 | | |

*Patron.*—M.R.Ry. Rao Bahadur,
A. J. Vethanayaga Thevar Avl.,
Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam,
Usilampatti.

*Manager.*—Rev. B. S. Stoffer,
Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் பி. எஸ். ஸ்டோபர் துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ ...தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ ...யொப்பம் முன்னதாகவே அனுப்ப வேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

## சர்க்குலர்.

மகா-ள-ள-ஸ்ரீ கள்ளர் ஸ்பெஷல் சூப்பிரண்டு துரையவர்கள் கள்ளர் பாடசாலை உபாத்திமாருக்கு அறிவிக்கும்படி மானேஜர்களுக்கு அனுப்பியிருக்கும் சர்க்குலர்.

“கள்ளர் பாடசாலைகளிலுள்ள உபாத்திமார் கள்ளர் ஸ்பெஷல் சூப்பிரண்டு துரையவர்களின் அனுமதியின்றி மாணாக்கரின் பெயர்களை அட்மிஷன் ரிஜிஸ்டரிலிருந்து எடுத்துவிடுகிறதாக அறிவிக்கப்படுகிறது. இவ்வித வழக்கம் உடனே நிறுத்தப்படவேண்டும். சூப்பிரண்டு துரையவர்களிடமிருந்து உத்தரவு வாங்குமுன்னே எந்த மாணாக்கனுடைய பெயரும் ரிஜிஸ்டரிலிருந்து எடுக்கப்படக்கூடாது. சூப்பர்வைசர்கள் தங்கள் சுற்றுப் பிரயாணங்களில் இவைகளைக் குறித்து விசேஷ கவனம் எடுப்பார்கள்.

C. No. 198. Edn. 28.

---

உசிலம்பட்டி யூனியன் போர்ட் புதிய பிரசிடென்ட் மகா-ள-ள-ஸ்ரீ பால்வீரணத் தேவரவர்கள்:—

மகாடந்த மாதம் உசிலம்பட்டி யூனியன் இலக்ஷனில் யூனியன் போர்ட் பிரசிடென்டாக வீரணத்தேவரவர்கள் ஏக சம்மதமாக தெரிந்தெடுக்கப்பட்டார். இவர் கவுண்டன்பட்டி வாசியும், நமது பிரமலை நாட்டுத் தேவமார்களில் ஒருவருமானவர். சில காலம் உசிலம்பட்டி பாஸ்டரேட் கமிட்டி மெம்பரும், நமது பத்திரிகைக்கு பலமுறை வியாசங்கள் எழுதியும், பலவிடங்களில் நாட்டுச் சீர்திருத்த விஷயமாய்ப் பல உபந்நியாசங்களும் செய்துவந்தவர். யூனியனைச்சேர்ந்த பிரமலைத்தேவமாரின் பலமான ஐக்கியக்கட்டே இவரை இந்நிலைமைக்குக் கொண்டுவரக் காரணமாயிருந்ததென்றும் சொல்லலாம். புதிய பிரசிடெண்ட் அவர்களும் இப் பதவியை வகிக்கத்தக்க அனுபவமும் செல்வாக்குமுடையவரே. இது பிரமலை நாட்டாருக்கு ஒரு பெரிய சந்தோஷமான விஷயம். இப்பதவிக்குரிய கண்ணியமும் உத்தரவாதமுமான வேலையை மிக்க யூகத்தோடும் சாமர்த்தியத்தோடும் செய்துவர பெரிய கிருபை இவரோடிருந்து வருக என்று அவரை நாது நாட்டாரின் பேரால் வாழ்த்துகிறோம். இப்படி அநேக இடங்களில் இவரைப்போன்றவர்கள் முதன்மையான பதவிபெற்று நாட்டின் மெய்யான சீர்திருத்தக்காரரில் தங்கள் முன்மாதிரியினால்காட்டி மற்றவர்களையும் சீர்திருத்த முயலப்பிரயாசம் எடுப்பார்களென்று நம்புகிறோம்.

யூனியன் போர்ட் பிரசிடெண்ட் கனம் பால்வீரணத்தேவரவர்கள் நெடுங்காலம் வெகு திறமையாய் இவ்வுத்தியோகம் வகிக்குமாறு அவரை வாழ்த்தி ஆசீர்வதிக்கிறோம்.

(கிராம ஆசிரியத் தோழனிலிருந்து.)

## கில்பாதரிக் பண்டிதரின் உபந்நியாசம்.

### Can we build character through Punishment? by Professor W. H. Kilpatrick.

நியூயார்க் பட்டணத்தில் 1927ஆம் ஏப்ரலில் ‘சிறுவர்கள்’ என்ற பத்திரிகையில் பிரசுரமானது.

[கில்பாதரிக் பண்டிதர் சமீபத்தில் இந்தியாவின் முக்கிய பட்டணங்களைச் சுற்றிப்பார்த்து உபந்நியாசம் செய்தார். உலகத்தின் நாலு திசைகளிலிருந்தும் வந்த ஆயிரக்கணக்கான மாணவருக்கு, மிகவும் எழுப்புதலான போதனைகளைப் போதித்து வரும் கொலம்பியா சர்வகலாசாலை தத்துவ சாஸ்திரம் போதிக்கும் உயர்தர ஆசிரியர் மனோ சாஸ்திரத்தை அனுசரித்து தற்கால சாஸ்திரங்களை ஆதாரமாகக்கொண்ட மேன்பாடான முறைகளைக் கருதி நிற்பவர். போதனைக்கு மிகவும் உதவியான “முறைகளின் மூலாதாரம்” என்னும் நூலின் ஆக்கியோன். (மாக்மில்லன் கம்பேனி 1925 வருஷத்துப் பதிப்பு) ஆங்கில பாஷை தெரிந்தவர்களுக்கு இவர் மிகவும் தெளிவாக எடுத்துரைத்த அபிப்பிராயங்கள் சில மாதங்களுக்குள் ஒரு புத்தகமாக வெளிவரும் என்பது நமது நம்பிக்கை. ஆசிரியர்களுக்கு அத்தியந்த அவசியமான பின்வரும் காரியங்களை, பெற்றோர்க்கென்று வெளிவரும் ஒரு பத்திரிகையிலிருந்து எடுக்கலானோம். குடும்பத்தின் நாடோடிய காரியங்கள் மூலமாய் விஷயங்களை எடுத்துக்காண்பிப்பதினால் இதின் உபயோகம் அதிகப்படுமன்றோ! பள்ளிக்கூட சம்பவங்களுக்கு நேரில் சம்பந்தப்பட்ட காரியங்களே இங்கு எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.]

---

ஒழுங்காகவே வளர்ந்துவரும் குணதிசயம் ஓர் வியக்தி லக்ஷணம் உடைத்தாயிருக்கிறது. அப்படியிருப்பதினாலேயே அது ஏனையோர் சுதந்தரங்களையும் அபிப்பிராயங்களையும் நன்குமதிக்கிறது. நம்முடைய பிள்ளைகள் உத்தம குணசீலராய் இருப்பதற்கும், மற்றவர்களுக்காகவும் ஒருங்கே உழைப்பது சற்று அசாத்தியமாயிருந்தாலும் அப்படிச் செய்யவேண்டுமென்றோ. நமது வளர்ச்சியைப் பரிசோதிக்கும் கேள்வி என்னவென்றால், என்ன விதமான குணதிசயம் பிள்ளைகளுக்கும் உண்டாக்கப்பட்டுவருகிறதென்பதே. பிள்ளைகளை எப்படி மதிப்பதென்பதே கேள்வி. பிள்ளைகளுக்கு அனுதாபம் காட்டுவது என்பதும், அதே சமயத்தில் தன் சிந்தையை அடக்கவும் ஏனையருக்கு மரியாதை செலுத்தவும் பிள்ளைகளுக்கு எப்படி புகட்டுவது? சுயேச்சையினால் கெட்டுப்போகாமலும் மிதமிஞ்சிய ஆதீனத்துக்குள் வைப்பதினால் பயந்துபோகாமலும் இவ்விரண்டுக்கும் மத்தியில் நாம் பிள்ளையை நடத்தவேண்டும்.

பிள்ளையின் சுபாபத்தை சற்று கவனிப்போம். நானும் நீங்களும் சரி என்று நினைக்கும் நடத்தையை பிள்ளைகள் கொஞ்சம் கொஞ்சமாகவே கற்றுக்கொள்ளவேண்-



டியதாயிருக்கிறது. அவர்கள் பிறப்பிலே அவ்வறிவோடு பிறக்கிறதில்லை. இயற்கையிலேயே பசி, கோபம் இவை காணப்படுவது வாஸ்தவமே. இவை சில பிள்ளைகளில் மற்ற பிள்ளைகளைவிட அதிகமாய்க் காணப்படுகின்றன. ஆனால் பசியோ அல்லது கோபமோ ஏன், எப்படி உண்டாகிறது? அப்பொழுது என்ன செய்வதும், என்ன செய்யக்கூடாதென்பதும், கடைசியாக சொல்லப்போனால் அவ்வளவு சிக்கியாயமான காரியம் என்னவென்பதும் கற்றுக்கொள்ள வேண்டியதாகவேயிருக்கிறது. இப்படி படி நடக்கிறது?

(1) சிக்ஷை

பழக்கங்கள் எப்படிக் கற்றுக்கொள்ளப்படுகின்றன? ... அவன் குருவை ... எனபொழுது அவன் விசனப்பட்டான். இவ்விசனம் அவனுக்குள் தண்டனை. ஆகையால் அவ்விதமாகப் பிடிக்கக் கூடாதென்று கற்றுக்கொண்டான். நான் குரூரமாகப் பேசினபொழுது விசனப்பட்டேன். இதுவே எனக்கு உள்ளான தண்டனை. இனி இவ்வளவு குரூரமாகப் பேசமாட்டேன். இந்த ஒவ்வொரு தண்டனையும் மன நிலைமையிலிருந்தும் தவறுதலினாலுண்டான விசனத்திலிருந்தும் மனவாதனையிலிருந்தும் வந்தது. அநேக காரணத்திற்கு இவ்விதமான சிக்ஷையே பழக்க ஸ்தாபனத்திற்கு அதிக பயனுள்ளது. சிக்ஷை இவ்விதம் வருவது உசிதம். ஆனால் சிலர் சொல்லலாம். “இந்த விதமாகத்தான் நான் பையனை நடத்தி வந்திருக்கிறேன். என் பையன் தப்பிதம் செய்யும்பொழுது நான் தண்டிக்கிறேன். ஆனால் அதற்காக விசனப்படுகிறதினால் அந்தவிதமாகச் செய்யாமலிருக்கக் கற்றுக்கொள்ளுகிறான்.” இதை நாம் சற்று தீர ஆராய வேண்டும். நாம் எந்த காரியத்தைச் செய்ததற்காக விசனப்படுகிறோமோ அதைப் பெரும்பான்மையாய் மறுபடியும் செய்கிறதில்லை. இப்பேர்ப்பட்ட உணர்ச்சி அடிக்கடி உண்டானால் அக்காரியத்தை செய்யாமலிருக்கும் பழக்கத்தை ஸ்தாபிக்கிறோம். ஆனால் எந்த காரியத்திற்காக மனஸ்தாபப்படுகிறோமென்பதல்லவோ முக்கியம். ஒரு பெரிய பையன் தப்பிதம் செய்கிறான். அதற்குத்தகப்பனார் தண்டிக்கிறாரென்று நினைத்துக்கொள்வோம். அதற்காக பையன் மனஸ்தாபப்படுகிறானா? ஆம், ஆனால் அந்தக்காரியத்திற்காக மனஸ்தாபப்படுகிறான். அவன் தப்பிதம் செய்ததிற்காக விசனப்படுகிறானேயாகில் அதைத் திரும்பச் செய்வது சந்தேகம். ஆனால் பையன் தப்பிதம்செய்ததிற்காக விசனப்பட்டிருக்கலாம். ஆனால் அவன் தப்பிதத்தினால் பிடிக்கப்பட்டதற்காக விசனப்படலாமே. அப்படியானால் அவன் பிடிபட்டதிற்காக விசனப்படலாம். ஆகவே அவன் மறுபடி பிடிபடாமலிருக்கும் பழக்கத்தை கற்றுக்கொள்ளுகிறான். அவன் அடுத்த தடவை பிடிபடுதல் சந்தேகமே: சுமத்தப்படும் தண்டனை பிள்ளைகளுக்கு இதைத்தான் கற்றுக்கொடுக்கிறது. அல்லது அவன் தகப்பன் தண்டித்ததற்காகக் கோபப்படலாம். அப்பேர்ப்பட்ட தகப்பனும் அம்மாதிரி வீடும் தனக்கு இருக்கிறதேயென்று நொம்பலப்படலாம். அவன் மனஸ்தாபம் இவ்விதமாகவிருந்தால் அவன் தகப்பனார்பேரிலும் வீட்டின்பேரிலும் அவசியமென்று நினைக்கிறார்கள். பழைய காலத்து தண்டனையையும் சன்மானத்தையும் வற்புறுத்தினர். தற்காலத்தில் எவ்வளவு தண்டனை குறைகிறதோ அவ்வளவு அவசியம். இப்போ மேன்மை. உண்மையாகவே எம் பையன் எதற்காகவோ தன்னிடத்தில் மற்றவர்க்குப் பொறுத்தது. சிக்ஷை தப்பு அல்லது அதற்காகவே ஈச் செய்யலாம். விசனப்படாத அவன் யோக்கியரு சிக்ஷை விசனப்படச் செய்கிறதினால் அந்நன்மை செய்கிறதைவிட தீமையே செய்கிறது. பிள்ளையைத் தண்டிக்குமுன் அதின் பயனென்னவென்பதை முதலாவது நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும். அப்படியில்லாவிட்டால் நன்மை செய்ய நாம் நினைத்தும் தீமையையே செய்வோம். சிக்ஷை மூலமாய்மாத்திரம் பிள்ளை மனதில் நல்ல பழக்கத்தை ஸ்தாபிக்கிறோமென்று தெரிகிறபோது தண்டித்தலே அதிக ஞானம். இச்சந்தர்ப்பத்தில் இது சிறந்தவிதமாக சிறுபிள்ளைகளிடத்திலே கிரியை செய்கிறது. பெற்றோராகிய நாம் நம் மூலமாய் தண்டனை எவ்வளவுக்கு வராமலிருக்குமோ எவ்வளவுக்கதிகமோ ஒரு பையன் தன்கிரியை மூலமாயே சிக்ஷை பெற்றுக்கொள்ளுகிறானோ அவ்வளவுக்கு (நாம் முந்தியே கவனித்தபடி) நல்லது. எவ்வழியிலும் தண்டனை சுமத்தல் நல்ல விதமாய்ப் பிள்ளையை நடத்தலல்ல. மிஞ்சினால் அது செய்யக்கூடிய காரியம் பிள்ளை இன்னின்ன காரியத்தைச் செய்யக்கூடாதென்பதையே கவனித்துக்கொள்கிறது. சிக்ஷை சுமத்தும் வழி மூலமாய் நற்காரியங்களைக்காட்டும் ... நற்கிரியை இப்பேர்ப்பட்ட குணத்தின தீர்மானமான குணதிசயங்களை நாட்டுவது அசாத்தியம்.

### (3) சம்பந்தப்படுத்தல் மூலமாய் எப்படிக் கற்றுக்கொள்ளுதல் சம்பவிக்கிறதென்பதும், அதில் சிக்ஷைக்கு யாதாமொரு பங்குண்டாவென்பதும்.

கற்றுக்கொள்ளுதலுக்கு மூன்றும் வழியுண்டு. அது சம்பந்தப்படுத்துதலே. விரும்புகிற அல்லது வெறுக்கிற யாதாமொரு காரியத்தைச் செய்கிற ஒரு சிறுபிள்ளை அல்லது பெரிய பையன் அச்செய்கையோடு விசேஷமாய்ச் சம்பந்தப்பட்ட காரியத்தை விரும்புகிறது அல்லது வெறுக்கிறது இயல்பு. ஒரு உதாரணம் கொடுக்கலாம். ஒரு சிறுபிள்ளைக்குக் குழிமுயலைக் காண்பிக்கிறோம். அதின்பேரில் பிள்ளை பிரியப்பட்டு அதோடு விளையாடத் தன்கையைப் போடுகிறது. உடனே அது விரும்பாத சத்தம் கேட்கிறது. அச்சத்தத்தினால் அப்பிள்ளை பயப்பட்டு முயல்மேல் போட நினைத்த கையையிழுத்துக்கொள்ளுகிறது. அடுத்த நாள் அதே குழிமுயல் காட்டப்படுகிறது. அதே மாதிரி பயமுறுத்தும் சத்தம் கேட்கப்படுகிறது. மறுபடியும் பிள்ளை தன்னிடம் இழுத்துக்கொண்டு பயக்குறிகள் முகத்தில் காணப்படுகின்றன. இந்த மாதிரி அநேக நாள் காண்பட்டு வந்தது. கடைசியாக முயல் காட்டப்பட்டது. ஆனால் சத்தம் ஒன்றுமில்லை என்றாலும் பிள்ளை கையையிழுத்துக்கொண்டது. பயக்குறிகள் முன்போல அவன் முகத்தில்

பியசித்தான். இப்படிச் செய்ததினால் என் பையன் தயாளமாயிருக்கக் கற்றுக்கொண்டிருக்கிறானென்று நான் [illegible] சத்தியமாயில்லை. தன் சகோதரிக்குக் கற்கண் தல் மூலமாயக [illegible]ராத்காரப்படுத்த முடியும். ஆனால் படக் கற்றுக்கொண்டதை பலாத்காரப்படுத்த முடியாது.

சிக்ஷைக்கு இதில் என்[illegible]முடியாததற்கு ஒரு காரணம் தப்படுத்தல் மூலமாய்க் கற்றுதல்லவா? நம் பிள்ளைகள் விசேஷித்த பிரகாரம் பிணைக்கப்பட்டு அப்பியாசிக்[illegible]ண்டிக்கிற குடும்பத்தோடு அல்லது ஆளோடு சஞ்சலப்பட சிக்ஷை கிளப்பிவிடுகிற மனக்கிளர்ச்சியை சம்பந்தப்படுத்துகிறது. சிக்ஷையினால் உண்டாகிற ஆபத்துக்களிலொன்று தகப்பனை தான் நேசிக்கவேண்டிய பிரகாரம் பிள்ளை நேசிக்காததிற்கும் வீட்டைத் தான் நினைக்கவேண்டிய சந்தோஷமான இடமாக நினைக்காததிற்கும் காரணமென்னவெனில், பெற்றோர்கள் ஞானத்தோடு சிக்ஷையை பிரயோகிக்கவில்லை. நல்லெண்ணத்தோடு தண்டித்திருக்கலாம். கடைசியாக நாம் என்ன சொல்லுவோம்? நற்குணத்தை ஸ்தாபிக்க நாம் சிக்ஷையின் மேல் சாராமல் எந்தெந்த இடத்தில் பிள்ளை இதர மனுஷரோடு சம்பந்தப்படுதோ அப்பொழுதெல்லாம் நம்முடைய ஞானமுள்ள ஆதீனத்திற்குள் தனக்கு நன்மையுண்டாக உற்சாகத்தோடு சம்பந்தப்படுதலிலேயே சார்வோமாக. பிள்ளையின் ஒவ்வொரு நிலைமையிலும் நாம் கேட்கவேண்டிய கேள்வி என்னவென்றால், எந்தவிதமான குணம் ஸ்தாபிக்கப்பட்டு வருகிறது?

---

## வர்த்தமானங்கள்.

### புத்தகவிலை விநோதம்.

#### டாக்டர் ரோசனுக் பேரம்.

ஸ்டிராட் போர்ட் ஆன் அவான் என்னுமிடத்திலிருந்த கிறிஸ்தவகுரு 1629-ம் வருடம்முதல் 1681 வரை எழுதிவைத்திருந்த தினக்குறிப்புப் புத்தகத்தை டாக்டர் ரோசனுக் 10,500 பவுனுக்கு வாங்கினார். அது இன்னும் பிரசுரிக்கப்படவில்லை. அதில் ஷேக்ஸ்பியரைப்பற்றி பல குறிப்புகள் அடங்கியிருப்பதாகத் தெரிகிறது.

---

### கிழச்சந்நியாசி குறும்பு.

#### கிராமவாசியின் கோடுந்தண்டனை.

ஆமதபாத், ஏப்ரல் 10.—சென்ற வெள்ளிக்கிழமை மாலை சுமார் 70வயதுள்ள ஒரு பாவாகவ் ரங்கபூர், மெம்னர் ரோட்டில் தனித்துச் சென்று [illegible]டிருந்த தக்கர் டா பெண்கள் மூவருக்கு எதிரில் நிர்வாணமாகக் [illegible] காடினான். இக்குறும்பைச் சகிக்கமுடியாது அப்பெண்கள் பெருங்கூச்சலிட்டனர். அப்பரிதாபமான கூச்சலைக்கேட்டு அருகிலிருந்த ஜீவாஹரி கோவிந்தன் என்னும் கிராமவாசி ஓடிவந்து கிழவனின் அயோக்கிய செயலைக்கண்டு கோபமடைந்து கிழவன் கால்களைக்கட்டி தன் கலப்பையில் மாட்டி சுடுமணலில் இழுத்துக்கொண்

### (2) சித்தியினாலும் சித்தியன்மையினாலும் எவ்விதமாக பழக்கங்கள் கற்பிக்கப்படுகிறதென்பதும், அதில் சிக்ஷைக்கு யாதாமொரு பங்குண்டாவென்பதும்.

கற்றுக்கொள்ளுதல் அல்லது குணத்தை ஸ்தாபித்த[illegible]ண்டாம் சட்டம் அப்பியாசத்தின் வரம்பு கட்[illegible] [illegible]ரிய பையன் தன் தம்பிக்கு பந்துபிடிக்கப் [illegible]ன்று வைத்துக்கொள்வோம். அவர்கள் அ[illegible]ழகுகிறார்கள். முதலில் சிறுபையன் பெ[illegible] [illegible]கிறான். நாளடைவில் ஏறக்குறைய [illegible]லும் பிடிக்கிறான். நம்முடைய மு[illegible]

கட்டடம் நுக்குக் காயம்.

திருவனந்தபுரம் [illegible]கோட்டயத்தில் மாதுப்பையன் இந்த அப்பியாசத்[illegible]ஆடிவ் [illegible]பெருத்த [illegible] அவன் [illegible]யிற்று. மாதா கோவிலில் அனைவரும் தொழுதுகொண்டிருக்கையில் மேகம் இருண்டு வந்து மின்னலும் இடி இடிக்கும் சத்தமும் பலமாய் இருந்ததாயும், திடீரென்று காற்றும் மழையும் மின்னலும் மிகுதிபட்டதால் ஆலயக்குரு வயதானவர்களையும் பெண்கள் குழந்தைகள் முதலியவர்களையும் வீட்டிற்கு அனுப்பி வைத்து விடுவது உசிதமெனக்கருதி அவ்வாறே அனுப்பியதாயும், அதற்குள் கடுமையான இடியொன்று மாதா கோவிலின்மேல் விழுந்து கற்களைத் தூளாக்கக் குருவும் மூர்ச்சித்துக் கீழே விழுந்ததாகவும் சொல்லுகிறார்கள். மீண்டும் மூர்ச்சை தெளிந்து கண்களைத் திறந்து பார்த்தபோது தம்மைச் சுற்றித் தொழுதுகொண்டிருந்தவர்கள் எல்லோரும் மூர்ச்சித்து விழுந்து கிடக்கக்கண்டு திடுக்கிட்டுப்போனார். பிறகு அவர் மற்றொரு மனிதனின் உதவியைக்கொண்டு பரிசோதித்துப் பார்த்ததில் இவர் மரணமடைந்து இருப்பதையும் சுமார் 30 பேர் காயப்பட்டு மூர்ச்சையடைந்திருப்பதையும் கண்டார். அவர் மீண்டும் மூர்ச்சை தெளிந்து பிழைத்தபோதிலும், அவர்களுக்கு தேகத்தின் பலவிடங்களிலும் தீப்பற்றியிருந்தது. அவர்களுக்குத் தகுந்த சிகிச்சை செய்யப்படுகிறது. மாதா கோவில் சுவர்களில் பெரிய வெடிப்புகள் உண்டாகி குட்டிச்சுவராகக் கிடக்கின்றது.

---

### திரு ஜார்ஜ் ஜோசேப்.

#### பாரிஸ்டர் வேலைக்குத் திரும்புகிறார்.

திருஜார்ஜ் ஜோசேப் ஏப்ரல் மாதக்கடைசியில் சென்னைக்கு வந்து மீண்டும் பாரிஸ்டர் தொழிலை நடத்துவாரெனத் தெரிகிறது —பிரீ பிரஸ்.

---

### உலகத்திலே பெரிய தூர திருஷ்டிக்கண்ணாடி.

#### புதனைக்காட்டும்.

உலகத்தில் பெரிய தூரதிருஷ்டிக்கண்ணாடி ஒன்று அமைப்பதற்காக 2,500,000 பவுன்கள் சேகரிக்க நியூயார்க்கில் திட்டங்கள் செய்யப்படுகின்றதாம். அக்கண்ணாடி செய்யப்பட்டு முடிந்ததும் அது புதனில் (மார்ஸ்) மானிடர்கள் இருக்கின்றனரா சந்திரன் வளர்கின்றதா



சியமானதெல்லாம் அப்பியாசமே. என்னையறியாமல் நான் கோபமாய்ப் பேசினால் அதின்பின் யோசித்து மனஸ்தாபப்பட்டால் அம்மனஸ்தாபமே அடுத்தத் தடவை அவ்வளவு கோபமாய்ப் பேசாதபடி செய்கிறது. சித்தியும் மனத்திருப்தியும் காட்டுகின்றன. தவறுதலும் மனவாதனையும் இடித்து முன்னிலும் வித்தியாசமானதொன்றைக் காட்டுகின்றன. மனத்திருப்தி எவ்வளவு [illegible]வண்டிய அல்லது விசனம் எவ்வளவு கூர்மையோ [illegible]வர்கள் படிக்கிறம் கற்றுக்கொள்ளுகிறோம். [illegible] படித்தல் எப்

இந்த இரண்டாம் விஷயத்[illegible] உதவுகிறதா? [illegible]றுக்கொள்ளப் [illegible]ன் பந்தைப்பிடிக்கத் தவறி [illegible]

கற்றுக்கொள்ளுதல் என்பதை எல்லாவிதத்திலும் நன்றாய் வேறொன்றின ஓர் பழக்கத்தைக் கவனிப்போம். அது படித்துத் தீரவேண்டியது அது எப்படிக் கிரியை செய்கிறது? நீங்கள் உங்கள் சட்டைப் பித்தான்களை மாட்டும்பொழுது எந்தெந்த விரல்களைப் பிரயோகிக்கிறீர்கள், எந்த விரலை முதல் பிரயோகிக்கிறீர்கள்? இக்கேள்விக்கு உத்தரவு கொடுக்குமுன் நீங்கள் மனோ பாவனையிலாவது அல்லது நிசமாகவே பித்தான் மாட்டுதலை அப்பியாசிக்கவேண்டும். ஆகவே விரல்களை பிரயோகித்துச் சொல்லும் வரைக்கும் உங்களுக்கு எந்த விரலை உபயோ[illegible] [illegible]தெரி[illegible] [illegible]டைய பழக்கத்திற்கு தெரியும், ஆகையால் பழக்கம் யோசனையை செய்யாமல் தன்னில்தானே நடைபெறும் ஒருநடக்கை. ஈரைந்து எவ்வளவு என்றால் “பத்து” என்று உடனே சொல்லுகிறீர்கள். ஆனால் நான் சொல்லுகிறேன்: நான் கணிதத்தில் ஒரு சாதாரண கேள்வி கேட்கிறேன். உங்களுக்கு விடை தெரியும். ஆனால் நான் கேட்கும்பொழுது விடை பகரவேண்டாம்” என்றால் நீங்கள் “பத்து” என்கிற விடை பகராமல் இருக்கலாம் என்று நினைக்கிறீர்களா? இல்லையே, ஏனெனில்? 5 × 2 = 10 என்ற பழக்கத்தை ஸ்தாபித்துக்கொண்டிருந்தால்தானே நீங்கள் பழக்கத்தை எவ்வளவு நிறுத்தப் பிரயாசப்பட்டாலும் அதை நிறுத்த முடியாதபடி பழக்கம் அவ்வளவு வலிமையுள்ளது.

இந்த விதமாக நாம் நம்மிலும் நம் பிள்ளைகளிலும் நற்குணத்தை நாட்ட விரும்புகிறோம் வாய்மை, நாணயம், நிதானிப்பு, சுறுசுறுப்பு என்னும் லக்ஷணங்களை நாட்ட விரும்புகிறோம். காலம் வரும்பொழுது உண்மை பேசவும், நாணயம் நிலைக்கவும், நிதானித்துச் செய்யவும், சுறுசுறுப்பாயிருக்கவும் இப்பொழுதே அவ்வளவு பலமாக பழக்கத்தை உண்டாக்க விரும்புகிறோம். பழக்கமே நற்காரியங்களை நடப்பிக்கிறது. ஆகவே பழக்கங்கள் தன்னைத்தானே நடத்திவரும் வழிகள். இப்படிச்சொல்லுவதை சிலர் தப்பறையாயெடுக்கலாம். கைமாறு கருதி அல்லது பலாத்காரத்தினால் ஒழிய மற்றொன்றிற்காக பெரியோரோ சிறியோரோ சில காரியங்களைச் செய்கிறதில்லை என்று நினைக்கிறார்கள். ஆகையால் யாதாமொரு பழக்கத்தை ஸ்தாபிக்க தண்டனை அல்லது சன்மானம் ரிலும் பாசமற்று, சமயம் வாய்க்கும்பொழுது ஓடிப்போகலாம். சுமத்தும் தண்டனை இந்தப் பழக்கத்தை [illegible]ஸ்தாபிக்கிறது. இப்படியிருக்கவேண்டியது [illegible] அவ்வளவுக்குப்படி இருக்கிறது விபத்து. எல்ல[illegible]ணயஸ்தன் நாணயத் [illegible] விசனப்படுகிறான் என்பதைப் [illegible]எதிர்பார்க்கிறதினாலாவ பிதமாய் மனஸ்தாபம் காட்ட[illegible]ளம் வாங்குகிறதினாலாவ [illegible]க்கூடாத காரியத்துக்[illegible]ருக்கிறதில்லை. உண்மையாக வே[illegible]யிருப்பவன் தானாகவே யோக்கியமாக நடக்க விரும்புகிறான். நாணயம் அவனுடைய குணத்தில் ஒரு பழக்கமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இப்பேர்ப்பட்ட நாணயம் சன்மானம் அல்லது தண்டனையன்றி தானாகவே தன்னை நடத்திவருகிறது கைமாறு கருதி சிக்ஷைக்குப் பயந்து நற்காரியங்களைச் செய்யாதபடி நாம் நல்ல பழக்கங்களை நமது பிள்ளைகளிடத்தில் ஸ்தாபிக்க விரும்புகிறோம்.

### கற்றுக்கொள்தலுக்குரிய மூன்று மூலாதார சட்டங்கள்.

(1) எப்படி அப்பியாசத்தின் மூலமாய் பழக்கம் கற்பிக்கப்படுகிறது? தண்டனை இதில் சம்பந்தப்பட்டதா? என்பது.

பழக்கத்தை ஸ்தாபித்தல் அல்லது கற்றுக்கொள்தலுக்கு முதல் சட்டம் எல்லாம் வழங்குகிறதும் எல்லாருக்கும் தெரிந்த சட்டமே. நாம் ஒரு பழக்கத்தைக் கற்றுக்கொள்ள வேண்டுமானால் நாம் அதை அப்பியாசிக்க வேண்டும். நாம் செய்[illegible] நாம் கற்றுக்கொள்ளுகிறோம். நா[illegible] பழக்கத்தை அப்பியாசிக்காவிட்டால் நாம் அதை ஸ்தாபிக்கமுடியாது. ஒரு பிள்ளை நிதானமுள்ளதாய் இருக்கவேண்டுமானால் நிதானமாயிருக்க அப்பியாசிக்கவேண்டும். ஆனால் இதிலும் சற்று ஜாக்கிரதையாயிருப்போமாக என் பையன் அவனுடைய சகோதரிக்குப் பக்ஷம் காட்டவேண்டும் என்று நான் விரும்புகிறேனென்று வைத்துக்கொள்ளுவோம். அவன் பக்ஷமில்லாதிருக்கிறான். ஆனால் அவன் பக்ஷம் காட்ட நான் விரும்புகிறேன். அவன் கற்கண்டில் பாதியைத் தன் சகோதரிக்குக் கொடுக்கும்படி செய்கிறேன். அப்பொழுது அவன் பக்ஷம் காட்டும்படி அப்பியாசிக்கிறானா? அவன் தாராளமாயிருப்பதினால் கற்கண்டைக் கொடுக்கிறானா? அல்லது நாம் சொல்லுகிறதற்காகச் செய்கிறானா? மனதில்லாமல் முணுமுணுத்து நான் சொல்லுகிறதினால் கொடுத்தால், நான் எந்த நற்பழக்கத்தை ஸ்தாபிக்க விரும்புகிறேனோ அவன் அதை பழகுகிறதில்லை. எனக்குக்கீழ்ப்படியும் பழக்கத்தை அப்பியாசிக்கிறானேயொழிய தனது சகோதரியினிடத்தில் தயாளமாயிருக்க அப்பியாசிக்கிறதில்லை.

நான் முதலில் சொன்ன சட்டத்தை மறுபடியும் கவனித்து அதைப்பற்றி இன்னும் அதிகமாக யோசிப்போம். நாம் எதை அப்பியாசிக்கிறோமோ அதையே கற்றுக்கொள்ளுகிறோம். இந்த பையன் தயாளமாயிருக்க அப்பியாசிக்கவில்லையானால் வேறொன்றை அப்

காணப்பட்டன. பயமுறுத்தலுக்கு முதல் தூண்டுதலாயி ருக்கிறது. கேட்கப்படாவிட்டாலும் சம்பந்தப்படுத் டில் பாதிகொடுக்கிறநிலையைப் பார்த்தமாத்திரத்தில் பயப் அவனை தயாளமாயிருக்
நாம் குணத்தை ஸ்தாபிக்க சம்பந்தம்? இப்படி சம்பந் இப்பொழுது நமக்கு தெரிகிற காள்ளல் சிக்ஷையோடு நாம் உண்டாக்க விரும்புகிற பழக்கத்தை ... கிற இல்லை. அந்தவித அப்பியாசமில்லாமல், அவர்கள் எந்த நல்ல பழக்கங்களை பழகவேண்டுமென்று கருதுகிறோமோ அதைக் கற்றுக்கொள்ளமாட்டார்கள். "நான் அவனை செய்ய வைப்பேன்" என்று சொல்லலாம். ஆனால் அவர்களுக்குள்ளேயே கிரியை செய்யும் நிலையை மூலாதாரமாகக்கொண்டு ஒரு பழக்கமான குணத்தை அப்பியாசிக்க பலாத்காரப்படுத்த முடியாது. நாம் அவர்களை தயாளமாகவும் நிதானமாயிருக்கவும் உற்சாகப்படுத்தலாம். அல்லது நமது சாதனை மூலமாய் அதிகமாகக் கற்பிக்கலாம். ஆனால் அவர்கள் தயாளமாக அல்லது நிதானமாக இருக்கும்படி அப்பியாசிக்க நாம் பலாத்காரப்படுத்த முடியாது. ஆகையால் அந்தவிதமான பழக்கங்களைக் கற்றுக் கொடுப்பது கூடாத காரியம்.

## எப்படி சிக்ஷை சித்தியற்றுப்போகிறதென்பது.

ஒரு பிள்ளையாண்டான் தயாளமுள்ளவனாக அல்லது நிதானமுள்ளவனாக வெளிக்கு நடிக்கும்படி நான் சிக்ஷையை பிரயோகிக்கிறேனென்று வைத்துக்கொள்வோம். நற்குணத்தை ஸ்தாபிக்கும் விஷயத்தில் என்ன நடக்கிறது? தண்டனை மூலமாய் தானிருக்கும்பொழுதெல்லாம் தன் சகோதரிக்குப் பாதிக் கற்கண்டைக் கொடுக்குமுன் தண்டிப்பேனாகில் அவன் தயாளகுணமுள்ளவனாகிறதைத்தடுக்கிறேன். அவன் எதை ஸ்தாபிக்கவேண்டுமென்று நான் விரும்புகிறேனோ அதேபழக்கத்தை அப்பியாசிக்க முடியாதபடி சிக்ஷை அவனைத் தடுக்கிறது இந்த விஷயத்தில் நன்மை செய்கிறதைவிட சிக்ஷை தீமையே செய்கிறது. வெளிப்பார்வையாய்ஓர்குணத்தைப் பையன் நடிக்க உங்களால் செய்யமுடியும். ஆனால் அவன் மனதுக்குள்ளிருக்கும் எண்ணத்தை அப்பியாசிக்கக் கண்டிப்புப்பண்ண முடியாது, அப்பியாசத்தையும் பயிற்சியையும் வற்புறுத்தும் முதல் சட்டம் நமக்கு மூன்று காரியங்களை விளக்குகிறது.

(1) பழக்கமாக ஒரு குணத்தை ஸ்தாபிக்க நமது பிள்ளைகளுக்கு அப்பியாசம் வேண்டும்.

(2) சில சமயங்களில் சிக்ஷையினால் பயமுறுத்துதல் அப்பியாசத்தைத் தடுத்து பிள்ளை ஒரு நல்ல பழக்கத்தை ஸ்தாபிக்க விடுகிறதில்லை

(3) நமது பிள்ளைகளை அப்பியாசிக்கக் கண்டிப்பு செய்ய முடியாத சில பழக்கங்கள் உண்டு ... நமது பிள்ளைகள் எந்த நற்குணத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்று அதிகமாக விரும்புகிறோமோ அதை ஒரு சிறந்த சிட்சைகூட சாதிக்கமுடியாது.

டுபோய் பிறகு ரஸ்தாவில் போட்டுச்சென்றதாகச்சொல்லப்பட்டது. சில மணி நேரம் கழித்து அந்தப் பாவா இறந்து கிடக்கக்காணப்பட்டான். ஜீவா என்னும் அக்கிராமவாசியை போலீஸ்தார் கைது செய்து ஜாமீனில் விட்டிருக்கின்றனர்.

---

### ஒரு ... ாதா கோவிலில் இடி.

திகநேரமாகப் பாசமாயிற்று, 5 பேர் மரணம், 30 பேருக்குக் காயம்

(தது. ஒரு ... பழக்குகிறான் ... ரும்பான்மை தவறு ... எல்லாத் தடவைகளி ...)

ப். 10—வடதிருவாங்கூரையடுத்த ... கோவிலில் எதிர்பாரா ...

தல் சட்டப்படி இந்த ... ததை எப்படி படிக்கக்கூடும்? ... கும்பொழுது அவன் அதைப் பிடிக்காமல் பெரும்பான்மை தவறினதினால் உண்மையாகவே தவறுதலை அப்பியாசிக்கிறான். ஆகவே அவன் பந்தைப்பிடிக்க அல்ல தவறவல்லவோ அப்பியாசிக்கிறான்? பிடிக்கிறதைவிட தவறவே அதிகமாக அப்பியாசித்தாலும் அவன் தப்பிதமானதைக் கற்றுக்கொள்ளுகிறதில்லை என்று நம் ஏன் நினைக்கிறோம்? இக்கேள்விக்கு உத்தரவு நம்முடைய புதிய சட்டமே. சித்தியினால் உண்டான பலனிலிருக்கிறது. கிரியை செய்கிற நடக்கையைக் கற்றுக்கொள்ளுகிறோம் சித்தியோடு அப்பியாசிக்கிறதை செய்ய கற்றுக்கொள்ளுகிறோம். சித்தியில்லாமல் அப்பியாசிக்கிறதை ... கற்றுக்கொள்ளுகிறோம்.

முதல் சட்டத்தைவிட இரண்டாம் சட்டத்திலுள்ள இவ்விரண்டு பாகங்களும் திட்டவட்டமாய் பையன் எப்படிப் பந்துபிடிக்கக் கற்றுக்கொண்டானென்று காண்பிக்கிறது. சித்தி மூலமாகவும், தவறுதலின் மூலமாகவும் கற்றுக்கொண்டான். சித்திமூலமாக, இந்த விதமாக நிச்சயமாகப் பந்தைப் பிடிக்கவும், தவறுதலின் மூலமாய் தப்பிதமான மாதிரியாகப் பந்தைப் பிடிக்கக்கூடாதென்றும் கற்றுக்கொண்டான். ஆனால் அவன் உள்நிலையின் முக்கியத்தை சற்றுக் கவனிக்கவும். சரியாய்ப் பிடிக்கவேண்டும் என்ற கருத்தில்லாவிட்டால் பந்தைச் சரியாய்ப்பிடிக்கக் கற்றுக்கொண்டிருக்கமாட்டான். சரியான விதமாய் யாதொரு காரியத்தைச் செய்ய கற்றுக்கொண்ட பிள்ளை சித்தியடையும்போது சந்தோஷப்படவும் தவறும்பொழுது மனஸ்தாபப்படவும்வேண்டும். என்றாலும் ஒரு பழக்கத்தைவேரூன்ற சரியான வழியில் ஒரு காரியத்தை அடிக்கடி செய்யவேண்டியதே. (இது முதல் சட்டம் வற்புறுத்தும் ஓர் காரியமன்றோ!)

சன்மார்க்க நீதிக்குரிய பழக்கங்களை ஸ்தாபிக்கிற விஷயங்களுக்கு இச்சட்டங்கள் பொருந்தும். நான் எனக்குள் மற்றவர்களிடத்தில் பட்சமாய்ப் பேசும் பழக்கத்தை ஸ்தாபிக்கவேண்டுமானால் அப்படி பட்சமாய்ப் பேசும்பொழுது சந்தோஷப்படவும் அப்படிப் பேசாவிட்டால் விசனப்படவும் வேண்டும். பேசுமுந்தியே அப்பேர்ப்பட்ட மனநிலையோடு பேசுகிறேன். ஆகையால் முழுநேரமும் எனக்குக் கற்றுக்கொள்கிறதே பிரதானம். எனக்கு அவ



என்பதைக்காட்டுமாம். இந்த இன்பமான திட்டத்தின் விபரத்தை பிரித்தானியா வானசாஸ்திரியான ரிச்சர்டு புரோக்டரின் குமாரி மிஸ் மேரி புரோக்டர் எப். ஆர் ஏ. எஸ். விளக்கிக்கூறியுள்ளாள். அவள் அந்தப் பிரசாரத்திற்கு உதவியளிப்பதற்காகவே இங்கு வந்துள்ளாள்.

இந்த தூரதிருஷ்டிக் கண்ணாடி காலிப்போர்ணியாவில் வில்சன் மலையில் அமைக்கப்படும். இந்த ... யை இப்பொழுது வில்சன் மலையிலிருக்கும் ...ய தூரதிருஷ்டிக்கண்ணாடியை ஏற்படுத்திய டாக்டர் எப். ஜீ. பீஸ் போட்டுள்ளார். 25 அடிகள் குறுக்களவும் 1,600 டன்கள் நிறையும் மானிடர் கண்களைப்போன்று 20 லட்சமடங்கு பிரகாசமான ஒளியைத் தரும் சக்தியுடைய கண்ணாடி வேண்டுமாம்.

இவ்விதமான தூரதிருஷ்டிக்கண்ணாடி சயின்சிற்கு பெரும் உதவியாக இருக்கும். மற்றும் உலகிலுள்ள மக்களை இப்பொழுது பார்க்கக்கூடியதற்குமேல் மும்மடங்கு அதிக ஆழமாய் எல்லாவற்றையும் பார்க்கச்செய்யும் என்பதாய் மிஸ் புரோக்கர் கூறுகின்றார்.

இப்பொழுது வின்சன் காலஅளவு காரியாலயத்திலிருக்கும் தூரதிருஷ்டிக்கண்ணாடிதான் உலகில் மிகப் பெரிது.

---

### துருக்கியில் லஞ்ச வழக்கு.

மாஜி மந்திரிமேல் குற்றச்சாட்டு.

கான்ஸ்டான்டிநோப்பிள் ஏப். 11—துருக்கியில் 500 துருக்கிப்பவுன் பெறுமான மாவு தானியா தானியா சாமான்கள் விஷயமாய் நேரிட்ட பல ஒழுங்கீனங்களைப்பற்றி விசாரணைசெய்து அறிவிக்கும்படி நியமிக்கப்பட்ட பார்லிமெண்ட் கமிட்டியார் தங்கள் விசாரணையை முடித்து மாஜி வியாபார மந்திரியான டெப்டி ஜீஹனிபே மீது வழக்குத்தொடரவேண்டுமென்று ஒரு தீர்மானம் செய்திருக்கிறார்கள்.

---

### நீச்சல் பேட்டி.

46 மணிநேரம் நீந்தின சமர்த்து.

ஹாம்பர்க் ஏப். 10—வெகுதூரம் நீந்துவதில் நிபுணரான திரு ஆட்டோ கேம்பிரிக்கு என்ற ஜெர்மனியர் இங்கு நடந்த சர்க்கஸில் ஒரு குளத்திலே 46 மணி நேரமாக இடைவிடாமல் நீந்தினார். அவர் பழக்கி வைத்திருந்த ஒரு நீர் சிங்கமும் அவருடன்கூட நீந்தினதில் அவர் நீச்சலை முடிக்குமுன் இளைத்து நின்றுவிட்டது. இதற்கு முன் 32 மணி இடைவிடாது நீந்தியிருக்கிறார்.

---

### உயிரோடு கொளுத்த முயற்சி.

மோட்டார் டிரைவர்மீது வழக்கு.

புதுக்கோட்டை, ஏப்ரல் 9.—ஆரோக்கியசாமி என்னும் ஒரு மோட்டார் டிரைவர் கடேசன் என்பவர்மீது அவருக்கு ஏற்பட்டிருந்த விரோதம் காரணமாக பெட்ரோலை ஊற்றி தலையில் தீக்குச்சியை கொளுத்திப்போட்டு எரித்துக்கொல்ல முயன்றதாக குற்றம் சாட்டப்பட்டிருந்த வழக்கில் புதுக்கோட்டை செஷன்ஸ் ஜட்ஜ் எதிரிக்கு 4 வருஷ கடுங்காவல் தண்டனையும் ரூபாய் 100 அபராதமும் விதித்தார். இச்சம்பவம் பகலில் பகிரங்கமாக கடைத்தெருவில் நடந்ததாக சொல்லப்படுவதால் இக்கேஸைக் குறித்து இங்கு மிகுந்த பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. இதன் அப்பீலை ... சுமார் 18 சாட்சிகளை விசாரித்தபின் ... ர்கள் எதிரி கொலைசெய்ய முயலவில்லை என்றும், இ. பி. கோ. 326-வது பிரிவின்படி ஜட்ஜ் ஒப்புக்கொள்ள மறுத்தது பிசகென்றும் எடுத்துக்காட்டினார்.

நீதிபதிகள் எதிரி தரப்பு வக்கீல் வாதத்தை ஒப்புக்கொண்டு செஷன்ஸ் ஜட்ஜ் உத்தரவை ரத்துச்செய்து, எதிரிகளனைவரையும் விடுதலை செய்துவிட்டனர்.

---

### ராணிப்பூரில் புலியுடன் சண்டை

நாலுபேர் அடித்துக் கொன்றனர்

ராணிப்பூரில் சுமார் 5½ அடி நீளமுள்ள ஒரு புலியை நான்குபேர்கள் எதிர்த்துச் சண்டை செய்து கொன்றுவிட்டார்கள். அவர்கள் முயல்வேட்டைக்கு ஒரு காட்டுக்குச் சென்றபோது அந்தப்புலி திடீரென்று ஒருவன் மீது பாய்ந்தது. இதைக் கண்ட மற்றொருவன் ஓடிவந்து புலியின் வாலைப்பிடித்து இழுத்தான். இருவர் புலியைத்தோற்கடிக்க முடியாமல் போகவே, மூன்றாம் மனிதன் உதவிக்கு வந்தான். அப்படியிருந்தும் புலியை ஜெயிக்க முடியவில்லை, கடைசியாக நாலாவது மனிதனும் வந்து சேர்ந்தான். பின்பு அவர்கள் நால்வரும் ஒன்று சேர்ந்து அப்புலியை அடித்துக் கொன்றார்கள். முதல் மூவருக்குக் காயம்பட்டிருக்கிறது. அவர்களில் ஒருவனுக்குப் பலத்த காயம்.

ப்ரீ பிரஸ்.

---

### தொண்டை ரோக சிகிச்சை

பெர்லின், ஏப். 11—ஆப்கன் அமீர்கான் தொண்டை ரோகத்திற்கு அவருக்கு இன்று ஆப்ரேஷன் செய்து சுகமாக இருக்கிறார்.

---

### ஆப்கன் அரசன்

ஜார்ஜ் மன்னருக்கு வெகுமதி

லண்டன், ஏப். 12.—இவ்விடத்தில் ஆப்கன் ஸ்தானாதிபதி ஆப்கன் அரசன் பேரால் ஜார்ஜ் மன்னருக்கு மூன்று புராதன புஸ்தகங்கள் பரிசுகொடுத்தார். அதிலொன்று கைவிரல் நுனிநிலை இருநூறு வருஷங்களுக்கு முன் மூங்கிலில் செய்த வெள்ளைக் காகிதத்தில் எழுதப்பட்டது. அது ... பக்கங்கள் கொண்டது. அதை எழுதி முடிக்க 5 வருஷங்கள் சென்றன. இரண்டாவது புஸ்தகம் தங்க மையினால் பாரசீகத்தில் எழுதப்பட்ட அசுவ சாஸ்திரம். மூன்றாவது புஸ்தகம் தங்க மையினால் அராபி பாஷையில் எழுதப்பட்ட முஸ்லிம் ஜெபப்புஸ்தகம்.

## இத்தாலி அரசர்க்கு ஆபத்து.

ஸ்திரிகள், குழந்தைகள் கொல்லப்பட்டனர்.

மிலான், ...ல் 12.—இத்தாலி அரசர் மிலாக் வேடிக்கைச் சந்தையைத் திறந்துவைப்பதற்காகப் போகிற சமயத்தில் ஒரு வெடிகுண்டு விபத்து ஏற்பட்டு 14 பேர் கொலையுண்டனர், 40 பேர் காயமடைந்தனர். இந்த விபத்தை பொருட்படுத்தாமல் அரசர் சந்தையைத் திறந்து வைத்தார். மிலானில் வருஷந்தோறும் இந்த சந்தை நடந்து வருகிறது. இது ஜெர்மனியில் நடக்கும் லீப்ஜிக் சந்தையைப்போல் அவ்வளவு பெரிய சந்தையாகும்.

அரசர் உயிர்தப்பின அதிசயம்:—இத்தாலி அரசர் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்த விபரப்படி வராமல் அவர் ரயில் நிலையத்திலிருந்து நேரே சந்தைக்குச் சென்றதால் அந்த வெடிகுண்டு விபத்திலிருந்து தப்பினார் என்று தெரிகிறது. அரசர் வருவதற்கு 10 நிமிஷத்திற்கு முன்னே வெடிகுண்டு வெடித்துவிட்டது. வெடிகுண்டின் கடிகார யந்திரம் அரசர் வருகிற சமயத்திற்குச் சரியாய் திருப்பி வைக்கப்படாததினால்தான் அரசன் உயிர்தப்பினார் என்று இன்னொரு அபிப்பிராயம் கூறுகிறது. வெடிகுண்டு வெடித்ததும் ஜனங்கள் பயந்து கூக்குரலிட்டனர். காயப்பட்டவர்கள் நோவுபொறுக்கமல் அலறினார்கள். எங்கும் கலவரம் ஏற்பட்டது. வெடிகுண்டு வெடித்த விளக்கு ஸ்தம்பத்தண்டை ஜனநெருக்கம் அதிகமாய் இருந்தது. அங்கு காவல் நின்ற அல்பைன் பட்டாளத்தாரில் 5 பேர் கொல்லப்பட்டனர். விளக்குத்தூணண்டை நின்ற ஜனங்கள் பயங்கர காயமடைந்தனர். ஒரு பெண்குழந்தையின் தலை துண்டாய்ப்போய்விட்டது. ஒரு பரிஸ்ட் சாரணப் பையன் மிகவும் அபாயகரமாய் காயமடைந்தான். சேதப்பட்டவர்களில் பெரும்பாலோர் பெண்களும், பிள்ளைகளும்தான். விளக்கு ஸ்தம்பத்தின் உடைந்த துண்டுகளினால்தான் இவ்வளவு அதிகச் சேதமுண்டானதாகத் தெரிகிறது.

---

## லண்டன் நகர அதிசயம். தரைக்குள் ரயில் பாதை.

டாக்டர் மணவாளர் ராமானுஜம் பேச்சு.

சென்ற திங்கள்கிழமை சென்னை ஜார்ஜ் டௌன் பார்ப்பனர் அல்லாதார் சங்க ஆதரவில் புராகரசிவ் யூனியன் பள்ளிக்கூடத்தில் டாக்டர் எஸ். ஜி. மணவாள ராமானுஜம் எம். ஏ. அவர்கள் இங்கிலாந்தில் தரைக்குள் ரயில் பாதை அமைந்திருப்பதைப்பற்றி, ஒளிச்சித்திரப்படங்களுடன் பின்வருமாறு ஒரு உபநியாசம் செய்தார்.

லண்டன் தரைக்குள் போடப்பட்ட ரயில்வே முதல் முதலாக அப்போது உவேல்ஸ் இளவரசராக இருந்த எழாவது எட்வர்ட் அரசரால் திறந்துவைக்கப்பட்டது. இந்த ரயில்வேயின் முக்கிய விசேஷமென்னவென்றால், இதில் விபத்துகள் ஏற்படுவதில்லை. காற்றோட்டத்திற்காக ஒரு மணி நேரத்திற்கு இரண்டு மூன்று தடவை குழாய்களின் மூலம் சுத்த ஆகாயம் கீழே அனுப்பப்படுகிறது. மழைகாலத்தில் மின்சார சக்தியால் குழாய்களுக்கு சூடேற்றப்படுகிறது. இங்கிலீஷ்காரர், ஒழுங்குப்படி நடப்பதில் மிகவும் கெட்டிக்காரர்கள். ஆகையால் ஒருவரும் ஆத்திர அவசரமாய் நடப்பதில்லை. முதலில் வந்தவர்கள் முதலாவது, இரண்டாவது வந்தவர்கள் இரண்டாவது என்று எல்லாம் ஒழுங்குப்படி நடைபெறுகிறது. டிக்கட் சார்ஜ் கூலி குறைவு, வண்டிகள் அதிவேகமாய்ச் செல்லுகின்றன. பிரயாணிகளுக்கு வேண்டிய சகல வசதிகளும் வண்டியில் அமைக்கப்பட்டிருக்கின்றன. எனவே லண்டன்காரர்களும் அங்கு புதிதாய் போனவர்களும் இந் ரெயில் பாதையை அதிகமாய் உபயோகப்படுத்துகின்றனர். போகிற டிரைன்களுக்கு ஒரு குழாயும், வருகிற டிரையின்களுக்கு ஒரு குழாயுமாக இரண்டு குழாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. வண்டிகள் எல்லாம் மிகவும் நேர்த்தியாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த டியூப் டிரையின்களில் ஏறுவதற்கு மூன்றி மேலும் கீழும் செல்லுகிற பெட்டிகள் அதாவது "லிப்ட்" என்ற யந்திரம் அமைக்கப்பட்டிருக்கிறது. இப்போது அதற்குப்பதிலாக நகருகிற பிளாட்பாரங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

அப்படி மூன்று பிளாட்பாரங்கள் இருக்கின்றன. அதில் மூன்றுமாத்திரம் நகருவதில்லை. மற்ற இரண்டும் நகருவன. இதில் போகும்போது விபத்துகள் ஏற்படாதபடி பாதுகாப்புண்டு. டிக்கட் யந்திரமூலம் கொடுக்கப்படுகின்றது. சில யந்திரங்கள் சில்லரையும் கொடுக்கும். மின்சாரம் எஞ்சினில் அடைத்துவைக்கப்படுகிறது. இங்கு நெருக்கடி ஒருவாறு தீர்ந்தது. தரைப்பாதை பாரிஸ், லண்டன், நியூயார்க் முதலிய இடங்களில் இருக்கின்றன. ஆனால் லண்டன் பாதை மிகவிசேஷம்.

லண்டன் சுரங்க ரயில்வண்டி மணிக்கு 19 மைல் வேகத்தில் ஓடுகின்றது. லண்டனில் இப்போது 173 மைல் நீளத்தில் சுரங்கப்பாதை ஏற்பட்டிருக்கிறது. அதில் ஏதாவது பழுது ஏற்பட்டால் காலை 1 மணி முதல் 4 மணி வரை பார்க்கப்படும்.

குழிதோண்டும் யந்திரங்களினால் சுரங்கம் வெட்டிய பிறகு ரயில்பாதை அமைக்கப்படுகின்றது. தேம்ஸ் நதிக்குக்கீழும் சுரங்கப்பாதைகள் உண்டு. முன் பக்கத்தில் ஏதாவது அபாயமான காரணங்களிருந்தால் வண்டியைத்தானாகவே நிறுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

(திராவிடன்)

---

## துப்பாக்கி விபத்து

2 பேர் மரணம், 5 பேர் காயம்:—மிலான், ஜை. 12. கார்பாக்கியோ ராணுவ பாரக்கில் ராணுவ பரிசோதனை நடந்து கொண்டிருக்கும்போது சிப்பாய் முழங்காலுக்கிடையில் துப்பாக்கியை வைத்துக்கொண்டு அறையிலிருந்த பெல்டை இறுக்கிக்கட்டினான். அப்போ, அந்தத் துப்பாக்கி தற்செயலாய் வெடிக் கிளம்பினதில் எதிரில் கூட்டமாய் நின்ற சிப்பாய்களில் 2 பேர் கொல்லப்பட்டனர். வேறு மூவர் காயப்பட்டனர்.



1215

THE

# Piramalai Reformer

## பிரமலை சீர்திருத்தன்.

REG. NO.–M. 2146

OFFICE OF THE REGISTRAR, MADRAS
No.
17 AUG 1928

" அநியாயஞ்செய்வது ராஜாக்களுக்கு அருவருப்பு; நீதியினால் சிங்காசனம் உறுதிப்படும்."

Vol. VIII.] ஆகஸ்டு 1928 [இலக்கம் 4

## பஞ்சாங்கம்.

1928 | விபவ ஆடி | ஆகஸ்டு | விபவ ஆவணி | 1928

| Sunday ஞாயிறு | Monday திங்கள் | Tuesday செவ்வாய் | Wednesday புதன் | Thursday வியாழன் | Friday வெள்ளி | Saturday சனி |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| | | | 1 ○ பௌர் 17 | 2 18 | 3 19 | 4 20 |
| 5 21 | 6 22 | 7 23 | 8 24 | 9 ✲ கார். 25 | 10 26 | 11 27 |
| 12 28 | 13 29 | 14 30 | 15 ● அமா. 31 | 16 ஆவணி 1 | 17 2 | 18 3 |
| 19 4 | 20 5 | 21 6 | 22 7 | 23 8 | 24 9 | 25 10 |
| 26 11 | 27 12 | 28 13 | 29 14 | 30 15 | 31 ○ பௌர் 16 | |

*Patron.*—M.R.Ry. Rao Bahadur, A. J. Vethanayaga Thevar Avl., Usilampatti.

சம்ரக்ஷகர்.—மகா-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

*Editor.*—Rev. George J. Athishtam, Usilampatti.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

*Manager.*—Rev. B. S. Stoffer, Tirumangalam.

மானேஜர்.—கனம் பி. எஸ். ஸ்டோபர் துரையவர்கள், திருமங்கலம்.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

All orders to be sent to the *Manager.*

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor.*

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

## ரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம்.

ரயில் தொழிலாளர் தங்களுடைய கஷ்டங்களை மேலதிகாரிகளுக்கு, பல தடவைகளில்தெரிவித்தும் நிவர்த்திக்காதபடியால் வேலை நிறுத்தம் செய்து போட்டபடியால் ஒழுங்கான ரயில் பிரயாணம் கொஞ்சம் தடைபட்டுப் போனது. பல இடங்களில் ரயில் பாதைகளுக்கு நஷ்டமும் உண்டாக்கியிருக்கிறதாக அறிகிறோம். சமீப இடங்களுக்கு அவசரமாய்ப் போகிறவர்கள் மோட்டார்களில் அதிகக் கூலிகொடுத்துப் போகிறார்கள். சீக்கிரம் இக்கஷ்டம் நின்று தொழிலாளருக்கும், ஜனங்களுக்கும் நன்மை வருமென்று தெரிவிக்கப்படுகிறது.

ஆகாயக் கப்பல்.—இது கடந்த வாரத்தில் மதுரையில் அநேகருக்கு ஒரு விநோதமான காட்சி. முன்னமே இதைப் பார்த்திராதவர்கள் பல திசைகளிலிருந்தும் வந்து பார்த்து ஆனந்தித்துப் போனார்கள். பணமுள்ளவர்கள் சிலர் அவற்றில் ஆகாயத்தில் கொஞ்சதூரம் ஏறி இறங்கியிருக்கிறார்கள். இன்னும் கொஞ்சக்காலத்தில் அதுவும் சாதாரணமான ஒரு வாகனமாய்ப் போகும் என்று எண்ண சந்தேகமில்லை.

ரயில் விபத்து.—போன மாதம் மூணாண்டிபட்டிக்குச் சமீபத்திலுள்ள மத்திசக் கருப்புக் கோயிலண்டை கோமதி விலாஸ் மோட்டாரும், பாலஸ்ட் ரயில் வண்டியும் மோதி உசிலம்பட்டி நாடார் ஒருவர் ஊடே தண்டவாளத்தில் விழுந்து அரைபட்டுப்போனார். இரண்டொரு ஆட்களுக்கும் மோட்டாருக்கும் சேதம். பாலஸ்ட் வண்டிகள் இரண்டு தண்டவாளத்தை விட்டு விலகி விழுந்து போனது. மோட்டார் ஓட்டிகள் எப்போதும் கவலையாய்ப் போனால் அவர்களை நம்பிப்போகும் பிரயாணிகளுக்கு ஆபத்தில்லை.

---

## ஆரம்பக்கல்வி.

ஆரம்பக்கல்வியானது, அநேகம் படிப்பாளிகளாலும் எளிதில் அறிந்துகொள்ளக்கூடாத பரமரகசியமாய் இருக்கிறது. அப்படியானால் குழந்தைகள் அறிந்துகொள்வதும் அவர்களுக்குக் கற்பித்தலும் சிரமந்தான் என்பது யாவரும் அறிந்த விஷயம். ஆகையால்தான், ஆங்கிலத்தை விட அதிகமான தமிழ் எழுத்து இருப்பதினால் தமிழ் பாஷையைக் கற்றுக்கொள்வது முடியாது சிறுவர் கஷ்டமடைகின்றனர் என்றும், சில ஐரோப்பிய மிஷனரிமார்கள் எழுத்தைச் சுருக்கப் பிரயாசமெடுப்பதாயும் தெரிகிறது.

ஆனால் தமிழ் பாஷையை எழுதவும் வாசிக்கவும் சரியான முறைப்படி கற்பித்தால் அது ஆங்கிலத்தை விட மிகவும் லேசான பாஷை, லேசான வழி உண்டு என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடும்.

முக்கியமாய் ஆரம்பக் கல்வியானது பாலர்களுக்கேயல்லாது விருத்தர்களுக்கல்லவென்பதை அறிந்து அவர்களுக்கு ஆரம்பத்தில் எதையும் வாய்ப்பாடமாகவே படித்துக் கொடுக்க வேண்டியது அவசியம். ஆங்கில பாஷையின் எழுத்து 26-ம் முதலாவது சிறுவர்களுக்கு வாய்ப்பாடமாகத்தானே படித்துக் கொடுக்க முடியும். மனோசக்தியை விர்த்தியாக்கும் கணிதமும் வாய்ப்பாடமாகப்படியாவிட்டால் கணக்கு வந்து பிணக்காகும் அல்லவா? அந்தப்படியே தமிழ்ப் படிப்பை விர்த்தியாக்கி மனதில் வைத்துக்கொள்ள 12 உயிர் எழுத்துக்களை முதலாவது படிக்கவேண்டியது அவசியம். அதுவே குழந்தைகளுக்கு தாய்ப்பால் போல பள்ளிச் சிறுவர்க்கு ஞானப்பாலாகும்.

அன்னையில் அருந் தாதார் அவனியிலில்லை.
அரிச்சுவடி ஆறிரண்டு சூத்திர முன் கல்லு.

அதுவே பரம்பரையாய் எட்டுப் பள்ளிக்கூடங்களிலும் கிராம திண்ணைப் பள்ளிக்கூடங்களிலும் சிறுவர்களுக்கு கற்பித்துவந்த மார்க்கம், அதாவது அரிச்சுவடி மெதட்படி கற்பித்தல். உயிர் எழுத்து 12-ம் பதினைந்து நிமிஷத்தில் தாராளமாய் எழுதப்படிக்கக் கற்றுக்கொண்டால் வேறு சிரமம் எப்படி இருக்கும் உயிர் மெய் உண்டாக்க முடியாதா? வார்த்தை அமைக்க முடியாதா? மற்றெல்லாம் வெகு சுலபமாய்ப் படித்து முடிக்கக்கூடும்.

ஆரம்பத்தில் எழுத்தே முக்கியம். எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும் ஔவை நால்படி, இதுவே ஔவையாகிய சரஸ்பதி ஆரம்பத்தில் சிறுவர்க்குப் புகட்டும் ஞானப்பால்.

காலால் நடப்பது கஷ்டமென்றால் தலையால் நடந்தால் முடியுமா?

ஓடும் ஆற்று நீரில் இறங்கும் துறை கண்டு இறங்க வேண்டும். துறையை விட்டு வேறிடத்தில் [illegible] இறங்கினால் அதற்கடுத்த கெபிப்பள்ளமிருக்கும். கடக்க முடியாது.

அதுபோல தமிழ் எழுத்தில் லேசானது என்றும் கஷ்டமானது என்றும் இல்லை. உபாத்தியாயரும் பிள்ளைகளைப்போல் ஒன்றும் தெரியாதவராய் இருக்கமாட்டார். மீன் குஞ்சும், பல்லிக் குஞ்சும், பாம்புக் குட்டியும் முட்டையை விட்டு வெளியானவுடன் தானே நீந்தி, ஓடிப் பிழைத்துக்கொள்ளுகின்றன. அதுபோல தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழ் படித்துக் கொடுப்பது சிரமமென்று பல எழுத்துக்களைப் பொறுக்கி எடுத்துப் படித்துக்கொடுக்கக் கூடாது. ஒ, கொ, ஙொ, சொ, என்று தலைகீழாய்ப் படித்தல் ஆரம்பத்தில் ஆகாது. குறிலும் நெடிலும் இணைத்தே படித்துக் கொடுப்பது நல்லது. பிழைகள் பொருந்திய பல வார்த்தைகள் பிள்ளைகளுக்குப் பொருத்தமானதல்ல. எழுத்தறிந்தால் எல்லாமறியும்.

ஜ, ஸ, ஷ, க்ஷ, ஹ என்ற வட எழுத்துக்களை முதல் வகுப்பிலேயே கற்றுக்கொள்ளவேண்டும் என்பது அவசியமில்லை. அப்படியானால், 2-வது வகுப்பில் புதிய எழுத்து ஒன்றும் படியாமல் ஆங்கிலத்தில் தாண்ட வேண்டுமென்ற ஆத்திரமோ? கொஞ்சப்பிள்ளைகளுள்ளதும், 4, 5 வகுப்புள்ள கிராமத்தின் ஒழுங்கில்லா பிள்ளைகளுக்குப் படித்துக்கொடுப்பதைவிட போர்டிங் ஸ்கூல்கள் போன்ற பள்ளிப்பிள்ளைகளுக்கு எத்தனையானாலும் படித்துக் கொடுப்பது லகுவாகும். ஏனென்றால் ஒழுங்கின ஆஜர், புஸ்தகம், சிலேற் இல்லாதிருத்தல், பள்ளிக்கூடத்தில் புஸ்தக உதவி நடந்தாலும் வீட்டப்பியாசத்துக்கு ஏதோன்றுமிராது. விளையாட்டு மிகுதியாலும் பெற்றோருக்கு உதவுவதாலும் வருஷ பரீட்சையில் 2 எழுத்துப் பதங்கூட தெரியாது உபாத்தியாயருக்கு வெட்கம். ஆகையால் முதல் வகுப்பிலேயே அநேகம் படித்துக்கொடுக்க ஆசை வைத்தலாகாது, கிராமத்து பள்ளிச் சிறுவர்களுக்குப் போதுமானதாய் இருக்க வேண்டும். விதை, குச்சிகளைக்கொண்டு எழுத்தமைப்பது மிகவும் சோம்பலானது. எண்ணிக்கைக்கு விதையை உபயோகிக்க வேண்டும். மணலில் எழுதுவது ஞாபகம் உண்டு, கிராமத்துக்கு ஏற்றது. சில நேரம் கரும்பலகையில் அப்பியாசிக்கலாம். மேற்கண்ட விஷயங்கள் அடங்கிய முறை பின்னால் அனுப்பப்படும்.

Devadanapatti
6—6—1928

V. M. Muthuswamy
Teacher,
Kallar School.

---



## சிறுவர் சிறுமிகளுக்கு

### உண்மை.

"நீ மரணபரியந்தம் உண்மையாயிரு."
(ஆரோக்கிய தூதிகையிலிருந்து).

நீங்கள் உங்கள் ஜீவகால முழுவதும் எல்லா விஷயங்களிலேயும் உண்மையாயிருக்க வேண்டும். நீங்கள் ஒருபொழுதும் மறந்துவிடக்கூடாத வார்த்தை உண்மை. உலகத்தில் காரிய சித்திஅடைகிற ஆண்களும் பெண்களும் உண்மையானவர்களே. கடைசியாக, நியாயத்தீர்ப்பின் நாளிலே ஜீவகிரீடம் பெறப்போகிறவர்களும் உண்மையாயிருப்பவர்களே யென்று நாம் நமது வாக்கியத்தில் வாசிக்கிறோம். நாம் நமது தேவனுக்கும் நமது வேலைக்கும் உண்மையாயிருப்போமேயானால், நிச்சயமாகவே நாம் உலகத்தில் சித்திபெறுவோம்.

ஒரு காட்டு ஓரத்திலிருந்த ஒரு பள்ளத்தாக்கிலே கொர்ஹார்ட் என்ற ஒரு ஜெர்மன் இடைப்பையன் தன் முதலாளியுடைய ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தான். அப்பொழுது காட்டிலிருந்து ஒரு வேட்டைக்காரன் வந்து, அவனைப் பார்த்து, "இதிலிருந்து அடுத்த ஊருக்கு எவ்வளவு மைல் இருக்கும்?" என்று கேட்டான்.

"ஆறு மைல் இருக்கும், ஐயா; ஆனால் அதற்கும் இதற்கும் ஒரு காலடிப் பாதைதான் இருக்கிறது" என்று பையன் சொன்னான்.

"நீ உன் ஆடுகளை இங்கே விட்டுவிட்டு, என்னோடே வந்து எனக்குப் பாதைகாட்டமாட்டாயா? எனக்கு ரொம்ப பசியெடுக்கிறது. பசியினால் என் காது அடைத்துப் போயிற்று, எனக்கு வழி தெரிகிறதில்லை, என்னோடே வந்தவர்களெல்லாம், எங்கேயோ நின்றுகொண்டார்கள். இந்த உதவிக்கு நான் உனக்கு வேண்டுமான பணம் தருவேன்" என்று வேட்டைக்காரன் சொன்னான்.

"நான் என் ஆடுகளை விட்டுவிட்டு வரமுடியாது, ஐயா. ஆடுகள் அங்கும் இங்கும் சிதறிப்போம். இந்தக் காட்டிலே ஓநாய்களும் கள்ளர்களும் அதிகம்" என்று பையன் சொன்னான்.

"அதற்கென்ன? இந்த ஆடுகள் உன்னுடைய சொந்த ஆடுகள் அல்லவே. ஓநாய்களாவது கள்ளர்களாவது இரண்டொரு ஆடுகளைப்பிடித்துக்கொண்டு போய்விட்டால், அது உன் முதலாளிக்கு எப்படித் தெரியும்? அவருக்கு அதிலே என்ன கெட்டுப்போகிறது? ஒன்றுமில்லை. நீ என்னோடே வந்து எனக்கு வழிகாட்டுவாயேயானால், நீ இப்படி ஆடு மேய்த்து ஒரு வருஷத்தில் சம்பாதிக்கிறதைவிட நான் உனக்கு அதிகமான பணம் தருவேன்."

"என்னுடைய நேரம் எனக்குச் சொந்தமானதல்ல. அது என் முதலாளிக்குச் சொந்தமானது. அவர் எனக்கு என் நேரத்துக்காகச் சம்பளம்போடுகிறார். நான் இந்த நேரத்தை உமக்கு விற்று, இரண்டொரு ஆடுகள் காணாமற்போகுமேயானால், நான் அவைகளைத் திருடினதற்குச் சமானமாகும், ஆகையால் உம்மோடு நான் வரக்கூடாது."

"நல்லது, அது உனக்கு முடியாவிட்டால் இதுவாவது செய். நான் இங்கே உட்கார்ந்து உன் ஆடுகளைப் பார்த்துக்கொள்ளுகிறேன். நீ பட்டணம் வரை போய், எனக்குக் கொஞ்சம் சாப்பாடும் ஒரு வழிகாட்டியும் பார்த்து வா"

பையன் தன் தலையை அசைத்தான். "உமது சத்தம் ஆடுகளுக்குத் தெரியாது. அதுவுமல்லாமல், நீர் என்னைக் கள்ளத்தனம்செய்யவும், என் எஜமானுக்கு என்னை நம்பிக்கைத் துரோகம் செய்யவும் ஏவினீர். நான் உம்மை எப்படி நம்பக்கூடும்? நீர் உம்முடைய வார்த்தையின்படியே நடப்பீர் என்று சொல்ல எனக்கு என்ன இடமிருக்கிறது?"

பையன் சொன்னதெல்லாம் உண்மையென்று வேட்டைக்காரன் அறிந்தானோ, அவன் தன் உடல் குலுங்கச் சிரித்துக்கொண்டு, பையனைப் பார்த்து, "அப்பா, நீ ஒரு நல்ல உண்மையான பையனென்று எனக்குத் தெரிகிறது. நான் உன்னை ஒருநாளும் மறக்கமாட்டேன். நீ எனக்கு வழியை மாத்திரம் காட்டிவிடு, நான் எப்படியாவது சமாளித்துக் கொள்ளுவேன்" என்று சொன்னான்.

கொர்ஹார்ட் தன்னுடைய கையிலிருந்த ஒரு கூடையைத் திறந்து, கொஞ்சம் ஆகாரம் எடுத்து, வேட்டைக்காரனுக்குக் கொடுத்தான். அந்த ஆகாரம் மிச்சம் கேவலமானதாயிருந்தாலும் வேட்டைக்காரன் அதை வெகு சந்தோஷத்தோடே வாங்கி, அவுக்கவுக் கென்று புசித்தான். சில நாட்களுக்குப் பிறகு, கொர்ஹார்ட் காட்டிலே தன்னிடத்தில் வழிகாட்டக் கேட்டவர் வேட்டைக்காரனாகிய மகாப் பிரபு என்று கேள்விப்பட்டான். அப்பிரபு கொர்ஹார்ட் மிகவும் உண்மையான பையனென்று அறிந்து, அவனை காலேஜிலே படிக்கவைத்தார். சில வருஷங்

களுக்குள்ளாக கெர்ஹார்ட் ஒரு பெரிய பணக்காரனாகவும் ஒரு நல்ல நகரவாசியாகவுமானான்.

உண்மையாயிருப்பது ஒரு நல்ல காரியம். அந்த மகாப் பிரபு கெர்ஹார்ட்டுடைய உண்மையை நினைவுகூர்ந்து அவனுக்குப் பலனளித்தார். தேவனும் அப்படியே செய்வார். இவ்வாக்கியத்தை உன் ஞாபகத்தில் வைத்துக்கொள். இதின்படி ஜீவிக்கப் பிரயாசப்படு. அப்போது உனக்கும் ஒரு ஜீவகிரீடம் கிடைக்கும்.

---

## அளவற்ற அன்பு.

முன் ஒரு காலத்தில் மிக்க வயதும் வேலைசெய்ய சத்துவமும் அற்ற விருத்தாப்பியனுமான போர்ச்சேவகன் ஒருவன் இருந்தான். அவன் வழியருகே உட்கார்ந்து வீணைவாசித்து வழி நடக்கிற ஜனங்களண்டை பிச்சை கேட்பது வழக்கம். ஒரு நாள் அவன் அதிகநேரம் வீணை வாசித்து கை சோர்ந்து களைப்படைந்து வீணையைக் கீழே வைத்துவிட்டு இன்னது செய்வதென்று தோன்றாதவனாய் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தான். போகிற வருகிற ஜனங்கள் அவனைக் கொஞ்சமும் கவனிக்கவில்லை. கடைசியாக ஒரு மனிதன் வந்து அவனை நோக்கி:

"என் சிநேகிதனே, நீ களைத்துப்போயிருக்கிறாய், உன்னால் வீணை வாசிக்கமுடியாது, நான் அதை எடுத்து உனக்காக வாசிக்கிறேன் என்று சொல்லி வாசிக்கத் தொடங்கினான். அந்த ஊரிலுள்ள ஜனங்கள் ஒருபோதும் கேட்டிராத அவ்வளவு இனிய இராகங்களை வாசிக்க ஆரம்பித்தான். ஜனங்கள் யாவரும் அவனைச் சூழ நின்று வேடிக்கை பார்த்தார்கள். இப்படியாக திரளான ஜனங்கள் வந்து கூடினார்கள். இந்த அன்னியன் வீணை வாசிக்கும்பொழுது பிச்சைக்காரன் தன் தொப்பியைக் கையில் பிடித்துக்கொண்டிருந்தான். ஜனங்களெல்லாரும் அதில் காசு போட்டார்கள். சீக்கிரத்தில் அந்தத் தொப்பி நிறைய காசு விழுந்தது. "அந்தப்பணத்தை உன் பையில் போட்டுவிட்டு மறுபடியும் உன் தொப்பியை நீட்டு" என்று அன்னியன் சொன்னான். பின்பு அவன் மறுபடியும் வீணையை அதிக இனிமையய் வாசிக்க ஆரம்பித்தான். அதைக் கேட்டுக்கொண்டிருந்த யாவரும் கண்ணீர்விட ஆரம்பித்தார்கள். இரண்டாம்தரம் அவன் தொப்பி நிறைய காசு விழுந்தபோது அன்னியன் வீணையைக் கீழே வைத்துவிட்டு அந்த விருத்தாப்பியனான போர்வீரனிடம் விடைபெற்றுக்கொண்டு தன் வழியே போய்விட்டான். அவன் புறப்பட்டுப் போனபின்பு ஜனங்கள் ஒருவரையொருவர் நோக்கி: "இது அதிசயமாயிருக்கிறதே, அந்த மனுஷன் யார்? அவன் எங்கிருந்து வந்தான்?" என்று விசாரிக்கத் தொடங்கினார்கள். அவன் உலகப் பிரசித்திபெற்ற வாத்தியக்காரனாகிய புட்சர் என்று ஒருவன் சொன்னான்.

அது வாஸ்தவம்தான். அவன் அந்த விருத்தாப்பியனான போர்வீரனுக்குப் பதிலாக அவன் பக்கத்தில் வந்து அவனுடைய தரித்திரத்தைத் தானும் சகித்து நின்றான். விருத்தாப்பியன் வாசிக்கக் கூடாதிருந்த அந்த வீணையை அவன் எடுத்து வாசித்தான். மன்னர்கள் முன்னும் இன்னும் மற்றப் பிரபுக்கள் முன்னும் நின்று வீணை வாசிக்கும் அந்தப் பெரிய மனுஷன் வழியருகே ஒரு பிச்சைக்காரன் பக்கத்தில் நின்று வீணை வாசித்தது எவ்வளவு இழிவான காரியம்! யாருமற்ற அந்த விருத்தாப்பிய போர்வீரனுக்கு உதவி செய்யவேண்டுமென்றே அவன் அப்படிச் செய்தான்.

இயேசுகிறிஸ்துவும் நமக்கு இப்பேர்ப்பட்ட காரியத்தைச் செய்திருக்கிறார். அந்தப் பிச்சைக்காரன் எவ்வண்ணமாக வழியருகே உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தானோ அதுபோல நாமும் பாவத்தில் அமிழ்ந்திடப்போய் உதவியற்றவர்களாயிருந்தோம். அந்த அன்னியன் வந்து எப்படி அந்தப் பிச்சைக்காரனுடைய வீணையை எடுத்துத் தான் வாசித்து இவ்விதமாக அவனுக்கு உதவி செய்தாரோ அதுபோல கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்து நமது பாவங்களைத் தாமே சுமந்து தீர்த்தார். நமக்குப் பதிலாக துன்பத்தையும் பாடுகளையும் அநுபவிக்க அவர் வெட்கப்படவில்லை. அவருடைய அளவற்ற அன்பும் இரக்கமும் அவ்வளவு பெரிதாயிருந்ததால் அவர் நம்மை நித்திய மரணத்திலிருந்து தப்புவிக்கும்படியாக தம்முடைய ஜீவனையும் கொடுத்தார். ஏசாயா 53: 3-9.

ஆ! இது என்ன அதிசயமான அன்பு! கிறிஸ்து நம்மை நேசித்து நமக்காகத் தம்மை ஒப்புக்கொடுக்க வெட்கப்படாதிருக்கும்போது நாம் அவரைப் பின்பற்ற ஏன் வெட்கப்படவேண்டும்? அவர் தம்மை முழுவதுமாக நமக்கு ஒப்புக்கொடுத்தாரே, நாம் அவருக்கு எதைச் செலுத்தினோம்? நமெல்லாருக்காக அவர் பாடனுபவித்தாரே, நாம் அவருக்காக பாடுகளை அநுபவித்தோமோ? நாம் செய்த பாவத்தின் தண்டனையிலிருந்து நம்மை மீட்டு இரட்சித்து அவர் இருக்கிற வண்ணமாக நாமும் இருக்கும்படியாக அவர் நம்மைப்போல் மனுஷனானார். ஆகவே, நாம் அவரை நேசித்து, அவருக்குக் கீழ்ப்படிந்து, அவரை கனம்பண்ணுவோமாக.

---

## ஆசிரியர்களின் ஒற்றுமையின்மை

'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்'

ஆரம்ப ஆசிரியர்களின் வறுமைத்தனத்திற்குக் காரணம் மேற்படி வாக்கியத்தை ஆராய்ச்சிசெய்யாததே. பள்ளிக்கூடங்களில் மேற்படி வாக்கியத்தைப் பிள்ளைகளுக்கு சவிஸ்தாரமாக கதைகள் மூலமாகவும் சம்பாஷணை மூலமாகவும் அபிநயப்பாட்டுகள் மூலமாகவும் வெகு விமரிசையாக எடுத்தோதுவார்கள். தவிரவும் பிள்ளைகளை அதன்படி நடக்கவேண்டுமென்று வற்புறுத்தியும் போதிப்பார்கள். தங்கள் விஷயத்தில் இந்த பழமொழி எங்குதான் ஒழிந்திருக்குமோ அது ஈசனுக்குத்தான் தெரியும். உபாத்திமைச் சங்கம் மாதமொரு முறை ஒவ்வொரு முக்கிய நகரங்களிலும் கூடிவருவது ஒருவராலும் மறுக்கமுடியாத விஷயம். இச்சங்கங்களிலும் இரு பிரிவாக சிலர் ஒரு விஷயத்தை ஆமோதிப்பார்கள், சிலர் அதைத் தவிர்ப்பார்கள். இவ்விதமாகச் சில இடங்களில் நடந்தேறிவருவதும் நமவரில் பெரும்பான்மையோருக்கு பட்டப்பகலிலும் வெட்டவெளிச்சம்போல் தோன்றுமன்றோ. அச்சங்கங்களில் சிலர் இவ்விருதிறக்காருக்கு யார்பக்ஷம் பேசுவது என்று பயந்துகொண்டு, சொன்னால் எருதுக்குக் கோபம் இறங்கச்சொன்னால் நொண்டிக்குக் கோபம் என்பதுபோல், ஒருவர் பக்கமும் பேசாமல் சும்மா இருந்துவிடுவர். ஆகையால் இம்மாதிரி சங்கம் நடைபெற்றால் இச்சங்கத்தில் என்ன விருத்தி ஏற்பட்டுக் கொண்டுவரப்படுமென்பதை அன்பர்கள் சற்று ஆராய்ச்சி செய்தால் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தன் மனச்சாட்சி எடுத்துக்கூறும். தவிரவும் அப்படிப்பட்ட சங்கங்கள் கூடுவதைப்பார்க்கிலும் கூடாமலிருப்பது ஆசிரியர்களுக்கு [illegible] தவிர குழப்பங்கள் இல்லாமல் ஒருவரை ஒருவர் [illegible] தன்னை மாத்திரம் [illegible] ஒரு பக்கமிருக்க நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்பதுபோல் [illegible] அப் பேசுவார் பக்ஷத்தில் நாலு பேர் சேர்ந்து அவர்களை ஆமோதிப்பார்களானால் முயலுக்கு மூன்று கால்தான் என்றே தீர்மானிக்கப்படுகிறது. இக்கலியுகமாகிய மலியுகத்தில் நடந்தேறி வருவதை யார்தான் இல்லையென்று மறுப்பார்கள். தான் அடர்ந்த வெள்ளாண்மை ஆள் அடர்ந்த படையென்னும் அநுவ வாக்கியம் பொய்யாகுமா? பணமும் ஆள்சேர்க்கையுமிருந்தால் அவன் எப்படியும் செய்யலாம். அவன் செய்வதற்கு ஆட்களும் ஏராளமாயும் எப்படியும் மாற்றிவிடுவார். அவன் இப்படியே [illegible] தொரு குறையின்மை நமது வாழ்வை [illegible] சொல்லத் தேவையில்லை. அவனுக்கு [illegible] மென்று நியாயமுள்ள எவரும் சொல்வார்களென்று நான் நினைக்கவில்லை. [illegible] ஆசிரியர் [illegible] திலும் நடந்துகொள்வதை இருவரும் படித்த தங்கள் கிராமத்திற்கு வந்து பொறுமையை நிலைநாட்டுவதற்குப் பதிலாக அவைகளை [illegible] கட்டி பத்திரமாக ஓர் மூலையில் போட்டு வைத்துவிட்டு வெறுங்கையுடன் சங்கத்தில் பேசுகின்ற ஆசிரியர்கள், இவ்வாறு குழப்பமுண்டாகும்படி சங்கத்தை நடத்தினால் நமக்கு நன்மை பயக்குமோ எங்ஙனம்? [illegible] வராதது ஒன்றுமில்லை என்பதுபோல ஆசிரியர்களாகிய நாம ஒற்றுமையாக நம்மை நாமே சீர்ப்படுத்திக்கொண்டு எக்காரியங்கள் நமக்குக் குறைவாயிருக்கிறதோ அவைகளை நமக்குக் கொடுக்கும்படியாக மேல் அதிகாரிகளுக்குத் தெரிவித்தால் நம்மைப் பாக்காமல் போவரோ? இம்மாதிரியாகவே ஒவ்வொரு உபாத்திமைச்சங்கத்திலிருந்து அதிகாரிகளுக்கு அடிக்கடி நமது குறைகளை எடுத்துக்காட்டினால் ஏன் ஆசிரியர்கள் கவலையை நீக்கப் பிரயாசப்படமாட்டார்கள்? அதைப்பற்றி யாராவது ஒரு ஆசிரியர் சங்கத்தில்பேசினால், ஆமாம் இந்த வருஷத்தில்தான் சம்பளம் உயரப்போகுதாக்கும் என்று மற்றொரு ஆசிரியர் உடனே பதில்கூறுவார். ஒற்றுமையில்லாத குடும்பம் ஒருமிக்கக்கெடும் என்பதுபோல் சங்கத்தில் சேர்ந்துள்ள ஒவ்வொரு அங்கத்தினரும் பொறுமையைக் கடைப்பிடித்து குழப்பம் இல்லாமல் சங்கத்தை நடப்பித்து வருவார்களானால் உபாத்தியாயர்களின் தரித்திர நிலை சொல்லாமலே குடியோடிப்போகுமென்பதை நான் சொல்லவும் வேண்டுமோ?

இட்டமுடனென்றலையில் இன்னபடி யென்றெழுதி
விட்டசிவனுஞ் செத்துவிட்டானோ —முட்டமுட்டப்
பஞ்சமேயானாலும் பாரமவனுக்கன்றோ
நெஞ்சமே அஞ்சாதே நீ. (ஔவையார்.)

R. அந்தோனி உபாத்தியாயர்,
R. C. கன்னர் ஸ்கூல், உச்சப்பட்டி.

---

## வெயிற்காலம், கோடைகாலம்

நம் தேசத்தில் வருஷத்தை 6 பருவங்களாக பிரித்திருக்கிறார்கள், (1) இளவேனிற்காலம், (2) முதுவேனிற்காலம், (3) கார்காலம், (4) கூதிர்காலம், (5) முன்பனிகாலம், (6) பின்பனிகாலம். இங்கே வேனிற்காலத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். நம்முடைய ஜில்லா [illegible] நாடானதால் அதிக உஷ்ணமான ஜில்லா. தவிரவும் பூமத்தியரேகைக்கு சமீபத்திலுள்ளது. கடற்கரைக்கு சமீபமாயிருந்தால் சமுத்திரக் காற்றால் குளிர்ச்சி உண்டாகும். இந்த வேனிற்காலத்தில் வியர்வை அதிகம் உண்டாகி தேகத்திலுள்ள ரோமத்துவாரங்களை வெகு சீக்கிரத்தில் அடைத்துக் கொள்ளுகிறது. அப்படி அடைத்துக்கொண்டால், முகைப்பரு, சிரங்குகள், தலைவலி, பொங்கு, முதலிய உபத்திரவங்கள் உண்டாகின்றன. இவைகளை நீக்கும் பொருட்டே இந்தக்காலத்தில் மட்டுமாவது காலையிலும் மாலையிலும் ஸ்நானம் செய்து தேகத்திலுள்ள அழுக்கை அவ்வப்போது போக்கவேண்டும். [illegible] இந்த ஜில்லாவின் 8 தாலுகாக்களிலும் மதுரைத் தாலுகா அதிக ஜனநெருக்கமுள்ள தாலுகாவானதாலும், பக்கத்தில் வசிக்க உயர்ந்த மலைகள் இல்லையாதலாலும், அதிக உஷ்ணமுள்ளதென்பதை நிதர்சனமாக மதுரை நகரில் வசிக்கும் அநேகர் நேரில் போய்ப் பார்த்தவர்களுக்கே தெரியும். உடைகள் இந்தக் காலத்தில் வெகு சீக்கிரம் இந்த வியர்வை நீரால் அழுக்கடைந்து விடுகிறது. அந்த உடைகளை திரும்ப [illegible] துவைக்காமல் கட்டிக்கொள்வதால் ரோமத்துவாரங்கள் அடைபட்டு அநேக வியாதிகளுக்கு உட்படுகிறோம். குடியிருக்கும் வீடுகளில் கதவுகளையும், ஜன்னல்களையும் திறந்து வைப்பதை அதிகம் கவனிக்கவேண்டும். வீட்டுக்குள் படுப்பவர் அநேகர் வியர்வைக் கட்டிகளால் அவஸ்தைப்படுவதை நாம் பார்த்திருக்கிறோம். இதற்காகவே அநேகர் திறந்த வெளியிடங்களில் இந்தக் காலத்தில் படுக்கிறார்கள்.

சிகிச்சை:—இந்தக் காலத்தில் காப்பி முதலான உஷ்ணத்தைத்தரக்கூடிய பானங்களைப் பருகும் வழக்கத்தை நிறுத்திவிடுவது நல்லது. இரவு தண்ணீரில் போட்டிருந்த பழையசாதம் சாப்பிடுவது நல்லது. குறைந்தபக்ஷம்

2 வேளை ஸ்நானம்செய்வது நல்லது. பூமி மட்டத்திலிருந்து உயர்ந்த மலைப்பிரதேசங்களில் வசித்து வருவது நல்லது. சாபத் முதலான குளிர்ச்சியைத்தரத்தக்க பானங்களைப் பருகுதல் நல்லது. இந்த விதங்களில் நடந்து வந்தால் இந்தக் கோடைகாலத்தில் நமக்கு மேற்சொன்ன வியாதிவராமல் தடுத்துக்கொள்ளலாம்.

இதற்காகவே நம்முடைய ஜில்லா வாசிகளில் சில கனவான்கள் "கொடைக்கானல்" என்ற குன்றின்மேலும் மதுரை ஜில்லாவில் உள்ள சில கனவான்கள் "நீலகிரி" என்னுங்குன்றின்மேலும் இந்தக் கோடைகாலத்தில் போய் வசிக்கிறார்கள்.

என். வெங்கிடேஸ்வர அய்யர்,
கள்ளர் ஸ்கூல் ஹெட்மாஸ்டர்,
போடி, ஸ்ரீரங்கபுரம்.

---

## ரயில் சங்கிலியை இழுத்த வழக்கு
## அப்பீலில் அபராத ரத்து

மதுரை, ஜூன் 8

சென்ற டிசம்பர் 20-ந்தேதி யன்று மதுரைக்கும் சிலைமான் ஸ்டேஷனுக்குமிடையே வண்டி புறப்பட்ட சிறிது நேரத்துக்குள்ளேயே அபாய அறிவிப்புச் சங்கிலியை அகாரணமாக இழுத்து நிறுத்தியதாக இந்திய ரயில்வே சட்டத்தின் 108-வது பிரிவின்கீழ் தென் இந்திய ரயில்வே கம்பேனியாரால் குற்றம் சாட்டப்பட்டு மதுரை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டால் ரூ. 30-அபராதம் விதிக்கப்பட்டதற்கு விரோதமாக அய்யாவு அய்யர் என்னும் செனாவ்டார் சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் முன் அப்பீல் செய்திருந்ததில் சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் அபராதத்தை ரத்து செய்தார்.

சென்ற டிசம்பர் 20-ந் தேதி மனுதார் மதுரை ஸ்டேஷனில் வண்டி புறப்படும்போது ஓடிவந்து வண்டியிலேறிக்கொண்டு தமது நண்பர்களும் ஏறிவிட்டனரா என்று வெளியே எட்டிப்பார்த்தபோது அவர் சட்டைப்பையிலிருந்து 108-5-0 ரூபாயுள்ள பர்ஸ் தவறி கீழே விழுந்துவிட்டதாயும், உடனே அவர் அபாய அறிவிப்புச் சங்கிலியை இழுத்து வண்டியை நிறுத்தியதாயும், பிறகு அவர் ரயில்வே கார்டிடம் விஷயமறிவித்து தன் பணப்பையைத் தேடச் சென்றபோதிலும் கார்டு தடுத்து தம்மை பரமக்குடி ஸ்டேஷன் மாஸ்டரிடம் ஒப்படைத்ததாயும் கூறினார். மனுதார் சார்பாகத் தோன்றியிருந்த திரு. எல். கே. துளசிராம் மனுதார் சங்கிலியை இழுத்து வண்டியை நிறுத்துவதற்கு போதிய காரணமிருந்திருப்பதாக எடுத்துக்காட்டினார். சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் மனுதார் தன் பணப்பை விழுந்ததால் அதனைத் தேடி எடுக்க வண்டியை நிறுத்தச் செய்தது குற்றமாகா தெனத் தீர்மானித்து கீழ் கோர்ட் அபராதத்தை ரத்து செய்து, அபராதம் செலுத்தப்பட்டிருந்தால் அதனைத் திருப்பிக் கொடுத்துவிடும்படி உத்தரவிட்டார்.

---

## குருட்டுப்பெண் சிசுக்கொலை.
## கொடியவர்களிடமிருந்து தப்ப சிறைவாசம்.

இருபத்தைந்து வயதுள்ள முகமத் மோகானியா என்னும் குருட்டுப் பெண் தன்னுடைய கெட்ட நடத்தையினால் பிறந்த குழந்தையை உடனே கொன்றுவிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் உனா செஷன்ஸ் ஜட்ஜ் அப்பெண்ணின் நிலைமைக்கு பரிதாபப்பட்டு அவளுக்குத் தீவாந்தர தண்டனை விதித்தபோது பின் வருமாறு குறிப்பிட்டார்: அவள் கண் தெரியாமலும் பிறர் உதவியின்றியும் வறுமையால் துன்பப்பட்டும் அத்தகைய கொடுமை செய்ய வேண்டியதானதற்குப் பரிதாபப்பட வேண்டியதுதான். அப்பெண் பாவம் செய்ததாகச் சொல்வதைவிட அவளுக்குப் பாபம் செய்யப்பட்டதாகச் சொல்வதே பொருந்தும். இக்கொடுமைக்குப் பொறுப்பாளி அக்கம் பக்கத்தில் வசிக்கும் அற்பன் ஒருவனேயாகும். அவள் சிசுவைக் கொடுமையாகக் கொலை செய்திருந்தபோதிலும் தீவாந்தர தண்டனை விதிப்பதே சரியான நீதி வழங்குவதாகும். சிறைச்சாலையில் அவள் நன்குபாதுகாத்து கவனிக்கப்படுவதுடன், கொடியவர்களின் சங்கடங்களிலிருந்து காப்பாற்றப்படுவாள் என்பதில் சந்தேகமில்லை.

---

## எருதைத் துன்புறுத்திய வழக்கு
## வண்டிக்காரனுக்கு 100 ரூபாய் அபராதம்

பூனா, ஜூன் 7.

கசாப்புக்காரனான ஜானு சகாரம் என்பவன் மாட்டுத் தொட்டிக்குக் கொண்டுபோன ஒரு எருதை வண்டியில் கட்டி மிகக் கொடுமையாக உதைத்து ஓட்டிக்கொண்டு போனதாக ஜீவ ஹிம்சை நிவாரண சங்கத்தாரால் குற்றம் சாட்டப்பட்டிருந்த வழக்கில் மாஜிஸ்ட்ரேட் எதிரிக்கு ரூபாய் 100 அபராதம் விதித்து, அபராதம் செலுத்தத் தவறினால் 20 நாட்கள் கடுங்காவல் தண்டனைக்குட்படவேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தார். எதிரி மாட்டை வண்டியில் கட்டி துன்புறுத்தி ஓட்டிச்சென்றதைக் கண்ட திரு. பட்டேல் அதனை ஜீவஹிம்சை நிவாரண சங்கத்தாருக்கு அறிவித்து எதிரிமீது குற்றம் சாட்டி விசாரணைக்குக் கொண்டுவந்தார். அந்த மாட்டை வண்டியில் கட்டிக்கொண்டு போகாமல் சாதாரணமாக மாட்டுத் தொட்டிக்குக் கொல்வதற்காக ஓட்டிச்செல்வது அதனை விட கொடுமையானதென்று எதிரி தரப்பில் எடுத்துக் காட்டப்பட்டது. ஆயினும் மாஜிஸ்ட்ரேட் எதிரி குற்றம் செய்திருப்பதாக தீர்மானித்து எதிரிக்கு மேற்குறிப்பிட்டவாறு தண்டனை விதித்தார். எதிரி அபராதம் செலுத்தவில்லை எனத்தெரிகிறது.

---

## கைதிகளின் சந்தோஷம்.
## கைவிரல் ரேகை குறியை மாற்ற முடியுமா?

குற்றவாளிகள் முகத்திலும் மற்றை அவயவங்களிலும் ஒட்டுப்போட்டு ரண சிகிச்சைசெய்யும் புதிய நூதன முறையினால் பழைய குற்றவாளிகளுக்கு மகிழ்ச்சியையும்



அதிகாரிகளுக்குத் திகிலையுமுண்டுபண்ணியிருக்கின்றது. இத்தகைய புதிய முறை அமெரிக்காவில்தான் சகஜமாயிருக்கின்றது. இவ்வருடத்துவக்கத்தில் அமெரிக்காவிலுள்ள சான் பிரான்ஸிஸ்கோ நகரிலிருக்கும் சான்குவென்டன் சிறைச்சாலையிலிருந்த பழைய கைதியொருவன் விடுபட்டவுடன் திருந்தி நல்வாழ்க்கையிலீடுபடுவதாக வாக்களித்துத் தன்முகச் சாயலை மாற்றும்படி வேண்டிக்கொண்டு, தான் அப்படியே வெளியே சென்றால் ஒரு வேலையும் கிடைக்காமல் பட்டினி கிடந்து சாக வேண்டியதுதான் என்று முறையிட்டுக்கொண்டான். பிறகு அக்கைதி சிறைச்சாலை வார்டனை, தான் ரணசிகிச்சை பெற அனுமதியளிக்குமாறு மன்றாடினான். சிறைச்சாலை அதிகாரிகள் சிறிது கலந்தாலோசித்து அக்கைதியின் விருப்பத்திற்கிணங்கினார்கள்.

ஒட்டு ரணசிகிச்சை செய்யும் நிபுணர்கள் சிதைந்திருந்த அவன் மூக்குத்தண்டில் அவன் காதில் பருத்திருந்த பாகத்தை அறுத்து ஒட்டுப்போட்டு மூக்கைச்சரி செய்ய முயன்றனர். அம்முயற்சி வெற்றியடைந்து வியக்கத்தக்க பலனளித்தது. இச்சிகிச்சைக்குப்பின் அவனை அவனுடைய பழைய சகாக்களான கேடிகளும் அடையாளம் கண்டுபிடிக்க முடியாமற்போயிற்று. இத்தகைய ஆச்சரியமான மாறுதலின் சக்தியை அக்கைதி பின் தன் சகாக்களுக்கு விளக்கியபோது விடுபட்ட கைதிகள் பலர் அத்தகைய ரணசிகிச்சை பெற முன்வந்துவிட்டனர். இந்த மாறுதல்களின் சம்பந்தமாக அதிகாரிகளுக்கு ஏற்படும் கஷ்டங்களைக் குறித்து பத்திரிகைகள் பலவாறு விவாதித்தெழுதியிருக்கின்றன. இதன் சம்பந்தமான விவாதத்தில் கைகட்டை விரல்ரேகைக் குறிகளையும் ரணசிகிச்சையினால் மாற்றிவிடலாமென்றும் எடுத்துக் காட்டப்பட்டது. இதனால் இயற்கையாகவே குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு அதிகாரிகள் நம்பிக்கையாக உபயோகித்துவரும் கைகட்டை விரல் ரேகைக்குறி எடுக்கும் முறை முழுதும் ஒன்றுக்கும் உபயோகமற்றதாகிவிடும். இத்தகைய ரண சிகிச்சையில் தோலின் மேல் அடுக்கை நீக்கி சதையை ஒன்று கூட்டப்படுவதாயும், இதனால் முக்கியமான கோடுகள் வேறுவிதமாகப் பதிகின்றன வென்றும் சொல்லப்படுகின்றது. விரல் கைக்குறியை இவ்வாறு மாற்றுவது மிகவும் கஷ்டந்தான். விரல் ரேகைக் குறிகள் விரலின் உட்புறத்திலிருந்து பதிகின்றனவேயன்றி தோலின் மீதிருந்தல்ல. விரல் ரேகைக் குறிகளை மாற்றவேண்டுமானால் விரலின் மூலாதாரத்தையும் வியர்வை நரம்பையுமே துணிக்கவேண்டியது அத்தியாவசியமாகும். இவ்வாறு செய்தால் இரத்த ஓட்டம் நின்று விரல் ஒன்றுக்கு முதவாமற் போய்விடும். இத்தகைய சங்கடங்களால் கைதிகள் தங்கள் கைவிரல் ரேகைக்குறியை மாற்றிக் கொள்ள வேண்டுமானால் அவ்விரல் பயனற்றுப் போய் விடுவதால் அந்த ரணசிகிச்சையை அவர்கள் விரும்பவில்லை. ஆதலால் ஒரு கைதி தன் விரலைத்தானே தறித்துவிட்டாலன்றி கைகட்டை விரல் ரேகைக்குறியை மாற்றிக்கொண்டு அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்படுவதிலிருந்து தப்புவதற்கு வழியொன்றுமில்லை.

## கைதியிடம் திருடின கான்ஸ்டேபிள்
## எதிரிக்கு 9 மாதக் கடுங்காவல்.

லக்ஷ்மணபுரி, ஜூன் 8.

சர்தார் மல்லினுவிலுள்ள ஜில்லா மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு உதவி கவ்னன் மோஹரராயிருக்கும் மும்தாஜ் அமத் என்னும் போலீஸ் கான்ஸ்டேபிள் காவல் தண்டனையை அனுபவித்துவரும் பர்சந்த் அலி என்னும் கைதியின் சொத்தையே திருடியதாக குற்றம் சாட்டப்பட்டு அதே மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டான். கைதி பர்சந்த் அலிக்குச் சொந்தமான சொத்துக்களை அவன் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டபோது ஜாபிதாவில் குறித்துவைத்துக்கொண்ட எதிரி மும்தாஜ் அமத், அவனுக்கு தண்டனைத் விதிக்கப்பட்டு ஜெயிலுக்கு அனுப்பப்பட்ட உடனே அந்த சொத்துக்களையும் சிறைச்சாலைக்கு அனுப்பாமல் தயாரித்து அனுப்பியபோது கைதியின் பவுண்டன் பேனா ஒன்றை அந்த ஜாபிதாவிலிருந்து அடித்துவிட்டு தானே எடுத்துக்கொண்டான். கைதி பர்சந்த் அலி சிறைச்சாலையில் சேர்க்கப்பட்ட தன் சொத்துக்களின் ஜாபிதாவைத் தணிக்கை செய்தபோது அதில் தன் பவுண்டன் பேனா களவாடப்பட்டதை அதிகாரிகளுக்குத் தெரிவித்தான். பிறகு போலீசார் அதன் சம்பந்தமாக நன்கு விசாரித்து எதிரியின் மீது குற்றம் சாட்டினார்கள். மாஜிஸ்ட்ரேட் எதிரி குற்றம் செய்திருப்பதாக தீர்மானித்து அவன் சர்க்கார் உத்தியோகஸ்தனாயிருந்தும் அத்தகைய அயோக்கியச் செயல் செய்ததைப் பலமாகக் கண்டித்து பிறருக்கும் ஒரு படிப்பினையாயிருக்கவேண்டுமென்று எதிரிக்கு 5 மாதக் கடுங்காவல் தண்டனையும், 10 ரூபாய் அபராதமும் விதித்து, அபராதம் செலுத்தப்பட்டால் அதனை பவுண்டன் பேனா சொந்தக்காரனான கைதி பர்சந்த் அலிக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்றும், அபராதம் செலுத்தாவிட்டால் பின்னும் ஒரு மாதக் கடுங்காவல் தண்டனைக்குட்பட வேண்டுமென்றும் உத்தரவிட்டார்.

---

## ஆட்டுப்பால் கொடுக்கமறுத்ததால் கொலை
## ஒருவன் குத்துண்டான்.

ஸ்ரீவில்லிபுத்தூர், ஜூன் 8. சுமார் நான்கு நாட்களுக்கு முன் இவ்விடத்திற்கு அருகாமையிலுள்ள சிறு கிராமத்தில் வயலில் இரண்டு ஆட்டு மந்தைகள் மடக்கி வைக்கப்பட்டிருந்தபோது ஒரு இளைஞன் மந்தையின் சொந்தக்காரனான இடையனிடம் சிறிது ஆட்டுப்பால் கறந்துகொள்ள அனுமதி கோரினான் அதற்கு இடையன் மறுத்ததால் இருவருக்கும் சச்சரவேற்பட்டு வாய்ச்சண்டை கைச்சண்டையாகிவிட்டது. இதனால் அவர்களில் ஒருவன் தன்னிடமிருந்த கத்தியை எடுத்து மற்றவன் வயிற்றில் குத்திவிட்டான். குத்துண்டவனை ஸ்ரீவில்லிபுத்தூர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டது. அவன் மரண வாக்குமூலம் கொடுத்தபின் சிறிது நேரத்திற்கெல்லாம் இறந்துவிட்டதாகத்தெரிகிறது.

## கிழவியின் தீரம்.

### திருடனைக் கட்டிப் பிடித்துவிட்டாள்.

கண்டாவா, (மத்திய மாகாணம்).

ஜூன் 8.


மத்திய இந்தியாவிலுள்ள தேவாஸ் என்னுமிடத்தைச் சேர்ந்த கயாபாய் என்னும் இந்து வகுப்புக் கிழவி சமீபத்தில் தன் வீட்டில் திருடவந்த மூன்று பட்டாணிகளில் ஒருவனைத் தைரியமாக இடுப்பைக் கட்டிப் பிடித்துவிட்டாள். ஒருநாளிரவு மூன்று காபூலி பட்டாணிகள் அக்கிழவியின் வீட்டில் திருடச் சென்று வீட்டிக்குள் சென்றதும் இருட்டில் ஒன்றும் தெரியாததால் திருடர்களில் ஒருவன் தன்னிடமிருந்த மெழுகு வர்த்தியைக் கொளுத்திக்கொண்டு ஆராயத் துவக்கினான். திடீரென்று வெளிச்சம் தோன்றியதும் அங்கு படுத்திருந்த கயாபாய் என்னும் அக்கிழவி பெரும் கூச்சலிட்டுக்கொண்டு எழுந்துவிட்டாள். திருடன் உடனே தப்பியோட முயன்றபோதிலும் அக்கிழவி அவனுடைய இடுப்பைக் கட்டிப் பிடித்து ஓடமுடியாமல் தடுத்துவிட்டாள். திருடன் கிழவியின் பிடியிலிருந்து திமிறிக்கொண்டோட முயன்றுகொண்டிருக்கையில் அவ்வீட்டிலிருந்த ஒரு சிறு பெண் கூப்பிட, மூவர் ஓடிவந்து கிழவிக்கு உதவி புரிந்து பட்டாணியைக் கட்டிப்போட்டு பிறகு போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

---



## விளம்பரம்

### விவசாயிகளுக்கு கஷ்டம் நீங்கியது.

தண்ணீர் இறைக்க மாட்டைக்கட்டி இனி கஷ்டப்படவேண்டியதில்லை. வெகு உறுதியும், விலை குறைந்ததும், நீடித்தகாலம் வேலைசெய்யக்கூடியதுமான



விட்டி இஞ்சின்



கோல்ட்ஸ் பம்பும்

இக்கஷ்டத்தை நீக்கும். இஞ்சின் மண்ணெண்ணெய்யில் ஓடக்கூடியதால் செலவு வெகு சொற்பம். ஒருமணி நேரத்திற்கு சின்ன இஞ்சினுக்கு அணா 3-தான் செலவு.

| | | |
|---|---|---|
| 8 கமலைத்தண்ணீர் அடிக்கும் 6 குதிரைப் பவர் இஞ்சினும் 4" பம்பும் | ரூ. | 790 |
| 5 கமலைத்தண்ணீர் அடிக்கும் 4 குதிரைப் பவர் இஞ்சினும் 3" பெரிய பம்பும் | ரூ. | 575 |
| 4 கமலைத்தண்ணீர் அடிக்கும் 4 குதிரைப் பவர் இஞ்சினும் 3" சின்ன பம்பும் | ரூ. | 545 |
| 2 கமலைத்தண்ணீர் அடிக்கும் 3 குதிரைப் பவர் இஞ்சினும் 2" பம்பும் | ரூ. | 385 |

எங்கள் ஆட்களைக்கொண்டு திருப்தியாய் பிட்டிங் செய்வதோடு, நாங்களே அடிக்கடி இஞ்சின் ஓடுவதை நேரில் பார்த்து வருவோம். சிறு தப்பிதங்களை செலவில்லாமலே சரிப்படுத்துவோம்.

இத்துடன் இன்னும் வேண்டிய விபரங்களுக்கு எங்களிடம் நேரில் எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

பூரண அண் கோ.,
இஞ்சினியர்ஸ் & கமிஷன் ஏஜண்ட்ஸ்.
பசுமலை, S. I.


அமெரிக்கன் மிஷன் "லிருக்ஸ்" பிரஸ், பசுமலை, 1928.

REG. NO.–M. 2146

# THE Piramalai Reformer

# பிரமலை சீர்திருத்தன்.

15 OCT 1928 MADRAS

"அநியாயஞ்செய்வது ராஜாக்களுக்கு அருவருப்பு; நீதியினால் சிங்காசனம் உறுதிப்படும்."

Vol. VIII.] செப்டேம்பர் 1928 [இலக்கம் 5

## பஞ்சாங்கம்.

1928 | விபவஹுல ஆவணிமீ | செப்டெம்பர்மீ | விபவஹுல புரட்டாசிமீ | 1928

| Sunday ஞாயிறு | Monday திங்கள் | Tuesday செவ்வாய் | Wednesday புதன் | Thursday வியாழன் | Friday வெள்ளி | Saturday சனி |
|---|---|---|---|---|---|---|
| 30 15 | | | | | | 1 ஆவணி 17 |
| 2 18 | 3 19 | 4 20 | 5 21 | 6 ※கார். 22 | 7 23 | 8 24 |
| 9 25 | 10 26 | 11 27 | 12 28 | 13 29 | 14 ● அமா. 30 | 15 31 |
| 16 புரட்டாசி 1 | 17 2 | 18 3 | 19 4 | 20 5 | 21 6 | 22 7 |
| 23 8 | 24 9 | 25 10 | 26 11 | 27 12 | 28 13 | 29 ○ பௌர் 14 |

*Patron.*—M.R.Ry. Rao Bahadur,
A. J. Vethanayaga Thevar Avl.,
Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam,
Usilampatti.

*Manager.*—Rev. B. S. Stoffer,
Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-ள-ள-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் பி. எஸ். ஸ்டோபர் துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

கள்ளர் ரிக்ளமேஷன் சூப்ரண்டெண்டு,
மதுரை, 31—7—1928.

C. No. 525/Edn. 28.

சர்க்குலர்.

கள்ளர் ஸ்கூல் உபாத்தியாயர்கள் பள்ளிக்கூடப்பிள்ளைகளின் பெயரை அட்டெண்டென்ஸ் ரிஜிஸ்தரிலிருந்தும் அட்மிஷன் ரிஜிஸ்தரிலிருந்தும் தங்களிஷ்டப்படி அடித்துவிடுகிறார்கள். அவர்கள் அப்படிச் செய்யக்கூடாது என்று அடிக்கடி சர்க்குலர்கள் அனுப்பியிருந்தும் அவர்கள் கவனிப்பதாகப் புலப்படவில்லை. ஷை வழக்கம் இனி நின்றுவிடவேண்டும். ஏதாவதொரு பிள்ளையைப் பள்ளிக்கூட ரிஜிஸ்தரிலிருந்து எடுக்கவேண்டுமானால் அதற்குரிய காரணங்களை நமக்கு விபரமாக ரிப்போர்டு செய்து அதன்பேரில் நம்முடைய உத்தரவை பெற்றுக்கொண்டுதான் அந்தப் பிள்ளையை விலக்கவேண்டும்.

சூப்பர்வைசர்கள் பள்ளிக்கூடங்களை இன்ஸ்பெக்ஷன் செய்யும்போது ஷை உத்தரவு சரியாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறதா என்பதைக் கவனிக்கவேண்டும். ஷை உத்தரவை நிராகரித்த உபாத்தியாயர்களிடம் எக்ஸ்பிளனேஷன் வாங்கி சூபர்வைசர்கள் நமக்கு ரிப்போர்டு செய்யவேண்டும்.

(Sd.) K. P. Janardhan Rao,
சூப்பிரண்டு கள்ளர் ரிகளமேஷன்.

---

பிடிபடா.

கூக்குறல் கருவத்தேவன் மகன் பெருமாள் தேவன், பெரியகுளம் தாலுகா, பிரதுக்கரன்பட்டி கிராமம், வயது [illegible], உயரம் 5 அடி 7 அங், கருப்பு நிறம், இடதுபுறம் மார்பில் கட்ட பெரிய தழும்பு, வலது கை தோள் பட்டை ஊனமாயிருக்கும்.

பந்துக்கள்: போடி, சங்கராபுரத்தில் தன் மகன் விருமாண்டித்தேவன். பெரியகுளத்தில் மகன் கருவாயி. இவன் ஒரு வருஷமாக தலைமறைவாய் இருக்கிறான். இந்த நபரை பஞ்சாயத்தார்கள் கண்டுபிடித்து சமீபத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனில் ஒப்புவிக்கவேண்டும். செய்யும் முயற்சிகளுக்குத் தகுந்த வெகுமதி அளிக்கப்படும்.

K. P. ஜனார்த்தன ராவ்,
சூப்பிரண்டு கள்ளர் ரிக்ளமேஷன்

---

தலைமறைவாய்த் திரியும் பிரமலைக் கள்ளருடைய அங்க அடையாள ஜாப்தா.

போடிநாயக்கனூர் ஸ்டேஷன்.

கிராமம் சூப்பிநாயக்கன்பட்டி.

பெயர் பூச்சித்தேவன். சி.டி. நிர். 24768. வயது 28/28 கருப்பு நிறம். உயரம் 5 அடி 6 அங்குலம், அம்மை வார்த்தமுகம், முதுகில் இடதுபுறம் தழும்பு 1. வலது தொடையில் ½ அங்குல அகலமுள்ள தழும்பு 1. வலது முன்கையில் வால் இல்லாத தேள் பச்சை.

தகப்பன் மாயத்தேவன். தும்மக்குண்டில் பெண் கொடுத்த மாமன் பெரிய ஒச்சாத்தேவன். வைப்பாட்டி சீனியம்மாள், போடி—சூப்பிநாயக்கன்பட்டியிலிருக்கிறாள்.

பிரமலைக்கள்ளன். இவன் 21—5—28 முதல் தலைமறைவாயிருக்கிறான். இவன், கன்னக்களவு திருட்டு முதலிய குற்றங்களைச் செய்யக்கூடியவன்.

எல்லாப் பஞ்சாயத்தார்களும் இந்த நபரைப்பற்றி கவனிக்கவேண்டும். இவன் அகப்பட்டால் பிடித்து சமீபத்திலிருக்கிற ஸ்டேஷனுக்கு அனுப்பிவிடவேண்டும்.

---

C. No. 561/C.T./1928.

பாதிக்கப்பட்டி வெள்ளையத்தேவன் மகன் சீனித்தேவன் என்ற காமாட்சித்தேவன் சி. டிவிஷன் செக்ஷன்படி 13—5—28-ல் ஒரு வருஷத்திற்கு தீர்ப்புப்பெற்றான். திருச்சினாப்பள்ளி ஜெயிலில் (C.C. 46 / 28 S.D.M. தேவகோட்டை பைலில்) திருச்சினாப்பள்ளி ஜெயிலிருந்து 12—7—28ல் தப்பியோடிப்போனான்.

அவன் அங்க அடையாளங்கள்.

வயது 20/28 உயரம் 5 அடி 3 அங்குலம்; நிறம் கறுப்பு, நெற்றியில் பச்சை பொட்டு மார்க்கு, வலது பெருவிரலில் ஒரு தழும்பு, தலையின் இடதுபக்கம் ஒரு தழும்பு, இடது தோள் பட்டையில் ஒரு மச்சம்.

இவன் கருகப்பிலை K. 5 கிராமத்தைச்சேர்ந்தவன். பிற்பாடு மதுரை 7 K. காளிக்கப்பானுக்கு குடியிருப்பை மாற்றிக்கொண்டான்.

கள்ளர் ரெக்லமேஷன் சூப்பிரண்டு.

---

## இல்லற ஒழுக்கம்

(ஐக்கிய சபைத் தூதிகையிலிருந்து)

பொதுவாய் ஒரு வாலிபன் அல்லது வாலிப ஸ்திரீ தன் பள்ளிக்கூடத்தை அல்லது கலாசாலையை முடித்து வெளியேறி குடும்ப ஜீவியத்திற்குள் பிரவேசிக்கும்போது தன் படிப்பு எல்லாம் முடிந்துவிட்டது என்று எண்ணுவது சகஜம். இது ஒரு தப்பெண்ணம். உள்ளபடி சொன்னால் பாடசாலையை விட்டு, குடும்ப ஜீவியத்துக்குட் பிரவேசிக்கும்போதுதான் முன்னிலும் அதிக கஷ்டமான படிப்பைத் துவக்குகிறார்கள். அந்தப் பாடசாலைக்குப் பெயர் ஜீவிய பாடசாலை, குடும்ப ஜீவியமாகிய இந்தப் பாடசாலையில் நாம் எப்படித் தேறப்போகிறோம் என்று நாம் தீர்க்காலோசனை செய்யவேண்டியது அவசியம். இந்தப் பாடசாலையில் கற்றுக்கொடுக்கும் உலக உபாத்திமார் கிடையாது. நாம் பயத்தோடும் நடுக்கத்தோடும் நமது இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படவேண்டும், பிலி. 2 : 12. நமது பிரயாசங்களில் உதவி செய்கிறவர் நமது பரம பிதாவே. ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார். பிலி. 2 : 13. மேலும் பரி. பவுல் சொல்லுகிறபடி "ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால் தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்." 1 தீமோ. 3 : 5. நமது இல்லற ஜீவியத்தில் கவனிக்கவேண்டிய சில ஒழுங்குகளை இங்கு கூறுகிறோம்.

1. கோபத்தை அடக்குதல். குடும்ப ஜீவியத்தில் சிற்சில சமயங்களில் கோபப்படக்கூடிய காரியங்கள் நேரிடும். மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ் சொற்களோ கோபத்தை எழுப்பும். கோபக்குணமுள்ள ஒரு மனுஷன் தூஷண வார்த்தைகளைப்பேசி குரூர செய்கைகளை நடப்பிக்கும் காட்சி எவ்வளவு விசனமானது. கோபமும் தூஷண வார்த்தைகளும் குரூரச் செய்கைகளும் அந்த மனுஷனுக்கு தீமையை விளைவிக்கிறதேயன்றி நன்மை வருவிக்கிறதில்லை. ஆதலால் கோபத்தை அடக்கவேண்டும்.

2. பொறுமை. எந்த விஷயத்திலும் நீ நினைக்கிறதும் செய்கிறதும்தான் சரி என்று எண்ணாதே. மற்றவர் அதே விஷயத்தைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று கவனிக்கவேண்டும். அவர்கள் பெரியவர்களானாலும் சிறுவர்களானாலும் அவர்களுடைய வார்த்தைகளைப் பொறுமையாய்க் கேட்கவேண்டும். சமாதானமான ஜீவியத்துக்கு பொறுமை மிகவும் அவசியம். "பொறுத்தார் பூமி ஆள்வார்" என்னும் முதுமொழி உண்மையே.

3. அமைதல். எந்தக் காரியத்தையும் ஆத்திரத்தோடும் பதஷ்டத்தோடும் செய்யாதே. அமைதியாய்ச் செய்யும் காரியங்களே சந்தோஷத்தைக்கொடுக்கும். கோப முகத்தோடும் ஆத்திரத்தோடும் கலக்கமுள்ள குணத்தோடும் புருஷன் மனைவி நடமாடினால், அந்த வீட்டிலுள்ள எல்லாரும் சண்டையும் சச்சரவுமாய் நடப்பார்கள். ஆனால் முகமலர்ச்சியாயும் உற்சாகத்தோடும் அமைதலுமாயும் நடந்தால், வீட்டிலுள்ள யாவரும் மிகவும் உற்சாகமாயும் சந்தோஷமாயுமிருப்பார்கள். நீ சிரித்தால் உலகமெல்லாம் உன்னோடு சிரிக்கும், நீ அழுதால் நீ தனிமையாகவே அழுவாயென்று ஒரு ஆங்கில பழமொழி உண்டு.

4. திடசித்தம். க்ஷிமிஷத்துக்கு க்ஷிமிஷம் மாறும் தன்மையுள்ள மனதோடிராதே. ஒரு நாளைக்கு ஒருவிதமான குணமும், இன்னொரு நாளைக்கு இதற்குமாறான குணமும் காட்டாதே. மேலும் கோபமாயிருக்கும்போது ஒரு விதமான கட்டளையும், சந்தோஷமாயிருக்கும்போது இன்னொரு விதமான கட்டளையையும் பிள்ளைகளுக்குக் கொடாதே. திட்டமும் நீதியும் ஒரு மனிதனின் ஸ்திரமனதைக் காட்டும்.

மேலும் நீ கொடுக்கும் கட்டளையானது உன் பிள்ளைகள் செய்யக்கூடியதாயிருக்கவேண்டும். அவர்கள் செய்ய நீ எதிர்பாராத கட்டளைகளை நீ அவர்களுக்குக் கொடாதே. பெற்றோரிடத்தில் ஒரே பேச்சு இருக்கிறதென்று பிள்ளைகள் கீழ்ப்படிவார்கள். சில சமயத்தில் சிறு குழந்தைகள் அழுது வைராக்கியமாய் தாங்கள் விரும்பிய காரியத்திற்குப் பெற்றோர் இணங்கும்வரைக்கும் அவர்களைக்

கஷ்டப்படுத்துவார்கள். ஆனால் பெற்றோரிடத்தில் ஒரே பேச்சு இருக்கிறதென்று பிள்ளைகள் கண்டுகொண்டால் இப்படிப் பெற்றோரை கஷ்டப்படுத்தும் கெட்டகுணத்தை விட்டுவிடுவார்கள்.

5. உண்மை. ஒருபோதும் பொய் சொல்லாதே, ஒன்றைச் சொல்லி இன்னொன்றைச் செய்யாதே. உன் வார்த்தைகளைவிட உன் செய்கைகள் அதிகச் சத்தமாய்ப் பேசுகிறது என்று ஒரு ஆங்கில முதுமொழியுண்டு. உன் பிள்ளைகளை ஏமாற்றாதே. நீ அவர்களை ஏமாற்றினால் யாக்கோபைத் தன் பிள்ளைகள் ஏமாற்றினதுபோல் கஷ்டத்துக்குள் ஆவாய். ஏதாவது ஒரு காரணத்தால் நீ சொன்னபடி செய்ய முடியாமற்போனால் ஏன் அப்படிச் செய்ய முடியவில்லை என்று அவர்களுக்குக் காரணத்தைச் சொல்லவேண்டும். அப்படியானால் அவர்கள் முற்றிலும் நம்புவார்கள். அதுவே மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும்.

6. மரியாதையும் சாந்தமும். தகப்பன் தாயோடும் பிள்ளைகளோடும் மரியாதையும் சாந்தமுமாயிருக்கவேண்டும். சில குடும்பங்களில் புருஷனும் மனைவியும் கற்றவர்களாயிருந்தாலும் மனைவியை அடக்கி ஆளவேண்டும் என்ற தப்பபிப்பிராயம் இருக்கிறது. புருஷனும் மனைவியும் வெவ்வேறு வரங்கள் உள்ளவர்கள். வெவ்வேறு ஊழியத்திற்குத் தகுதியுள்ளவர்கள். மனைவி தன் குடும்பத்தைக் கட்டி எழுப்பும் ஏற்ற தாயாயிருக்கவேண்டும். புருஷன் தன் மனைவியின் தன்மையையும் சக்தியையும் அறிந்து அவள் செய்யத்தக்க கடமைகளைக் கொடுத்து முழு சுயாதீனத்தையும் கொடுக்கவேண்டும், இப்படிச் செய்வதால் புருஷனின் கௌரவம் குறைந்துபோகாது.

## பிள்ளைகளைச் சீர்திருத்துவது பெற்றோர் கடமை.

பாரதநாட்டின்கண் வாழும் பாரதபுத்திரர்காள்: நம் நாடு பழைய நிலைமை குன்றி எளிய நிலைமையில் ஊன்றி பல வருடங்களாக தரித்திர நிலைமையைத் தழுவிவருகின்றது. அவ்வாறு தழுவுவதை வழுவச்செய்வது பாரதபுத்திரரின் கடமையாகும். அவ்வாறு தழுவப்பட்டுவரும் கேடான காரியாதிகள் யாவையென்றும், அவைகளை எவ்வாறு தவிர்க்கலாமென்றும் சிறிதுணர்வோம்.

எந்நாடுமே நன்னாடாக, அந்நாடு செழிப்புறும்பட்சத்தில் அந்நாட்டினர் களிப்புறுவர் என்பது யாவரும் மனமுவத்தகுந்ததே. நாட்டின் செழிப்பை எங்கே காணலாம்? சாதாரணமாக பூமியின் நல்விளைச்சலே செழிப்பெனப் பொருள்படும். அவ்வாறு விளையவேண்டுமானால் பூமிக்கு மாரி தேவை. மாரியாகிய அவ்வானநீர் பூமியையெய்ய பாரதநாட்டினராகிய நாம் என்னசெய்யலாம்? அவற்றையறியவேண்டுமானால் இந்நாட்டின் பூர்வ சரித்திரங்களை விசாரித்தறிதல்வேண்டும். அவ்வாறு விசாரித்தால், அதில் கூறுவதாவது: மாதம் மும்மாரி வருஷித்ததாகவும், அம்மூன்றில் ஒன்று கற்புடைய பெண்டிர்க்கும், ஒன்று வேதமோதும் வேதியர்க்கும், மற்றொன்று நீதிதவறாத அரசர்க்கென்றும் தெரியவரும். அப்படிப்பட்ட நிலைமையிலிருந்த நம் நாடு ஏன் க்ஷீணதசையை அடைந்துவருகிறது என்பதை நாம் எளிதில் அறியலாம். இவ்விதச் செயல்களினிமித்தம் நம் நாடு தெய்வபக்தியிலும், நீதியிலும், கற்பிலும் எவ்வளவு அதிகமாய்ப் பெருகியிருந்திருக்கிறது என்பதையும் அறிவோம். தற்காலத்தில் அக்குறிகள் காணப்படுகின்றனவா? அல்ல. அவை முற்றிலும் ஒழிந்தது. ஒழியவே நாடும் மெலிந்தது.

இவ்விதமாக நம் நாடு சீர்கெட்டுப்போயிருந்தும் அதை நிவர்த்திசெய்யத் துணியாது, நம்மையும், நமது பிள்ளைகளையும் கெடுத்துக்கொண்டிருக்கிறோம். எப்படியெனில், நம் நாட்டின் பண்டைய நீதிநெறிகள் ஒழிந்ததின் காரணமாகவோ அல்லது தற்கால சாஸ்திரவல்லோர் ஆராய்ந்து அறிந்திருக்கிறவண்ணம், சூரியவெப்பத்தால் சமுத்திரநீர் ஆவியாக மாறி வானத்திற்குச்சென்று திரும்ப அந்த ஆவியின்மேல் குளிர்ந்த காற்றுப்பட அது மழைஜலமாக மாறுகிறதென்றபடி, அக்குளிர்ந்த காற்றை உண்டாக்கக்கூடிய [illegible]ப்பான மரஞ்செடிகள் முன்காலத்தில் நம் நாட்டில் [illegible]தும் அதைப் பாதுகாக்க ஆளில்லாததாலோ நாடு வரண்டுபோயிற்று. இதையறியாது நம் நாட்டினர் தங்கள் குழந்தைகளைப் படிக்கவைத்து, கவர்மெண்டு வேலையிலமர்த்தி கௌரவமடையலாமெனக் கருதி, மிகுதியான பிள்ளைகளை உத்தியோகத்துக்கு ஆயத்தமாக்கிவிட்டமையால் "உழுதுபிழைப்போர் ஒரு கோடி, வய்த்துப்பிழைப்போர் ஏழு கோடி" என்றவண்ணம் விவசாயத்தொழில் செய்ய ஆளில்லாமல் விளைவு குறைவுபட்டு, நம் நாடு தரித்திரதிசையில் ஆழ்ந்திருக்கின்றன. தற்காலத்தில் எத்தனையோ வாலிபர் உயர்தரப்படிப்புப் படித்து பட்டங்கள் பெற்றும், வேலைகிடையாது திண்டாடுகிறார்கள். தொழில்செய்யவும் முடியாது. ஏனெனில் அதிகக்காலமாக சௌகரியமாகவும், உல்லாசமாகவும், சரீரப்பிரயாசையின்றியுமிருந்தமையால், அன்னவர் கடப்பு வேலைசெய்ய உபயோகப்படுவதில்லை. இதையறிந்த பெற்றோரே, நீங்கள் உங்கள் பிள்ளைகளை அதிகமாய் படிக்கவைத்து அவர்களைக் கெடுத்துப்போடாதீர்கள். உங்களுடைய காலத்தில், நீங்களும் பிழைத்து உங்கள் பிள்ளைகளுக்கும் ஆஸ்திதேடிவைத்திருக்கிறீர்கள். தற்கால நாகரீகத்தினரோ தங்களுடைய பிழைப்புக்கே திண்டாடுகிறார்கள். காரணமென்ன? முற்காலத்துப் பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடப்பார்கள். உதாரணமாக சுயேச்சையாக மனைவிகளைத் தெரிந்துகொள்ளாது பெற்றோர் நியமித்த பெண்ணையே விவாகஞ்செய்வார்கள். இதனால் கூடியவரை கற்பெனும் தன்மை அவர்களுள் கலந்திருந்தன. பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களிடம் இருப்பார்களானால், அவர்களுக்குக் கீழ்ப்படிந்து தெய்வபக்தியையும் கைக்கொள்ளுவார்கள். அதைத்தவிர்த்து அவர்களை உயர்தரப்படிப்புக்கு அனுப்பினால் அவர்கள் பல காரியங்களையும் அறிந்து அதன் மூலமாக பலவழிகளிலும் மனம்போனபடி நடந்து கற்பையழித்து, தெய்வபக்தியையும் அறவே ஒழிக்கின்றனர். அவர்களுடைய நாகரீகத்தினால் தங்களுடைய பெற்றோரைக் கேவலமாக மதிக்கின்றனர். ஆதலால், தமிழ் வாசிக்கவும்; எழுதவும் தெரியத்தக்கதாக கிராமப் பள்ளிக்கூடங்களில் படித்துத்தேறினால் அதுவே போதும்.



விவசாயஞ்செய்யப்படாமல் பாழாய்க்கிடக்கும் நிலங்கள் எத்தனை அதிகம். அவற்றைப் பண்படுத்துவதில் நமது சிறுவர்கள் ஆயத்தப்படுத்தப்படுவார்களானால், நம் நாட்டின் செழிப்பை என்னென்றுரைப்போம். முற்கூறிய பழமொழிப்படி ஒரு ஆள் பாடுபட்டு எழுபேருக்கு ஆகாரம் கொடுப்பதால் பஞ்சமுண்டாகிறது. அதைத் தவிர்த்து எல்லாரும் விவசாயம்செய்தால் விளைவு அதிகப்பட்டு நாடு செழிக்குமென்பதற்கு ஐயமில்லை.

இதையறிந்தே ஔவையும் பின்வருமாறு கூறினள்.

"வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுயரும்
குடியுயரக் கோலுயரும்
கோலுயரக் கோனுயர்வான்"

பாரதநாட்டின் முன்னேற்றத்தைக் கருதும்,

M. S. சீனித்துரை,
பசுமலை.

## பசுமலையில் ஒரு மாணக்கனது மரணம்.

பசுமலை உயர்தரக் கலாசாலைக்கும் டேயூர் கைத்தொழிற்சாலைக்கும் 10—8—1928-ல் சாயந்திரம் 4½ மணிக்கு நடந்த கால் பந்து விளையாட்டில், உயர்தரக்கலாசாலைப் பக்கமிருந்து விளையாடிய பையன்களிலொருவனாகிய 10-ம் வகுப்பில் வாசித்துக்கொண்டிருந்த I. ஞானப்பிரகாசம் என்னும் பையன் வயிற்றில் அடிபட்டு கீழேவிழுந்துவிட்டான். பின்பு டாக்டர் வந்து பார்த்துவிட்டு ஏதொரு சிகிச்சை செய்தும் முடியாதென்றுகண்டு மதுரை கிழவாசல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டார். அங்கே சென்றபின், பையன் அதிக துன்ப நிலைமையிலிருந்தான். அங்கிருக்கும் டாக்டர், பையனை அறுத்துச் சோதித்துப் பார்க்கவேண்டுமென்று சொல்லி, சொந்தக்காரப் பையனொருவனைக் கூப்பிட்டு, சொந்த ஊராகிய அறுப்புக்கோட்டைக்கு அனுப்பினர். பெற்றோர் வந்தபின், அனுமதிகேட்டு பையனின் வயிற்றை அறுத்துப் பார்த்தபோது சிறு குடலிலறுந்துபோயிருந்ததாம். அந்தப் பையன் இராமுழுதும் துன்பப்பட்டு கடைசியாக 12—8—1928 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு இறந்துபோனான். பையனுக்கு வயது சற்றேறக்குறைய 20 ஆகும். பின்பு பசுமலை உபாத்திமார்கள் யாவரும் ஆலோசித்து பையன்களுக்கிணங்கி, இறந்த பையனை பசுமலைக்குக்கொண்டுவந்து சற்றேறக்குறைய 3 மணிக்குக் கூட்டங்கூடி பையனின் வீரச்செயல்களையும் குணாதிசயத்தையும் புகழ்ந்துபேசி, வெகுமரியாதையாக பையன்களெல்லாரும் பெட்டிக்கு முன்னும் பின்னுமாக வரிசையாய்ச்சென்று அடக்கம் செய்தார்கள். பையனின் பரிதாபநிலையையறிந்து யாவரும் கண்ணீர்விடத்தக்கதாயிற்று.

வி. கந்தசாமி,
பசுமலை.

## ஓர் அற்புத அமைப்பு.

யான் சென்ற வாரத்தின் கடைசி சனிக்கிழமை மதுரைக்குப் போயிருந்தேன். அங்கு ஒரு மாட்டையும் அதன் கன்றுக்குட்டியையும் பார்த்தேன். அந்த கன்றுக்குட்டியின் உயரம் 3½ அடி. இரண்டு உடல்களும், ஆறு கால்களும், இரண்டு ஆசன வாயும், இரண்டு மூத்திரத்தாரைகளும், ஒவ்வொரு உடலிலும் ஒவ்வொரு பால் கறக்கிற மடிவுக்காம்பு ஒன்றும் இருக்கிறது. இந்த அற்புத அமைப்பைப் பார்க்க, ஏராளமான ஜனங்கள் வந்து சேர்ந்தார்கள்.

நான் போய்ப் பார்த்த சமயத்தில் இரண்டு ஆசன வாய்களிலிருந்தும் சாணம் வெளிவந்துகொண்டிருந்தது. யான்கவனித்துப் பார்த்தேன். அந்த மாட்டைக்கொண்டு வந்தவர்கள் நான்கு பேர். அவர்களைப் பார்த்து இந்தக் கன்றுக்குட்டி எங்கிருந்து வருகிறதென்றும், இந்த கன்றுக்குட்டி பிறந்து எவ்வளவு நாளாகிறதென்றும் வினவினேன். அவர்கள் உரைத்தது என்னவென்றால்:— நாங்கள் பெங்களூரிலிருந்து வருகிறோம் என்றும் அந்த கன்றுக்குட்டி பிறந்து ஒருவருஷம் ஆகிறதென்றும் உரைத்தார்கள். இந்த அற்புத அமைப்பை யாவரும் பார்த்து ஆனந்தித்துப் போனார்கள்.

D. ரத்தினசாமி,
டிரேட்ஸ்கூல்,
பசுமலை.

## Mount Karmal Hostel Manaver Sangam C.S.M. Virudunagar.

இச்சங்கத்தின் வரலாறு:— இம்மாணவர் சங்கமானது கடந்த 27-ம் ஆண்டு துவங்கி கனம் Cleason ஐயரவர்களாலும், கனம் பால்சூரியன் போர்டிங் உபாத்தியாயராலும் வெகு உற்சாகத்துடன் துவக்கி, இடையே சில காலம் சிற்சில காரணமாக அக்கூட்டம் நடைபெறாதிருந்தது.

தற்சமயம் அச்சங்கம் மறுபடியும் நடந்துவர கனம் சூரியன் உபாத்தியாயர் அதிகப் பிரயாசப்பட்டு நடத்திக்கொண்டுவருகிறார்.

இது மென்மேலும் ஆவியிலும், உண்மையிலும், உற்சாகத்திலும், ஜெபத்திலும் வளர அமலன் அன்னவர்களை ஆசீர்வதிப்பாராக.

முதல் சங்கத் துவக்கத்தின் அலங்காரம்:—1928-ம் ஞு செப்டம்பர் 11ந் மாலை 6½ மணிக்கு Hostel Lecture Hall வெகு அலங்காரமாக ஜோடிக்கப்பட்டு அன்றிரவை நன்றிரவாகப் பாவித்து வெகு ஆரவாரத்துடன் வந்தோர் மனதை மகிழச்செய்ய பஜனையினாலும், ஜெபத்தாலும் மாணவர்கள் கொண்டாட, பின் கனம் சவரிமுத்து உபாத்தியாயரைத் தலைமையாகவைத்து இச்சங்கத்தை ஆசீர்வாதமாகவும் சந்தோஷமாகவும் முதல் ஆரம்பமாகத் துவக்கினோம்.

சகோதர ஒற்றுமையென்னும் பொருளுக்கு இலங்க சத்திய வேதாகமத்தில் 1 கொரி. 13-ம் அதிகாரத்தை வாசித்து முடிக்க அங்கத்தினருள் ஒருவராகிய கருத்தையா என்ற சாமுவேல் முத்தையா எழுப்புதலாகவும் ஆறுதலாகவும் ஜெபிக்க, Mr. சாமுவேல்ராஜ், Mr. வேதமாணிக்கம் இவர்கள் சகோதர ஒற்றுமையைப்பற்றிய திருஷ்டாந்தகளும், கதைகளும், செய்யுள்களும் உரைத்து விவரித்தார்கள்.

இடையே குயிலினும் இனிய குரலுடைய Mr. ஐயாவு, Mr. மாசிலாமணி, Mr. ஜேஸ்தாஸ் இவர்கள் இனிய கீதங்களைப் பாடி தளர்ந்தோர் மனதை நிரப்பினார்கள்.

பின்பு அச்சங்கத்துக்கு வேண்டிய காரியதரிசி, பொக்கிஷதாரி, உதவிக்கு 5 பேர் இவர்களை ஓட் மூலமாகத் தெரிந்தெடுக்கப்பட்டது.

கடைசியாக அக்கிராசனாதிபதி அப்பொருளில் சொல்லாத மறைபொருட்களை விவரித்துரைத்து அப்பொருளின் சாராம்சத்தை மாணவர்க்கு ஓர் ஞாபகசின்னமாக வைத்து சங்கத்தை ஜெபத்துடன் முடித்தார்.

பின்பு மங்களம் பாடி தாம்பூலம் முதலியவைகளை அளித்து மாணவர் மனதை மலரச்செய்து ராஜவாழ்த்துடன் சங்கம் முடிவுபெற்றது.

(*N.B.*) இச்சங்கம் வாரத்துக்கொருமுறை கூடும். சங்கத்தில் நடக்கும் காரியங்களை மாதந்தோறும் வெளியிடப்படும்.

காரியதரிசி Mr. துரைசாமி
பொக்கிஷதாரி Mr. முத்துமாயன்
பிரசிடெண்ட் Mr. A. P. சூரியன்

இப்படிக்கு,
J. Samuel Rajiah, School Master
C.S.M. Compound, Virudunagar.

## உலக வர்த்தமானம்

கடந்த ஒரு நூற்றாண்டுக்குள்ளாக உலகத்தில் ஜனத்தொகை 10,00,000க்குக் கீழிலிருந்து இப்போது ஏறக்குறைய 17,00,00,00,000க்கு வந்திருக்கிறது.

லண்டனில் பிரதி வருஷம் ஒவ்வொரு சதுரமைலுக்கு 300 டன் நிறையுள்ள ஒட்டறை விழுகிறதாம். பார்லிமென்ட் சபைக் கட்டடத்தின் மேலுள்ள செடிமாரக் கோபுரத்தைப்போல் நாலு பங்கு உயரமான கூரான முனையுள்ள ஸ்தம்பம் கட்டுவதற்கு இது போதுமானது.

ஒரு சரியான மனுஷனுடைய தேகத்தில் ஏறக்குறைய 620 தசைநார்கள் இருக்கின்றன. இவைகளில் ல் ஒரு பங்கு முகத்திலும், கழுத்திலும் காணப்படுகின்றன.

ஒரு நிர்ப்பாக்கியனான குற்றவாளி ஜெயிலில் இருந்தபோது தன்னை உள்ளே அடைத்திருந்த இரும்புக் கம்பிகளைப்பார்த்து "இந்த இரும்புக்கம்பிகள் என்னை இங்கே அடைக்கவில்லை நான் நடப்பித்து வந்த தீவினைகளின் நீண்ட சங்கிலியே என்னை இப்பொழுது இங்கே அடைத்திருக்கிறது" என்று சொன்னதாக சொல்லப்பட்டிருக்கிறது. இது எவ்வளவு உண்மை. மெய்யான சுயாதீனத்தையும் சந்தோஷத்தையும் அடையக்கூடாதபடி மனிதரை சிறையில் அடைத்துக் கட்டும் சங்கிலிகள், அவர்கள் விடாமல் செய்துகொண்டுவரும் தீவினைகளே. "மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும் நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும் எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?" (ரோமர் 6 : 16) அனேகர் தாங்கள் பாவ இச்சைகளுக்கு அடிமைப்பட்டிருக்கையில் தங்களை இயேசு கிறிஸ்துவின் அடிமைகளென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். இது மிகவும் பரிதாபம். ஆனால் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்வது கூடாதகாரியம். பாவத்தின் மோசங்களில் அகப்பட்டுக்கொண்டு சுவிசேஷத்தின் வெளிச்சத்தில் நடந்துகொள்ளுகிறதாக ஒருவன் சொன்னால் அது மாயமாகும்.

## ஒரே பார்வை.

(எல். ஏ. ஹென்சன்.)

இந்தத் தப்பிதத்தை அல்லது அந்தத் தப்பிதத்தை நீக்கிப்போடவேண்டுமென்று அநேக தீர்மானங்கள் செய்வதைக் காட்டிலும் சரியென்று நிச்சயித்த காரியத்தை ஒரே தீர்மானத்தோடு நிறைவேற்றுதலே உத்தமம்.

சட்டங்களும் விதிகளும் நிறைந்த ஒரு புஸ்தகத்தைக் காட்டிலும் மெது சித்தத்தையும் ஜீவியத்தையும் ஆண்டு நடத்தும் கூர்மையான மனச்சாட்சியே மேலானது.

பக்தி விநயத்தோடு நியமங்களைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு பிரமாணத்தை அதிகமாய் விஸ்தரிக்கவேண்டிய அவசியமில்லை.

மேலானவைகளையே நிறைவேற்ற நாம் எப்பொழுதும் உண்மையாய் விரும்புவோமென்றால் அவை இன்னதென்று நாம் அறியாதிருந்தாலும் அவைகளை அறிந்துகொள்ள முடியாமற்போனாலும் அதில் மோசம் ஒன்றுமில்லை.

அநேக ஜனங்கள் தாங்கள் அறிந்தது சரியாயிருந்தாலும் தப்பிதமாயிருந்தாலும் அதிலேயே திருப்தியாகிவிடுகிறார்கள். ஆகையால் அதிகமான வெளிச்சத்தைக்கண்டடைய அவர்கள் விரும்புகிறதில்லை.



எப்போதும் வளர்ந்துகொண்டுபோக விரும்புகிறவன் ஜீவியத்தில் எல்லாப்பிரமாணங்களையும் கற்றுக்கொள்ள விரும்புவான்.

நீதியின் வழியில்போக விரும்புகிறவன் தன் வழியைப் பிரகாசிக்கக்கூடிய ஒவ்வொரு ரேகையும் தன் பாதையில் விழவேண்டுமென்று விரும்புவான்.

முன்னால் பார்த்து முன்னானவைகளை நாடி, முன்னேறிப்போவது, அபிவிருத்தியைக் காட்டுகிறது.

ஒரு உண்மையான மனிதனைக்குறித்து சொல்லக்கூடியது என்னவென்றால், எல்லா விஷயங்களிலும் அவன் செம்மையானதையே செய்துகொண்டு போவான்; சத்தியத்தைக் குறித்து அறிந்துகொள்ள வேண்டியவைகளையெல்லாம் அறிந்துகொள்ள உண்மையாய் நாடுவான். தான் சரியென்று அறிந்த காரியத்தை உடனே நிறைவேற்றப் பிரயாசப்படுவான்.

மேற்சொல்லப்பட்டவைகளெல்லாம் சகவாழ்வுக்குரிய விஷயங்களுக்கும் பொருந்தும்.

"நீ துக்கமுகமுள்ளவனாயிருக்க விரும்பினால் உன்னை முகவாட்டமாய் வைக்கத்தக்க பல மனோ வியாகுலங்களுண்டு. நீ சந்தோஷமாயிருக்க விரும்பினால் உன்னைச் சந்தோஷப்படுத்தும்படி உன இருதயத்தில் ஒளிவீச சத்திய வெளிச்சமுண்டு."

"சுருட்டுக் குடிக்கிற எந்தப்பையனும் ஒரு வேலையிலாவது முன்னுக்கு வரமுடியாது. சுருட்டுக் குடிப்பது இருதயத்தையும் சுவாசாசயங்களையும் பலவீனப்படுத்துகிறது. அது வயிற்றைக் கெட்டுப்போகச் செய்கிறது. முழு நரம்பு மண்டலத்தையும் க்ஷீணப்படுத்துகிறது."— மைக்டோனல்ட்.

ஆரோக்கிய தூதிகை

## துணுக்குகள்.

இந்திய நாட்டில் பூமியில் 4000 அடிக்குக்கீழ் இன்னும் 100,000,000,000 டன் நிலக்கரி மிகுதியாயிருப்பதாய்க் கணக்கெடுத்திருக்கிறார்கள்.

இந்தியாவில் ஓர் ஆலமரம் ஒரே சமயத்தில் 7000 ஜனங்கள் அதனடியில் தங்கும் அவ்வளவு பெரியதாயிருக்கிறதாம். அதன் கிளைகளின் சுற்றளவு 3000 அடி.

ஒரு வயல் எறும்பு தன்னைக் காட்டிலும் 3000 மடங்கு பருமனுள்ள பாரத்தை வாயில் தாங்கிக் கொள்ளக்கூடுமாம். இதே பலம் மனிதனுக்கிருந்தால் அவன் 275 டன் பாரமுள்ள ஓர் வஸ்துவை தன் வாயினால் தூக்குவான்.

பாலில் 100-க்கு 87½ பங்கு தண்ணீரும், முட்டைக்கோவிசுக்கீரையில் 100-க்கு 89½ பங்கு தண்ணீரும் முட்டைக்கோவிசில் 100-க்கு 90½ பங்கு தண்ணீரும், தக்காளியில் 100-க்கு 91½ பங்கு தண்ணீருமிருக்கிறதாம்.

லண்டனில் பூமிக்கடியில் செல்லும் ரயில்வேகளில் மொத்தம் 2100 வண்டிகளிருக்கின்றனவாம். அவை வருடம் 94,84,878 மைல்கள் பிரயாணம் செய்கின்றனவாம்.

இரவில் செல்லும் ஆகாய விமானங்களுக்கென ஓர் வழிகாட்டும் விளக்கு தயார்செய்யப்பட்டிருக்கிறது. இது 1,38,50,00,000 மெழுகுவர்த்தி வெளிச்சமுடையது. இதனை 'சூரிய குஞ்சு' எனக்கூறுவது மிகையாகாது.

மூட்டைகள் பேரில் சீட்டு ஒட்டி அதன்கூட ஒருவரும்போகாமலே எப்படி ரயில்மூலம் பார்சலில் அனுப்புகிறார்களோ அதேமாதிரி ஒரு குருடன் பேரில் சீட்டை ஒட்டி காசில்பாரிலிருந்து டப்ளினிலுள்ள ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக அனுப்பினார்களாம்.

ஒரு நீக்கிரோ அடியிற்கண்ட கண்ணாடிகளை ஒரு வேளைக்கு ஆகாரமாக உட்கொண்டானாம் :-சிறிய கண்ணாடிக் குழாய்கள் 6, பெரிய லாந்தர் சிமினிகள் 2, 4 அவுன்ஸ் மருந்து சீசா 1, நான்கு சதுர அங்குல ஜன்னல் கண்ணாடிகள், ஒரு அங்குல அகலமும் 4 அங்குல நீளமுள்ள வார்னைக் கண்ணாடித் துண்டுகள் 3. இவைகளைத் தின்றவுடன் அவனுடைய தேக நிலையில் ஏதாவது மாறுதல்கள் ஏற்படுகின்றனவாவென்று வைத்தியர்கள் கவனித்து வந்தார்களாம். ஆனால் அவன் எப்பொழுதும் போல் சௌக்கியமாகவே இருந்தானாம்.


ஆகாய விமானங்களை இனி ஓட்டுவோனின்றியே செல்லும்படியான புது வழி யொன்றைக் கண்டு பிடித்துள்ளனர். ஆகாய விமானங்களில் கம்பியில்லா தந்தி இயந்திர மொன்றை இணைத்து பூமியிலுள்ள ஓர் கம்பியில்லா தந்தி ஸ்டேஷனிலிருந்து செல்லவேண்டிய விதத்தைத்தெரிவித்தால் அவைகளே கம்பியில்லாத் தந்தியின் 'ஒலி அலை' யின் மூலமாய் ஆகாய விமானத்திலுள்ள இயந்திரத்தில் ஓட்டுவோனுக்குப் பதிலாக எல்லாக் காரியங்களையும் செய்யும்.

அல்பாமாவைச் சேர்ந்த கிளென்வீல் என்னும் கிராமத்தில் வசித்துவந்த ஆல்பிரட்மெக்ஜீ என்னும் பெரும் பணக்காரனான விவசாயி தான் இறப்பதற்கு முன் மற்றக் கிராமவாசிகளையும் தம் பந்து மித்திரர்களையும் ஒரு நூதனமான கோரிக்கைக்கு இணங்கச் செய்தான். அம்மனிதன் தான் இறந்த பின் தன் பிரேதத்தை ரகதாவின் ஓரமாக அடக்கம் செய்யவேண்டுமென்றும், மற்றைய விவசாயிகள் தாம் பயிரிட்ட பருத்தியை வண்டியிலேற்றி மார்க்கட்டுக்குச் செல்லும்போது தன் பிரேதம் அடக்கம் செய்யப்பட்டிருக்குமிடத்தருகில் வந்த உடனே அன்றைய பருத்தி விலையை உரத்துக் கூறவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டான். அவ்வாறே அக்கிராமவாசிகள் சென்ற நாற்பத்தைந்து வருடங்களாகச் செய்து வருகின்றார்களாம்.


## விளம்பரம்.

### விவசாயிகளுக்கு கஷ்டம் நீங்கியது.

தண்ணீர் இறைக்க மாட்டைக்கட்டி இனி கஷ்டப்படவேண்டியதில்லை. வெகு உறுதியும் விலை குறைந்ததும், நீடித்தகாலம் வேலை செய்யக்கூடியதுமான



விட்டி இஞ்சின்



கோல்ட்ஸ் பம்பும்

இக்கஷ்டத்தை நீக்கும். இஞ்சின் மண்ணெண்ணெய்யில் ஓடக்கூடியதால் செலவு வெகு சொற்பம். ஒரு மணி நேரத்திற்கு சின்ன இஞ்சினுக்கு அணு 3-தான் செலவு.

| | |
|---|---|
| 8 கமலைத்தண்ணீர் அடிக்கும் 6 குதிரைப் பவர் இஞ்சினும் 4" பம்பு | ரூ. 795 |
| 5 கமலைத்தண்ணீர் அடிக்கும் 4 குதிரைப் பவர் இஞ்சினும் 3" பெரிய பம்பும் | ரூ. 580 |
| 4 கமலைத்தண்ணீர் அடிக்கும் 4 குதிரைப் பவர் இஞ்சினும் 3" சின்ன பம்பும் | ரூ. 550 |
| 2 கமலைத்தண்ணீர் அடிக்கும் 3 குதிரைப் பவர் இஞ்சினும் 2" பம்பும் | ரூ. 390 |

பைப்பும் பிட்டிங் சார்சும் பிரத்தியேகம்.

எங்கள் ஆட்களைக்கொண்டு திருப்தியாய் பிட்டிங் செய்வதோடு, நாங்களே அடிக்கடி இஞ்சின் ஓடுவதை நேரில் பார்த்து வருவோம். சிறு தப்பிதங்களை செலவில்லாமலே சரிப்படுத்துவோம்.

எப்பொழுதும் இங்கே தண்ணீர் அடித்துக்கொண்டிருக்கும் இஞ்சின் பம்பை நேரில் வந்து பார்த்து திருப்தியடையுங்கள்.

இத்துடன் இன்னும் வேண்டிய விபரங்களுக்கு எங்களிடம் நேரில் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

பூரண அன் கோ.,
இஞ்சினியர்ஸ் & கமிஷன் ஏஜண்ட்ஸ்,
பசுமலை, S. I.

அமெரிக்கன் மிஷன் “ விஞைகலை ” பிரஸ், பசுமலை, 1928.

1168

REG. NO.—M. 2146

# THE Piramalai Reformer

# பிரமலை சீர்திருத்தன்.

29 NOV 1928 ... MADRAS

“ பொருளாசையை வெறுக்கிறவன் தீர்க்காயுசைப் பெறுவான்.

Vol. VIII. ] அக்டோபர்மீ 1928 [ இலக்கம் 6

## பஞ்சாங்கம்.

1928 | விபவஸு புரட்டாசிமீ | அக்டோபர்மீ | விபவஸு ஐப்பசிமீ | 1928

| Sunday ஞாயிறு | Monday திங்கள் | Tuesday செவ்வாய் | Wednesday புதன் | Thursday வியாழன் | Friday வெள்ளி | Saturday சனி |
|---|---|---|---|---|---|---|
| | 1 புரட்டாசி 16 | 2 17 | 3 ※ கார். 18 | 4 19 | 5 20 | 6 21 |
| 7 22 | 8 23 | 9 24 | 10 25 | 11 26 | 12 27 | 13 ● அமா. 28 |
| 14 29 | 15 30 | 16 ஐப்பசி 1 | 17 2 | 18 3 | 19 4 | 20 5 |
| 21 6 | 22 7 | 23 8 | 24 9 | 25 10 | 26 11 | 27 12 |
| 28 ○ பௌர். 13 | 29 14 | 30 ※ கார். 15 | 31 16 | | | |

*Patron.*—M.R.Ry. Rao Bahadur, A. J. Vethanayaga Thevar Avl., Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam, Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley, Tirumagnalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager.*

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor.*

சம்ரக்ஷகர்.—மகா-ள-ள-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். எ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணு 14. 5ரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

"போதனா பயிற்சிப் பரீட்சை 1929ம் வருஷம் மார்ச்சு மீ 18உ தொடங்கும். ஷெ பரீட்சைக்குப் போகிறவர்கள் எலிமெண்டரி ஸ்கூல் டிக்குக் கட்டவேண்டிய ரூ 2யும் தம் போதனா பயிற்சிப் பாடசாலையின் தலைமை உபாத்தியாயருக்கு நான்காவது நவம்பர் மீ 21உக்கு முன் மணியார்டர் மூலமாயாவது அல்லது கஜனாவில் பணம் கட்டி ரசீதாகவாவது அனுப்பி வைக்கவேண்டும். இந்த வருஷம் முக்கிய பாடம் "நூரல் ஸயன்ஸ்."

R. Michael,
ஹெட்மாஸ்டர்,
பசுமலை போதனா பாடசாலை.

## நமது பத்திரிகையின் மானேஜர்களின் மாறுதல்.

சங்கை B. S. ஸ்டோபர்துரை, கடந்த 18 மாதகாலமாக கனம் ஸ்டோபர் துரை நமது பத்திரிகையின் மனேஜராக இருந்து அதிக உதவிகள் புரிந்துவந்தார். மிஷன் சங்கத்தார் அவரது படிப்புத்திறமையை அறிந்து மதுரை அமெரிக்கன் காலேஜுக்கு தலைவராகத் தெரிந்துகொண்டபடியால் அவர் அக்டோபர் மீ முதல் தேதி முதல் அந்த வேலையை ஒப்புக்கொண்டார். அவர் நமக்கு பாடசாலைகள் விஷயமாகவும், பத்திரிகை விஷயமாகவும் செய்து வந்த பல நன்மையான காரியங்களை நினைத்து நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இப்போது அவர் ஏற்றுக்கொண்ட புது உத்தியோகத்திற்கேற்ற ஞானத்தன்மையும், பெலத்தையும் கடவுள்தாமே தந்தருள்வாராக. அவரை நமது நாட்டாரின்பேரால் வாழ்த்துகிறோம்.

---

புதியமானேஜர் சங்கை R. A. டட்லி துரை சிலகாலம் சுகத்தின் பொருட்டு அமெரிக்காவுக்குப்போன துரையும் துரைச்சானியும் அக்டோபர் மீ முதல் தேதி மதுரை வந்திறங்கினார்கள். இனி அவர்கள் திருமங்கலத்திலிருந்து வேலைபார்ப்பார்கள். அவரே முன் பார்த்து வந்தபடி நமது பத்திரிகையின் மானேஜராக இருப்பார். கடிதப் போக்குவரத்துகளெல்லாம் இனி சங்கை டட்லி துரையவர்கள் பேருக்கே எழுதும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். நமது நாட்டில் இவர்கள் இன்னும் பலகாலமிருந்து நல்ல ஊழியம் செய்து நமது பத்திரிகையையும் விருத்தியடையச் செய்வாரென்று நம்பி அவரை வாழ்த்துகிறோம்.

---

## பிரமலே சீர்திருத்தனுக்கோர் விஷயதானம்

விஷயம்.

(ஏற்றமடைவதற்கோர் ஏணி)

இந்திரகுலச் செல்வர்களே! ஏணியின் உபயோகத்தை யாந்தர்கள் நன்கறிந்தேயிருப்பார்கள். தற்போது உங்கள் மரபினரும் கீழ் ஸ்திதியிலிருந்து மேல் ஸ்திதி யடைவதற்குக் காரணம் நமது காருண்ய இராஜாங்கத்தாரின் பிரதிநிதியாகிய மாட்சிமை தங்கிய கள்ளர் ஸ்பெஷல் சூப்ரண்டெண்ட் துரையவர்களின் முயற்சியினால் உங்கள் மரபினருக்கென வெளிவந்த பிரமலே சீர்திருத்தன் என்னும் பத்திரிகா ரத்தினமான ஓர் இணையற்ற ஏணியே. ஒரு சாதாரண ஏணியை ஒரு மனிதன் அடைந்தால் அது அவனை கீழ்ப்படியிலிருந்து மேற்படிக்குக் கொண்டுபோய் விட்டுவிடுகிறது. அதைப்போன்றே இப்பிரமலே பத்திரிகா ரத்தினமாகிய ஏணியும் தன்னை வந்தடைந்தவர்களை ஆசாரம், கல்வி, ஒழுக்கம், ஒற்றுமை, பொய் சொல்லாமை, களவுசெய்யாமை, குணாபிமானம், தெய்வபக்தி முதலிய துறைகளில் முன்னேற்றமடையச்செய்துவைக்குமென்பது திண்ணம். உங்கள் மரபிலுதித்து தற்போது கல்விச் செல்வத்தை அடைந்த ஒவ்வொருவரும் இப்பத்திரிகைக்குச் சந்தாதாரராகச் சேர்ந்து இதன் அபிவிர்த்திக்குப் பாடுபடவேண்டியது அத்யாவசியமாகும். உலகில் எண்ணிறந்த பத்திரிகைகள் இருப்பினும் தன்னையே தனக்



குதவி என்றபடி உம்மவர்களுக்குவேண்டிய விஷயங்களை அவ்வப்போது எடுத்துரைப்பதற்கு உங்களுக்கென்றே ஓர் சுஜாதிப் பத்திரிகை இருக்கவேண்டியது அவசியமல்லவா?

இத்தகைய பத்திரிகையொன்று உம்மவர்களிடையில் உலாவி நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து வருவது மிகவும் வியக்கத்தக்கதே! "அரிதுமுயன்றாலும் ஆகுநாளன்றி எடுத்த கருமங்களாகா" என்றபடி நமது காருண்ய துரையவர்களின் முயற்சியாலும் உங்கள் நற்காலவசத்தாலும் இது தற்போது கைகூடி நடைபெற்று வருகிறது. இதைக்கண்ட நீங்கள் அளவற்ற ஆனந்தத்தை அடையவேண்டாமா? மேலும் இப்பிரமலே என்னும் பத்திரிகையை நீங்கள் ஏணி நிலையில் மாத்திரம் வைத்திராமல் மென்மேலும் அபிவிர்த்தியடையச் செய்யவேண்டியது அவசியம். எங்ஙனமெனின் ஏணி தன்னைவந்தடைந்தவர்களை மாத்திரம் உயர்நிலைக்குக்கொண்டு போய்விடும். தான் என்றும் அதே ஸ்திதியில்தானிருக்கும் அதைப்போல் இப்பத்திரிகையையும் ஒரே ஸ்திதியில் வைத்திராமல் இன்னும் உயர்ந்த நிலைமைக்குக் கொண்டுவரவேண்டுமென்பது அவசியமே. உம்மவர்களிற் பெரும்பாலோர்க்குப் பத்திரிகையின் பயன் இன்னும் நன்கு தெரியாமலிருக்கிறது. பத்திரிகை மாந்தர்களின் அறிவைப்பெருக்கவும், மடமையைப்போக்கவும், உலக வர்த்தமானங்களை ஒருங்கு திரட்டி ஓதுவிக்கும் ஆசானாய் விளங்குகின்றது. இதனாற்றான் பத்திரிகை படியாத மனிதன் பாதி மனிதன் என்பதாகவும் பகுத்தறிவுள்ளோர்கள் கூறுகிறார்கள்.

உங்கள் பத்திரிகைக்கோ தற்போது ஏற்பட்டுள்ள சந்தா அணா 14. ஒவ்வொருவரும் தினப்படி கடைகளில் பீடி, சிகரெட், சுருட்டு முதலிய கெட்ட விஷயங்களில் செலவு செய்யும் பணத்தை உத்தேசித்துப் பார்த்தால் ஓர் வருஷத்திற்கோர்முறை இப்பத்திரிகைக்காக செலவிடும் பதினான்கு அணாவை ஓர் பெரிதெனக் கருதமாட்டார்கள். ஜாதி அபிவிர்த்தியைக்கோரி அப்பணத்தைக் கொடுக்க பின் வாங்கவுமாட்டார்கள். உம்மவர்களிற் சிலர் சுமார் 6, 7 வருஷத்திற்குள் நமது காருண்ய துரையவர்களின் கருணையினால் உயர்தரக் கல்விகற்று உத்யோக பதவியையடைந்து பொன்போல் பிரகாசித்து விளங்குகிறார்கள். நீங்களும் அதே பிரகாசத்தை அடையவேண்டுமென்ற எண்ணங்கொண்டு நமது துரையவர்களால் உங்கள் முன்னேற்றத்திற்கெனவே உழைந்துவருகிற சீர்திருத்தத்திற்குட்பட்டு இவ்வமயம் உறக்கத்தில் மூழ்கியிராமல் விழிப்படைந்து "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்றமுதுமொழிப்படி இது சமயம் உங்கள் மரபினரின் பிள்ளைகளை கல்வி கற்கச்செய்தும் உங்குலப் பத்திரிகையைப் பொன்னேபோல் பிரகாசிக்கும்படி எங்கும் பரவச்செய்யின் உங்களைப்பிறரால் கூறப்படும் கள்ளன் என்ற இழிவான பட்டப்பெயரை மாற்றி இந்திர குலத்தேவர்கள் என்ற பேரானந்தப் பேறடைவீர்களென்பது நிச்சயம்.

அறியாமை யென்னும் படுகுழியிலிருந்து அறிவென்னும் மேடையில் ஏற்றிவைக்கும் இப்பிரமலைப் பத்திரிகா ரத்தினமாகிய ஏணி என்றும் நீடூழி நிலைத்து விர்த்தியடைய எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிப்பாராக. சுபம்.

எல். சென்னகிருஷ்ணய்யா,
கள்ளர் ஸ்கூல்,—சோடாங்கிபட்டி.

---

## அன்பு.

இம்மானிடப் பிறவிக்குள் ஒருவன் தான் இச்சித்த ஒரு வஸ்துவினிடத்தில் கொண்ட விருப்பமே அன்பு எனப்படும். இவ்வினைகடந்த அன்பை விடப் பெருத உயிர் இப்புவியில் ஒன்றும் இரா. இருந்தபோதிலும் அவ்வாறு ஒன்று உளதாயின் அது உயிர்வகையில் எண்ணத்தக்கது அன்று. இதைக் கருதியே

வள்ளுவனார், அன்பின் வழியது உயிர் நிலை அஃதிலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு என்று கூறியுள்ளார். அன்பு என்னும் தொந்தம் ஒன்று இல்லையாயின் உலகம் என்பதே இல்லை என்று உறுதியாகக் கூறலாம். சகல ஜீவராசிகளுக்கும் தன் தன் இனத்தோடு சேர்ந்து வசிப்பதும் அன்பின் காரணமேயாம். கொலைத்தொழில் புரிகின்ற சிங்கம் புலி முதலிய கொடிய மிருகங்களும் தன் மனைவி மக்களிடத்து மிகவும் அன்புகொண்டிருப்பது சகலருக்கும் தெரிந்த விஷயமே. மேலும் யோசிக்குங்கால் அறிவுடைய மானிடரும் அன்பின் வயப்பட்டவரே, மானிடர்கொண்ட அன்பு, இப்புவியில் பல வகை இருக்கின்றன. ஒருவன் பொன்னினிடத்தும் மற்றொருவன் புவியினிடத்தும், மனைவி மக்களிடத்தும் அன்பு வைத்திருக்கிறான் இவைகளெல்லாம் அன்பு எனப்படாது. அழியும் பொருளின்மேல் வைத்துள்ள அன்பு நிலைபெறுடையதல்ல. இவைகளெல்லாம் பொய்யன்பே யொழிய மெய்யன்பன்று.

இனிமேல் மெய்யன்புதான் எது என்று யோசிக்குங்கால் அதை நாம் கையால் இத்தன்மையானது என்று எடுத்துக்காட்டத் தக்கதல்ல, அது குடத்துள் விளங்கும் தடற்றுள் விளக்கும்போல உள்ளுறையாக விளங்குகின்றது. அதனால் நாம் செய்கையிலேதான் பிறருக்கு காட்டவேண்டும். சாதாரணமாக உலகத்தில் ஜனங்கள் மண்ணின்மேலும், பெண்ணின்மேலும், பொருளின்மேலும், மனைவி மக்கள்மேலும், சுற்றத்தார்மேலும் வைக்கின்ற அன்பு ஸ்திரமாயுள்ளதல்ல. அப்பொருளுக்கு அழிவுவரும்பொழுது அந்த அன்புக்கும் அழிவுவரும். ஆதலால் இப்பேற்கொடா நின்ற பற்றுதல் பொய்யன்பு என்பதற்கையமில்லை. இனி நிலைபெறுடைய அன்பு எது என்று யோசிக்குங் காலத்தில் சர்வ உலகத்தையும் படைத்த இறைவன்மேல் வைக்கின்ற அன்பே நிலையுள்ளது. இறைவன் திருவடிகளில் இருத்தும் அன்பே இன்பந் தருவது. கடவுளின் அடிகளிற் காட்டும் அன்பே என்றும் அழியாத கதியைக் காட்டுவது. அதனால் இம்மை மறுமைக்கும் ஏதுவான பதவியை எளிதில் ஈயவல்ல மெய்ப்பொருளினிடத்தே வைக்கும் அன்பே மெய்யன்பு என்பதாம். மேலும் நாம் ஆராயுங்கால் மூன்று வகையன்பு இருக்கிறது; அதாவது தலையன்பு, இடையன்பு, கடையன்பு என மூன்று வகைப்படும். தலையன்பாவது: இடை இன்றி ஊற்று நீருக்கு ஒப்பாகப் பகரலாம். எப்படி ஊற்று நீரானது இடையிறாது இறைக்க இறைக்க ஊறி பாய்ந்துகொண்டேயிருக்கிறதோ அதேபோல் தலையன்புடையார் தம்மை முற்றும் மறந்து தம் மனதை இடைவிடாது இறைவனடிகளில் செலுத்தி எப்பொழுதும் அழியாத இன்பத்தையே நுகர்ந்துகொண்டிருப்பான்.

இனி இடையன்பு நெய்க்குச் சமமானது; அதாவது எப்படி நெய்யானது அனலைக்கண்ட விடத்து உருகி அந்த அனல் அகன்றவிடத்து இறுகி நிற்கிறதோ அதேபோல் இடையன்புடையார் ஆலயங்களிலேயாவது அடியார்களைக் கண்டமாத்திரத்தில் மெய்யன்பு சொரிவார்போல நடித்து மறைந்தபின்னர் மறந்து வாழ்க்கைக்குள் வயப்படுவார்.

ஆனால் கடையன்போ அரக்கை ஒத்திருக்கும். அரக்கானது நெருப்பிற் காட்டுந்தோறும் உருகும். அது அகன்றவுடன் இடையின்றி, இறுகிவிடும். அதற்கொப்பான கடையன்புடையார், இறைவனிடத்தும் அவ்வடியாரிடத்தும் அன்பு நீக்கி வன்புகொள்வார்.

ஆதலால் இப்பூமண்டலத்தின்கண் மானிடஜென்மமெடுத்த யாவரும் கடவுளால் படைக்கப்பட்ட சகல ஜீவராசிகளிடத்திலும் மெய்யன்பு பூண்டு ஒழுகவேண்டும். இதுவே முக்கியமாய் இருக்கவேண்டிய கருவியாகும்.

A. Maria Louis,
Akkaripatti P.O.

---

## அதிகாலையில் எழுந்திருத்தல்.

இவ்வுலகத்தில், சீரும், சிறப்பும், சம்பத்தும், செனக்குமும் வாய்ந்த நம்முன்னோருடைய ஜீவிய சரித்திரத்தை வாசிக்கப் புகுவோமேல் அன்னவர்களிற் பெரும்பாலர் அதிகாலையில் எழுந்திருக்கும் வழக்கத்தைக் கைக்கொண்டவர்கள் என்றும், அந்த முக்கிய நோக்கம் அவர்களிடத்தில் இருந்ததின் நிமித்தம் அவர்கள் உன்னத நிலையடைந்தனரென்றும் தெரியவரும். தற்காலத்திலும் சிற்சில கிராமவாசிகளிடத்திலும், அந்தணோத்தமரிடத்திலும் வைகறைத்துயிலெழும் வழக்கம் உண்டென்பதை நன்கறிவோம்.

ஆயினும் நம்முள் பெரும்பான்மையோர் விடிந்து 8 மணிவரைகூட 'கணகண,' என்று துப்பட்டியைப் போர்த்துக்கொண்டு தூங்குகின்றனர். 9 மணிவரை தூங்குகின்ற உத்தம புருஷர்களுமுண்டு. இன்னவர்கள் காலை விழிப்பின் நற்பயனை யறியாததினாலோ அல்லது



சோம்பேறித்தனத்தினாலோ இவ்வாறு செய்துவருகின்றனர். இப்படித் தூங்குவது பெருந்தவறு.

வைகறையிலெழுந்து கோழி, காகம், வானம்பாடி முதலிய பறவைகள்கூட உல்லாசமாய் இனிய குரலுடன் பாடும்போது அறிவுடையோராகிய மனிதர்கள் அக்காலத்தைத் தேவஸ்துதியிலும், படிப்பிலும், மற்றை அபிவிருத்திசெய்வதிலும் கழியாமல் நமது சரீரத்திற்கும் படிப்பிற்கும், பயிற்சிக்கும் வேண்டாகத் தூங்குவது மிகவும் அயுக்தமான விஷயமல்லவா?

காலைப்பொழுதில் இரவு தூங்கியதின் பயனாகச் சரீரம் களைப்புநீங்கியும், புத்தி கலக்கமற்றும், இளந்தென்றல் வீசும் நற்சமயம் படியாத விஷயங்களைப் படிப்பதற்கும், படித்த விஷயங்களைச் சிந்திப்பதற்கும் ஏற்ற தருணம் இதுவே. இது பற்றியே வேதத்தியானம் பண்ணுவோர்கள், தேகப்பயிற்சி செய்வோர்கள், பாடகர்கள் முதலிய வித்தியார்த்திகளும் அதிகாலையிலெழுந்து தத்தம் வித்தையைக் கற்றார்கள். இன்னும் கற்றுவருகிறார்கள்.

மலஜலம் கழிப்பதற்கும் தக்க தருணம் காலைவேளையே. அப்பொழுது தூங்கிக்கொண்டிருந்தால் மலஜலம் வெளியாகாமல் வயிற்றில் தங்கிவிடும். அவ்வாறு தங்குவதால் பலவித வியாதிகள் உண்டாகும். காலாகாலத்தில் மலஜலம் கழித்துவிட்டால் எவ்வித துன்பமும் இராது. மேலும், வைகறை தேவர்களுக்குரிய காலமாதலால் இதில் நித்திரைசெய்யின் தேவ சாபமுண்டாகும். ஆதலால் நோய்களுக்கும், தேவ சாபத்திற்கும் உள்ளாகாமல் தக்க நேரத்திலேயே எழுந்திருக்கவேண்டியது அறிவிற்கமைந்த விஷயம்.

இரவில் சீக்கிரம் படுத்துறங்கிக் காலையில் சீக்கிரம் எழும் வழக்கத்தால் ஒவ்வொருவனுக்குந் தேகாரோக்கியமும், தெள்ளறிவும், திரவிய லாபமும் உண்டாகும்.

"வைகறையாமந் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதிற்
தந்தையும் தாயையும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை" என்னும் முதுமொழியைக் கடைப்பிடித்து, வைகறையாகிய பின் சாமத்தில் கண் விழித்துச் செய்தற்குரிய கருமங்களையும் (நல்ல வழியில்) திரவியம் சம்பாதிக்கும் மார்க்கத்தையும், நன்காராய்ந்து, பின்பு தக்க விதத்தில் தந்தை தாயாரைத் தொழுதெழுந்து எக்காரியத்தையும் செய்யத் தொடங்க வேண்டும். நிற்க மகளிர்களும்,

"காட்டுக் களைந்து கலங்கழீஇ இல்லத்தை
ஆப்பிநீர் எங்கும் தெளித்துச் சிறுகாலை
நீர்ச்சால் கரகம் நிறைய மலரணிந்து
இல்லம்பொலிய அடுப்பினுள் தீப்பெய்க
நல்லது உறல் வேண்டுவார்" என்னும் முதுமொழியைக் கடைப்பிடித்து, அதிகாலையிலெழுந்து மங்களமாக வீட்டை விளக்கிச் சாணி நீர்தெளித்து மெழுகிப் பாத்திரங்களைச் சுத்திசெய்து கரகங்களிலும் நீர்ச்சால்களிலும் மலர்களையிட்டுப் பின்பு அடுப்பு நெருப்பு மூட்டிச் சமைக்கத் தொடங்குவார்களாயின் ஆரோக்கியம், செல்வம் முதலான சகல சம்பத்தும் உண்டாகுமென்பதற்கு ஐயமில்லை

ஆதலால் சகோதர, சகோதரிகளே, நமது வாழ் நாளை வீணாகத் தூங்கித் தொலைக்கும் இத்துர்வழக்கத்தை அடியோடு ஒழித்து, வைகறையிலெழுந்து நாம் செய்தற்குரிய கருமங்களைச்செய்யத் தொடங்குவோமாயின் எங்கும் நிறைந்த ஈசன் சகல சம்பத்துக்களும் உண்டாகும்படி திருக்கருணை புரிவார் என்பதற்கு ஐயமில்லை

சுபம்! சுபம்!! சுபம்!!!

T. பழனிக்குமாரு,
பெருமாள் கவுண்டன்பட்டி.

---

## கல்வியின் காலத்தைத் தப்பாமல் பிடியுங்கள்.

நம்முடைய தேசத்தவர்கள் அநேகம்பேர் காலம் நம்முடைய ஆயுளை அளக்கும் ஓர் கருவி என்று அறியாமல் அதை வீண்போக்கில் கழித்தும் அதன் அருமைபெருமையை உணராது கஷ்டப்பட்டு ஆழ்ந்த துன்பத்திற்கு இலக்காகின்றார்கள், அந்தோ இது என்ன பரிதாபம், ஒவ்வொரு வினாடியும் பொன்னை விளைவிக்கும் வித்தல்லவா, சோறுக்கு அழுகின்றவன் சோம்பேறி அல்லவா, ஏன் அவன் தன் காலத்தை வீணிலே கழித்து எவ்வித அப்பியாசத்திலும் பழகிக்கொள்ளாமல் காலத்தைப் பாழிலே கழித்ததனாலல்லவோ அவனுக்கு சோறு பஞ்சமாகிவிட்டது. இதைக் கண்கூடாகக் கண்ட ஒருவன் ஏன் காலத்தை வீண்போக்கவேண்டும். இவனுக்கும் அவனுக்கும் கதி ஒன்றேயல்லவா? இவ்வளவும் அவர்கள் அனுபவிப்பதற்கு அநேக காரணங்களைக் கற்றோர்கள் காட்டியபோதிலும் அவைகளில் முக்கியமான காரணம் தாய்தந்தையர்களே. இதற்கு மறுமொழி வேறு மொழியாகத்தான் முடியும். சிறுவர்களைக் குழந்தைப் பருவமுதற்கொண்டே காலத்தை வீண்போக்காத வழியில் நிலைநிறுத்தவேண்டும்.

தாய் குழந்தைக்குப் பால் ஊட்டி வளர்க்கும்போதும் குறித்தகாலங்களிலேயே பாலைப் பருகும்படி செய்ய

வேண்டும். அழும்போதெல்லாம் பாலை ஊட்ட ஆரம்பித்தால் இப்பழக்கம் குழந்தைப் பருவமானபின் உண்டாகிய இளமை முதுமைப்பருவங்களிலும் காலந்தப்பியே ஆகாரத்தைக் கிடைத்தபோதெல்லாம் உட்கொள்ளும்படி செய்யும். ஆகையால் பாடசாலைக்குப்போகும் பருவத்தில் நித்திரையினின்று எழுந்திருக்கவும், தேகசுத்தி செய்துகொள்ளவும், கடவுளை தியானிக்கவும், காலை ஆகாரத்தை உட்கொள்ளவும், பாடங்களை படிக்கவும், பாடசாலைக்குப் போகவும், அங்கு நடக்கவேண்டிய வேலைகளைக் கவனிக்கவும், விளையாடவும், மறுபடியும் பாடங்களைக் கவனிக்கவும், இரவு போஜனங்கொள்ளவும், குறித்த நேரங்களில் இவைகளைச் செய்யப் பழகவேண்டும். அந்தந்த நேரங்களில் செய்யத்தவறின் அவைகளைக் கட்டாயமாய் அநுசரிக்கவேண்டிய முறைமைகளைத் தாய் தந்தையர்கள் உடனே தேடவேண்டும். ஒருக்காலும் இவ்விஷயத்தில் தவறவேகூடாது. சூரியன் பகலையும், சந்திரன் இரவையும், கடிகாரம் ஒரு நாளையும் அளப்பது போல் ஒவ்வொரு சிறுவனும் தான் பிரதிதினமும் செய்யவேண்டிய தொழில் எதுவோ, அதைக் காலமாகிய கருவியால் அளந்தே செய்யவேண்டும். இங்ஙனம் அவன் பழகுவானாகில் அவனுக்கு வறுமை என்பதே இன்னதென்று தெரியாமற்போகும். அவன் குடி முழுவதும் செல்வத்தோடு வாழும். அவன் தேசம் உயர் நிலைமையைப்பெறும்.

விளைபொருளுக்குத் தக்க ஆதாரமில்லாத தேசங்கள் பலவற்றுள் இங்கிலாந்தும் ஒன்றுதானே, அதிலுள்ள ஜனங்கள் நம்மவர்கள் ஏங்கும்படி எங்ஙனம் இந்திர போகத்தை அடைந்திருக்கிறார்கள், இளமையிற் கல் என்பதுபோல, தங்கள் காலத்தை வீண்போக்கிக் கழிக்காமல் சிறுவயதிலேயே ஒருவன் உயிர்நிலைக்கும் உயர்நிலைக்கும் ஆதாரமாகிய கல்வியிற் பயின்று பருவத்தே பயிர்செய் என்பதுபோல அந்தந்தப் பருவத்தில் எந்தெந்தத் தொழிலில் பழகிக்கொள்ளலாமோ அந்தந்தத் தொழிலில் பழகித்தேறியதனாலல்லவா? அரதேசத்தை நாடிச்செல்லவும், அத்தேசத்தாருடன் சம்பாஷிக்கவும், விவகாரங்களை நடத்தவும், அதிகதன் செல்லுமல்லவா? இதுபோன்ற அநேக காரியங்களிலும் அதிகநாளை ஒருவன் கழிப்பதென்றால், அதனால் காரியந்தான் முடியுமென்பதையும், காலத்தைச்சுருக்கிப் பெரிய காரியங்களை முடிப்பது லாபத்தைத்தரும் என்பதையும் அறிந்தல்லவோ ஆகாயவிமானமும், இருப்புப்பாதை வண்டியும், நீராவிக்கப்பலும், டெலிபோனும், தந்தியும் உண்டாவதற்குக் காரணமாயின. இவ்வாறே தற்காலம் எத்தனை எண்ணிறந்த அபூர்வமான இயந்திரங்களையும் கருவிகளையும் உண்டாக்கியிருக்கின்றார்கள். வீணாவிணன் புத்திக்கு இவ்விஷயங்கள் எட்டுமா? இடைவிடா சிந்தனையுள்ள ஆழ்ந்த கூரியபுத்தியுள்ளோனுக்கல்லவா சித்திரம்; அப்புத்தி எப்படியுண்டாகும்? காலத்தை வீண்போக்காது இளமையிலே கற்றுக் கண்டுதேறியதனாலல்லவா அடியிற்கண்டபடி காலத்தின் அருமை உணராத நம் சில தேசவாசிகளின் செய்கைகள் தங்கள் சிறுவர்களை எம்மட்டும் உதவிபுரியும் என்பதைக் கவனியுங்கள்.

1. தாய்தந்தையர்கள் செல்வமுள்ளவர்களாயிருந்து சிலகாலம் சந்தானமின்றி ஒரு பிள்ளை பிறந்தால் அப்பிள்ளையை அதிகச் செல்வத்தோடு வளர்ப்பதுமன்றி, பாடசாலைக்குப்போகும் பருவமடைந்த உடனே பிள்ளையை பள்ளிக்கு அனுப்புகிறதில்லை. அண்டை அயலார்: பிள்ளைக்கு வயதுவந்துவிட்டதே, ஏன் இன்னும் பிள்ளையை பள்ளிக்கு அனுப்பவில்லை என்று கேட்டால், தகப்பன்: ஐயா பையன் சிறியவன், வயது என்ன இப்போ 6, 7 தானே ஆகிறது. 10, 12 வந்தால் போகிறான்; என்பான். தாயோ: என்னய்யா, நெடுநாள் பிள்ளை இல்லாமல் தவஞ்செய்து பெற்ற பிள்ளையாச்சே, பள்ளிக்கூடம் போனால், பையன் இளைத்துப்போவானே, [illegible]வானே, வாத்தியார் தொந்தரவால் நோயாளியாவானே; ஏன் படிக்கவேண்டும், ஒரு பிள்ளைதானே, இருக்கின்ற செல்வம் யாருக்கு, அவனுக்குத்தானே. படிச்சவனெல்லாம் என்னசெய்கிறான். அவனுக்குப் படிப்பும் வேண்டாம், அவன் பாழாகவும் வேண்டாம், பிள்ளை என்று இருந்தால்போதும், என்பாள். இப்பிள்ளை வயதடைந்து செல்வத்தையுமிழந்து சோற்றுக்குத் திண்டாடும் காலத்தில்: ஐயையோ, என் தாய்தந்தையர்க்கு செல்வமிருந்தும் என்னை எனக்குக் கண் கொடாமல், என்னை இப்போது புண்படச்செய்தார்களே என்று நிந்திப்பான்.

ஒரு அரியபெரிய காரியத்தை நடத்த ஒரு விவேகி பிரவேசித்து, அக்காரியத்தை நடத்தக்கூடிய காலத்தையும் நிர்ணயித்து, பந்துமித்திரர்களுக்குத் தெரிவித்தானால், குறித்தகாலத்தில் நடத்த உத்தேசித்தவனன்றி மற்றவர்களைக் காண்பதரிது. அவனும் ஒன்று இரண்டு மூன்று மணிநேரம் வரையில் காத்திருப்பானாகில், 4, 5 நபர்களைக் காண்பான். அந்தோ, என்ன கொடுமை 1, 2 அல்லது 3 மணிநேரத்தை வீணிலே கழித்தால் மறுபடியும் சென்றகாலம் வருமா, ஆராய்ந்து பாருங்கள்.

ஒருவர் தான் எக்காரியத்திலோ, லாபமோ, ஜெயமோ அடைந்தால் அதை முன்னிட்டு, ஒரு விருந்தளிக்க முயன்று ஒரு காலத்தை விளம்பரப்படுத்தி அதற்கு வேண்டிய முயற்சிகளைத் தேடி ஆயத்தமாயிருந்தால் விருந்துண்போர்கள் பலர் முன்னும், சிலர் குறித்தகாலத்திலும், மற்றுஞ் சிலர் பின்னும் வருவார்கள். குறித்த காலத்தில் சென்று அமைத்துக்கொண்ட வேலையாட்களைக்கொண்டு, நியமித்தகாலத்தில் வந்த விருந்தினரை உபசரிப்பது அழகா, முன்னும் பின்னும் வந்தவர்களை உபசரிப்பதா, எது? புத்தியுள்ளோர்களே கவனிக்கத்தக்கது.

நம் மக்கள் அதிக செல்வாக்கை அடைந்து உயர்பதவியைப் பெறவிரும்பினால் மேற்காட்டிய வண்ணமாய்ப் பற்பல காரியங்களிலும் காலத்தை வீண்போக்காமல் ஒவ்வொரு விநாடியும் நற்காரியத்தில் உபயோகிக்கவேண்டுமென்றே விளங்கவில்லையா! இதனைச் சிறுவயதிலேயே பிள்ளைகள் கைப்பற்றும்படி செய்வதற்காக ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொருவரிடத்திலும் கெடியாரம் இன்றியமையாத கருவியாகயிருக்கவேண்டும். மேற்சொன்னபடியே குறித்தகாலத்தின் மதிப்பையறியாமலே பலர் இருக்கிறார்கள் என்றால் தங்களுக்கும் தங்கள் தேசத்திற்



கும் மதிப்பு எப்படி உண்டாகும்? பண்டமாற்றலை நடத்தும் பெரிய வியாபாரி ஒருவன் இந்நாளில் இந்தநேரத்தில் தான் மற்றொருவனுக்கு செலுத்தவேண்டிய தொகையைச் செலுத்துகிறேனென்று வாக்களித்து அக்காலந்தவறி செலுத்துவானானால் அவன் வியாபாரம், செவ்வனே நடைபெறுமா? (நாணயமுள்ளவன் ஆவானா? ஒருக்காலுமாகான்).

விக்டோரியா மகாராணியாரின் பிரதம மந்திரியாயிருந்த மிஸ்டர் கிளாட்ஸ்டன் என்பவர் ஒரு சந்தர்ப்பத்தில் காலத்தின் அருமையைப்பற்றி அடியிற்கண்டவண்ணம் வெளியிட்டனர். இதன் சாராம்சமாவது: எவனொருவன் பாலியமுதற்கொண்டு தன்னுடைய காலத்தைப் பொருளை சிக்கனமாய்ச் செலவிடுவதுபோல நல்விஷயங்களில் தவறாமல் உபயோகித்துவருகிறானோ அவனே முதிர்பருவத்தில் தான் என்றும் எதிர்பாராத லாபத்தை அடைவான். அப்படிக்கின்றி எவனொருவன் தன் இளமையை வீணில் கழிக்கின்றானோ அவன் பிற்காலத்தில் தன் புத்திக்கூர்மையையும் நன்னடக்கையையும் இழந்து பெரிய துக்கசாகரத்தில் ஆழ்த்தப்படுவான் என்பதாம்.

நமக்கு பெருமையும் சிறுமையும் தருவது கால அளவேயாகும். தாய்தந்தையர்களே இத்தனை (நம்) சிறுவர்களுக்கு இளமையிலிருந்தே போதித்து அவர்களும் அவர்கள் குடும்பமும் அவர்கள் தேசமும் முன்னுக்குவரும் நிலைமையை நாட்ட முந்துங்கள்.

A. ராஜாபிள்ளை,
பன்னாரம்பட்டி.

## பெண் கல்வி.

1. பணத்தின் பொருட்டும் உத்தியோகத்தின் பொருட்டும்தான் [illegible] படிக்கிறார்கள். அதனால்தான் பெண்கள் படிப்பது அநாவசியமென்று ஏற்பட்டது. பெண்கள் படித்து என்ன உத்தியோகம் செய்யப்போகிறார்களென்றும், புருஷன் சம்பாத்தியத்திலிருந்து நகைகள் பட்டுவஸ்திரங்கள் முதலிய காரியங்களையெல்லாம் அடைகிறோமென்றும், பெண்கள் படிப்பதினால் கெட்டுப்போய் விடுவார்களென்றும் நினைப்பது பிசகு. நம்முடைய அஜாக்கிரதையினால் சிலவேளைகளில் அடுப்புத்தீ வீட்டில் பற்றி நாசமுண்டாக்குவதனால் ஒரு வீட்டிலும் அடுப்பு மூட்டக்கூடாதென்றும் சொல்லலாம். தீயானது மனிதனுடைய சரீர சுகத்துக்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு கல்வியானது நம்முடைய நல்லொழுக்கத்துக்கும், சுகத்துக்கும், உயர்பதவிக்கும் அவசியமானது. ஆனால் தீயானது கெட்டோர் கைபட்டகாலத்தில் தீங்கை விளைப்பதுபோலவே கல்வியும் தீயோரிடத்திருந்தால் கெடுநிலைய உண்டுபண்ணும்.

2. புத்திவிருத்தியும் போதமும், நல்லொழுக்கமுமே கல்விகற்பதின் முக்கிய பயனாகக் கொள்ளவேண்டும். புருஷனிடத்தில் பணமிருந்தால் பெண்சாதிக்கு நகைகள் செய்யலாம், ஆனால் புருஷன்மட்டும் சாப்பிட்டால் பெண்சாதி வயிறு நிறையுமா? ஆகையினால் கல்வியும் அறிவும் மானிடப்பிறப்பு எடுத்தவர்கள் யாவரும் கல்விகற்கவேண்டும். ஒருவர்க்காக ஒருவர் படித்தல் பயன்படாது.

3. "அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார் என்னுடைய ரேனும் இலர்" திருக்குறள். குழந்தைகள் புத்திக் கூர்மையாயிருப்பதற்குத் தகப்பனைப்போல் தாயும் படித்திருக்க வேண்டும். புருஷன் மாத்திரம் படித்திருந்தால் தன் மூடத்தனமான மனைவியுடன் அவன் என்ன சுகத்தையும் நேசத்தையும் அநுபவிக்கக்கூடும்? ஆகையால் கற்றுத்தேர்ந்த தன் புருஷனுடைய சிநேகத்தையும், பாசத்தையும், தன் அழகு அழிந்துபோன காலத்திலும், ஒருநாளும் கைவிடாதுகொள்ள விரும்பும் பெண், அவனுக்குப் பிரியமுள்ள கல்வியில் தானும் தேர்ச்சியடைய வேண்டும். இல்லாவிட்டால் பெண்சாதியின் அழகு குன்றுங்காலத்தில் சல்லியாகிய சக்களத்தி அவள் அவன் புருஷனை தன் வசமாக்கிக்கொள்வாள். தவிரவும் புருஷன் மதிப்பைத் தன் கல்வியினாலும், அதனாலுண்டாகும் நல்லொழுக்கத்தினாலும் ஒரு மனைவி கவர்ந்துகொள்ளாவிடின் அவள் எண்ணங்களையும் விருப்பங்களையும் அவன் சிறிதும் கவனியாமல் தன் மனப்படியே நடப்பான்.

4. ஆகையால் இந்திர குலாதிபர்காள், உங்கள் பெண்பிள்ளைகளை இதிலிருந்து பள்ளிக்கூடத்திற்கு அனுப்புங்கள். "வெறுங்கழுத்து அரைப்பணத்து தாலி சிலாக்கியம்" என்பது போல் எழுதவும் படிக்கவும் தெரிந்தால் மிகவும் நன்மையென்று உங்களுக்கு கூடிய சீக்கிரத்தில் தெரியவரும்.

S. Ramadas,
Vellayammapuram.

## அகஸ்மாத்தாய் நேரிடும் விபத்துகளுக்குப் பரிகாரம்.

### நெருப்புச் சுட்டகாயம்.

நெருப்புச்சுடுதலும் அகஸ்மாத்தாய் நேரிடும் சாதாரண விபத்துக்களில் ஒன்று. நெருப்புச்சுட்டு புண்ணாய்ப்போன சதையில் ஆகாயம் படாதபடி பார்த்துக்கொள்வது அதற்குச் சிகிட்சை செய்வதில் கவனிக்கவேண்டிய முதன்மையான விஷயம். சரீரத்தில் எரிவுண்டாகாதபடி மிருதுவான வஸ்துவைக்கொண்டு அதை மூடவேண்டும். புண்ணாய்ப்போனபாகத்தில் ஏற்கனவே துணி ஏதாகிலும் ஒட்டிக்கொண்டிருந்தால் அதை எடுத்துவிட வேண்டும். ஆனால் அதை முரட்டுத்தனமாய் இழுக்காதபடி ஜாக்கிரதையாக எடுக்கவேண்டும். புண்ணில் நோவுண்டாகாதபடி அந்தத்துணியில் எண்ணெய்வைத்து நனைத்துச் சற்று நேரம் ஊறும்படி செய்து பிறகு மெதுவாய் எடுத்துவிடலாம். பிறகு மெல்லிய துணியை ஒலிவ எண்ணெயிலாவது தேங்காய் எண்ணெயிலாவது நனைத்து அல்லது சணல் விதை எண்ணெயும் சுண்ணாம்புநீரும் கலந்து அதில் நனைத்துக்காயத்தின்மேல் போடலாம். இவைகளொன்றும் சமீபத்தில் கிடைக்காவிட்டால் கஞ்சிப் பசை அல்லது முட்டையின் வெள்ளைக்கரு அல்லது

சாமாவு உபயோகிக்கலாம். சோடாவில் துணியை நனைத்தும் போடலாம். காடி அல்லது எவ்வித திராவகத்தையும் உபயோகிக்கலாம். ஜலத்தை உறுஞ்சிக்கொள்ளும துணியையும் உபயோகியாதே என்னென்றால் அது காயத்தில் ஒட்டிக்கொள்ளும். பரிகாரஞ்செய்ய உபயோகிக்கும்படி மேற்சொன்ன வஸ்துக்களெல்லாம் சுத்தமாயிருக்கவேண்டியது மகா முக்கியம். இல்லாவிடில் அவற்றினின்று விஷக்கிருமிகள் காயத்திற்சென்று புண்ணை அதிகப்படுத்திவிடும்.

நெருப்புச் சுட்ட காயமானது அதிக கொடுமையாயிருந்து தேகத்தில் அதிகமான புண்ணாயிருந்தால் வியாதியஸ்தனை ஜாக்கிரதையாய் குளிப்பாட்டவேண்டும். சரீரத்தின் உஷ்ணக்கிரமம் ஏறக்குறைய 98 டிகிரியிருக்கும்படி பார்க்கவும் இப்படி குளிப்பாட்டுவது நெருப்புச்சுட்ட காயத்தினால் நரம்புகளுக்கு நேரிட்டிருக்கும் அசைவைச் சரிப்படுத்தும்.

## மேலேபோட்டிருக்கும் உடுப்பில் தீப்பிடித்தல்.

உடுப்பில் தீப்பிடித்துக்கொண்டால் உடனே ஓடித்தப்பித்துக்கொள்ளப்பிரயாசப்படாமல் கீழேபடுத்துப் புரண்டு தீயை அணைக்கப் பார்க்கவேண்டும். அல்லது சமீபத்தில் கிடைக்கக்கூடிய கம்பளிப்போர்வை அல்லது கம்பளிச்சட்டையை எடுத்து மேலேபோட்டுத் தீ எரியாதபடித் தடுக்கலாம். தண்ணீரை எடுத்து ஊற்றி ஒருபோதும் நெருப்பை அணைக்கவேண்டாம். அதற்குப் பதிலாக மேசைமேல் விரித்திருக்கும் துணி அல்லது கம்பளத்தைக்கொண்டு அதை நிறுத்தப் பிரயாசப்படவேண்டும். தீ எரிந்து முகத்தில் சுடாதபடிக்கு முந்த நெஞ்சில் கம்பளத்தைப் போட்டுத்தடுக்கவேண்டும்.

## குரல்வளையில் ஏதாகிலும் அடைத்துக்கொள்ளுதல்.

எதையாகிலும் விழுங்கும் சமயங்களில் அது குரல்வளையில் அடைத்துக்கொள்ளுவதும் அடிக்கடி சாதாரணமாய் நேரிடும் ஓர் விபத்து. இது பெரியோருக்கும் விசேஷமாகப் பிள்ளைகளுக்கும் நேரிடுவதுண்டு. அது சுவாசம் செல்லும் கருவிகளில் அடைத்துக்கொள்வதினால் திக்குமுக்காடி மூச்சுவிடக்கூடாதபடிசெய்யும். உடனே தலையைத்தாழ்த்தும்படிச் செய்யவேண்டும். அதாவது அப்படிக்கஷ்டப்படும் ஆளைத் தலைகீழாகப் பிடித்து நிறுத்தவேண்டும். பின்பு முதுகில் பலமாய் ஒரு குத்து குத்துவதினால் குரல்வளையில் அடைத்திருப்பது வெளியே வந்துவிழும் அல்லது விரலைத் தொண்டையில் விட்டு வாந்திபண்ணினாலும் அடைத்திருப்பது வெளிப்பட்டுவிடும்.

## ஈக்களை நீக்கும் வழி.

நீ பார்க்கும் ஒவ்வொரு ஈயையும் உடனே கொன்று அதின் உடலை சுட்டெரி.

இப்பொழுது ஒரு ஈயைக்கொல்வதின் பலனாக இனிமேல் கோடிக்கணக்கான ஈக்கள் இல்லாமற்போகும்.

தாய் ஈ ஒரே சமயத்தில் 150 முட்டைகளையிட்டு தான் ஜீவித்திருக்கும். ஐந்து வாரத்திற்குள் அவ்விதமாய் எங்கும் பரவவும் இடமுண்டாகிறது.

விஷக்கிருமிகளுள்ள இடங்களிலெல்லாம் ஈக்கள் ஏதேஷ்டமாயிருக்கின்றன. ஒரு ஈ போன காலடி பாதையில் நூற்றுப்பதினாறு விஷக்கிருமிக் கூட்டங்கள் இருந்ததாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஈயின் உடம்பிலே 6,60,00,000 விஷக்கிருமிகளிருக்கின்றன.

வீட்டில் எப்போதும் ஈ நிறைந்திருப்பதானது வீட்டிலுள்ள மனைவியானவள் தன் வீட்டுக்காரியங்களைக் குறித்து அஜாக்கிரதையாயிருக்கிறாள் என்பதையும் அந்த வீட்டில் ஈக்களுக்கு ஒரு இருப்பிடம் கொடுக்கப்படுகிறதென்பதையும் காட்டுகிறது.

சாப்பாட்டு அறையிலாவது இன்னும் பலசரக்குசாமான்களை வைக்கும் அறையிலாவது ஈக்கள் பதார்த்தங்களில் வந்து தங்க அவைகளுக்கு இடங்கொடுக்கலாகாது. ஈக்கள் முதலாவது அசுத்தத்திலிருந்து சாப்பாட்டில் வந்து உட்காருவதால் விஷக் கிருமிகளைக்கொண்டுவந்து நமது ஆகாரத்தில் போடுகின்றன.

சாப்பாடு பரிமாறப்படும்பொழுது ஈக்களைக் கவனியுங்கள். இந்த அனுபோகம் நமக்கு உற்சாகமாயிருப்பதோடு நமக்கு போதனையையும் கற்பிக்கும். அவை விஷக்கிருமிகளை ரொட்டியின்மேல் வைத்துவிட்டுப்போகின்றன. அவைகளை வெண்ணெய்க்குள் மறைத்துவிட்டுப் போகின்றன. சர்க்கரையில் பரவிப்போகச் செய்கின்றன. உங்கள் காப்பியைக் குடித்துப்போட்டு பாலில் நீந்துகின்றன.

ஈக்கள் விருத்தியாவதற்குக் காரணமாயிருப்பவை எவைகளோ அவைகளெல்லாவற்றையும் நீக்கிப்போடுங்கள்.

உங்கள் இடங்களைச் சுத்தம்பண்ணுங்கள். வீட்டறையை எவ்வளவு சுத்தமாய் வைத்திருந்த பின்னும் ஈக்கள் வருவதின் காரணம் நமக்குதெரிகிறதில்லை: வீட்டுக்குப்பின் அல்லது குளிஅறையில் வைத்திருக்கும் குப்பை கூளங்களுள்ள தொட்டிகள் இதற்குக் காரணமாகலாம்.

உங்கள் தொழுவங்களிலிருந்து ஈக்கள் முட்டையிட்டுக் குஞ்சுபொரிப்பதற்கேதுவாயிருக்கும் எல்லாவித அசுத்தங்களையும் குப்பைகளையும் நீக்கிப்போடுங்கள். அவைகள் போதுமான சூடுள்ள சாம்பலிலும் கோழி, மாடு இவை இன்று மீந்துபோன தீனியிலும், அழுக்கான நீர் குழிகளிலும், கைக்கோல்துணிகளிலும், பின்னலான நார்களிலும், கெட்டுப்போகிற காய்கறிபதார்த்தங்கள், பழங்கள், ஆகாரவகைகள் இவைகளிலும், ரொட்டி, பால், வேவித்த முட்டை இவைகளிலும், பதமழிந்த கோதுமை முதலான தானியவகைகளிலும் முட்டையிட்டுக்குஞ்சுபொரிக்கின்றன.

உங்கள் வீடுகளைச் சுத்தஞ்செய்து தொத்துவியாதிக்கேதுவான இந்தப்பீடையை உங்கள் இடங்களைவிட்டு அகற்றுங்கள். ஈக்களைக்கொன்று மனுஷஜீவனைப் பாதுகாருங்கள்.

(ஆரோக்கிய தூதிகை)



1098

REG. NO.—M. 2148

# THE Piramalai Reformer

# பிரமலை சீர்திருத்தன்.

No. 2 3NOV 1928 MADRAS

"நன்மைக்குத் தீமை செய்கிறவன் எவனோ, அவன் வீட்டைவிட்டுத் [illegible]"

Vol. VIII.] நவம்பர்மீ 1928 [இலக்கம் 7

## பஞ்சாங்கம்.

1928 | விபவஞூ ஐப்பசிமீ | நவம்பர்மீ | விபவஞூ கார்த்திகைமீ | 1928

| Sunday ஞாயிறு | Monday திங்கள் | Tuesday செவ்வாய் | Wednesday புதன் | Thursday வியாழன் | Friday வெள்ளி | Saturday சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 ஐப்பசி 17 | 2 18 | 3 19 |
| 4 20 | 5 21 | 6 22 | 7 23 | 8 24 | 9 25 | 10 26 |
| 11 27 | 12 ● அமா. 28 | 13 29 | 14 30 | 15 கார்த்திகை 1 | 16 2 | 17 3 |
| 18 4 | 19 5 | 20 6 | 21 7 | 22 8 | 23 9 | 24 10 |
| 25 11 | 26 ※ கார். 12 | 27 ○ பௌர். 13 | 28 14 | 29 15 | 30 16 | |

*Patron.*—M.R.Ry. Rao Bahadur, A. J. Vethanayaga Thevar Avl., Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam, Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley, Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-ள-ள-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். எ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ சந்தா ஒப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

## மதுரை போடிநாயக்கனூர் ரயில்வே.

வெகுகாலமாக எதிர்பார்த்திருந்த ரயில்பாதை எல்லாம் முடிவடைந்தது. ரயில்கள் ஓடுவதற்கு ஆயத்தமாயிருக்கிறது. பத்திரிகைகளின் மூலமாயும் அதிகாரிகளின் மூலமாயும் அறிகிறபடி ரயில்பாதை நவம்பர்மீ 19உ திறக்கப்படும் என்று தெரிகிறது. அந்தந்த ஸ்டேஷன்களுக்கு ஸ்டேஷன்மாஸ்டர்களும் சிப்பந்திகளும் வந்துவிட்டார்கள். நமது நாட்டிற்கு இது ஒரு பெரிய சிலாக்கியம். மோட்டார்காரருடைய கஷ்டங்கள் சிறிது ஒழியும் என்று நம்பலாம்.

---

## உசிலம்பட்டி கள்ளிக்கோட்டை ஓடுகள்.

மெய்மாகவே நமது நாட்டிற்கு ஒரு
பெரிய பாக்கியம்.

உங்கள் வீடுகளுக்கு ஓடுபோட்டு, உஷ்ணம், கறையான், திப்பயம் முதலிய உபத்திரவங்களுக்கு நீங்கலாகி நீடூழி வாழலாம். சுகம் அனுபவியுங்கள். எல்லாவிதமான கள்ளிக்கோட்டை ஓடுகள் மாதிரி—மேய்ச்சல் ஓடு, முகட்டு ஓடு, புகை ஓடுகளும், 9, 8, 6 அங்குல தளவரிசை சதுரக்கல்லுகளும், சாக்கடைக் குழாய் முதலியவைகளும் உசிலம்பட்டியிலிருக்கும் எங்கள் ஆபீசில்செய்து மிகவும் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படும். எல்லோரையும் திருப்தி செய்வது எங்கள் கடமை. இன்ஜினீயர்களும், மற்றும் பல பெரிய உத்தியோகஸ்தர்களும் பரிசோதித்து நற்சாட்சி கூறியிருக்கிறார்கள். தயவுசெய்து அடியிற்கண்ட கம்பெனிக்கு எழுதியாவது நேரில் வந்தாவது பெற்றுக்கொள்ளுங்கள்.

மானேஜர்,
டைல் ஒர்க்ஸ் கம்பெனி,
கிழப்புதூர்,
உசிலம்பட்டி.

## ஆரோக்கியம்

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த்தம் நான்கையும் அடைதற்குக் கருவி சரீரம். ஆதலினால் மரணபரியந்தம் தங்கள் தங்கள் சரீரத்தை வியாதி அடையாவண்ணம் பாதுகாப்பது யாவருக்கும் ஆவசியகம். ஆகையால் சரீரத்தை ஆரோக்கியமுடையதாகப் பாதுகாக்கும் முறைகளாவன:—

நாள்தோறும் சூரியோதயத்துக்குமுன்னே விழித்தெழுந்தால் புத்திதெளிவடையும். நரம்புத் துவாரத்து நீர் சுத்தியுறும். பித்தம் நீங்கும். வாதபித்தங்கள் தத்தம் நிலையைப் பொருந்தும். காலையில் தேகப்பயிற்சி செய்து வந்தால் சரீரம் இறுகும். பசி உண்டாகும்.

காலந்தோறும் ஒழுங்காகப் போஜனம் செய்துகொண்டு வருதல்போலவே அதனின்று பிரியும் மலசலாதிகளை ஒழுங்காய் மோசனம் செய்துகொண்டு வருதலும் ஆரோக்கியத்துக்கு ஏதுவாகும். நாள்தோறும் காலைமாலை என்னும் இரண்டு நேரத்திலும் தவறாமல் மலமோசனம் செய்யும்படி பழகிக்கொள்ளல்வேண்டும். இடையே மலசலமோசனம் செய்யவரின் தடைப்படாது செய்தல் வேண்டும். மலசலங்களை அடக்கினால் வியாதி உண்டாகும். மலசலம் தங்காது இறங்குமாயின் வியாதிகள் அணுகாவாம். பற்களை துவர் உள்ள தூள், இலை, கொம்பு, இவைகளினால் பற்களை செவ்வையாய் விளக்கல் வேண்டும். இப்படி விளக்கினால் பற்களுக்கு சம்மந்தப்பட்ட வியாதிகள் அணுகாது. பற்கள் அசைவில்லாமல் உறுதியாய் இருக்கும். செங்கல், மணல், கரி, என்பவைகளினாலே பல்விளக்கலாகாது.

ஸ்நானம்: சரீரத்திலுள்ள மயிர்க்கால்கள் வழியாய் வேர்வையாய் கழியும் அழுக்குகளெல்லாம் இரத்தத்தினின்று தடையின்றி வெளியேறும்பொருட்டு நாள்தோறும் ஒழுங்காய் சரீரத்தைத் தேய்த்து ஸ்நானம் செய்யவேண்டும். வெந்நீரிலே செய்யும் ஸ்நானத்தைப் பார்க்கிலும் தண்ணீரிலே செய்யும் ஸ்நானமே உடம்புக்கு அதிக உறுதியைத் தரும். சூரியகிரணப்படாத நீரும், காற்றுப்படாத நீரும், பாசிநீரும், அதிக சேறுள்ள நீரும், இலை உதிர்ந்தநீரும், புழுவுள்ளநீரும், துர்க்கந்தமுள்ளநீரும், வியாதிகளை விளைவிக்கும். அதனால் இவைகளில் ஸ்நானம்செய்யக்கூடாது. ஸ்நானம்பண்ணி நெடுநேரம் ஈரத்தோடிருக்கலாகாது. உடம்பிலே ஈரஞ்சுவறினால் குளிர் உண்டாகும். அதனால் வியாதி உண்டாகும். குளிரும் வியாதியும் உண்டாகாவண்ணம் சீக்கிரம் ஸ்நானம்பண்ணி முடிந்தவுடனே உடம்பிலே ஈரமில்லாமல் துடைத்துவிட்டு தோய்த்துலர்ந்த வஸ்திரத்தை அணிந்துகொள்ள வேண்டும்.



போஜனம்: காலந்தோறும் ஒழுங்காய் போஜனம்செய்துவரவேண்டும். அகப்பட்ட பொழுதெல்லாம் போஜனம் செய்யலாகாது. முன்புசித்த போஜனம் முழுதும் ஜீரணமாகி மிகப்பசி தோன்றிய பின்பு போஜனம் செய்தல் வேண்டும். இப்படிச்செய்யாவிட்டால் புசித்த போஜனம் செவ்வையாய் ஜீரணமாகாது. முன்சாப்பிட்ட போஜனமும், பின்பு புசித்த போஜனத்தோடு கலந்து வியாதியை விளைவிக்கும். அதிக குளிர்ந்த அன்னமும் ஊசிய அன்னமும், நன்றாக சமையாத அன்னமும், குழைந்த அன்னமும் புசிக்கலாகாது. போஜன முடிவில் புளித்த தயிரும் உப்பும் அன்னத்தில் சேர்த்து சாப்பிட்டால் முன் உண்டது யதார்த்தம் ஜீரணமாகும். சரீர முயற்சியேனும் மனோமுயற்சியேனும்செய்து இளைத்தவுடனே போஜனம் பண்ணலாகாது. போஜனம் செய்தவுடன் கடுமையான மனோமுயற்சியேனும் சரீர முயற்சியேனும் செய்யலாகாது.

வசிக்குமிடம்: யாவரும் தாம் தாம் இருக்கும் அறையிலுள்ள காற்று சுத்தமாய் இருக்கும்பொருட்டு அங்கங்கே வேண்டுமட்டும் காற்று வீசப்பண்ணிக்கொள்ளல்வேண்டும். அறையினுள்ளே சுத்த வாயு வீசவேண்டுமாயின் ஒரு ஜன்னலாவது வைத்துக்கொள்ளவேண்டும். நிலமட்டத்தில் அசுத்தவாயு அனவாயிருத்தலினாலே கீழே படுக்காது கட்டிலின்மேல் படுப்பது உத்தமம். தோலிலே ஒளிபடுவது சரீரத்திற்கு ஆரோக்கியமானது. தரைமட்டத்திற்குத் தாழ்வாயும் ஈரமாயும் இருளுள்ளதாயும் உள்ள அறையினுள்ளே இருந்து வேலைசெய்வோர் சரீரம் வெளுத்து வியாதி அடைகின்றனர். ஆகையால் வீடுகளிலும் பள்ளிக்கூடங்களிலும் காற்று வீசத்தக்கவைகளாயும், வெளிச்சம் நன்றாய் செல்லத்தக்கதாயும் இருத்தல்வேண்டும். நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பழமொழி வழங்குகிறது.

G. Guruswami Kavandar,
Kallar School Master,
Rajadani.

---

## மாமி மருமகள்.

மாமிமாருக்குப் பன்னிரு விதிகள்.

1. உன் மகன் விவாகஞ் செய்தபின் அவனே வீட்டுக்கு அதிகாரி யென்பதை நினைத்துக்கொள். அவனோடு வசிக்க நேரிடும் பக்ஷத்தில் பின்வரும் விதிகளைக் கவனித்து நட.

2. உன் மகனும் மருமகளும் எப்பொழுதும் உன் கண் பார்வையிலேயே இருக்கவேண்டுமென்று விரும்பாதே. அவர்கள் வீட்டில் எப்பொழுதும் புத்திமதி சொல்லும் பிரசங்கியைப் போலல்ல, ஒரு விருந்தாளியைப்போலக் காலங்கழி.

3. உன் மகன் தன் மனைவியிடங்காட்டும் பாசத்தைப் பற்றி பொறாமை கொள்ளாதே. அவன் பாராட்டும் சுய வெறுப்புள்ள அன்பையிட்டு அவனுக்கு அவள்மீது அன்பு பெருதமாகில், அவன் முன்னிலும் அதிகமாய் உன்னை நேசித்துக் கண்ணியப்படுத்த ஏவப்படுவானேயல்லாமல் உன்னைக் குறைவாயெண்ண ஏவப்படான்.

4. உன் மருமகளிடத்தில் குற்றம் கண்டுபிடிப்பதை விட்டு ஒழி. குற்றம் கண்டுபிடிக்க ஆரம்பிப்பாயானால், வெகு சீக்கிரத்தில் அதுவே உனக்கு வழக்கமாகிவிடும். அவள் உன் மகனாலே தெரிந்துகொள்ளப்பட்டவளாயின் அவனுடைய விருப்பத்தை கனம்பண்ணு. உன் இஷ்டத்தின்பேரில் அவன் அவளை விவாகஞ்செய்திருந்தால், நீ நொந்துகொள்ள நிமித்தம் இல்லையே.

5. நான் என் வாலிபத்தில் எவ்வளவோ செட்டிமையாய் வீட்டுக்காரியங்களை நடத்தினேனென்று ஒருபொழுதும் பேசாதே. அது உண்மையாயிருந்தாலும் இருக்கலாம். ஆனால் இப்போ காலங்கள் மாறியிருக்கிறதையும் அகவிலை உயர்ந்திருக்கிறதையும் நினைத்துக்கொள்.

6. உன் மகனுடைய முற்கோபம், தன்னயம், முதலிய குணக்கேடுகளை மருமகளிடம் சொல்லாதே. உன் மருமகளின் சிற்சில கேடுகளையும் உன் மகனிடத்தில் எடுத்துக் கூறாதே. நீ அவைகளை எடுத்துரைக்காத பக்ஷத்தில் அவர்கள் அவைகளைப் பெரிதாக எண்ணாதிருக்கலாம். அவர்கள் ஒருவர் குறைகளை ஒருவர் பெரிது பாராட்டாவிடில் நீ என் வழி செய்யவேண்டும்? "அன்புக்குக் கண்ணில்லை", "அன்பு குற்றம் பாராட்டாது."

7. வீட்டுக்காரியங்கள் தாறுமாறாகப் போகும் பக்ஷத்தில், "இப்படி நடக்கும் என்று நான்தான் சொன்னேனே" என்று தீர்க்கதரிசனம் உரைத்ததுபோல் பேசாதே. அப்படிப் பேசினால் ஒருவரும் கேட்கத்துணியார். உன் மருமகள் உன்மீது நம்பிக்கை வைக்கவும், உன் ஆலோசனையை விரும்பவும் தக்கதாக நடந்துகொள்.

8. உன் இஷ்டப்படியேயும், உன் வாலிபத்தில் நீ செய்தபடியேயும், உன் மருமகள் செய்யவேண்டுமென்று விரும்பாதே. காலத்துக்குக்காலம் நடபடிக்கைகளும் மாறும்.

9. உன் பேரப்பிள்ளைகளுக்கு இளக்காரங்கொடாதே. தாயின் சொல்லை அவர்கள் தட்டி நடக்கொட்டாதே. அவர்கள் முன்பாகத் தாயின் நடவடிக்கைகளைக் குற்றமாகப் பேசி, அவர்களைக் கெடுக்காதே.

10. உன் மருமகள்போல நீயும் உடை, நடை பாவனைகளிலிருக்க வேண்டுமென்று ஆசியாதே. ஒவ்வொரு வயதிற்குத் தகுந்த சுகங்கள் உண்டு. சென்றுபோன காலம் அழுதாலும் வருமா? ஆகையால் நீ வாலிபப்பெண்ணைப்போல் நடப்பதினால் முதிர் வயதிற்குரிய சுகங்களை இழந்துபோவானேன்?

11. உன் மகன் தன் அந்தஸ்திற்குக் கீழான சம்பந்தங்கொண்டானென்று சொல்லாதே, அவ்விதமாக நடந்து கொள்ளாதே. உன் மருமகளுடைய தாயும் தன் மகனைக் குறித்து அப்படி எண்ணக்கூடுமே.

12. கடைசியாக, எவரையும் புகழ்ந்து பேசுதல், உற்சாகப்படுத்துதல், இன்பத்தை விளைவிக்கும்; இகழ்ந்து பேசுதல், குறைகூறுதல், துன்பத்தை விளைவிக்குமென்னும் சத்தியத்தை ஒருபோதும் மறவாதே.

## II. மருமக்கள்மாருக்குப் பன்னிரு விதிகள்.

1. உன் மாமியாரின் மகனை நீ விவாகஞ்செய்திருப்பதால், அவளுக்கு அவன் பாராட்டவேண்டிய பாசத்தை நீ கவர்ந்துகொண்டதாக அவள் நினைக்கக்கூடுமென்பதை மறவாதே. உன் கணவன் அவளுக்கு ஒரே மகனாயிருந்தால் இதை அதிகமாக உன் ஞாபகத்தில் வைத்து, அதற்குத் தகுந்தபடி நட.

2. நீ அனுபவத்திலும் வயதிலும் குறைந்தவளென்பதை மறந்து போகாதே. உன் மாமியாரின் பெலன் தள்ளாடும் காலத்தில் அவளுடைய பெலவீனங்களைப் பெரிதாகப்பாராட்டாதே.

3. உன்னைவிட உன் மாமியார் அதிக காலமாய் உன் புருஷனை அறிந்திருப்பதால், அவளுக்கு அவனைப்பற்றி அதிகம் தெரியும், அல்லது அப்படித் தெரியுமென்பது அவளுடைய எண்ணம், என்பதை மறந்துபோகாதே. அதனால் அவளுடைய அபிப்பிராயங்களையும், ஆலோசனைகளையும் அலட்சியம் செய்யாமல், அவைகளின்படி செய்ய எப்போதும் முயற்சிசெய்.

4. காட்டோடிய காரியங்களை நீ யூகித்து அறிந்துகொள்ளுகிறபடி அவள் தன் வயதுசென்றகாலத்தில் அறிந்து கொள்ள முடியாதென்பதை ஞாபகத்தில்கொண்டு, அவளுடைய விசேஷமான நடவடிக்கைகளுக்கும் யோசனைகளுக்கும் இடங்கொடு. அவைகளை பெரியனவாகப் பாராட்டாதே.

5. நீயும் ஒருநாள் மாமியாராவாய் என்பதை மறவாதே மற்றவர்கள் உனக்கு எதைச் செய்யவேண்டுமென்று விரும்புகிறாயோ, அதையே நீயும் மற்றவர்களுக்குச் செய்.

6. உன் மாமியாரிடத்தில் எதிர்த்துப்பேசாதே. அவளோடு சண்டை போடாதே. அவள் உன் கணவனுடைய தாயாராயிருப்பதினால் உன் கணவன் அவள் பக்கம் சேர்வான். அப்பொழுது அவன் உன்னை நியாயமாய்க் கண்டிக்கவும் தண்டிக்கவும் நேரிடும்.

7. ஸ்திரீகளுக்கு வயதாக வயதாக அவர்கள் ஆசை அவர்கள் பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் பற்றியிருக்கும் என்பதை மறவாதே.

8. சாதாரண காரியங்களில் உன் மாமியாரின் ஆலோசனையைக்கேட்க மறவாதே. இது அவளுக்குச் சந்தோஷத்தை உண்டாக்கும். புத்திசாலிகள் மற்றவர்களுடைய அநுபவத்திலிருந்து அநேக நற்காரியங்களைக் கற்றுக்கொள்ளக்கூடும்.

9. மாமியார் சண்டைக்காரியாயிருந்தால் அதனால் உனக்கும் உன் கணவனுக்கும் மனஸ்தாபம் வாராதபடிப் பார்த்துக்கொள். அவளைப்பற்றி அவனிடமாவது மற்றவர்களிடமாவது முறையிடாதே.

10. உன் கணவன் தன் தாயாரோடு தனிமையாயிருக்கும்படி இடங்கொடுக்க மறவாதே. அவள் தன் மகனிடத்தில் தனிமையாய்ப் பேசுவது இயல்பே.

11. ஸ்திரீகள் புருஷரைக் குறை கூறுவதைவிடத் தங்களிலே ஒருவரை ஒருவர் குறைகூறுவது சகஜம் என்பதை மறவாதே. எந்தத் தாயும் தன் மகனுக்கு ஈடான பெண் இவ்வுலகிலில்லை என்று எண்ணுவது உலக இயல்பே.

12. மாமியும் மருமகளும் கண்ணுக்குக் கண்ணாயிருந்து, தாய் மகளென்று ஒருவரை ஒருவர் பாராட்டி, தன்னுடைய மருமகள் மாமி போன்றவர் எவருமில்லையென்று உண்மையாய்ப் புகழ்ந்து பேசும் மாமிமார், மருமக்கள்மார் உலகத்தில் பலர் உளர் என்பதை நினைத்து, அவர்களில் ஒருவராயிருக்கப் பிரயாசப்படு.

தமிழ்ச் சபைத் தீபிகை.



## தீபாவளியின் விசேஷம்.

தீபாவளி ஜாதீய மஹோத்ஸவமான தினம். புராதன பாரதர்களைப் பீடித்து வந்த கொடுங்கோன்மையை யொழித்த பாரதர்களுக்கு ஸ்ரீ பகவான் ஸ்வதந்திரம் அருளிய உத்தம தினம். கொடுங்கோலனான நரகாசுரன் தன் வர்க்கங்களுடன், நிர்மூலமாக்கப்பட்டழிந்த தினம். தேவர்கள் ஸ்வர்க்கத்தை மறுபடியும் அடைந்த தினம். பாரதநாட்டின் பெண்மணி யொருத்தி, போர் முகத்தில் கார்முகத்தை வளைத்து அம்பெய்து, நாட்டினருக்கு நன்மை செய்த நல்ல திருநாள்.

இத்தினத்தில் ஒவ்வொரு காரியத்திற்கும் ஒவ்வொரு விசேஷமுண்டு. எனவே, அவைகளை அவசியமாகக் கவனித்து நடக்கவேண்டும். விடியற்காலத்தில் எழுந்திருத்தல், மங்களஸ்நானம் செய்தல், புதுக்கோடிவஸ்திரமணிதல், கடவுளை வழிபடுதல், அறுசுவையுண்டியருந்தல், தீபலங்காரம் செய்தல், வெடிசுடல், புதுக்கணக்கு வைத்தல், தனபூஜைசெய்தல் முதலான எல்லாவற்றிற்கும் அர்த்தங்களுண்டு, விவரங்கள் உண்டு. இதில் எதையும் அற்பமாய் எண்ணிவிடக்கூடாது.

முன்னொரு காலத்தில் பாதாள லோகத்தில் நரகாசுரனென்னும் ஓர் அசுரன் இருந்தான். அவன் தன் மகனுக்கு மகுடாபிஷேகம் பண்ண எண்ணி, தேவர்களை எதிர்த்துப் போர்புரிந்தான். அந்த யுத்தத்தில் தேவர்கள் தோல்வியடைந்தனர். அவர்களுடைய திவ்யஸ்வர்க்கத்தைப் பிடுங்கிக்கொண்டு, தேவேந்திரனுடைய கிரீடத்தை தன் மகனுக்குச்சூட்டி அவனை ஸ்வர்க்கத்திற்கு அதிபதியாக்கினான். இதுவுமன்றி தேவர்களை அடிமைகளாக்கி, அவர்களையும் அவர்கள் பத்தினிகளையும் பல இடுக்கண்கள் படுத்திக்கொடுமையாய் நடத்திவந்தான். இதை சகிக்க முடியாத தேவர்கள் தங்கள் அதிபதியான தேவேந்திரனை முன்னிட்டுக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணபகவானைச் சரணமாக அடைந்தனர். பக்தர் துயரம் ஸகியாத பரமதயாளுவான ஸ்ரீ பகவான் ஸ்ரீ ஸத்யபாமா ஸமேதராய் ஸ்வர்ணமயமான கருடன் பேரில் பஞ்சாயுததாரியாய் ஆரோகணித்துப் பாதாளம்சென்று நரகாசுரனுடன் போர்தொடங்கினார். அந்த மும்முரமான யுத்தத்தில் தம் கணவனுடன் ஸ்ரீ ஸத்யபாமாதேவியானவள் ஸர்வாயுதபாணியாய்ப்போயிருந்தாள். ஸ்ரீ பகவான் யுத்தத்தில் கொஞ்சம் மூர்ச்சித்ததுபோல் கருடன் மீதில் சாய்ந்து விட்டார். அப்போது புண்ய பூமியான பாரதமணித்திருநாட்டின் பெண்மணியான ஸ்ரீ சத்தியபாமா வில்லை வளைத்து நாணேற்றி சாமாரி பொழிந்து நரகாஸுரனையும், அவன் மைந்தனையும் வதைத்து, யுத்தத்தில் வெற்றி பெற்று வீரசிகாமணியாய் விளங்கினாள். இதற்குள் மூர்ச்சை தெளிந்துவிட்டதுபோல் எழுந்த ஸ்ரீ பகவானை மரணத்தருவாயில் நரகாசுரன் பின்வருமாறு பிரார்த்தித்தான். "ஹே! பரம கிருபாநிதே! என் அபராதங்களை மன்னித்து என்னை ரக்ஷித்து உன் திருவடி சேர்த்துக் கொள்ளவேண்டும்! பக்தவத்ஸலனான நீர் துஷ்டநிக்ரஹம்செய்து சிஷ்டபரிபாலனம் செய்கிறவர். உமது கையால் கொல்லப்பட்ட இந்த தினத்தை உலகிலெல்லோரும் சுபதினமாய்க் கொண்டாடவேண்டும். எவனொருவன் இந்த கிருஷ்ண சதுர்த்தசி முடிவில் உதயமாகுமுன்னம் மங்கள ஸ்நானம் செய்து நூதன வஸ்திரங்களுடுத்திக்கொண்டு, பந்துமித்திரர்களுடன் கடவுளைப் பூஜித்து, ஷட்ரஸ போஜனமருந்தி அந்தத்தினத்தில் தேவாலயங்களையும், வீடுகளையும் தீபங்களால் அலங்கரித்து மகிழ்கிறானோ அவனுக்கு இந்த லோகத்தில் வேண்டிய சகல பாக்கியங்களையும் தந்து, மோக்ஷ உலகத்து ஸாயுஜ்யபதவிகளையும் கடாக்ஷித்தருளவேண்டுமெனப் பிரார்த்தித்தான். ஸத்திய ஸங்கல்பனான ஸ்ரீ பகவான், ஆகுக" என்றருளினார். பிறகு இந்திரனுடைய கிரீடமும், ஸ்வர்க்காதிபத்யமும் வந்துவிட்டது. தேவர்கள் ஸ்வதந்திரமடைந்த புண்ய தினம் இது.

## களவு

களவானது பிறருடைய பொருளை வஞ்சித்துக்கொள்ளுதல் களவினால் வரும் பொருள் வளர்வதுபோல் தோன்றி, தான் போம்பொழுது பாவத்தையும் பழியையுமே நிறுத்திவிட்டு முன்னுள்ள பொருளையும் தருமத்தையும் உடன் கொண்டுபோய் விடும். களவு செய்பவர், அப்பொழுது யாராவது காண்பாரோ, அடிப்பாரோ, கைகால்களைக் குறைப்பாரோ என்றும், பின்பு கவர்மெண்டார் அறிந்து தண்டிப்பாரோ என்றும் பயந்து மனந்திடுக்கிடுதலினால் எக்காலும் மனத்துயரத்தையுடையவராவர் அறியாமையினாலே களவு அப்பொழுது இனிதுபோல் தோன்றினும் பின்பு தொலையாத துயரத்தையே கொடுக்கும்.

களவு செய்தவர் இம்மையிலே அரசனால் தண்டிக்கப்பட்டு எல்லாராலும் இகழப்படுவர். அவரை அவர் பகைவர் மாத்திரமா, உறவினரும் சிறிதாயினும் நம்பாது அவமதிப்பர். களவினாலாகிய இகழ்ச்சியைப் பார்க்கினும்

யிக்க இகழ்ச்சி வேறில்லை. ஒருதடவை களவுசெய்தவ னென்று அறியப்பட்டவர் சென்ற இடங்களிலெல்லாம் பிறராலே செய்யப்பட்ட களவும் அவரால் செய்யப்பட்டதாகவே நினைக்கப்படும்.

ஒருநாள் தகப்பனும் மகனும் திருடப்போனார்கள். அவர்கள் இருவரும் ஆட்டுமந்தைக்குப்போய்ப் பார்க்கவும் அங்கே ஆட்டுமந்தைக் காவல்காரனும் காவல் நாயும் இல்லை. இது நல்லவேலையென்று நினைத்து, மகனைப் பார்த்து: அப்பா, நான் ஆடு திருடி வருகிறேன், நீ இங்கே இரு; யாராவது வந்தால் எனக்கு சைகை காட்டு, நான் வந்துவிடுகிறேன் என்று சொன்னான். சொல்லிவிட்டு ஆட்டுமந்தையில் நுழைந்து ஒரு ஆட்டைப் பிடித்துக்கொண்டு யாராகிலும் பார்க்கிறார்களா என்று மகனைக் கேட்டான். ஐயா, மனிதர் பார்க்கவில்லை, ஆனால் கடவுள் பார்க்கிறார் என்றான். தகப்பன் வெட்கம் அடைந்தான், ஆட்டையும் விட்டுவிட்டான், வீடு சேர்ந்தான். அன்றுமுதல் அவன் களவுசெய்யப்போகிறதில்லை. களவு செய்பவா, இங்கு ஒருவரும் இல்லை, நாம் திருடிக்கொண்டு போகலாம் என்று நினைத்தால், மனிதர்கள் பார்க்காவிட்டாலும் எல்லாம் வல்ல இறைவனாகிய கடவுள் பார்த்துக்கொண்டு இருப்பார் என்பதற்குச் சந்தேகமில்லை ஆகையால் களவென்னும் பெருங் குற்றத்தைச் சிறு பருவத்திலே கடிதல்வேண்டும். கடியாதொழிந்தால் அது மேன்மேலும் வளர்ந்து பெருந்துன்பக்கடலில் வீழ்த்திவிடும். சிறுவர்களிடத்தில் அற்பகளவு காணப்பட்டால் உடனே தாய் தந்தையர் அவர்களைத் தண்டித்து நல்வழிக்குக் கொண்டுவரவேண்டும். அப்படிச் செய்யாதுவிட்டால் அப்பிள்ளைகளுக்குப் பின் விளையும் பெருந்துன்பங்களுக்குத் தாய் தந்தையர்களே காரணராவார்கள்.

M. ஆங்கத்தேவன்,
5-ம் வகுப்பு,
கன்னார்ஸ்கூல்,—ராஜதானி.

---

## முகப் பருவால் மரணம்.

நீதியுள்ள நீதியை நீதியுள்ள தேவன் 1928 வருஷம் அக்டோபர்மீ 8உ திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு தம்மிடம் அழைத்துக்கொண்டார். இதன் விபரம் பின்வருமாறு சொல்லுகிறேன் கேள்.

திருமங்கலம் தாலூகா வாலாந்தூர் சோமான் கத்தோலிக் சபையைச் சேர்ந்த (R.C.M.) வ. மாசில்லாமணி நாடார் மகன் மாசில்லாத நீதி நாடார்தான். இவர் நீதியே நீதி. ஜோதியே ஜோதி. நீதியோ தன்மூளையை நீதியாக உபயோகித்து இவர் நீதியாக நடந்ததும் நீதியாக சினேகிதர்களோடு உறவாடினதும், நீதியாக குடும்பத்தை நடத்தினதும், நீதியாக பல வியாபாரிகளோடு கூடினதும், நீதியாக வியாபாரம் செய்ததும், நீதியாக ஏழைகளை ஆதரவளித்ததும், நீதியாக பல ஞானங்களை படித்ததும், நீதியாக பல கைத்தொழில்களைக் கற்றதும், சுறுசுறுப்பாக வேலை செய்ததும், புத்திக்கூர்மையோடு பல இயந்திரசாஸ்திரங்களைக் கற்றுத்தேர்ந்ததும், பலரால் அவமதிக்காமல் தன் கற்பை காப்பாற்றி நடந்ததும் பிசாசின் மக்களால் உண்டான துன்பத்திற்கும் கஷ்டத்திற்கும் பொறுமையைக் காட்டினதும், நீதியேநீதியுள்ள கடவுள் சத்தியத்தை அஞ்ஞானிகளுக்குக் கூறினதும் ஆலயங்களை அலங்கரிக்க முன்நிற்பதும், வேத புஸ்தகத்தைப் படிக்கவும், ஜெபம் செய்யவும் மறவாதிருப்பதும் நான் என்றும் மறவேன். நீதியை அறிந்த பலரும் மறப்பார்களோ? மறக்கவேமாட்டார்கள்.

“என் வாயைத்திறவாமல் மௌனமாக இருக்கிறேன். ஏனெனில் தேவரீர் அதைச் செய்தீர்” என்ற வேத வாக்கியத்தின்படி நீதி தன் முகத்திலுள்ள முகப்பருவைக் கிள்ளிவிட, நீதி முகம் வீங்கி தன் வாயைத் திறவாமல் மௌனமாய் மூன்றுநாள் இருந்தார். நீதியுள்ள தேவன் நீதியை அறிந்து தம்முடைய ராஜ்ஜியத்திற்கு அழைத்துக்கொண்டார்.

எட்டுநாட்டுக்கும் தாய்க் கிராமமான வாலாந்தூர் மாதா கோவில் உற்சவ காலங்களில் முன்னின்று சிறப்பித்து வாசித்து ஆடி பாடினதோ அதைப்போல் இப்பாவ உலகத்தைவிட்டு நீதியுள்ள தேவனிடமும் நீதியுள்ள தேவதூதர்களோடும் கூடிக்கொண்டு ஜெகஜோதியாய் ஆனந்திக்கிறார்.

பூலோக செல்வாக்கையும் பொன்னும் மினுக்கும் எனக்குவேண்டாம், பொருள் இல்லாமை நாடேன், நான் இயேசுவைச் சிநேகிப்பேன், என்று பக்தன் பாடினது போல் நீதி உலகப்பற்றைவிட்டு என்றும் அழியாத பரலோக ராஜ்ஜியம் சேர்ந்துவிட்டார். நீதியை அறிந்த இத்திருகுல தேவமார்களே, வியாபாரிகளே, கடைக்காரர்களே, உபாத்திமார்களே, ஆண்களே, பெண்களே, பிள்ளைகளே நீங்களும் நீதியைப்போல் நீதியாக நடந்து பரலோக ராஜ்ஜியம் சேர ஆசையா? நீதியின் பிதாவாகிய பராபரனிடம் ஓடி வாருங்கள் உலக முடிவு சமீபித்து இருக்கிறது. அன்புள்ள நீதிநாடாரை இனிமேல் பாவ உலகத்தில் காணமுடியாது. ஆனால் கிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றவர்கள் பரலோக ராஜ்ஜியத்தில் நீதிநாடாரைப் பார்ப்பார்கள். இது சத்தியம். கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்துஎழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார். அப்போது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்குள் எதிர்கொண்டு போகமேகங்கள்மேல் அவர்களோடு (விசுவாசிகளோடு) கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்.

நீதிநாடார் பிரேதம் மறுநாள் 9—10—28-ல் மாலை 3-மணிக்கு அநேக பிரபுக்களும், அநேக தேவமார்களும், உபாத்திமார்களும், சாமிமார்களும் சேர்ந்து உயிர்த்தெழுதலின் நம்பிக்கைக்கென்று புதைக்கப்பட்டது.



தன் அருமை [illegible] குமாரனை பறிகொடுத்த பெற்றோருக்கும், தன் அன்புள்ள புருஷனை இழந்த மனைவிக்கும், தகப்பனை இழந்த பிள்ளைகளுக்கும், சகோதரனை இழந்த உடன்பிறந்தார்களுக்கும், நீதியை அறிந்த மற்ற இனத்தார்களுக்கும், நீதியை அன்புடன் நேசித்த சிநேகிதர்களுக்கும் கர்த்தர்தாமே ஆறுதலைக் கட்டளையிடுவாராக.

*முகப்பருவுக்கு மருந்து:—சகோதரர்களே, கழுத்துக்கு மேல் என்ன புறப்பட்டாலும் உங்கள் வாயினால் எச்சிலைத்தொட்டு தடவி வாருங்கள். நகத்தால் கிள்ளவேண்டாம். ஆயுதங்களால் அறுக்கவேண்டாம். புளி வாங்கி [illegible] குழைத்து [illegible] தடவிப்போடுங்கள் [illegible] (டிஞ்சர் [illegible]) [illegible] எல்லா [illegible] மறைந்துவிடும்.

A. D அனுக்ரகம் உபாத்தியாயர்,
C. S. M. ஸ்கூல்,—குப்பணம்பட்டி.

---

## பல திரட்டு.

—எவ்வளவுக்கு விலகியிருப்பாயோ அவ்வளவுக்கு நீ மேல் உயர்ந்து விட்டாய் என்று மதிப்பார்கள். நீ விலகுவதால் உன் குடும்ப சங்கதி பிறர் அறியமுடியாமல் மதிப்பு ஏற்படுகிறது. [illegible] இருந்து நலமே செய். எவ்வளவுக்கு நெருங்குகிறாயோ அவ்வளவுக்கும் உன்னில் குற்றம் கண்டு பேசுவார். [illegible] இருக்கு நல்லதெல்லாம் செய்யாது [illegible].

—மற்றவனை [illegible] என்று [illegible] அவனின் பார்வையில் நீ [illegible] இருக்கக்கூடும்.

—பெரிய [illegible] அப்படியிருந்தவர்களால் தான் உண்டாகிறதென்று நினைப்போர் பலர். விருந்தினருக்குக் காப்பியின்றி [illegible] தருவது வெகு கேவலமாம்! காப்பி [illegible] தந்தால் ‘உப்புமாவும்’ கூடவேணுமாம்.

—சிலருக்கு ஒருநாக [illegible] [illegible]. சிலருக்கோ [illegible] தயார், காரணம் அவர்களின் காணயத்தைப் பொறுத்ததன்று.

—செல்வாக்கால் மண்ணில் எதிர்த்துயிடப்படுவதில்லை. ஒருவன் [illegible] இன்னொருவர்தா, [illegible] மற்றொருவரை [illegible] இவ்விதம் எவர்களிடமேனும் [illegible] இருந்துதான் அது வாழ்கிறது.

—காப்பி அருந்துவோரின் வாயில் இரத்தஜலம் வடிப் [illegible] பசி அடங்கி ஜீரண சக்தி குறையும் காப்பி உட்கொள்வோரின் கண்கள் மழுங்கிப் போகும்.

—சிக்கனமாகச்செலவிடாத வீட்டில் மொத்தமாக மாதச் சம்பளம் வாங்குவது கஷ்டத்திற்கே வழி. பாதி மாதத்திற்குக்கூட அது வராது.

—எப்போதுநோக்கினும் கூடவே பந்துப்பெருக்கமும் வருகிற விருந்தினர் சிலர் உண்டு. இவர்களின் மூளைக்கு மற்றவரின் கஷ்டம் எப்போது தெரியுமோ?

—ஒரு மனிதனது யோக்கியதையையும் பெருமையையும் அவன் சம்பாதிக்கும் பணத்தைக்கொண்டு நிர்மாணிப்பது மடத்தனம்

—அமெரிக்கா ஐக்கியமாகாணங்களில் ‘மயாமி’ என்னுமிடத்தில் அறுநூற்று நாற்பது ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலத்தில் ஒரு ஆகாயவிமானத்தின் உதவியைக்கொண்டு இருபது நிமிஷத்தில் விதை தெளிக்கப்பட்டதாம். சாதாரணமாக இதை செய்துமுடிக்க இரண்டு மனிதர்களை வேலைசெய்யச்சொன்னால் குறைந்தது முப்பதுநாள் பிடிக்கும்.

கைசியால் தையல் முதலிய வேலைகள் செய்வதில் இவ்வுலகத்திற்குள் கெட்டிக்காரர்கள் ஜப்பான் தேசத்துப் புருஷர்களாம் அவர்களுக்கு அடுத்தாற்போல் ருஷியா தேசத்து ஸ்திரீகளைச் சொல்லலாமாம்.

—நாடகக்கம்பெனியில் சேருகிறவர்கள் உருப்படுவதில்லை. நன்மார்க்கத்துக்கு அங்கு வேண்டிய இடமிருக்கிறது. சோதனைக்குத் தப்பி யோக்கியராயிருப்போர் வெகு சொற்பம். வந்ததெல்லாம் பலவகைச் செலவே.

—ஆஸ்திரேலியாகண்டத்திலுள்ள கங்காரு (kangaroo) என்னும் மிருகம் சாதாரணமாக அறுபது அடியிலிருந்து எழுபது அடி தாவுமாம். முப்பத்தேழு அடிக்குமேல் குதிரை தாவினதாக கணக்கு இதுவரையில் எங்கும் ஏற்படவில்லையாம்.

—உழைத்துச்சம்பளம் பெறும் இடமே என்றைக்கும் நிச்சயம்தரும். சும்மா உட்கார்ந்து சம்பளம் வாங்கும் இடம் அதிககாலம் நீடிக்காது.

—திட்டமானஎண்ணம் உன் வாழ்க்கையின்நோக்கமாக இருக்கவேண்டும். அதே நோக்கம் கைகூடும்வரையில் சோர்வுயின்றி ஊக்கத்துடன் நீ உழைக்கவேண்டும். செய்து முடிக்கவே தீரவேண்டுமென்கிற தீர்மானமும் விவேகமும் உனக்கு இருக்குமேயாகில், அசாத்தியமான காரியம் உலகத்தில் எதுவுமேயில்லை. விவேகம் என்பது என்ன? சரியான முன் யோசனையுடன் சலிப்பில்லாமல் ஊக்கத்துடன் உழைப்பதே விவேகம்.

—வியாபார நேசம் வியாபாரம் முடிந்தவுடன் பிரிந்துவிடுகிறது. ஆபத்திற்கும் கைகொடுக்கும் சிநேகிதம், அங்கு மித்திரியானதால் நேசம் பலப்படுவதில்லை.

—ஒருசாமானை வேண்டாதவர்கள் கடைக்காரன் சொல்லும் விலைக்கும் அதிகமாகக் கேட்டுவிட்டு மெதுவாக நழுவிவிடுவது ஒரு தந்திரம்.

—தனக்கு அபிமானமுள்ள இடத்தில் என்னதான் குறையிருந்தாலும் அது மனதிற்குத்தோன்றுகிறதில்லை.

—வீட்டுக்கார ஒரு பசுவைக்கொடுத்து ஆசைப்பட்டால், வீடு முழுவதும் புசிப்பதற்கு வேண்டிய பசுவைகளுக்கான செலவு செய்தால்தான் அவனுக்கு இரண்டுபசுவைம் கிடைக்கும்.

—நண்பர்களாயிருப்போரின் குற்றங்களைக் காலமுழுதும் மன்னித்துச்செல். அவர்களின் தவறு, மோசம் எதையும் மனதில் வைக்காமல் நேசித்தும் உபசரித்தும் வா. ஏனெனில் துன்பமயமான இவ்வுலகில் தம்முகத்தை உனக்குக்காண்பித்து உன்னைப்பூரித்து உல்லாசப்படும்படி செய்யும் ஒரு சக்தி அவர்களிடம் இருப்பதால், அந்தப் பெரிய பாக்கியத்துக்கு எதையும் விட்டுக்கொடுத்து சந்தோஷப்படுவார்.

—ஒருதாய் தன்குமாரனை எவ்வளவுவேண்டுமானாலும் திட்டுவாள், ஆனால் மற்றவர்கள் அவனைத்திட்டத் தான் பார்த்துச் சகிக்கமாட்டாள்.

---

## பொது வர்த்தமானம்.

கவர்னர் கோஷினின் உத்தியோகம். 1929ஞூ முடிய சென்னையில் கவர்னர் பதவியை வகிக்கும்படி நாடு இந்திய சட்ட சபை மந்திரி கவர்னர் கோஷுக்கு தந்தி விடுத்திருக்கிருர். இவரது இந்த வருடத்திய உத்தியோகம் வருகிற ஏப்ரல் 13-ம் தேதியோடு முடிவடைகிறதாம். கவர்னரும் சம்மதித்திருக்கிறதாகத் தெரிகிறது.

### நைகா, லஞ்சத்தொல்லை.

121 உத்தியோகஸ்தருக்குத் தண்டனை.
சர்க்கார் இன்ஜி குறைவு.

டான் ஜில்லா வருமான வரி இலாகாவைச்சேர்ந்த மானேஜர்கள் இன்ஸ்பெக்டர்களான 130 பேர் லஞ்சம் வாங்கிக்கொண்டு வியாபாரிகளின் வருமானத்தைப்பற்றி சரியான கணக்குக்கொடாமல் இருந்ததினால் சர்க்காருக்கு நஷ்டமுண்டுபண்ணினதாகக் குற்றஞ்சாட்டப்பட்டதில் 121 பேருக்கு 10 வருடமும் அதற்குக் குறைந்த காலத்திற்கும் காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. மற்ற ஒன்பது பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

ஒரு வைத்தியர்காரரின் அதிசயக் கலைக்கு. வானியம்பாடி, அக். 19 ஒரு வைத்தியக்காரன் சில வாரங்களாக இவ்வூர் கடைத்தெருவிலேயே சுற்றிக்கொண்டிருக்கிறான். அவன் கீழ் ஒரு வஸ்திரத்துடனும் மேல் வஸ்திரத்துடனும் கையில் ஒரு கொம்புடனும் இருக்கிறான். அவனுக்கு எவ்வளவு பெரிய கணக்குச் சொன்னாலும் சிறிது நேரத்திற்கெல்லாம் வாயிலேயே மாறி சரியான விடை அளித்துவிடுகிறான். அவனைக் கண்டால் ஜனங்கள் ஆழ்ந்த வண்ணமாயிருக்கிறார்கள் என்று நிருபர் எழுதுகிறார்.

ஒரு சார்ஜெண்டின் அருட்டம். பிறர் நினைத்ததை அறிகிறார். காண்டன் என்ற ப்ரான்ஸ் தேசத்து மனிதன் யார் எதை நினைத்தாலும் உடனே அதன்படி செய்கிறாராம்.

தூக்குத் தண்டனையடைந்தான். தங்கமான் என்ற தன் மனைவி தன்னுடன் கண்டிக்கு வராததினாலும் அவளால் சற்று சந்தேகம் கொண்டதினாலும் மோஸஸ் என்பவன் தங்கமாளைக்கொன்ற குற்றத்திற்காக தூக்குத் தண்டனை விதிக்கப்பெற்றான்.

லஞ்ச வழக்கு. போலீஸ் தலைவருக்குத் தண்டனை. போலீஸ் அதிகாரிகள் லஞ்சம் வாங்கினதாகக்குற்றம் சாட்டப்பட்ட வழக்கு செப்டெம்பர் 10-ம் தேதி விசாரிக்கப்பட்டு பெரும்பான்மையான ஐரோப்பிய ஜூரிகளுக்கிடையில் இன்று நியாயாதிபதி பட்டவர்த்தனர் தீர்ப்பளித்தனர். தீர்ப்பளித்ததில் கிங் என்ற ஐரோப்பிய உதவி போலீஸ் சூப்பிரண்டிற்கும் இன்ஸ்பெக்டர் போஸ் என்பவருக்கும் ஆளுக்கு 2 வருடங்கள் கடுங்காவலும் 2000 ரூபாய் அபராதமும் இடப்பட்டது. இன்ஸ்பெக்டர் டார்னருக்கு ஒருவருடக்கடுங்காவலும் 1000 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

### புதிய மோட்டார் அரசர்

ரயில்வே தொழிலாளி கோடீஸ்வரன் ஆனார்.

அமெரிக்காவிலே ரயில் பாதையில் கூலியாக வேலை செய்து மணி யொன்றுக்கு 2 பென்ஸ் அதாவது இரண்டணா கூலி வாங்கிக்கொண்டிருந்த திரு. வால்டர். பி. கிறிஸ்லர் என்பவர் இப்போது அமெரிக்க கோடீஸ்வரர்களில் ஒருவரும் உலகத்திலுள்ள மிகப்பெரிய மோட்டார் கம்பெனிகளொன்றின் தலைவரும் ஆயிருக்கிறார். இவ்வளவும் 35 வருடகாலத்தில் நடந்திருக்கிறது. அவர் இப்போது அமெரிக்காவின் புதிய மோட்டார் அரசர் என்று அழைக்கப்படுகிறார்.

### வைசிராய்க்கு ரஜா.

லார்ட் கோஷன் பதில் வைசிராய்

இந்தியாவின் நிலைமைகள் சரியாயிருந்தால் அடுத்த வேனில் காலத்தில் லார்ட் இர்வின் இங்கிலாந்துக்குச் செல்வார். லார்ட் ரீடிங் காலத்துக்கு முன்னால் ஒரு வைசிராய் ரஜாவில் சென்றால் அவர்கள் தங்கள் உத்தியோகத்தை ராஜீநாமா செய்ததாகக் கருதப்பட்டு வந்தது. ஆனால் 1924-ம் வருட சட்டப்படி வைசிராயும் மாகாண கவனர்களும் தங்களுடைய ஐந்து வருட உத்தியோக காலத்திலேயே 4 மாதம் ரஜா எடுத்துக்கொண்டு சீமைக்குப் போய் வரலாமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வைசிராய் இப்படி இங்கிலாந்துக்குச் செல்வதனால்தான் லார்ட் கோஷனின் உத்தியோகாலம் நீட்டிவைக்கப்பட்டிருக்கிறதென்று தெரிகிறது. வங்காளம், பம்பாய், சென்னை ஆகிய மூன்று பிரசிடென்சி கவர்னர்களில் அதிககாலம் உத்தியோகம் பார்த்தவரே வைசிராய்க்குப்பதிலாக உத்தியோகம் பார்க்கவேண்டுமென்ற விதி வழக்கத்திலிருந்து வருகிறது. சென்னைகவர்னரான லார்ட்கோஷனின் உத்தியோகாலம் அடுத்த ஏப்ரல் மாதத்தோடு முடிவடைகிறது.

### லார்டு கோஷன்.

வைசிராயாக ஆக்ட் செய்வாராம்.

சிம்லா, அக். 16. அஸோஸியேட்பிரஸ் கூறுவதாவது: இந்தியா மந்திரிக்கும் வைசிராயிக்கும் நடந்து வந்த கடிதப்போக்கு வரத்துக்களின் பயனாக அடுத்தவருஷம் கோடைகாலத்தில் வைசிராய் இங்கிலாந்து செல்லக்கூடுமென தகுந்த ஆதாரத்தின்மூலம் தெரியவருகிறது. அதற்காகவே சென்னை கவர்னர் லார்டு கோஷனின் உத்தியோக காலம் 1929-ம் வருஷம் முடிய நீடிக்கச்செய்யப்பட்டிருக்கிறது. லார்டு இர்வின் இங்கிலாந்து சென்றால் இந்தியாவில் 5 வருஷம் கவர்னர் உத்தியோகம் பார்த்து முடித்தவர் ஒருவரே வைசிராயாக ஆக்ட்செய்வார்.

வைசிராய் 5 வருஷ உத்தியோக காலத்தில் ரஜாவின் பேரில் இங்கிலாந்து செல்வது இது இரண்டாந்தடவையாகும் லார்டு ரீடிங் முதல்முதல் நிர்வாகம் சம்பந்தமான சில முக்கிய பிரச்னைகளைக்குறித்து விவாதிக்கும் பொருட்டு ரஜாவில் இங்கிலாந்து சென்றார். அப்போது லார்டு லிட்டன் இந்தியாவில் வைசிராயாக ஆக்ட் செய்தார்.

---

அமெரிக்கன் மிஷன் 'லீனக்ஸ்' அச்சுயந்திரசாலை, பசுமலை,—1928.

1218

34 REG. NO.—M. 2146

# THE Piramalai Reformer

# பிரமலை சீர்திருத்தன்.

" ஒரு கதையைப்போல் எங்கள் வருஷங்களைக் கழித்துப்போட்டோம்." சங்.

Vol. VIII. ] டிசம்பர்மீ 1923 [ இலக்கம் 8

## பஞ்சாங்கம்.

1928 | விபவஞூ கார்த்திகைமீ | டிசம்பர்மீ | விபவஞூ மார்கழிமீ | 1928

| Sunday ஞாயிறு | Monday திங்கள் | Tuesday செவ்வாய் | Wednesday புதன் | Thursday வியாழன் | Friday வெள்ளி | Saturday சனி |
|---|---|---|---|---|---|---|
| 30 16 | 31 17 | | | | | 1 கார்த்தி. 17 |
| 2 18 | 3 19 | 4 20 | 5 21 | 6 22 | 7 23 | 8 24 |
| 9 25 | 10 26 | 11 27 | 12 ● அமா. 28 | 13 29 | 14 30 | 15 மார்கழி. 1 |
| 16 2 | 17 3 | 18 4 | 19 5 | 20 6 | 21 7 | 22 8 |
| 23 9 | 24 * கார். 10 | 25 11 | 26 ○ பௌர் 12 | 27 13 | 28 14 | 29 15 |

*Patron.*—M.R.Ry. Rao Bahadur, A. J. Vethanayaga Thevar Avl., Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam, Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley, Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

## பத்திராதிபர் குறிப்பு.

நாம் ஒரு வருஷத்தை முடிக்கப் போகிறோம். கடந்த வருஷத்தில் நமக்கு எத்தனையோ சிலாக்கியங்கள் கிடைத்தன. சிலர் அவற்றைச் சரியாய் உபயோகித்திருப்பார்கள். சிலர் பின்போட்டிருப்பார்கள். நமக்கு நல்ல காலங்கள் எப்போதும் கிடைப்பது அரிது. நமது சீர்திருத்தத்தை விரும்பும் அநேக பெரியோர் அடிக்கடிவந்து கவனித்தும் புத்தியோசனைகளைப் புகட்டியும்போயிருக்கின்றனர். அதிககாலம் எதிர்பார்த்த ரயில் பாதையும் நம் நாட்டில் ஓட ஆரம்பித்து விட்டது. இவ்விதமாக எத்தனையோ நூதனகாரியங்கள் நமக்கு கிடைக்கும்படியான ஒழுங்குகள் நிறைவேறி வருகின்றன. அதற்கிசைய நம் நாட்டாரும் தங்களை அவ்வண்ணமே மேல்நோக்கி வரத்தக்கவிதமாய் நடந்துவந்தால் எவ்வளவோ நாகரீகமுள்ள நாடாகும். படிப்பு விருத்தி இன்னும் குறைவாகவே இருக்கிறது. பள்ளிக்கூடங்களில் ஆஜர்குறைவு மிகுதியான பள்ளிக்கூடங்களில் காணலாம். இவைகளெல்லாம் நம்மால் சீர்திருத்தக்கூடியவை. இம்மாதக் கடைசிவாரம் 25ம் தேதியில் கிறிஸ்து பிறந்த பண்டிகைக் கொண்டாட்ட நாள் வருகிறது. அதில் உலகரட்சகரான இயேசுகிறிஸ்து மனித அவதாரம் எடுத்து, அவர் உலகத்தில் செய்து காட்டின பெரிய அன்பின் ஊழியத்தை சர்வ உலகத்தாரும் நினைவுகூர்ந்து நன்றிபாராட்டுவார்கள். கிறிஸ்துவின் போதனையும் சாதனையும் உலகத்தை எவ்வளவு சீர்திருத்தியிருக்கிறதென்று அறிவுள்ள எவரும் எளிதில் கண்டுகொள்ளக்கூடும்.

கடந்த வருஷத்தில் நமது பத்திரிகைக்கு பணஉதவி செய்தவர்களும், விஷயதானம் செய்தவர்களுமான சகல கனவான்களுக்கும் மனமார்ந்த வந்தனமளிக்கின்றோம்.

நமது பத்திரிகைக்கு விசேஷ உதவிபுரிந்துவரும் ராவ் பகதூர் K. P. ஜனார்தனராவ், ஸ்பெஷல் சூப்பிரண்டு துரையவர்களுக்கும் மிகுந்த நன்றிபாராட்டுகின்றோம்.

இவ்வருஷத்தை நன்றாக முடித்து புதுவருஷத்தை புது பெலனோடு துவக்க கடவுள் தாமே கிருபைபுரிவாராக.

## நமது மாட்சிமை தங்கிய ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்களின் தேக நிலை.

சிலநாட்களாக நமது சக்கரவர்த்தியவர்கள் ஜலதோஷத்தினாலுண்டான நெஞ்சு நோயால் படுக்கையிலிருக்கிறார்கள். ராஜ வைத்தியர்கள் எவ்வளவோ பிரயாசம் எடுத்துவருகிறார்கள். உலகத்தில் வைத்தியசாஸ்திர நூதன கருவிகள் கொண்டு வியாதியைக் கவனித்து வருகிறார்கள். சுகமேற்படுமென்று உறுதி கூறுகிறார்கள். சக்கரவர்த்தியவர்களின் மூத்த குமாரர் வேல்ஸ் இளவரசரும், அவருக்கு இளையவரும் தென் ஆப்பிரிக்கா சுற்றுப்பிரயாணத்தை நிறுத்தி தகப்பனாரைப்பார்க்க திரும்பி வருகிறார்கள். உலகத்தின் சகல பாகங்களிலும் சக்கரவர்த்தியவர்களின் விசேஷகுணங்களையிட்டு, அவருக்கு பூரண சுகம் சீக்கிரம் கிடைக்கும்படி கடவுளை நோக்கிப் பிரார்த்தித்து வருகிறார்கள். நாமும் நமது ராஜாவுக்கு சுகம் கிடைக்கும்படி வேண்டிக்கொள்வது நமது கடமை.

கடவுள் ராஜாவைக் காப்பாராக.

## மின்சாரக் குடை.

மின்சார சக்தியால் இப்பொழுது கண்டுபிடித்திருக்கும் விஷயங்களுக்கு ஓர் அளவேயில்லை. மோட்டார் விபத்துக்கள் அதிகமாக நேர்ந்து உயிருக்கு ஆபத்து உண்டாக்கிவிடுகிறதைத் தடுப்பதற்காக இப்பொழுது புதியகைத்தடியொன்றை ஒரு மின்சார நிபுணர் கண்டுபிடித்திருக்கிறார். தெருவில் இருட்டிலும் மழையிலும் பலர் நடந்து செல்வதை நாம் காண்கிறோம். சில மோட்டார் டிரைவர்கள் அச்சமயத்தில் கூட சரியான வெளிச்சமின்றியும் எச்சரிக்கையின்றியும் அஜாக்கிரதையாக ஓட்டிககொண்டுதான் போவார்கள். எனவே அச்சமயத்தில் அக்கைத்தடி விபத்திலிருந்து தப்பித்துக்கொள்ள மிகுந்த உதவியளிக்கிறது. அத்தடியிலுள்ள ஒரு பொத்தானை அமுக்கினால் தடியின் நாலு பக்கங்களிலும் சிவப்பு வெளிச்சமுண்டாகிறது. இதனால் வழியில் ஜாக்கிரதையாக வரும் மோட்டாரினின்றும் உயிர்தப்ப வழி ஏற்படுகிறது. இத்தகைய விளக்குகள் நான்கு ரஸ்தாக்கள் சந்திக்கக்கூடிய இடத்திற்குத்தான் மிகுந்த அவசியமானதாக இருக்கின்றன. மேலும் இருட்டும் பனியுமான காலத்தில் வழியைத் தடவிக்கொண்டே போகவேண்டிய அவசியமுமில்லை. இரவில் வெளியே சென்றுவிட்டுத் திரும்புபவர்களுக்கு, மற்றொரு பெரிய கஷ்டமும் இருக்கிறது. வீட்டிற்குச்சென்றதும் கதவைத்திறக்க வேண்டுமாகில் சாவித்துவாரமிருக்குமிடத்திற்காக குருடனைப்போலவே கதவுமுழுவதையும் தடவிக்கொண்டிருக்க நேருகிறது. இத்தொல்லையை ஒழிப்பதற்காக முனையில் மின்சார விளக்குள்ளதோர் புதுக்குடையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இது மழைக்கும் பனிக்கும் பாதுகாப்பாயிருப்பதோடு விளக்கு வெளிச்சம் வேண்டும்பொழுது வேறு மின்சார விளக்கு உதவியின்றி தானாக அக்குடை வெளிச்சம் கொடுக்கிறது. மழைகாலத்தில் குடைகளைத் தவறவிட்டுத்தவிப்பவர்கள் பலர். குடையில்லாத சிலருக்கு குடைகளைத்திருடிக்கொண்டு செல்வதற்கு மழைகாலமே ஏற்ற சமயமாக இருக்கிறது. இப்பொழுது புதிதாய் தயாரித்திருக்கும் குடையை ஒருவர் வைத்திருப்பாராகில் அதைப்பிறர் எடுத்தாலோ அன்றி திருடிக்கொண்டுபோக முயற்சித்தாலோ, அக்குடை சப்தம்போட ஆரம்பித்துவிடுகிறதாகையால் குடையைப் பறிகொடுத்துவிட்டுக் கஷ்டப்படவேண்டி வரும் தொல்லை ஒழிந்தேவிடும்.



## வர்த்தமானம்.

### திருடர்களைப் பிடிக்கும் போட்டோ காமிரா.

மேனாடுகளில் வீடுகளில் திருடவரும் திருடர்களைக் கண்டுபிடிக்கப் பல நூதன முறைகள் அனுசரிக்கப்பட்டு வருகின்றன. ஒரு அறைக்குள் திருடன் வந்த உடனே இரவோ பகலோ எந்த நேரமாயினும் அவனுடைய உருவத்தைப் படம்பிடித்து விடத்தக்க கம்பியில்லாத தந்திசக்திவாய்ந்த படம்பிடிக்கும் காமிரா உபயோகிக்கப்பட்டிருக்கிறது. அறையின் ஒருபக்கத்தில் காமிராவும் மற்றொரு பக்கத்தில் யாருக்கும் காணாத சிறு மின்சார விளக்கும் வைக்கப்பட்டிருக்கின்றன. அவ்விரு வஸ்துக்களுக்கு மிடையே யார் வந்தாலும் அவருடைய உருவத்தை காமிரா படமெடுத்து விடுகின்றது. அந்த மின்சார விளக்கை அப்புறப்படுத்த முயன்றாலும் காமிரா படம்பிடித்து விடுகிறது. இந்நுண்ணிய காமிராவில் 160 படங்கள் எடுக்க வசதியாயிருக்கின்றது. இக்காமிரா யாருக்கும் தெரியாமல் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றது.

### திருடர்களுக்கு அபாயம்.

மிஸ் மோபால்ரி என்னும் நாடக கன்னிகை கள்ளர்களைப்பிடிக்க ஒரு புதிய கருவியைக் கண்டுபிடித்திருக்கிறாளாம். இந்தக் கருவி இருக்கும் அறையில் திருடன் நுழைந்தால் அது பெருங்கூக்குரலிடத் தொடங்கிவிடுமாம். திருடன் திகிலடைந்து போவானாம். அப்படியில்லாவிடினும் வீட்டிலுள்ளார் அனைவரும் விழித்துக்கொள்வார்களாம். அக்கருவி அறையில் எங்கேனும் ஒளித்து வைக்கப்படுமாம். அதனுடன் இணைக்கப்பட்டுள்ள எந்தப்பொருளைத்திருடன் தொட்டாலும் உடனே கருவி சத்தம்போடத் தொடங்குமாம். திருடன் என்னசெய்தாலும் அச்சத்தத்தை நிறுத்த முடியாதாம். அச்சத்தம் வீட்டில் தூங்குவோர் கும்பகர்ணர்களாயிருப்பினும் அவர்களை எழுப்பிவிடுவதுடன், அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்கள், தெருவில் செல்பவர்கள் எல்லாருக்கும் கேட்கும்படி இருக்குமாம். இதன் விலை எட்டரை ஷில்லிங்குக்கு மேல் இராதென்றே அப்பெண்மணி கூறுகிறாள்.

### அதிசய முதலை.

உகண்டா தேசத்தில் ஓர் அதிசய முதலை இருக்கிறதாம். இது முதலை ஜாதிக்குரிய விதிகளுக்கு முற்றும் மாறாக மனிதன் கொடுக்கும் உணவைத்தின்று உயிர்வாழ்கிறதாம். விக்டோரியா ஏரிக்கரையில் நஜெங்கோ என்னும் கிராமத்தில் ஆப்ரிக்கா சுதேசி ஒருவன் இருக்கிறான். இவன் அந்த ஏரிக்கரையில் வந்து ஒருவிதமான சத்தம் போட்டானானால் உடனே பதினொருஅடி நீளமுள்ள ஒரு முதலை கரைக்கு வருகிறதாம். அவன் கொடுக்கும் மீன்களை அது தின்கிறதாம். சனி, ஞாயிறுகளில் இந்த அதிசயத்தைப்பார்க்க நூற்றுக்கணக்கானவர்கள் அந்த ஏரிக்கரைக்கு வருகிறார்களாம். அந்த ஆப்ரிக்கா சுதேசி வைத்திருக்கும் மீன்களை ஒவ்வொன்றும் ஆறு பென்னி விதம் வாங்கி அவர்கள் அந்த முதலைக்குக் கொடுத்து அது தின்பதை வேடிக்கை

பார்க்கிறார்களாம். இந்த வியாபாரத்தில் அர்சுதேசி நிறையப்பணம் சேர்த்துவிட்டானும்.

---

வெட்டுக்கிளியினின்றும், ஆகாயவிமானங்கள் ஓட்டுவதற்கான எண்ணெய் ஒன்று இப்பொழுது தயார் செய்யப்பட்டிருக்கிறதாம். வேறு வகை எண்ணெய்கள் உறைந்துபோகக்கூடிய குளிர்ந்த நிலையிலும், இப்புதிய எண்ணெய் உறைந்துபோகாதிருக்கிறதாம். எனவே மிகவும் உயரப்பறப்பதற்கு இது விசேஷ உதவியாய் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

---

## இரும்பியதற்கு தண்டனை.

சிறைச்சாலையைப் பார்வையிட்டவந்த ஒரு கனவான் ஒவ்வொரு குற்றவாளியையும் அவனவன் செய்த குற்றமென்னவென்று விசாரித்துக்கொண்டேவந்து, கடுங்காவல் விதிக்கப்பட்டிருந்த ஒருவனை "அப்பா, நீ செய்த குற்றமென்ன?" என்று வினவினர். அதற்கவன் "நான் இரும்பியதால் என்னை சிறையிட்டனர்" என்றான். கனவான் வியப்படைந்து "நீ இரும்பியதற்காகவா உன்னைத்தண்டித்தார்கள்?" என்று கேட்டார். அவன் "ஆம், கனவானே, நான் இரவு இரண்டு மணிக்கு ஒரு தனவந்தர் வீட்டில் இருமினேன். அவர்கள் விழித்துக்கொண்டார்கள். அதன் பலன் தான் இந்த சிட்சை" என்றான்.

ஆ. வி. ன்.

---

தென்னமெரிக்காவில் ஒரு நதியின் ஜலம் புளிப்பாயிருக்கிறதாம். இதனால் இதற்குக் "காடி நதி" (வினிக்கார் ரிவர்)' என்றே பெயர் வந்துவிட்டது.

---

லண்டன் நகரில் சிற்சில தபாலாபீசுகளில் கடிதங்களைப்பிரிக்கும் உத்தியோகஸ்தர் 6700 தெருக்களின் பெயர்களை ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டுமாம்.

---

ஐரோப்பிய பாஷைகளுக்குள் மிக அதிகமான ஜனங்களால் பேசப்படுவது ஆங்கிலந்தான். உலகில் 16 கோடி ஜனங்கள் ஆங்கிலம் பேசுகிறார்களாம்.

வண்டிகளுக்கு முன்னும் பின்னும் விளக்குப் போடுவதுபோல் கண்டியில் தெருக்களில் செல்லும் யானைகளின் துதிக்கையிலும் வாலிலும் விளக்குப்போட வேண்டுமென்று கண்டி நகர சபையில் ஒரு பிரரேபணை எழுதியிருக்கிறது.

---

அடிக்கடி பின்னால் பார்ப்பதனால் சீக்கிரத்தில் முன்னேற முடியாது.

---

நாளைக்கு அதிகமாகச் செய்வேன் என்று சொல்லிக்கொண்டிருப்பவன் இன்றைக்கு ஒன்றும் செய்யமாட்டான்.

---

தாக்கை அடக்கியாளுகிறவன் மற்ற இந்திரியங்களை எளிதாக ஆளுவான்.

---

கால் நடையே உடற் பயிற்சிகளுக்கெல்லாம் அன்னையானது.

---

உலகில் இதுதெரியாத மிருகங்கள் ஒட்டகமும் பன்றியும் தான் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

---

சிலந்தி வலையின் நூலில் ஒரு ராத்தல் இருந்தால் இதைக்கொண்டு உலகமுழுவதையும் ஒரு சுற்று சுற்றிவிடலாம்.

ஆ. வி. ன்.

---

## விமான ஓட்டம்.

### மணிக்கு 320–மைல் வேகம்.

லண்டன், நவம்பர் 5

பிளைட் லெப்டினன்ட் டார்சி கிரீக் என்பவர் செலத்ராம்டன் கால்ஷாட்டிலிருந்து புறப்பட்டு மணிக்கு 320–மைல் வேகத்தில் சென்றாராம். இதற்குமுன் இத்தாலி தேசத்தைச் சேர்ந்த மேஜர் பெர்னார்டிஸ் 318–மைல் வேகத்தில் சென்றதாகச் சொல்லப்பட்டதை லெப்டினன்ட் கிரீக் சாமான்யமானதாகச் செய்துவிட்டார்.

---

## விளையாட்டே வினையாய் முடிந்தது.

### நாடகம் நடித்த வாலிபரின் கதி.

### வாயில் நெருப்புப் பற்றியது.

மங்களூர், நவம்பர் 6

நேற்றிரவு ஆஸ்டின் நகருக்கு அருகில் நாடகத்திற்குப் பழகுவதில் ஓர் கோர சம்பவம்



ஏற்பட்டது. அதில் வாலிபனை கிருஷ்ணா என்பவன் தனது வாயிலிருந்து வரும் நெருப்பினால் ஓர் பெண்ணை எரிப்பதாக காட்ட வேண்டியிருந்தது. அதற்காக அவன் தன் வாய் நிறைய பெட்ரோலை ஊற்றிக்கொண்டு நீச்சின நெருப்புக்குச்சியில் போல் மொத்தமாய் உமிழ்ந்ததாகவும், அதில் பெட்ரோல் நெருப்புப் பற்றியதென்றும், அதனால் அவனுடைய முகமும் வாயும் அதிகமாய் வெந்துபோயின என்றும் கூறப்படுகின்றது. அவனை உடனே வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டுள்ளது.

---

## இரு குழந்தைகள் பயங்கர மரணம்.

### 13–வது மெத்தையிலிருந்து வீழ்ச்சி.

### தாயின் முட்டாள்தனம்.

நியுயார்க், அக்டோபர் 20

பெனுயின் குகன் ஹிம் என்ற லட்சாதிபதி சென்ற 1912–ம் வருடத்தில் "டிட்டானிக்" கப்பலோடு முழுகிப்போய்விட்டார். அவருக்கு இரண்டு குழந்தைகள் இருந்தன. பென்னி வால்ட்மான், டொனல் வால்மன் என்ற அந்த இரு பையன்களும் நேற்று பின்வருமாறு பயங்கர மரணமடைந்தனர். எப்படியெனில் அந்த இரண்டு பையன்களும் அவர்களின் தாயும் சர்ரே ஹோட்டலின் உப்பரிகை மீது, விளையாடிக்கொண்டிருந்தனர். இந்த உப்பரிகை அந்த ஹோட்டலின் 13–வது மெத்தையின் மேலுள்ளது. அப்படியிருக்க, தாய் அந்தப் பையன்களில் இளையபையனைத்தூக்கி உப்பரிகையின் கைப்பிடி சுவரின் மீது வைத்துக்கொண்டிருக்கையில் மற்றப் பையன் தன்னையும் அந்தச் சுவரில் தூக்கிவைக்கும்படி தாயின் கையைப்பிடித்திழுக்க அதன் காரணமாக அந்த இரு பையன்களும் தவறிக் கீழே தெருவில் விழுந்து பயங்கர மரணமடைந்தனர். தாய் மூர்ச்சையாகிவிட்டனள்.

---

1921–ம் ஆண்டின் அரசாங்கத்து சென்ஸஸ் கணக்குப்படி நம்மிந்திய நாட்டில் மொத்தத்தில் 2,68,34,838 (ஏறக்குறைய மூன்றுகோடி விதவைகளிருக்கின்றார்கள். அதில் 12 மாத வயதிற்குக் கீழ்ப்பட்டு 612 விதவைகளும், 1 முதல் 2 வயதில் 498 விதவைகளும், 2 முதல் 3 வயதில் 1,285 விதவைகளும், 3 முதல் 4 வயதில் 2,863 விதவைகளும், 4 முதல் 5 வயதில் 6,758 விதவைகளும், 5 முதல் 10 வயதில் 85,580 விதவைகளும், 10 முதல் 15 வயதில் 233,533 விதவைகளுமிருக்கின்றார்கள். ஐந்துவயதிற்குட்பட்டு மொத்தம் 12,016 விதவைகளும், 14 வயதிற்குட்பட்டு 3,31,793 விதவைகளுமிருக்கின்றார்கள்) இக்கணக்குப்படி இந்தியநாட்டில் விவாகமான பெண்களின் தொகையில் 5 வயதிற்குட்பட்ட விதவைகள் 1000க்கு 14 ஆகவும், 10 வயதிற்குள்பட்ட விதவைகள் 1000க்கு 111 ஆகவும், 15 வயதிற்குள்பட்ட விதவைகள் 1000க்கு 437 ஆகவுமிருக்கின்றனரெனக் கணக்கிடப்படுகின்றது.

---

## மதுரை–போடிநாயக்கனூர் ரயிற்பாதை திறப்பு வைபவம்.

---

### சர் நார்மன் மார்ச் பாங்ஸ் திறந்தார்.

### ஏஜண்டு அவர்களின் சொற்பெருக்கு.

சர் நார்மன் மார்ச் பாங்ஸ் அவர்கள் மதுரை–போடிநாயக்கனூர் ரயில் பாதையைத் திறந்து வைக்குங்கால் தென்னிந்திய ரயில்வே ஏஜண்டவர்கள் பின் வருமாறு கூறினார்:—

"சர் நார்மன் மார்ச் பாங்ஸுக்கும் கனவான்களுக்கும்—முதன் முறையாக இரண்டு புதிய ரயில்பாதைகளை அடுத்தடுத்துத் திறக்கும்படி நேர்ந்தது. இதுபற்றி நான் நேற்றுக் கூறியதை திரும்பவும் எங்கு இரட்டற மொழிந்து விடுகின்றேனே என்று யோசிக்கிறேன்

1906ல் மதுரைஜில்லா போர்டாரின் வேண்டுகோளிற்கிணங்கி, அம்மையநாயக்கனூரிற்கும் உத்தமபாளையத்திற்கும் ஒரு ரயிற்பாதை போட கவர்ன்மெண்டார் அநுமதி தந்தார். 1907ல் சர்வே நடந்து திட்டமும் தயாரிக்கப்பட்டது.

1912ல் மதுரை ஜில்லா போர்டார், மதுரையிலிருந்து உசிலம்பட்டி மார்க்கமாகவும் தேனி மார்க்கமாகவும் போடிநாயக்கனூருக்கு ரயிற்பாதை அமைக்கவேண்டி விரும்பினர். அரசாங்கத்தாரும் இதனை ஆமோதித்து புதிய ஏற்பாட்டிற்கு சர்வே செய்யத் திட்டம் கேட்டிருந்தனர்.

1913-ல் சர்வே செய்ய அநுமதி கிடைக்க ஜூன் 1914ல் சர்வே முடிவு பெற்றது. பொருட்திட்டத்தை பெரும் போர் காரணமாக, அரசாங்கம் அங்கீகரிக்கவில்லை.

பிறகு 1924ல் ரயில் போர்டார் சென்னை கவர்ன்மெண்டாரின் விருப்பத்தின்படி 1913–1914 திட்டத்தை திருத்தம் செய்து, வருமான திட்டம், செலவு திட்டம், இதனால் மெயின் லைனிற்கு ஏற்படும் ஊதிய திட்டம், பிரிவு பாதைக்கு ஏற்படக்கூடிய ஆதாயத்திட்டம் முதலிற்கு நூற்றுக்கு ஆறுவீதம் ஏற்படக் கூடிய நட்டதிட்டம் முதலியனவற்றைக் கேட்டிருந்தனர். 1926 ஜனுவரியில் திட்டமனுப்பப்பெற்று மதுரை ஜில்லா போர்டின் உதவி உறுதியும், சர்க்கார நுமதியும் கிடைத்தது.

இந்தப் பாதை 56 மைல்கள் நீளமுடையது.

1926 ஜூலையில் வேலை ஆரம்பித்தது. முதன் முதலில் கவனரவர்கள் துவக்கவைபவத்தன்று மண்வெட்டுகையில் தான் முதற் பிரயாணியாயிருக்க உத்தேசித்திருப்பதை தெரிவித்தார். இது கைகூடாதபடியானது எமக்கு வருத்தத்தை விளைவிக்கிறது.

இந்தப்பாதையானது மதுரை ஜில்லாவின் மத்தியிலும் கள்ளநாட்டு மத்தியிலும் கிழக்கேயிருந்து மேற்கே செல்லுகிறது. இது செல்லும் பரப்பானது நீர் நில வளங்களிற் சிறந்தது. உசிலம்பட்டிக்கும் ஆண்டிபட்டிக்கும் மத்தியில் ஆண்டிபட்டிக் குன்றுகளுள. 25 மைலில் தொட்டப்பநாயக்கனூரிலிருந்து நாம் 80க்கு 1 ஆக உயர ஏறவேண்டியிருக்கிறது. 30½வது மைலில் உச்சிக்குவருகிறது. தென்னிந்திய ரயிற் பள்ளப்பாதையில் மிகவும் ஆழ்ந்த பாதை யிதுவே. இங்கு 86 அடி தோண்டப்பெற்ற பாதையினூடே ரயில் செல்லவேண்டி வரும். பிரபல நகரமாகிய ஆண்டிப்பட்டியைக் கடந்ததும், வைகையை 60 அடி அகலமுள்ள 5 கட்டைகளினூடேயே பாலத்தைக் கடக்க வேண்டும். தேனியானது 46½வது மைலிலிருக்கிறது. இங்குதான் பெரியகுளம் மார்க்கத்திற்கும் கொடைக்கானல் மார்க்கத்திற்கும் சந்திப்பு ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. 52½-வது மைலில் கொட்டக்குடி நதி கடக்கப்படுகிறது. பிறகு நாம் குன்றுகளினூடா அலங்காரமாய் அமைந்திருக்கும் போடிநாயக்கனூர் வந்து சேர்கிறோம்.

மதுரை கடல்மட்டத்தைப் பார்க்கிலும் 437 அடிகள் உயர்ந்தும், ஆண்டிபட்டிக் குன்றுகள் 1100 அடிகள் உயர்ந்தும், போடிநாயக்கனூர் 1140 அடிகள் உயர்ந்தும் இருக்கின்றன.

கம்பத்தின் தலைப்பிலிருக்கும் கூடலூருக்கும் போடிநாயக்கனூரிலிருந்து ரயிற்பாதை போட (26 மைல்) அநுமதி எங்களுக்கு சீக்கிரத்தில் கிடைக்கலாம். தேனியிலிருந்தும் பெரியகுளத்திற்கும் (9 மைல் தூரம்) ரயில் பாதை அமைக்கப்படலாம். இவைகளினால் மதுரை-போடி ரயில்வருமானத்திற்கு கூடுதலுண்டாகுமென்பதற்கையமில்லை. மதுரையில் போக்குவரவு சாதனங்களும் மிகைப்படும்."

திராவிடன்.

---

## திண்டுக்கல்-பொள்ளாச்சி ரயில்பாதைத் திறப்பு விழா.

---

### 19—11—28ல் கனம் மார்ச் பாங்ஸ் திறந்துவைத்தார்.

திண்டுக்கல்லிற்கும் பொள்ளாச்சிக்கும் 75 மைல் தூரம். மதுரை ஜில்லாவிலுள்ள கனி சற்காடாகிய சத்திரப்பட்டி கனகன்பட்டி விஸ்தீரணத்தைத் தவிரவும், கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள உடுமலைப்பேட்டை காமங்களம் விஸ்தீரணத்தைத் தவிரவும், மற்றுள்ள பாதை முழுதும் மேடு பள்ளத்தாக்கில் செல்லுகிறது. மதுரைஜில்லாவின் எல்லையும் கோயம்புத்தூர் ஜில்லாவின் எல்லையும் 49 மைலில் கலக்கின்றன.

ரயில் வேலையைப்பற்றி உங்களுக்கு ஓர் மதிப்பு ஏற்பட நான் சில விஷயங்கள் கூற வேண்டியிருக்கிறது:—

5 கோடி கன அடிகளுள்ள மண், (இவற்றில் 30 லக்ஷ கன அடிகள்பாறை) வெட்டி எடுக்கப்பெற்றிருக்கிறது.

மொத்தத்தில் 244 பாலங்கள், சிறு நீர்ப்போக்கிகளுட்படக் கட்டப்பட்டிருக்கின்றன. இவற்றுள் 18 லக்ஷ கன அடிகளுள்ள கட்டிடம் புகுத்தப்பெற்றிருக்கிறது.



பாலங்களுக்கு எஃகுத் தண்டவாளங்கள் 570 டன்கள்வரை செலவிடப்பட்டிருக்கின்றன. பாலங்களிற் பெரியன பழனியின் சமீபத்திலுள்ள 60 அடி அகலமுள்ள 6 கட்டைகளுள்ள ஷண்முகநதிப் பாலமும், அமராவதியின்மேற் போடப்பெற்ற 60 அடி அகலமுள்ள 7 கட்டைகளையுடைய மற்றுமொரு பாலமும்.

இருப்புப்பாதைக்கு 1,600 டன்கள் நிறையுள்ள தண்டவாளங்களாயின. இதற்கு 75 பவுண்டு கனமான தண்டவாளங்களே உபயோகப்படுத்தப்பெற்றன. சென்னை அரசாங்கத்தாரால் முயற்சிசெய்யப்பட்டு வருகிற பைக்காரா மின்சாரவேலை முன்னிற்குவதால் மின்சார சக்தியைக்கொண்டு ரயில் செல்லுவதற்காக கன தண்டவாளங்களை உபயோகப்படுத்தியிருக்கின்றது.

இந்த ரயில்வேயினால் ரயில்வே சம்பந்தம் இல்லாமல் குறைவுற்றிருந்த செழித்த ஒரு விஸ்தீரணத்திற்கு மிகவும் அநுகூலம் ஏற்படும். பழனி சுப்ரமணிய சுவாமி தெரிசனம் செய்பவர்களுக்கும் பெரும் வசதி உண்டாகும். மேற்குக்கரைக்கும் நீலகிரிக்கும் செல்லும் பிரயாணிகளின் மார்க்கத்தில் 100 மைல் பிரயாணம் குறைவுபடும். பொள்ளாச்சி-பாலக்காடுமார்க்க வேலையும் இந்தவேலையும் முடிந்தவுடன் ஆரம்பிக்கப்படும். இந்த மார்க்கமும் திறந்துவிடப் பெற்றதானால் மேற்குக் கரைக்குப் போவார்களுக்கு இன்னமும் பிரயாணமும் குறைவுபடும்.

---

## சிறுபிள்ளைகளுடைய நீதிகள்.

வினா.—நன்றாய் வித்தையில் தேர்ச்சியடைந்தவனுக்கு அடையாளம் என்ன?

விடை.—கோபத்தையும் அசப்பாவத்தை யும் விட்டு தன் மனதை அடக்கி ஒவ்வொரு காரியத்தையும் யோசித்துச் செய்வதே அடையாளம். அவனுக்கே கடவுள் பக்தியும் படிந்திருக்கும்.

வினா.—உத்தம புருஷன் யார்?

விடை.—சுசடற வாசித்தும் தொழில்களைச் செய்தும், நல்வழியில் பொருளைத்தேடி தன் சொந்தச்செலவைக் குறைத்தும், பிறர் உபகாரனிமித்தம் செலவிட்டவன்.

வினா.—பதர்போன்றவன் யார்?

விடை.—எவன் தன்னை அடுத்திருக்கிறவர்களைக் கைவிட்டு தன் சுகத்தையே பாராட்டுகிறானோ அவனே பதர்.

வினா.—பூலோகத்தில் புகழும் செல்வமும் அடையவேண்டுமென்கிற புருஷன் விலக்க வேண்டியவை எவை?

விடை.—சோம்பல், பெருநித்திரை, போதை வஸ்துக்களையுபயோகித்தல், தொடங்கியவேலையைச் சுருக்காய் முடிக்காமல் விட்டுவிட்டுச் செய்தல், மனத்தளர்ச்சி முதலியனவாம்.

வினா—மானிட ஜன்மத்தில் சிறந்தவன் யாவன்?

விடை—பிறருடைய க்ஷேமத்தையே கோருகிறவன் துன்மார்க்கர்களால் துர்ப்போதனை செய்யப்பட்டாலும் அதைக் கேளாதவனாகித் தன்மனத்தை வல்லியமாய் வைத்திருப்பவன்.

வினா—மிதபோஜனஞ்செய்தால் உண்டாகும் சுகங்கள் எவை?

விடை—தேக ஆரோக்கியம், தேகபலம், தீர்க்காயுசு, மன உல்லாசம், நோயற்ற சந்ததி, குறைந்த செலவு முதலியனவாம்.

வினா—கோபத்தை எவர்களிடம் செலுத்தாமலிருக்கவேண்டும்?


விடை—வயதில் முதிர்ந்த பெரியோரிடத்தும், சிறு குழந்தைகளிடத்தும், நோயாளிகளிடத்தும், அரசனிடத்தும், ஞானிகளிடத்தும், வித்துவான்களிடத்தும் கோபத்தை செல்லவிடாது அடக்கவேண்டும்.

A. Raju Pillai.


# விளம்பரம்.

## விவசாயிகளுக்கு தண்ணீர்க் கஷ்டம் நீங்கியது.

தண்ணீர் இறைக்க மாட்டைக்கட்டி இனி கஷ்டப்படவேண்டியதில்லை. வெகு உறுதியானது. விலை குறைந்தது. நீடித்தகாலம் வேலை செய்யக்கூடியது. லேசாய் ஓட்டக்கூடியது.



விட்டி இஞ்சின்



கோல்ட்ஸ் பம்பு

இஞ்சின் மண்ணெண்ணெயில் ஓடக்கூடியதால் செலவு வெகு சொற்பம். ஒரு மணி நேரத்திற்கு சின்ன இஞ்சினுக்கு அணா 3-தான் செலவு.

| | | |
|---|---|---|
| 8 கமலைத்தண்ணீர் அடிக்கும் 6 குதிரைப் பவர் இஞ்சினும் 4" பம்பும் | ரூ. | 795 |
| 5 கமலைத்தண்ணீர் அடிக்கும் 4 குதிரைப் பவர் இஞ்சினும் 3" பெரிய பம்பும் | ரூ. | 580 |
| 4 கமலைத்தண்ணீர் அடிக்கும் 4 குதிரைப் பவர் இஞ்சினும் 3" சின்ன பம்பும் | ரூ. | 550 |
| 2 கமலைத்தண்ணீர் அடிக்கும் 3 குதிரைப் பவர் இஞ்சினும் 2" பம்பும் | ரூ. | 390 |

பைப்பும் பிட்டிங் சார்சும் பிரத்தியேகம்.

எங்கள் ஆட்களைக்கொண்டே திருப்தியாய் பிட்டிங் செய்து வருகிறோம்.

பசுமலை, அம்மையநாயக்கனூர் முதலிய இடங்களில் தண்ணீர் அடித்துக்கொண்டிருக்கும் இஞ்சின் பம்பை நேரில் பார்த்து திருப்தியடையுங்கள்.

இத்துடன் இன்னும் வேண்டிய விபரங்களுக்கு நேரில், எழுதித்தெரிந்துகொள்ளலாம்.

பூரண அன் கோ,
இஞ்சினியர்ஸ் & கமிஷன் ஏஜண்ட்ஸ்,
பசுமலை, S. I.

அமெரிக்கன் மிஷன் "லுகஸ்" பிரஸ், பசுமலை, 1928.